https://telegram.me/aedahamlibrary

ஒளியின் பெருந்சலனம்

உலக சினிமா கட்டுரைகள்

https://telegram.me/aedahamlibrary

சாரு நிவேதிதா

https://telegram.me/aedahamlibrary

ஒளியின் பெருஞ்சலனம்

உலக சினிமா கட்டுரைகள்

சாரு நிவேதிதா

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஒளியின் பெருஞ்சலனம்
சாரு நிவேதிதா

First Edition : January 2019
by Ezutthu Prachuram
(An imprint of Zero Degree Publishing)
ISBN: 978 93 87707 77 1
Title No. EP: 35

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording, psychic, or otherwise, without the prior permission of the publishers.

Zero Degree Publishing
No. 55(7), R Block, 6th Avenue,
Anna Nagar,
Chennai - 600 040

Website : www.zerodegreepublishing.com
E Mail : zerodegreepublishing@gmail.com
Phone : 98400 65000

Cover Art : Aditya R
Cover Design - Layout: Creative Studio

https://telegram.me/aedahamlibrary

அம்பரிஷுக்கு...

https://telegram.me/aedahamlibrary

நான் இக்கட்டுரைகள் தினமலர் நாளிதழில் ஜூலை 2016 முதல் ஜனவரி 2018 வரை வாரம் தோறும் ஒவ்வொரு ஞாயிறும் வெளிவந்தன. இதை சாத்தியப்படுத்திய ஆர். கிருஷ்ணமூர்த்திக்கு (அம்பரிஷ்) என் மனமார்ந்த நன்றி.

இந்த நூலை பதிப்பகத்துக்கு அனுப்பும் வேளையில்தான் பல கட்டுரைகள் என் வசம் இல்லாமல் போனதைக் கண்டேன். எங்கு தேடியும் கிடைக்கவில்லை. அந்தச் சமயத்தில் தினமலர் நாளிதழிலிருந்து கட்டுரைகளைத் தட்டச்சு செய்து கொடுத்த பிரபு ஆண்டனி, சுபத்ரா, முத்துக்குமார் ஆகிய நண்பர்களுக்கு என் நன்றி. இவர்களில் முதல் இருவரையும் நான் சந்தித்தது கூட இல்லை. கட்டுரையின் இணைப்பை அனுப்பியதும் அரை மணி நேரத்தில் அதைத் தட்டச்சு செய்து அனுப்புவார்கள். இவர்களுக்கு நான் மிகுந்த நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்.

https://telegram.me/aedahamlibrary

சில வார்த்தைகள்...

உலக சினிமா -100 என்ற பெயரில் பல சினிமா ரசிகர்களும் ஆய்வாளர்களும் பட்டியல் கொடுத்திருக்கிறார்கள். அதன் பொதுவான தன்மை என்னவென்றால், அந்தப் பட்டியலில் 90 படம் ஹாலிவுட் படமாக இருக்கும். அதுவும் பார்த்தால் காட் ஃபாதர், ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட், ஸ்டார் வார்ஸ், டைட்டானிக், க்ளாடியேட்டர் என்று நாம் மனப்பாடமாகச் சொல்லி விடக் கூடியதாகத்தான் இருக்கும். ஆனால் உலகம் என்பதோ சினிமா என்பதோ அமெரிக்காவுடன் முடிவதில்லையே? ஜப்பானில் மட்டுமே அகிரா குரஸவா, யசுஜிரோ ஓஸு போன்ற ஐம்பது மேதைகள்; ரஷ்யாவில் ஐஸன்ஸ்டைன், போலந்தில் ஆந்த்ரே வாய்தா, ஹங்கேரியின் ஸொல்த்தான் ஃபாப்ரி, மிக்லோஸ் யான்ஸ்கோ, ஃப்ரான்ஸில் ஜான் லுக் கொதார் என்று ஏராளமான பேர் இருக்கிறார்கள். ஜெர்மன் சினிமாவுக்குத் தனியாகவே ஒரு புத்தகம் எழுத வேண்டும். தென்னமெரிக்கா இன்னொரு பிரம்மாண்டம். சினிமா, இலக்கியம், கால்பந்து - இந்த மூன்றும் அந்த மக்களின் வழிபாட்டுக்குரிய விஷயங்கள். இந்தப் பின்னணியில்தான் உலக சினிமாவின் மகத்தான சில படங்களைப் பற்றி இங்கே நாம் பார்க்கப் போகிறோம்.

https://telegram.me/aedahamlibrary

1

Ivan the Terrible

Part 1, Part 2 (1944 & 1958)

Sergei Eisenstein

ரஷ்ய சினிமாவின் பிதாமகர் என்று போற்றப்படும் செர்ஜி ஐசன்ஸ்டைன் இயக்கிய இவான் த டெரிபிள் இரண்டு பாகங்களைக் கொண்டது. முதல் பாகம் 99 நிமிடங்கள்; இரண்டாம் பாகம் 88 நிமிடங்கள். ஐசன்ஸ்டைன் 1925-இல் எடுத்த மவுனப்படமான பேட்டில்ஷிப் பொட்டெம்கின் என்ற படத்தைப் பார்த்து மிகவும் பிடித்துப் போன ரஷ்ய அதிபர் ஸ்டாலின், ஐசன்ஸ்டைனிடம் இவான் த டெரிபிளை எடுக்கச் சொன்னார். இவான் என்ற பெயருக்குப் பின்னால் டெரிபிள் என்ற பட்டப்பெயர் ஏன் வந்தது என்பதுதான் இவானின் கதை.

இவானுக்கு முன்னால் ரஷ்யா சிறுசிறு பகுதிகளாகப் பிரிந்து கிடந்தது. யாருக்கும் மக்களைப் பற்றிய எந்த அக்கறையும் இல்லை.அப்படி ஆட்சி செய்து கொண்டிருந்த எல்லா மன்னர்களையும் தோற்கச் செய்து அந்தப் பிராந்தியங்களையெல்லாம் தன்னோடு இணைத்தான் இவான். 1547-இலிருந்து 1584 வரை 37 ஆண்டுகள் மாபெரும் ரஷ்ய சாம்ராஜ்யத்தின் அதிபராக - முதலாம் ஜார் மன்னனாக - விளங்கினான் இவான். உலக சினிமாவின் அதிமுக்கியமான படமாக ஐசன்ஸ்டைனின் பேட்டில்ஷிப் பொட்டெம்கின் கருதப்பட்டாலும் இவான் த டெரிபிளை நம்முடைய பட்டியலில் முதலாக எடுத்ததற்குக் காரணம் இதுதான்: சரித்திரத்தின் மத்திய காலகட்டத்தில் மன்னன் என்பவன் கடவுளுக்கு நிகராகக் கருதப்பட்டவன். மக்கள் அனைவரும் அவனது அடிமைகள். மேலும், இவான் ரஷ்யாவை மாபெரும் சாம்ராஜ்ஜியமாக ஒன்றிணைத்தவன். அப்படி இருந்தும் அந்த ஜார் மன்னன் எவ்வளவு கொடுமையான தனிமையை அனுபவிக்கிறான் என்பதை ஒரு காவியத்தைப் போல்

https://telegram.me/aedahamlibrary

உருவாக்கியிருக்கிறார் ஐசன்ஸ்டைன்.

இவான் த டெரிபிள் எனக்குப் பல இடங்களில் மகாபாரதத்தை ஞாபகப்படுத்தியது. படம் முழுவதுமே இவானின் தனிமைத் துயரம்தான். ஏனென்றால் ஜாரின் அரண்மனை முழுவதுமே சதிகளால் நிறைந்திருந்தது. யாரையும் நம்பமுடியவில்லை. தண்ணீரில் கூட விஷம் கலந்திருக்கலாம். இவானின் தந்தை கூட விஷம் வைத்துத்தான் கொல்லப்பட்டார். அந்த அளவுக்கு எங்கு பார்த்தாலும் அதிகாரப் போட்டி நிறைந்திருந்தது. இவானின் தந்தை கொல்லப்பட்டபோது இவானின் வயது மூன்று. அந்த மூன்று வயதில்தான் இவானுக்கு இளவரசனாக முடி சூட்டப்பட்டது. இவானின் தாய்தான் அரச நிர்வாகத்தை கவனித்துக் கொண்டாள். இவான் தனிமையிலேயே வளர்ந்தான். மூன்று வயதில் இளவரசனாகி, அவன் கண் முன்னே தென்படும் அத்தனை பேருமே அடிமைகள் என்ற நிலையில் ஒரு குழந்தை எப்படி வளருமோ அப்படி வளர்ந்தான் இவான். கிட்டத்தட்ட இவான் ஒரு மனநோயாளி.

மனைவி அனஸ்தீஸியாவை அவன் உயிருக்குயிராய் நேசிக்கிறான். அவள் அவனுக்கு மனைவி மட்டும் அல்ல; உற்ற தோழியாகவும் இருக்கிறாள். அவளை அவனிடமிருந்து பிரித்தால்தான் அவனைத் தனிமைப்படுத்த முடியும் என்பதால் விஷம் கொடுத்துக் கொல்லப் படுகிறாள் அனஸ்தீஸியா. கொன்றது யார் என்று இவானால் கண்டு பிடிக்கவே முடியவில்லை.

தன் உயிருக்குயிரான அனஸ்தீஸியாவைக் கொலை செய்தது யார் என்று வெகுகாலம் சென்றுதான் இவானுக்குத் தெரிகிறது. அது அவனுடைய சிற்றன்னைதான். இவானைத் தனிமைப்படுத்தி, பலகீனமாக்கி அதன் மூலம் தன் மகனை மன்னனாக்க ஆசைப்படு கிறாள் அவள். ஆனாலும் அவளைத் தண்டிக்க அவன் மனம் ஒப்பவில்லை. இவானின் மெய்க்காப்பாளன் அவளைத் தண்டித்தே ஆகவேண்டும் என்று வலியுறுத்தும் போது, “ஜாருக்கே புத்தி கூறுகிறாயா? நீங்கள் எல்லோரும் என் அடிமைகள். அவள் என் சிற்றன்னை. என் ரத்த உறவை எப்படி நான் தண்டிப்பது?” என்று கடிந்து கொள்கிறான்.

இவான் த டெரிபிள் என்று மக்கள் அவனை அழைத்ததற்குத் தகுந்த காரணம் இருந்தது. ஒருமுறை தன் மருமகள் சரியாக உடை அணியவில்லை என்று அவளைக் கடுமையாக அடித்து விடுகிறான் இவான். அந்தக் காலத்தில் எல்லோரும் மூட்டை மூட்டையாக ஆடை அணிந்திருந்தார்கள். ஐசன்ஸ்டைனின் இந்தப் படத்தில் நம் மனதை

https://telegram.me/aedahamlibrary

முதலில் கவர்வது கதாபாத்திரங்களின் ஆடை வடிவமைப்புதான். இந்த ஒரு விஷயமே இந்தப் படத்துக்கு ஒரு காவியத்தன்மையை அளிக்கிறது என்று சொல்லலாம்.

இவான் அடிக்கும் போது அவன் மருமகள் கர்ப்பிணியாக இருந்தாள். வாங்கிய அடியில் கர்ப்பம் கலைந்து விடுகிறது. அதைக் கண்டிக்கிறான் மகன் இவான். மகன் பெயரும் இவான் தான். அந்த மகனைத்தான் பட்டத்து இளவரசனாக அறிவித்திருந்தான் இவான் த டெரிபிள். மகன் மேல் அளவற்ற பிரியமும் வைத்திருந்தான். ஆனால் மூன்று வயதில் இளவரசனாகி யாருமே எதிர்த்துப் பேசாமல் வளர்ந்திருந்ததால் ஒருமுறை கோபத்தில் தன் இரும்புக் கைத்தடியால் மகன் இவானின் மண்டையில் அடிக்க மகன் இறந்து போகிறான்.

இவானைக் கொல்ல பல சதிகள் நடந்தன. ஆனால் ஒன்று கூட வெற்றி பெறவில்லை. 1584-இல் இயற்கையான மரணமே அடைந்தான் இவான். அதுவரை அவனே ரஷ்ய சாம்ராஜ்யத்தின் அசைக்க முடியாத முதல் ஜார் மன்னனாக விளங்கினான். ஒருமுறை ஜார் என்ற பெயருக்குக்குக் கூட விளக்கம் சொன்னான். ரோமாபுரியின் சக்ரவர்த்தியான சீசரின் வாரிசே 'ட்ஸார்' (Tsar). இத்தாலியின் சீசர் ரஷ்ய மொழியில் ட்ஸார் என்று மாறியது.

ஒரு அரண்மனை விழாவின் போது குடித்துக் கொண்டே ஒன்றுவிட்ட தம்பி டிமிட்ரியுடன் தன் தனிமையைப் பற்றியும் தன்னைக் கொல்வதற்காக நடக்கும் சதிகளைப் பற்றியும் புலம்பிக் கொண்டிருக்கிறான் இவான். "இத்தனை துயரமான பதவியையா என்னை ஏற்றுக் கொள்ளும்படி சொல்லிக் கொண்டிருக்கிறாள் என் அன்னை?" என்று கேட்கிறான் டிமிட்ரி. அன்றைய தினம் இவானைக் கொல்ல சதி செய்திருக்கிறாள் அவள். இவானுக்குப் புரிந்து போகிறது. "அப்படியா சொன்னாள்? இதோ உன்னை ஜார் மன்னனாக்கி விடுகிறேன்" என்று சொல்லி அவனுக்கு முடி சூட்டி எல்லோரையும் அவன் காலில் விழச் செய்கிறான் இவான். அவனும் தம்பி காலில் விழுகிறான். போதையில் இருக்கும் டிமிட்ரி, விழா முடிவில் ஜார் மன்னன் செய்ய வேண்டிய சடங்குக்காகப் போகும் போது அவன்தான் இவான் என்று நினைத்துக் கொன்று விடுகிறான் கொலையாளி. உடனே அங்கே வரும் சிற்றன்னை பிணத்தின் மீது காலை வைத்து 'ஒழிந்தான் இவான்' என்று எக்காளமிடும் போது புன்முறுவலோடு அங்கே வருகிறான் இவான்.

மற்றொரு காட்சியில், இவான் மாஸ்கோவை விட்டு வெளியேறி வேறொரு இடத்தில் இருக்கும் போது அவனை மாஸ்கோவுக்கு வரச்

https://telegram.me/aedahamlibrary

சொல்லி ஒரு லட்சம் பேர் மாஸ்கோவிலிருந்து பனிப் பாலையில் அணிவகுத்து வருகிறார்கள். யாராலும் மறக்க முடியாத காட்சி அது. படத்தில் அத்தனை நடிகர்களுமே ஒரு நடன பாவத்தோடுதான் நடிக்கிறார்கள். அந்த வகையில் இது ஒரு புதிய நடிப்பு மொழியையே அறிமுகப்படுத்துகிறது. மொத்தத்தில் இவான் த டெரிபிள் ஒரு காவியம்.

(முதல் பாகம் தயாரிக்கப்பட்ட உடனேயே இரண்டாம் பாகமும் தயாராகி விட்டாலும் ஸ்டாலின் அதை விரும்பவில்லை. இரண்டாம் பாகத்தின் இவான் ஒரு சர்வாதிகாரி. அது ஸ்டாலினுக்குப் பிடிக்கவில்லை. அது தன்னையே சுட்டுவதாகக் கருதித் தடை செய்தார். அவருடைய மரணத்துக்குப் பிறகே பாகம் 2, 1958-இல் வெளிவந்தது. அப்போது ஐசன்ஸ்டைனும் உயிரோடு இல்லை.)

https:/ /telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

2

Red Beard (1965)

Akira Kurosawa

ஜப்பானிய இயக்குனர் அகிரா குரசவாவைப் (1910-1998) போன்ற திரைப்பட மேதைகள் உலகில் அரிதாகவே பிறக்கிறார்கள். உலக சினிமாவின் காவியங்கள் என்று போற்றத்தக்க திரைப்படங்களின் பட்டியலை எடுத்தால் அநேகமாக குரசவாவின் எல்லாப் படங்களுமே அதில் இடம் பெற்று விடும். அவருடைய ரஷோமான், இகிரு, செவன் சாமுராய், Throne of Blood, The Lower Depths, தெர்சு உஸாலா, காகேமூஷா, ரான், ட்ரீம்ஸ், மாதாதாயோ என்ற படங்கள் ஒவ்வொன்றுமே கிளாசிக்தான். அதிலும் அவர் எடுத்த கடைசி படமான மாதாதாயோ மனித குலத்துக்கு குரசவா எழுதி வைத்த உயில் என்றே சொல்லலாம்.

குரசவா எடுத்த முப்பது படங்களில் நம் தொடருக்கு எதை எடுப்பது, எதை விடுவது என்று குழம்பினேன். அப்போது 35 ஆண்டுகளுக்கு முன்பு பார்த்த ஒரு படத்தின் சில காட்சிகள் என் மனதில் நீங்காத இடம் பெற்றிருந்ததோடு, ஐந்து பெண்கள் ஒரு கிணற்றைச் சுற்றி நின்றபடி உள்ளே பார்த்து சோபோ சோபோ என்று உரக்கக் கத்தும் சப்தமும் என் செவிகளில் கேட்டது. மட்டுமல்ல; ஒரு ஜப்பானிய நண்பரின் இல்லத்துக்குச் சென்றிருந்த போது அங்கிருந்த ஒரு பெண் முழங்காலை மடித்து, குனிந்தபடி இரு கைகளாலும் தரையை ஈரத்துணியால் துடைத்துக் கொண்டிருந்ததைப் பார்த்தவுடன் எனக்கு ரெட் பியர்ட் படம் ஞாபகம் வந்தது.

மூன்று மணி நேரம் ஓடும் ரெட் பியர்டை ஒருவர் பார்த்தால் டால்ஸ்டாயின் நாவலையோ ஷேக்ஸ்பியரின் நாடகத்தையோ படிப்பது

https://telegram.me/aedahamlibrary

போல் உணரலாம். அதனால்தான் காவியம் என்றேன். காவியங்களைப் படிப்பது மனிதனை மேம்படுத்தும் என்றால் குரசவாவின் படங்களும் அதையேதான் செய்யும்.

கதை நடக்கும் ஆண்டு 1825. மேட்டுக்குடியைச் சேர்ந்த யசுமோட்டோ ஒரு மருத்துவ மாணவன். ஒரு செல்வந்தரின் அந்தரங்க மருத்துவராகி அதிகாரத்துக்கு நெருக்கமாக வாழ வேண்டும் என்பது அவன் ஆசை. ஏழைகளுக்குப் பணிபுரியும் அரசு மருத்துவமனைகளில் தன் வாழ்நாளை வீணாக்கிக் கொள்ள அவன் விரும்பவில்லை. ஆனால் உயர் மருத்துவப் படிப்பின் ஒரு பகுதியாக கிராமப்புறத்தில் இருக்கும் ஒரு மருத்துவரிடம் பயிற்சிக்காக அனுப்பப்படுகிறான் யசுமோட்டோ. அந்த மருத்துவர்தான் செந்தாடி என்று அழைக்கப்படுபவர். காந்தி எப்படி ஒரு மகாத்மாவாக வாழ்ந்தாரோ அதேபோல் வாழ்கிறார் அந்த செந்தாடி மருத்துவர். மருத்துவமனையின் உள்ளே நுழையும் போதே "இங்கே ஏன் அழுகிய பழங்களின் நாற்றம் அடிக்கிறது?" என்று முகச்சுளிப்புடன் கேட்கிறான் யசுமோட்டோ. அதுதான் வறுமையின் வாசனை என்கிறார் ஒரு மருத்துவர். வெறும் நோயாளிகள் சிலரது முகங்களைக் காண்பித்தே அந்த வறுமையின் குரூரத்தை நமக்கு உணர்த்தி விடுகிறார் குரசவா.

இறந்து கொண்டிருக்கும் ஒரு வயோதிகரிடம் யசுமோட்டோவைத் தனியே விட்டு "இவர் ஒரு பொற்கொல்லர். ஆனால் இவரைத் தேடி யாருமே வரவில்லை. இவரும் ஒரு வார்த்தை பேசவில்லை. ஒரு மனிதனின் இறுதி நேரத்தை விட மகத்தான தருணம் வேறு எதுவும் இல்லை; இவருடன் இரு" என்று சொல்லிச் செல்கிறார்.

ஒருமுறை யசுமோட்டோவும் செந்தாடியும் ஒரு விபச்சார விடுதியில் 12 வயது ஒனாகா என்ற சிறுமியைப் பார்க்கிறார்கள். தொழில் செய்ய மறுத்ததால் அவளைப் பிரம்பால் அடிக்கிறாள் விடுதியின் தலைவி. அந்தச் சிறுமிதான் விடுதியின் தரை முழுவதையும் முழங்காலை மண்டியிட்டு அமர்ந்தபடி துணியால் துடைப்பவள். அந்தக் காட்சிதான் 35 ஆண்டுகளாக என் மனதிலிருந்து அகலாத காட்சியாக இருந்தது. கடுமையான பிரம்படிகளால் அவள் ஜன்னி வந்து கிடக்கும் போதுதான் செந்தாடியும் யசுமோட்டோவும் அங்கே வருகிறார்கள். வலுக்கட்டாயமாக அவளைத் தன் மருத்துவமனைக்குக் கொண்டு வருகிறார் செந்தாடி. ஆரம்பத்தில் யசுமோட்டோ அந்த மருத்துவமனையின் சட்டதிட்டங்களுக்கு அடங்க மறுத்து சீருடையைக் கூட அணியாமல் முரண்டு பிடித்துக் கொண்டிருக்கிறான். பிறகு கொஞ்சம் கொஞ்சமாகத்தான் வாழ்வின் இருண்ட பகுதிகளும் கிராமப்புற வறுமையும் அவனுக்கு அறிமுகம் ஆகின்றன. "சிறுமியை

https://telegram.me/aedahamlibrary

உன் கண்காணிப்பில் வைத்து குணப்படுத்து” என்று சொல்லி அவனிடம் அவளை ஒப்படைக்கிறார் செந்தாடி.

ஆனால் அவன் கொடுக்கும் மருந்தை அவள் மூர்க்கமாகத் தட்டி விடுகிறாள். அதிர்ச்சியும் அவமானமும் அடைகிறான் யசுமோட்டோ. அவனால் அவளை சமாளிக்க முடியவில்லை. மூன்று நாட்கள் இப்படியே போகிறது. செந்தாடியிடம் போய் தன்னால் ஆகவில்லை என்கிறான். “அவளுடைய உடலை விட அவள் மனம் அதிகமாக நோய்வாய்ப்பட்டிருக்கிறது” என்று சொல்லியபடி வருகிறார் செந்தாடி. ஒனாகாவுக்கு மருந்தைப் புகட்டுகிறார். தட்டி விடுகிறாள். மீண்டும் புகட்டுகிறார். தட்டி விடுகிறாள். புன்முறுவலுடன் மீண்டும் மீண்டும் புகட்டுகிறார். ஐந்தாவது முறை மருந்தைத் தட்டி விடாமல் உட்கொள்கிறாள் சிறுமி. மறுநாள் அவள் முதல்முதலாகப் பேசுகிறாள்.

“மருந்தைத் தட்டி விட்டும் அவர் ஏன் என்னை அடிக்கவில்லை?”

அதற்கு அவன், “உலகில் நீ பார்த்த மனிதர்கள் மட்டும் வாழவில்லை. நல்லவர்களும் இருக்கிறார்கள்” என்கிறான்.

“நீ என்னை முட்டாளாக்கப் பார்க்கிறாய்” என்று சொல்லிக் கொண்டே யசுமோட்டோ அவளுக்கு உணவை ஊட்டுவதற்காக எடுத்து வரும் பீங்கான் குவளையைத் தட்டி விடுகிறாள். குவளை உடைந்து போகிறது. அதிர்ச்சியுடன் பார்க்கும் அவனிடம் “உண்மையைச் சொல்; இப்போது உனக்கு என்னை அடிக்க வேண்டும் என்று தோன்றுகிறதுதானே?” என்று கேட்கிறாள்.

“நீ ஒரு நல்ல பெண்” என்று திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டே அழுகிறான் யசுமோட்டோ. மறுநாள் ஒனாகாவைக் காணவில்லை. தேடிக் கொண்டு வெளியே போகிறான். ஊரின் ஒரு சதுக்கத்தில் மண்டியிட்டு அமர்ந்து பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறாள். ஒளிந்திருந்து பார்க்கிறான். கிடைத்த காசில் ஒரு பீங்கான் குவளையை வாங்குகிறாள் ஒனாகா.

இதுதான் ரெட் பியர்ட் படத்தின் செய்தி. அன்பே நம்மை குணப்படுத்துகிறது. அன்பே இன்றைய சமூகத்துக்குத் தேவையான மருந்து.

படத்தில் மற்றொரு சம்பவம்: அந்த மருத்துவமனையிலிருந்து அடிக்கடி உணவைத் திருடிக் கொண்டு போகிறான் ஒரு சிறுவன். அவனைப் பிடித்து அடிப்பதற்காகத் தேடுகிறார்கள் பணிப்பெண்கள். அப்போது அவனிடம் சென்று ஏன் திருடுகிறாய் என்று கேட்கிறாள் ஒனாகா. “பசி; எப்போதும் பசி” என்கிறான் சோபோ என்னும் அந்த ஏழு வயதுச்

https://telegram.me/aedahamlibrary

சிறுவன். மேலும், “பேசாமல் நான் ஒரு குதிரையாகப் பிறந்திருக்கலாம். புல்லைத் தின்றால் பசி போய் விடும். புல்லும் நிறைய இருக்கிறது” என்கிறான். இப்படித் திருடுவதை விடப் பிச்சையெடுத்துப் பிழைக்கலாமே என்று சொல்லி, தினமும் வா; உனக்கு என் சோற்றைத் தருகிறேன் என்கிறாள் ஒனாகா. மறுநாள் அவன் கொஞ்சம் மிட்டாய்களைக் கொண்டு வந்து அவளிடம் தருகிறான். “நீ என்னைப் பிடித்துக் கொடுக்கவில்லை என்பதால் உனக்கு என் பரிசு இது. ரொம்பக் கஷ்டப்பட்டு திருடினேன்” என்கிறான். திருட்டுப் பொருள் எனக்கு வேண்டாம் என்று மறுக்கும் அவள் பிறகு அதை வாங்கிக் கொண்டு, அவனுக்கே கொடுக்கிறாள்.

ஒருநாள் சோபோ, தானும் தன் பெற்றோரும் சகோதரர்களும் ஊரை விட்டு வெகுதூரம் போகிறோம்; அங்கே பசி இருக்காது என்று சொல்லி விட்டுப் போகிறான். மறுநாள் எலிப் பாஷாணத்தைத் தின்று தற்கொலைக்கு முயற்சி செய்த அந்தக் குடும்பம் மருத்துவமனைக்குக் கொண்டு வரப்படுகிறது. ஒருவர் பின் ஒருவராக சாகிறார்கள். அப்போதுதான் மருத்துவமனையின் பணிப்பெண்கள் அங்கே இருக்கும் கிணற்றில் குனிந்து சோபோ சோபோ என்று கத்துகிறார்கள். நம் வாழ்நாளில் மறக்க முடியாத சப்தமும் காட்சியுமாகும் அது. ஒனாகாவும் கிணற்றுக்கு வந்து சோபோ சோபோ எனக் கதறுகிறாள். கிணற்றின் வாயிலில் இருந்து கத்தினால் அந்த சப்தம் பூமி மாதாவின் அடியாழத்துக்குப் போய் கேட்கும். மாதா கண்ணைத் திறப்பாள் என்பது ஒரு நம்பிக்கை. சோபோ பிழைத்து எழுகிறான்.

யசுமோட்டோ தன் ஆடம்பர ஆசைகளை விட்டு விட்டு அந்த மருத்துவமனையிலேயே ஏழை எளிய மக்களுக்கு சேவை செய்து வாழ்கிறான்.

https://telegram.me/aedahamlibrary

3

The Seventh Seal (1957)

Ingmar Bergman

உலக சினிமாவில் உங்களுக்குப் பிடித்த ஒரே ஒரு கலைஞரைச் சொல்லுங்கள் என்றால் அநேகம் பேர் சொல்லக் கூடிய பதில் இங்க்மர் பெர்க்மன் (1918-2007) என்பதாகவே இருக்கும். அது சரியானதும்தான். ஆங்கில இலக்கியத்தில் ஷேக்ஸ்பியருக்கு என்ன இடம் உண்டோ அதே போன்ற இடத்தையே ஸ்வீடிஷ் இயக்குனர் பெர்க்மனுக்கும் கொடுக்க வேண்டும். பெர்க்மன் 47 திரைப்படங்களை இயக்கியிருக்கிறார். ஆனாலும் உலக அளவில் அவருடைய ஏழாவது முத்திரை, வைல்ட் ஸ்ட்ராபெரீஸ், ஆட்டம் சொனாட்டா போன்ற படங்களே பிரபலமாகியிருக்கின்றன. உலக சினிமா பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் நாமும் இப்போது ஏழாவது முத்திரை பற்றித்தான் பார்க்கப் போகிறோம்; ஏனென்றால், ஏழாவது முத்திரை இல்லாமல் உலக சினிமா இல்லை.

பெர்க்மனின் படங்கள் தத்துவார்த்தமானவை. தத்துவம் என்றால் வாழ்க்கையிலிருந்து அந்நியமான, புத்திஜீவிகள் மட்டுமே விவாதிக்கக் கூடிய தத்துவம் அல்ல; அவரது தத்துவம் மனித வாழ்க்கையோடு நெருக்கமான தொடர்புடையது. எந்தவொரு மனிதனும் தன்னை அதனோடு அடையாளப்படுத்திக் கொள்ளும் சாத்தியங்களைக் கொண்டது. நம்முடைய கதோபநிஷத்தில் வரும் நசிகேதனுக்கும் எமனுக்கும் நடக்கும் உரையாடலைப் படித்திருக்கிறீர்களா? அதுதான் ஏழாவது முத்திரையின் மையக் கருத்து. மரணத்தை ஒரு மனிதன் எப்படி எதிர்கொள்வது? எப்படிக் கடப்பது? குறைந்த பட்சம், மரணத்தைக்

https://telegram.me/aedahamlibrary

கண்டு அஞ்சாமல் இருப்பது எப்படி?

ஏழாவது முத்திரையின் கதை பதினான்காம் நூற்றாண்டின் மத்தியப் பகுதியில் நடக்கிறது. புனிதப் போரில் பங்கேற்றுவிட்டுத் திரும்புகிறார்கள் ஒரு போர்வீரனும் அவனுடைய உதவியாளனும். அப்போது போர்வீரனை நெருங்கும் மரண தேவன், “கிளம்பி வா, உன் ஆயுள் முடிந்து விட்டது; நீண்ட காலமாக உன்னை நான் தொடர்ந்து வருகிறேன்” என்கிறான். அதற்கு வீரன், “என் உடம்புக்குத்தான் ஆயுள் உண்டே தவிர ஆத்மாவுக்குக் கிடையாது; சரி, வருகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. உனக்கு சதுரங்க ஆட்டம் தெரியும்தானே? அதில் நீ என்னை வெல்ல வேண்டும்” என்கிறான்.

“எனக்கு சதுரங்கம் தெரியும் என்று உனக்கு எப்படித் தெரியும்?”

“ஓவியங்களில் பார்த்திருக்கிறேன்.”

“நான் மிக நன்றாக சதுரங்கம் ஆடுவேன். ஆனால் நீ என்னோடு ஏன் சதுரங்கம் ஆட விரும்புகிறாய்?”

“எவ்வளவு நேரம் ஆட்டத்தில் உன்னை எதிர்த்து நிற்க முடிகிறதோ அவ்வளவு நேரம் நான் உயிரோடு இருக்க முடியும் அல்லவா?”

இப்படி ஆரம்பிக்கும் சதுரங்க ஆட்டம் படம் முடியும் வரை விட்டுவிட்டுத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. மற்றொரு முக்கிய விஷயம், மரண தேவனை அந்தப் போர்வீரனைத் தவிர வேறு யாரும் பார்க்க இயலாது. படத்தில் மரணம் ஒரு குறியீடாக வருகிறது. பதினான்காம் நூற்றாண்டில் மட்டும் ஐரோப்பா கண்டம் முழுவதும் 20 கோடி பேர் பிளேக் நோயினால் மரணமடைந்தார்கள். போர்வீரன் புனிதப் போருக்குப் பிறகு ஸ்வீடன் திரும்பும் போது அங்கேயும் எங்கு பார்த்தாலும் பிளேக் பற்றிய பேச்சாகவே இருக்கிறது. படத்தில் ஒரு மரண ஊர்வலமும் மத ஊர்வலமும் வருகிறது. மத ஊர்வலத்தில் பலரும் உடல் ஊனமுற்றவர்களாக இருக்கிறார்கள். பலரும் தங்களைத் தாங்களே அடித்துக் கொண்டும், காயப்படுத்திக் கொண்டும் வருகிறார்கள். சிலர் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறார்கள். சிலர் முள் கிரீடம் அணிந்திருக்கிறார்கள். அவர்களின் தலையிலிருந்து குருதி வழிந்து கொட்டிக் கொண்டிருக்கிறது. மரணம் பற்றிய பீதியினால் அவர்களுக்குக் கடவுளும் சாத்தானும் ஒன்றாகவே தெரிகிறார்கள்.

படத்தின் முக்கியமான காட்சிகளில் ஒன்று இது: ஒரு இளம் பெண்ணுக்குப் பேய் பிடித்து விட்டது என்று அவளைக் கூண்டு வண்டியில் போட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்கிறார்கள். அந்தப் பெண் சாத்தானோடு உறவு கொண்டு விட்டாள்; அவளால்தான் பிளேக்

https://telegram.me/aedahamlibrary

பரவுகிறது என்கிறார்கள் ஊர்வலத்தினர். போர்வீரன் அவளிடம், “அவர்கள் சொல்வது உண்மையா?” என்று கேட்கிறான். அதற்கு அவள் “ஆமாம், சாத்தான் என்னோடு இருக்கிறான்” என்கிறாள்.

உயிரோடு கொளுத்தப்பட இருக்கும் அவளிடம், “உனக்கு சாத்தானைத் தெரியும் என்றால் கடவுள் பற்றியும் தெரிந்திருக்குமே?” என்கிறான் போர்வீரன்.

“என் கண்களை உற்றுப் பார்.”

“உன் கண்களில் பயம்தான் தெரிகிறது.”

ஊருக்கு வெளியே ஒரு காட்டுப் பகுதியில் வைத்து அவளை உயிரோடு தீ மூட்டுகிறார்கள். வீரனின் உதவியாளன், “அவள் கண்களில் பயம் தெரியவில்லை; சூன்யம்தான் தெரிகிறது” என்கிறான்.

போர்வீரன், உதவியாளனோடு தன் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறான். வழியில் அவர்கள் ஒரு நாடோடிக் குடும்பத்தைச் சந்திக்கிறார்கள். ஜோசப், மேரி, மற்றும் ஒரு கைக்குழந்தை. ஜோசப்பும் மேரியும் கழைக் கூத்தாடிகள். ஆடல், பாடல், கதை சொல்லுதல் ஆகிய கலைகளில் தேர்ந்தவர்கள். பல ஊர்களில் அவர்களுக்கு வருமானம் இருப்பதில்லை. இங்கெல்லாம் கலைக்கு மரியாதை இல்லை என்று அடிக்கடி அலுத்துக் கொள்கிறான் ஜோசப். ஒரு ஊரில் ஒரு பெண் தன் கணவனை விட்டுவிட்டு ஒரு கூத்தாடியோடு ஓடிப் போய் விடுகிறாள். அதனால் எல்லாக் கூத்தாடிகளையும் அடித்துக் கொல்ல வேண்டும் என்று சொல்லி ஜோசப்பை அடித்துச் சித்ரவதை செய்கிறார்கள். அதிர்ஷ்டவசமாக அங்கிருந்து தப்பி ஓடி வருகிறான் ஜோசப். அதில் ஒரு மறக்க முடியாத சம்பவம் என்னவென்றால், ஜோசப்பைக் கொலை செய்ய முயலும் இடம் ஒரு மதுபான விடுதி. அங்கே மதகுரு ஒருவன் ஒரு தங்க வளையலை விற்பதற்காகக் கொண்டு வருகிறான். (அந்த வளையலை அவன் ஒரு ப்ளேக் நோயாளியிடமிருந்து திருடியிருக்கிறான். அவன்தான் போர்வீரனை புனிதப்போருக்குப் போக வேண்டும் என்று சொல்லி அனுப்பியவன்!) அவ்வளவு விலை உயர்ந்த நகையை வாங்கிக் கொள்ள அங்கே யாரிடமும் பணம் இல்லை. ஜோசப்பின் மனைவி மேரி முன்பு எப்போதோ அவனிடம் ஒரு வளையல் கேட்டிருந்தாள். ஜோசப் தன் உயிருக்குப் பயந்து மதுபான விடுதியிலிருந்து தப்பி ஓடும் அந்த நேரத்திலும் கண்ணிமைக்கும் நொடியில் அந்தத் தங்க வளையலை எடுத்துக் கொண்டு ஓடுகிறான்.

படத்தில் போர்வீரன் திரும்பத் திரும்பக் கேட்கும் கேள்வி, கடவுள் எங்கே என்பதுதான். ஏன் இந்த உலகில் கடவுள் காணாமல் போய்

https://telegram.me/aedahamlibrary

விட்டார்? ஆனால் படத்திலேயே அதற்கு சூசகமாக பதிலையும் சொல்கிறார் பெர்க்மன். ஜோசப்புக்கு அடிக்கடி கன்னி மேரி தெரிகிறாள். கனவில் அல்ல; நனவில். அதை மனைவியிடம் சொல்லும் போது அவள், “நீ பகலிலேயே உறங்குகிறாய்; அதனால்தான் கனவு வருகிறது” என்று கிண்டல் செய்கிறாள். ஆனால் ஜோசப் பார்த்தது நிஜம். அதை எப்படி அவன் அவளுக்கு நம்ப வைப்பான்? அதேபோல் படத்தில் யார் கண்களுக்கும் தெரியாத மரண தேவன் ஜோசப்பின் கண்களுக்கு மட்டும் தெரிகிறான்.

இறுதிக் காட்சியில் படத்தின் முக்கியப் பாத்திரங்கள் அனைவரையும் மரண தேவன் அழைத்துக் கொண்டு போகிறான். விதிவிலக்காக அவன் விட்டுப் போவது ஜோசப், மேரி, குழந்தை மூவரை மட்டுமே. காரணம், அந்த மூவரின் வெகுளித்தனமும் அன்பும்.

படத்தில் மறக்க முடியாத ஒரு அற்புதத் தருணம், போர்வீரன் சதுரங்க ஆட்டத்தில் தன் தோல்வியை உணர்ந்த பிறகு ஜோசப்பிடம் வருகிறான். ஜோசப்பும் மேரியும் அவனுக்கு ஸ்ட்ராபெரிஸ் பழங்களும் பாலும் கொடுத்து உபசரிக்கிறார்கள். ஊரெல்லாம் மரண ஓலம் கேட்கும் அந்த நேரத்தில், ஜோசப் ல்யூட் கருவியை இசைத்துக் கொண்டிருக்க, கோப்பை நிறைய பாலும், கூடை நிறைய ஸ்ட்ராபெரிஸ் பழங்களும், பக்கத்தில் ஒரு குழந்தையும், மாலை நேரமும் - “இந்த அற்புதத் தருணத்தை என்னால் மறக்கவே முடியாது” என்கிறான் வீரன்.

“நான் எப்போதும் என் குழந்தைப் பருவத்திலேயேதான் இருந்து கொண்டிருக்கிறேன்” என்று தன்னுடைய நூலில் குறிப்பிடுகிறார் பெர்க்மன். ஏழாவது முத்திரை என்ற இந்தப் படத்தில் வரும் ஜோசப், பெர்க்மனின் குழந்தைப் பருவத்தின் நீட்சிதான்.

ஏழாவது முத்திரை என்பது பைபிளின் திருவெளிப்பாடு என்ற அத்தியாயத்தில் வரும் சம்பவம். உருவகங்களாலும் குறியீடுகளாலும் சொல்லப்பட்டிருக்கும் அந்தப் பகுதியில் ஏழாவது முத்திரையைத் திறப்பது ஒரு ஆட்டுக் குட்டி. அது பெர்க்மனின் படத்தில் எல்லையற்ற அன்பின் குறியீடாக வருகிறது.

https://telegram.me/aedahamlibrary

4

The Last Emperor (1987)

Bernardo Bertolucci

மனிதர்கள் பிறப்பதும் இறப்பதும் இந்த உலக வாழ்வின் நியதியாக இருந்தாலும் புயி என்ற மனிதனுக்கு நேர்ந்த அனுபவங்களைப் போல் வேறு யாருக்காவது நடந்திருக்குமா என்று தெரியவில்லை. மூன்று வயது ஆன போது சிறுவன் புயி சீன சாம்ராஜ்ஜியத்தின் பேரரசனாகிறான். அவனுக்கு முன்னே ஆயிரக்கணக்கான படை வீரர்கள் மண்டியிடுகிறார்கள். மந்திரிமார்கள் கைகட்டி நிற்கிறார்கள். தேசமே அந்தச் சிறுவனை கடவுளின் தூதனாக மதிக்கிறது. உதாரணமாக, சிறுவன் காலைக்கடன் கழிக்கும் போது அதைக் கூட ஐம்பது பேர் குழுமியிருந்து கண்காணிக்கிறார்கள். தங்கக் குவளையில் விழும் அரசனின் கழிவை முகர்ந்து பார்த்து அன்றைய தினம் என்ன உணவு என்று தீர்மானிக்கப்படுகிறது. மற்றொருவர், அரசனின் உணவைத் தின்று பார்த்து, அதன் சுவையை அவதானிக்கிறார். உணவில் விஷம் கலக்கப்பட்டிருக்கிறதா என்பதை சோதிக்கவே அந்தத் திட்டம். (அவனுடைய மூதாதையர் சிலர் உணவில் விஷம் கலந்துதான் கொல்லப்பட்டிருக்கிறார்கள். மன்னராட்சி இருந்த காலத்தில் மன்னர்களைக் கொல்வதற்கு எளிதான வழி அதுவாகத்தான் இருந்தது.)

சிறுவன் புயி ஆட்சிக்கு வந்த ஆண்டு 1909. ஆனால் 1913-இலேயே - சிறுவனுக்கு ஏழு வயது ஆன போது ஆட்சி பறிக்கப்பட்டது. ஆனாலும் பீக்கிங் நகரத்தில் உள்ள மாபெரும் அரண்மனையில் அவன் வாழ்ந்து

https://telegram.me/aedahamlibrary

கொள்ளலாம். அரசருக்குப் பணிவிடை செய்ய 1500 திருநங்கைகள், 300 வேலைக்காரிகள், 135 சமையல்காரர்கள், இவர்களைத் தவிர நூற்றுக்கணக்கான மெய்க்காப்பாளர்கள். பார்வையாளர்களே இல்லாத நாடகத்துக்கு இத்தனை கதாபாத்திரங்கள் எதற்கு என்று கேட்கிறான் சிறுவன் புயி. சக்ரவர்த்தி என்றாலும் மூன்று வயதிலிருந்தே சிறைக் கைதியைப் போல்தானே வாழ்கிறான்? மற்ற சிறார்களைப் போல் விளையாட முடியாது. ஏன், அவன் அன்னையின் மரணத்திற்குச் செல்வதற்குக் கூட அவனுக்கு அனுமதி இல்லை. 'இல்லை, போயே தீருவேன்' என்று சொல்லி விட்டு வெளியே வருகிறான். அவனுடைய அடிமைகளை ஒத்த சேவகர்கள் வாயிலைத் திறக்க மறுத்து அவன் பாதங்களில் தலை வைத்து மண்டியிடுகிறார்கள்.

இந்த உலகத்திலேயே மிகத் தனிமையான மனிதனாக இருக்கிறான் புயி. வெளி உலகத்துக்கும் அவனுக்கும் தொடர்பே இல்லை. பிரஜைகளே இல்லாத ராஜ்ஜியத்தின் அரசனாக இருப்பதை விட ஒரு சாமானியனாக வெளியுலகில் வாழ்வதையே விரும்புகிறேன் என்று புலம்புகிறான். பலமுறை தப்பிச் செல்லவும் முயற்சிக்கிறான். முடியவில்லை. பிறகு வெளியுலகத்தோடு தொடர்பு வைத்துக் கொள் வதற்கான கடைசி முயற்சியாக ஜான்ஸ்டன் என்ற பிரிட்டிஷ்காரரைத் தன் ஆங்கில ஆசிரியராக அமர்த்திக் கொள்கிறான்.

அவருக்கும் அவனுக்கும் நடக்கும் ஒரு உரையாடலில் புயியின் கொடூரமான தனிமை தெரிகிறது. சொற்கள் மிகவும் முக்கியமானவை என்கிறார் ஜான்ஸ்டன்.

"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை வெளிப்படுத்தத் தெரியா விட்டால் அது ஒரு கனவானின் அடையாளம் அல்ல."

இதைக் கேட்டதும் புயி, நீங்கள் கனவானா என்று கேட்கிறான். "ஆமாம், ஒரு கனவானாக முயற்சி செய்பவன்."

"அப்படியானால் நான் கனவான் அல்ல."

"ஏன்?"

"ஏனென்றால், நான் என்ன நினைக்கிறேனோ அதைப் பேச எனக்கு அனுமதி இல்லை. நான் என்ன பேச வேண்டும் என்பதை மற்றவர்கள்தான் எப்போதும் தீர்மானிக்கிறார்கள்."

(அரசன் சொன்னதைப் போலவே அந்த அரண்மனை விவகாரங்களை இறந்து போன பேரரசரனின் ஒரு டஜன் மனைவிமார்கள்தான் கவனித்துக் கொள்கிறார்கள்.)

https://telegram.me/aedahamlibrary

அரண்மனைக்கு உள்ளே வாழ்க்கை இப்படிப் போய்க் கொண்டிருக்க அரண்மனைக்கு வெளியே வேறொரு அரசு ஆட்சியில் இருந்தது. சீனாவின் முடியாட்சி 1912-இலேயே முடிவு செய்யப்பட்டு சீனா ஒரு குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டது. அதன் முதல் அதிபராக இருந்தவர் சன்-யாட்-சென். இதுதான் பேரரசன் புயியின் மிகப் பெரிய பிரச்னை. அந்த அரண்மனைக்கு உள்ளேதான் அவன் பேரரசன். வெளியே அவன் ஒரு சராசரி மனிதன். ஜான்ஸ்டனின் மூலம் வெளியுலகை அறிந்து கொள்ளும் புயி, அந்த 'கிங்' அரச பரம்பரையிலேயே முதல் முதலாக நீண்டு தொங்கும் தன் முடியை வெட்டிக் கொள்கிறான். இது போன்ற சீர்திருத்தங்களைச் செய்த அவனுடைய முன்னோடிகள் கொல்லப்பட்டார்கள்.

புயி என்ற இந்தப் பேரரசனுக்கும் நம்முடைய தியாகராஜ பாகவதருக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது.

தமிழ் சினிமாவின் முதல் சூப்பர் ஸ்டாராக விளங்கியவர் எம்.கே. தியாகராஜ பாகவதர். ஒரு கொலை வழக்கில் சிறைக்குச் சென்றார். மூன்று ஆண்டுகளில் திரும்பி வந்த போது அத்தனை சொத்துக்களும் வீடும் வாசலும் அவரிடமிருந்து போய் விட்டது. கூடவே போனது புகழ் மட்டும் அல்ல; கண் பார்வையும். ஒருநாள் சமயபுரம் அம்மன் கோவிலில் அமர்ந்து அம்பா மனம் கனிந்து உனது கடைக்கண் பார் என்று மெல்லிய குரலில் பாடிக் கொண்டிருக்கிறார். தரையில் 'ணங்' என்ற நாணயத்தின் சப்தம். யாரோ ஒரு தர்மவானின் காரியம். எதிர்பாராத இந்த சம்பவம் பாகவதரை ரொம்பவே பாதித்து விட்டது.

சீனப் பேரரசன் புயியின் வாழ்வும் அப்படித்தான் அமைந்தது. ஆயிரம் ஆண்டுகளாக அடிமையாக இருந்த திருநங்கைகள் ஒருநாள் அரண்மனையின் உணவுக் கிடங்குகளுக்குத் தீ வைக்கிறார்கள். அரண்மனைக்கு அடிமைச் சேவகம் செய்வதற்காக நூற்றுக் கணக்கானவர்களைப் பிடித்து அவர்களின் பிறப்பு உறுப்புகளை வெட்டி விடுவார்கள் அரசனின் சேவகர்கள். அப்படிப்பட்டவர்களே அடிமைத் திருநங்கைகளாக ஆகின்றனர். ஜான்ஸ்டன் மூலமாக நவீன உலகம் பற்றித் தெரிந்து கொள்ளும் புயிக்கு இதெல்லாம் அருவருப்பை அளிக்கின்றன.

1927-இல் புயி தனது இரண்டு மனைவிகளுடன் அரண்மனையை விட்டு வெளியேறுகிறார். அவருக்குப் புகலிடம் தருகிறோம் என்று சொல்லி அழைத்துப்போகும் ஜப்பானியர்கள் நம்பிக்கைத் துரோகம் இழைத்து விடுகின்றனர். இரண்டாவது மனைவி புயியிடம் விவாகரத்து கேட்கிறாள். புயி மறுக்கிறார். மேற்கத்திய கலாச்சாரத்துக்குப்

https://telegram.me/aedahamlibrary

பழகிவிட்ட அவள் அவரை விட்டுப் பிரிகிறாள். முதல் மனைவி போதை அடிமை ஆகிறாள். அதனால் புயிக்கும் அவளுக்குமான உறவு முறிந்து போகிறது. பலர் முன்னிலையில், "உன் மனைவிக்குப் பிறந்த குழந்தையின் தகப்பன் நீ அல்ல; உன் காரோட்டி" என்று புயியிடம் சொல்கிறான் ஜப்பானியத் தளபதி. ஆயிரக்கணக்கான மனிதர்கள் தன் காலடியில் வீழ்ந்து வணங்குவதைக் கண்ட புயி தன்னுடைய தற்போதைய நிலையை எண்ணி உள்ளுக்குள் சிரித்துக் கொள்கிறார்.

இரண்டாம் உலகப் போர் துவங்குகிறது. "இந்தியா உட்பட ஆசியா முழுவதையும் கைப்பற்றுவோம்; உலகிலேயே உயர்ந்த இனம் ஜப்பானிய இனம்தான்" என்று கொக்கரிக்கிறான் ஜப்பானியத் தளபதி. புயியின் மனைவிக்குப் பிறந்த குழந்தையை ஊசி போட்டுக் கொன்று விட்டு, அவளையும் வேறு இடத்துக்கு அப்புறப்படுத்தி விடுகிறான் அவன். மனைவி கிளம்பும் வேளையில் அவளைப் பார்ப்பதற்குக் கூட புயிக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

உலகப் போரில் ஜப்பானின் தோல்விக்குப் பிறகு, கம்யூனிஸ்டுகளால் கைது செய்யப்படுகிறார் புயி. பத்தாண்டு சிறைவாசத்தில் அவருக்குக் கம்யூனிசக் கல்வி அளிக்கப்படுகிறது. 20 ஆண்டுகளுக்கு முன்பு பார்த்த இந்தப் படத்தில் இரண்டு காட்சிகள் என் நினைவை விட்டு நீங்காமல் இருக்கின்றன. ஒன்று, சிறைத் தலைவர், "நீ இரவில் சிறுநீர் கழிக்கும் போது வாளியின் நடுவே போகக் கூடாது; அது மற்றவர்களின் உறக்கத்தைப் பாதிக்கும். வாளியின் ஓரத்தில்தான் போக வேண்டும்" என்று புயியிடம் சொல்வது. இரண்டாவது, சிறையிலிருந்து வெளியே வந்த பிறகு சீனப் பேரரசன் புயி ஒரு சாதாரண தோட்டத் தொழிலாளியாக வேலை செய்கிறார். ஒருநாள், தான் வாழ்ந்த அரண்மனைக்கு டிக்கட் வாங்கிக் கொண்டு செல்கிறார். அரியணையின் அருகே செல்லக் கூடாது என்று அவரைத் தடுக்கிறான் ஒரு சிறுவன். அந்த அரியணையில் வீற்றிருந்த பேரரசன் நான் என்கிறார் புயி. சாட்சி? 58 ஆண்டுகளுக்கு முன்பு - மூன்று வயதில் புயி அரியணை ஏறும் போது ஒருவர் கொடுத்த வண்டை ஒரு குப்பியில் அடைத்து அரியணையில் ஒளித்து வைத்திருந்தார். அது இன்னமும் அங்கேயே இருந்தது. அதை எடுத்து அந்தச் சிறுவனிடம் கொடுக்கிறார் புயி. ஒன்பது ஆஸ்கர் பரிசுகளைப் பெற்ற மகத்தான படம் கடைசிப் பேரரசன்.

https://telegram.me/aedahamlibrary

5

The Pianist (2002)

Roman Polanski

போலந்தைச் சேர்ந்த ரோமன் பொலான்ஸ்கி உலகின் மகத்தான இயக்குனர்களில் ஒருவர். அடிக்கடி சர்ச்சைகளுக்குள்ளாகின்றவர். கிட்டத்தட்ட ஒரு புத்தகமாக எழுதும் அளவுக்கு சம்பவங்களைக் கொண்டுள்ள இந்தப் படம் நமது வாழ்வையும் ஆளுமையையும் வேறோர் உயரத்திற்கு எடுத்துச் செல்லக் கூடியது. படத்தின் இன்னொரு சிறப்பு, மானுட விடுதலை குறித்த சிந்தனை. மனிதனை விடுதலையை நோக்கிச் செலுத்தும் மாபெரும் உந்து சக்தியாக இருப்பது எது?

இரண்டாம் உலகப் போரின் போது 90 லட்சம் யூதர்கள் ஹிட்லரின் நாஜிப் படைகளால் கொல்லப்பட்டனர். ஹிட்லர் என்ற தனிமனிதனால் எப்படி இத்தனை யூதர்களைக் கொல்ல முடிந்தது? காரணம், பாஸிசம் என்பது ஜெர்மானிய சமூகத்தின் மீதே ஒட்டுமொத்தமாகப் படிந்திருந்தது. அதன் காரணமாகவே ராணுவம், பொதுமக்கள் என அனைவரும் இதில் இணைந்திருந்தார்கள்.

1939-இல் போலந்தின் வார்ஸா நகரத்தில் ஹிட்லரின் படை நுழைகிறது. அந்த நகரில் வாழ்ந்த ஒரு பியானோ கலைஞன் ஸ்பீல்மென். அவனது வாழ்வில் என்ன நடந்தது என்பதே கதை. படத்தின் ஆரம்பக் காட்சியில் அவன் ஒரு வானொலி நிலையத்தில் பியானோ வாசித்துக் கொண்டிருக்கிறான். அந்த இடத்தில் குண்டுகள் விழுகின்றன. மக்கள் சிதறி ஓடுகிறார்கள்.

இப்படி நுழையும் நாஜி ராணுவம் 1945 வரை வார்ஸாவை நிர்மூலமாக்கி அங்கிருந்த யூதர்கள் அத்தனை பேரையும் வதை முகாம்களுக்கு அனுப்பி வைத்தது. வதைமுகாமுக்கு அனுப்பப் பட்டால் மரணம் நிச்சயம். ஒன்று,

https://telegram.me/aedahamlibrary

சுட்டுக் கொல்லப்படுவார்கள்; அல்லது விஷவாயுக் கொட்டடியில் போடப்படுவார்கள். பின்னர் போரின் முடிவில் 1945-இல் ரஷ்ய ராணுவம் போலந்தில் நுழைந்து யூதர்களைக் காப்பற்றுகிறது.

முதல் நாள் வரை ஸ்பீல்மென் ஒரு பூர்ஷ்வா. பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனது குடும்பமும் மற்ற யூதர்களைப் போலவே வதைமுகாமுக்கு அனுப்பி வைக்கப்படும் வேளையில் ஒரு போலீஸ் அதிகாரி ஸ்பீல்மன் ஒரு பிரபலமான பியானோ கலைஞன் என்பதால் காப்பாற்றி விடுகிறான்.

படத்தில் வரும் ஸ்பீல்மன் நிஜமான கதாபாத்திரம். நாஜி படை நுழைந்து இரண்டு ஆண்டுகள் ஆனதும் திரும்பவும் அவனை வதைமுகாமுக்கு அனுப்ப முயல்கிறார்கள். சில காலம் வெளியே வராமல் பதுங்கி இருக்கிறான் ஸ்பீல்மன். அந்த ஊரில் யூதர்கள் யாருமே இல்லை. அடிமைகளாக மட்டுமே சில பேர் இருக்கிறார்கள். தினமும் ஒரு ஜெர்மன் அதிகாரி வருவார். நூறு முதல் இருநூறு யூதர்களை வரிசையில் நிறுத்தி, தனக்கு யாரையெல்லாம் பிடிக்கிறதோ அவர்களைப் படுக்க வைத்து சுட்டுக் கொல்வார்.

இந்தப்படம் எனக்கு மிகப் பெரிய ஒரு ஆன்மீக அனுபவத்தைத் தந்தது என்று சொல்லலாம். படம் முழுக்க வன்முறை நிரம்பிய படம் எப்படி ஆன்மீக அனுபவத்தைக் கொடுக்கும்?

ஸ்பீல்மன் உணவு இல்லாமல் ஒவ்வொரு இடமாக மறைந்து கிடக்கிறான். மனிதர்களே கிடையாது. தண்ணீர் கூட இல்லை. மாதக்கணக்கில் பட்டினி. அவன் பதுங்கி இருக்கும் வீட்டுக்கு அருகில் இன்னொரு குடும்பமும் வசித்து வருகிறது. அதே ஊரைச் சேர்ந்த யூதர் அல்லாத வேறொரு குடும்பம். அவர்களுக்குத் தெரியாமல் இவன் இருக்க வேண்டும். நடக்கும் சத்தம் கூடக் கேட்கக் கூடாது. கேட்டால் மாட்டிக் கொள்வான். இதில் இன்னொரு கொடுமை என்னவென்றால், அந்த வீட்டில் பியானோ வேறு இருக்கிறது. இவனோ ஒரு மாபெரும் பியானோ கலைஞன். ஆனால் பியானோவைத் தொட முடியாது. தொட்டால் அகப்பட்டுக் கொள்வான். அந்த நிமிடமே உயிர் போய் விடும். அப்படிப்பட்ட அந்த வீட்டில் ஒரு வருட காலம் ஒளிந்து கொண்டிருக்கிறான் ஸ்பீல்மன். அவ்வளவு காலமும் அவனது நண்பர் ஒருவர்தான் ரகசியமாக உணவு கொண்டு வந்து தருகிறார். திடீரென்று ஒருநாள் அவர் வருகையும் நின்று விடுகிறது. உணவு இல்லை.

நாஜிகளின் பார்வையில் படாமல் பதுங்கிக் கிடக்கும் ஸ்பீல்மனுக்கு பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை அந்த நண்பர்தான் உணவு கொண்டு

https://telegram.me/aedahamlibrary

வருகிறார். இப்படியாக மாதக்கணக்கில் பட்டினி கிடந்து கிட்டத்தட்ட இறக்கும் தறுவாயில், சாப்பிட ஏதாவது கிடைக்கிறதா என்று வீடு முழுக்கத் தேடுகிறான். அப்போது சில பீங்கான் தட்டுக்கள் விழுந்து உடைகின்றன. சத்தம் கேட்டு பக்கத்து வீட்டிலிருந்து வந்து விடுகிறார்கள். படம் முழுக்க நாஜிகள் யூதர்களை யூத நாயே என்றுதான் திட்டுகிறார்கள். பிறகு அங்கிருந்தும் தப்பி இன்னொரு ஆளில்லா வீட்டுக்குப் போகிறான்.

அங்கேயும் நாள் கணக்கில் பட்டினி. கடைசியாக ஒரு தகர டின் கிடைக்கிறது. அதை ஆணியை வைத்து உடைக்கும் போது அந்த சத்தத்தில் ஒரு நாஜி அதிகாரி அங்கே வந்து விடுகிறார். அமைதியாக "நீ யார்?" என்று கேட்கிறார். நான் ஒரு பியானோ கலைஞன் என்கிறான் ஸ்பீல்மன். அப்படியென்றால் பியானோ வாசித்துக்காட்டு என்கிறார் அதிகாரி. சோப்பினின் சிம்ஃபனியில் ஒரு பகுதியை வாசித்துக் காட்டுகிறான். அவனை காட்டிக் கொடுக்காமல் இன்னும் பாதுகாப்பான இடத்தைக் காண்பித்துக் கொடுத்து உணவும் கொண்டு வந்து தருகிறார் அந்த நாஜி அதிகாரி. கடைசியாக ரஷ்ய ராணுவம் வார்ஸாவின் உள்ளே நுழையும் தருணத்தில் கூட தன்னுடைய கோட்டை அவனுக்குக் கொடுக்கிறார். இறுதியில் "நான் போகிறேன். மறுபடியும் எப்போதாவது வார்ஸா ரேடியோவில் நீ பியானோ வாசித்தால் கண்டிப்பாகக் கேட்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போகிறார்.

அந்தக் காலகட்டத்தில் யூதன் என்பதற்கு அடையாளமாக கையில் ஒரு பட்டை கட்டிக்கொள்ள வேண்டும். நீல நிறத்தில் நட்சத்திரக் குறியிட்ட பட்டை. அதைக் கட்டிக் கொள்ளாதவர்கள் கொல்லப்படுவார்கள். ஸ்பீல்மனுடைய அப்பா அந்தப் பட்டையைக் கட்டிக்கொண்டு சாலையோரம் நடந்து கொண்டிருக்கிறார். நாஜிப் படையைச் சேர்ந்த இரு சிப்பாய்கள் எதிரே வருகின்றனர். பயத்துடன் அவர்களைக் கடந்து போகிறார். அப்போது ஒரு சிப்பாய் அவரை ஏய் என்று கூப்பிடுகிறான். "ஏன் நாங்கள் வரும்போது உன் தலையைக் குனிந்து வணக்கம் சொல்லவில்லை?" என்று கேட்கிறான். இவர் மன்னிப்பு கேட்கிறார். அதைக் கண்டுகொள்ளாத அவன் தன் பலம் கொண்ட மட்டும் ஓங்கி அவர் முகத்தில் குத்துகிறான். எழுபது வயது மனிதர். அடிபட்டுக் கீழே விழுகிறார். அவனுக்கோ அவரது மகன் வயதுதான் இருக்கும். தடுமாறி எழுந்து கொள்கிறார். நடைபாதையில் நடக்க உனக்கு உரிமையில்லை. இறங்கி சாக்கடையில் நடந்து போÓ என்கிறான் அவன்.

மற்றொரு காட்சியில் ஒரு பெண் பைத்தியம் பிடித்ததுபோல அலறிக்

https://telegram.me/aedahamlibrary

கொண்டிருக்கிறாள். ஏன் இப்படிச் செய்தாய், ஏன் இப்படிச் செய்தாய் என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டிருப்பாள். படம் பார்க்கிற நமக்கே அதைப் பார்க்கும் போது எரிச்சல் வரும். ஸ்பீல்மனுடைய தங்கை தன் அப்பாவிடம் அவள் ஏன் இப்படி அலறிக் கொண்டிருக்கிறாள் என்று கேட்கிறாள். “நாஜிப் படை உள்ளே நுழையும்போது இவர்கள் மறைந்து கொண்டிருந்தார்கள். அப்போது அவளுடைய குழந்தை கத்தப் பார்த்தபோது அதன் வாயைப் பொத்தி விட்டாள். எங்கே மாட்டிக்கொள்வோமோ என்கிற பயம். நாஜிகள் போன பிறகு பார்த்தால் குழந்தை செத்திருக்கிறது” என்கிறார் அவர். இப்படிப்பட்ட சம்பவங்கள் படம் முழுக்க இருக்கின்றன.

இன்னொரு இடம். கைதிகளுக்குக் கஞ்சி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை வாங்குவதற்காகப் பெரும் போராட் டமே நடந்து கொண்டிருக்கும். ஒரு பெண் அந்தக் கூட்டத்தில் புகுந்து ஒரு வழியாக வாங்கிக் கொண்டு போகிறாள். வழியில் ஒரு கிழவன் அதைப் பறிக்கிறான். பறிக்கும்பொழுது கஞ்சி கீழே விழுந்து விடுகிறது. துக்கத்தில் கத்துகிறாள் அந்தப் பெண். ஆனால் அந்தக் கிழவனோ கீழே விழுந்த கஞ்சியை நக்கிக் கொண்டிருக்கிறான்.

நாஜி ராணுவம் ஒரு வீட்டிற்கு சோதனை செய்ய வருகிறது. எல்லோரும் எழுந்து நிற்கிறார்கள். ஒருவன் மட்டும் நிற்க மாட்டான். ஏனென்றால் அவனுக்குக் கால் இல்லை. நாஜிகள், அவனது சக்கர நாற்காலியை நான்காவது மாடியில் இருந்து வீசி எறிகிறார்கள். 1930களிலும் 40களிலும் ஐரோப்பாவில் இப்படித்தான் நடந்தது. அதுதான் ரோமன் பொலான்ஸ்கியின் பியானோ கலைஞன்.

https://telegram.me/aedahamlibrary

6

Babel (2006)

Alejandro González Iñárritu

வண்ணத்துப் பூச்சி விளைவு என்று அறிவியலில் சொல்வார்கள்; ஆப்ரிக்காவில் ஒரு வண்ணத்துப் பூச்சி சிறகை அடித்துப் பறந்தால் அதன் விளைவாக அமெரிக்காவில் சுனாமி வரலாம். அந்த அளவுக்குப் பிரபஞ்ச இயக்கத்தில் ஒரு செயலுக்கும் இன்னொரு செயலுக்கும் தொடர்பு இருக்கிறது. யோசித்துப் பாருங்கள்; நாம் ஒரு பறவையை வேட்டையாடுகிறோம் என்றால் ஒரு பெரும் வனத்தை அழிக்கிறோம் என்று பொருள். அந்தப் பறவையின் எச்சத்தின் மூலம் வளரக் கூடிய ஆயிரக்கணக்கான மரங்கள் அந்த ஒரு பறவையின் மரணத்தின் போதே இல்லாமல் ஆகி விடுகின்றன. இப்படித்தான் துவங்குகிறது அலஹாந்த்ரோ இனாரித்துவின் பேபல்.

யசுஜிரோ வேட்டையாடுவதில் விருப்பமுள்ள ஒரு ஜப்பானியர். அவர் மொராக்கோவுக்கு வேட்டைக்குச் செல்லும் போது அங்கே தனக்கு உதவியாக இருந்த ஹசனுக்குத் தன் துப்பாக்கியைப் பரிசாகக் கொடுத்து விட்டுப் போகிறார்.

ஹசன் அந்தத் துப்பாக்கியை அப்துல்லா என்பவனிடம் 1000 திர்ஹாமுக்கு விற்கிறான். அதன் தோட்டா மூன்று கிலோமீட்டர் வரை துல்லியமாகப் பாயும். அப்துல்லாவுக்கு அப்போது ஒரு துப்பாக்கி அவசியமாகத் தேவைப்படுகிறது. அவன் ஆடு மேய்ப்பவன். அவ்வப்போது நரிகள் ஆடுகளைத் தூக்கிச் சென்று விடுகின்றன. ஆனால் அவனிடம் 500 திர்ஹாம்தான் இருக்கிறது. அதனால் மீதி 500 திர்ஹாமுக்குத் தன் ஆடுகளில் ஒன்றை ஹசனிடம் கொடுக்கிறான்

https://telegram.me/aedahamlibrary

அப்துல்லா.

இந்தப் படத்தின் ஆக முக்கியமான விஷயங்கள், லொகேஷனும் கதையின் முடிச்சும், அபாரமான திரைக்கதையும்தான். மொராக்கோவின் சஹாரா பாலைவனத்தின் நடுவே ஒரு சிறிய கிராமம். அப்துல்லாவுக்கு யூசுப், அஹமத் என்று இரண்டு பிள்ளைகள். இருவரில் அஹமத் கொஞ்சம் அடங்காத பிள்ளை. இருவரிடமும் துப்பாக்கியைக் கொடுத்து விட்டு நகரத்துக்குச் செல்கிறான் அப்துல்லா. சிறுவர்கள் மலையின் மீது ஆடு மேய்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆடுகளைக் கவர வரும் நரியைச் சுடுகிறார்கள். குறி தப்பி விடுகிறது. அது ஒரு பயனற்ற பழைய துப்பாக்கி என்கிறான் யூசுப். அப்போது எங்கோ தொலைதூரத்தில் ஒரு பஸ் வருவது தெரிகிறது. அதை என்னிடம் கொடு என்று துப்பாக்கியை வாங்கி அந்த பஸ்ஸைக் குறி வைக்கிறான் அஹமத்.

தென்னமெரிக்காவில் இருந்து முதன் முதலில் உலக அளவில் பிரபலம் அடைந்தவர் மெக்ஸிகோவைச் சேர்ந்த அலஹாந்த்ரோ இனாரித்து. எந்த அளவு என்றால், அவரது முதல் படமான அமோரஸ் பெர்ரோஸ் ஏகப்பட்ட விருதுகளை வாங்கிக் குவித்த தோடு அல்லாமல் மணி ரத்னம் 'உல்ட்டா' பண்ணி எடுத்த ஆய்த எழுத்துவுக்கும் மூலமாக அமைந்தது. அமோரஸ் பெர்ரோஸைத் தொடர்ந்து வெளிவந்த 21 க்ராம்ஸ், அடுத்து வந்த பேபல் ஆகிய மூன்றுக்குமே ஒரு தொடர்பு உண்டு. அதாவது, மூன்று வெவ்வேறு இடங்களில் நடக்கும் மூன்று வெவ்வேறு சம்பவங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக பின்னப்படும் கதை.

அமெரிக்காவின் கலிஃபோர்னியா மாநிலத்தில் உள்ள சான்டியாகோ என்ற நகருக்கும் மெக்ஸிகோவில் உள்ள திஹுவானா என்ற சிறிய ஊருக்கும் உள்ள தூரம் 24 கி.மீ. இது பேபலின் இன்னொரு முடிச்சு. சான்டியாகோவில் வாழும் ரிச்சர்ட், சூசன் தம்பதிக்கு இரண்டு குழந்தைகள். குழந்தைகளைப் பராமரிக்கும் பணிப்பெண் அமெலியா திஹுவானாவைச் சேர்ந்தவள். ஆனால் அவள் அமெரிக்காவுக்குக் குடி பெயர்ந்து பல ஆண்டுகள் ஆகி விட்டன. ரிச்சர்ட் - சூசன் தம்பதியின் குழந்தைகள் இரண்டையும் தன் குழந்தைகளைப் போலவே கவனித்துக் கொள்கிறாள். ஒரு விடுமுறையில் தம்பதிகள் இருவரும் மொராக்கோவுக்கு சுற்றுலா செல்கிறார்கள். அவர்கள் செல்லும் பஸ்ஸைத்தான் அஹமத் குறி வைக்கிறான். குண்டு மிகச் சரியாக சூசனின் தோளில் பாய்கிறது. திஹுவானாவில் அன்றைய தினம்தான் அமெலியாவின் மகனுக்குத் திருமணம். தன் பராமரிப்பில் இருக்கும் குழந்தைகளை யாரிடம் விட்டுப் போவது என்று புரியாமல் ரிச்சர்டின்

https://telegram.me/aedahamlibrary

அனுமதி இல்லாமலேயே குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு திஹுவானா செல்கிறாள் அமெலியா.

அமெரிக்காவுக்கும் மெக்ஸிகோவுக்கும் உள்ள கலாச்சார வித்தியாசத்தை ஒரே காட்சியில் நம் முகத்தில் அடிப்பது போல் காட்டியிருக்கிறார் இயக்குனர் இனாரித்து. மெக்ஸிகோவில் உள்ள திஹுவானாவில் அமெலியாவின் உறவினன் சந்த்தியாகோ ஒரு கோழியைத் தன் கையாலேயே தலையைத் திருகிக் கொல்வதைப் பார்க்கிறான் ரிச்சர்ட் - சூசன் தம்பதியின் மகனான சிறுவன் மைக். அமெரிக்க வாழ்க்கையின் மேட்டுக்குடித் தன்மைக்கும் மெக்ஸிகோவின் முரட்டு வாழ்க்கைக்குமான வித்தியாசம் அந்தச் சிறுவனின் கண்களின் மூலம் நமக்குத் தெரிகிறது.

மூன்று நாடுகளில் நடக்கும் கதையை கத்திமுனை போல் வெகு கூர்மையாகவும், நேர்த்தியாகவும் வெட்டி வெட்டி சொல்லிக் கொண்டு போகிறார் இனாரித்து. குழந்தைகளை அழைத்துக் கொண்டு சான்டியாகோ திரும்பும் போது காரை ஓட்டிக் கொண்டு வரும் சந்த்தியாகோவின் திமிரான பேச்சினால் எல்லோரும் எல்லைப் போலீசிடம் மாட்டிக் கொள்கிறார்கள். சந்த்தியாகோ குடித்திருக்கிறான். குடித்து விட்டுக் கார் ஓட்டுவது அமெரிக்காவில் பெருங்குற்றம். அப்போது காரை விருட்டென்று ஓட்டிக் கொண்டு போய் விடுகிறான் சந்த்தியாகோ. தவறுக்கு மேல் தவறு. குழப்பத்துக்கு மேல் குழப்பம். (பேபல் என்றால் குழப்பம்.) பாலைவனத்தில் அமெலியாவும் குழந்தைகளும் மாட்டிக் கொள்கிறார்கள். ஏதாவது வாகனம் வருகிறதா என்று தேடுவதற்காக நெடுஞ்சாலையின் பக்கம் செல்லும் அமெலியாவை போலீஸ் கைது செய்து விடுகிறது.

குண்டடி பட்ட சூசனின் தோள் காயத்திலிருந்து ரத்தம் பெருகிக் கொண்டே இருந்ததால் அந்தக் கிராமத்து வைத்தியர் மயக்க மருந்து இல்லாமலேயே காயத்தை ஊசி நூலால் தைக்கிறார். மொராக்கோ இஸ்லாமிய நாடு என்பதால், துப்பாக்கிச் சூடு பயங்கரவாதிகளின் தாக்குதல் என்கிறது அமெரிக்க அரசு. போலீஸ் வருகிறது. துப்பாக்கியை விற்ற ஹசன் போலீசால் கடுமையாகத் தாக்கப்படுகிறார். அப்துல்லாவின் புதல்வர்கள் போலீசுக்குப் பயந்து ஒரு மலையில் பதுங்கும் போது போலீசின் துப்பாக்கிச் சூட்டில் மூத்த சிறுவன் அஹமது கொல்லப்படுகிறான்.

ஹசனுக்கு துப்பாக்கியைப் பரிசாகக் கொடுத்த ஜப்பானியர் யசுஜிரோவின் மகள் சீக்கோவுக்கு வாய் பேசாது, காது கேளாது. அதனால் பலரிடமும் அவமானமடையும் அவளுடைய

https://telegram.me/aedahamlibrary

பிரச்சினைகள்தான் இந்தப் படத்தின் மூன்றாவது கதை. நகர மயமான எல்லா உலக நாடுகளிலும் இளைஞர்களிடையே காணக் கூடிய பிரச்சினைகள். அதில் அவள், ஆண்களால் பாலியல் ரீதியாக ஒதுக்கப்படும் துயரத்தை மிக உக்கிரமாகப் படைப்பாக்கியிருக்கிறார் இனாரித்து.

உலகின் எந்த மூலையாக இருந்தாலும் பெண்களின் உலகம் பொதுவானது என்பதை வலியுறுத்தும் ஒரு சம்பவம் மொராக்கோ கிராமத்தில் நடக்கிறது. தையல் போட்டதால் வலி தாங்க முடியாமல் அரற்றிக் கொண்டிருக்கிறாள் சூசன். ஊர் பேர் தெரியாத அந்த அமெரிக்கப் பெண்ணுக்கு, மொராக்கோவின் ஏதோ ஒரு பாலைவன கிராமத்தில் வசிக்கும் பொக்கை வாய்க் கிழவி ஒருத்தி ஒரு சுருட்டில் கஞ்சாவை வைத்துப் புகைத்து அதை அந்தப் பெண்ணின் வாயில் வைத்துப் புகைக்கச் செய்து மயக்கத்தில் ஆழ்த்துகிறாள். அதேபோல், அந்த கிராமத்தை விட்டுக் கிளம்பும் போது தனக்கு உதவி செய்த வழிகாட்டி இளைஞனுக்குப் பணம் கொடுக்கிறான் ரிச்சர்ட். அதை அன்புடன் மறுத்து விடுகிறான் இளைஞன்.

ஒரு அமெரிக்கப் பெண் காயமடைந்தாள் என்றதும் அது உலகச் செய்தியாகிறது. ஆனால் மொராக்கோவில் போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் இறந்து போகும் சிறுவனைப் பற்றி யாருக்கும் கவலையில்லை. உலக அரசியலில் மூன்றாம் உலக நாடுகளின் நிராதரவான நிலையை அப்பட்டமாகச் சொல்கிறார் இயக்குனர். ஆனாலும் கலாச்சாரம், மொழி, மதம் போன்றவற்றால் மனித இனம் எவ்வளவுதான் வேறுபட்டிருந்தாலும் அடிப்படை உணர்வுகள் ஒன்றுதான் என்பதை ஆழமாக வலியுறுத்தும் படம் பேபல்.

https://telegram.me/aedahamlibrary

7

Faun's Labyrinth (2006)

Guillermo del Toro

உலக சினிமா-100 என்ற பெயரில் வந்துள்ள பட்டியல்களில் ஒரு குறைபாடு இருப்பதை ஏற்கனவே சுட்டிக் காட்டியிருக்கிறேன். பெரும்பாலும் ஹாலிவுட் சினிமாவே உலக சினிமாவாக வலம் வந்து கொண்டிருக்கிறது. பெயருக்காக கிம் கி டுக், அகிரா குரஸவா என்று ஒருசில ஆசிய இயக்குனர்கள் அந்தப் பட்டியலில் இடம் பெறுகிறார்கள். அத்தோடு சரி. மற்றபடி அந்தப் பட்டியல்களில் உலக சினிமாவின் பெரும் சாதனையாளர்களின் பெயர்களே இருப்பதில்லை. உதாரணமாக, ஹங்கேரியின் மிக்லாஸ் யான்ஸ்கோ. இவருடைய இயேசு கிறிஸ்துவின் ஜாதகம், கடவுள் பின்னோக்கி நடக்கிறார், ஹங்கேரியன் ராப்ஸடி ஆகிய படங்களில் ஒரு படமாவது இல்லாத பட்டியலை நாம் முழுமையான உலக சினிமா என்றே சொல்ல இயலாது. அந்தக் குறையை நாமாவது நேர் செய்து விடலாம் என்று தேடினால் அந்த மூன்று படங்களும் எங்கேயும் கிடைக்கவில்லை. ஹங்கேரிய கலாச்சார மையத்தில் முயற்சி செய்தேன். அங்கே கூட கிடைக்கவில்லை. இதை வாசிக்கும் நண்பர்கள் யாருக்காவது உலகில் எந்த மூலையிலாவது இந்தப் படங்கள் கிடைத்தால் எனக்கு எழுதும்படி கேட்டுக் கொள்கிறேன். (charu.nivedita.india@gmail.com)

சென்ற கட்டுரையில் அலஹாந்த்ரோ இனாரித்து பற்றிப் பார்த்தோம். அவரோடு கியர்மோ தெல் தோரோ, அல்ஃபோன்ஸோ குவாரோன்

https://telegram.me/aedahamlibrary

ஆகிய மூவரையும் மெக்ஸிகோவில் “மூன்று நண்பர்கள்” என்று அழைக்கிறார்கள். ஆங்கிலத்தில் ஜிக்ஷீவீபனீஸ்வீக்ஷீணீtமீ. தெல் தோரோவின் படங்கள் உலகம் பூராவும் பல ஆதி சமூகங்களில் இருந்த கதை சொல்லும் மரபைச் சேர்ந்தவை. முக்கியமாக - சாகசக் கதைகள், பேய்க் கதைகள். அந்தக் கதைகள் சென்ற தலைமுறையில் நாம் பாட்டிகளிடமிருந்து கேட்ட கதைகளைப் போன்றவை. மெக்ஸிகோ கலாச்சார ரீதியாக இந்தியாவை ஒத்தது என்பதையும் நாம் இங்கே நினைவு கூர வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சாகசப் படம்தான் ஃபானின் புதிர்வட்டப் பாதை. ஒரு புதிர்வட்டப் பாதைக்குள் நுழைந்து விட்டால் நாம் அதிலிருந்து வெளியே வருவது சிரமம். ஃபான் என்பது ஆட்டுத் தலையும் பெரிய வாலும் மனித உடலும் கொண்ட உருவம். தெல் தோரோவின் ஃபானின் புதிர்வட்டப் பாதை வெறும் சாகசக் கதையாக மட்டும் இல்லாமல் கூடவே ஸ்பெய்னின் அரசியல் கொந்தளிப்பையும் சராசரி மனிதனின் வாதைகளையும் சொல்கிறது.

பேய்ப்படமாக இருந்தாலும் ஒரு சினிமாவை உயர்தர கலாசிருஷ்டி யாக மாற்றுவது அதன் உள்ளே பொதிந்திருக்கும் கலை நுணுக்கங்கள்தாம். இந்தப் படத்தில் அப்படி நூற்றுக் கணக்கான நுணுக்கங்கள் இருக்கின்றன. சிறுமி ஒஃபேலியாதான் கதைநாயகி. அவளுடைய தந்தை கொல்லப்பட்ட பிறகு தாய், கேப்டன் விதால் என்ற ராணுவ அதிகாரியை மணக்கிறாள். ஒஃபேலியா கேப்டனைப் பார்த்ததில்லை என்றாலும் அவர் நல்ல மனிதர் அல்ல என்பதை உள்ளுணர்வால் புரிந்து கொள்கிறாள். ஆனால் அது அவள் தாய்க்குத் தெரியவில்லை. தாய் நிறைமாத கர்ப்பிணி. ஸ்பெய்னில் உள்நாட்டு யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. மக்களுக்கு எதிரான கொடுங்கோல் ஆட்சியைப் புரட்சியாளர்கள் எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அடர்ந்த காட்டுக்குள் இருந்து கொண்டு கெரில்லாப் போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் புரட்சியாளர்களைக் கொல்வதற்காக அதே காட்டுக்குள் தன் படையுடன் புகுந்திருக்கிறார் கேப்டன் விதால். அந்த இடத்துக்குத் தன் மனைவியை அழைத்து வரச் செய்கிறார். காரணம், பிறக்கப் போகும் மகன் தந்தையின் அருகில்தான் பிறக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார் கேப்டன். நீண்ட தூரப் பயணம் உங்கள் மனைவிக்கு ஆகாது என்கிறார் மருத்துவர். பரவாயில்லை; தாய் இறந்தாலும் என் வீர மகன் என் முன்னால் பிறக்க வேண்டும் என்கிறார் கேப்டன்.

முதல்முறையாகத் தன் தாயின் கணவனைச் சந்திக்கிறாள் ஒஃபேலியா. உன் அப்பாவுக்குக் கைகொடு என்கிறாள் தாய். அப்போது ஒஃபேலியா

https://telegram.me/aedahamlibrary

செய்யும் காரியத்தை சார்ல்ஸ் டிக்கன்ஸின் டேவிட் காப்பர்ஃபீல்ட் நாவலில் காணலாம்.

உன் தந்தைக்குக் கைகொடு என்று சொன்னதும், ஒஃபேலியா அந்த முரட்டுத்தனமான கேப்டனுக்குத் தன் இடது கையை நீட்டுகிறாள். சார்லஸ் டிக்கன்ஸின் டேவிட் காப்பர்ஃபீல்ட் நாவலில் வரும் சிறுவன் தன் அன்னையைத் திருமணம் செய்து கொள்ளப் போகும் நபரிடம் இப்படித்தான் தன் இடது கையை நீட்டுகிறான். ஃபானின் புதிர்வட்டப்பாதையைப் போலவே அதில் வரும் வளர்ப்புத் தந்தையும் கொடூரமானவன்.

நாம் எத்தனையோ சாகசக் கதைகளைக் கொண்ட சினிமாக்களைப் பார்க்கிறோம். அவற்றில் உலகப் புகழ்பெற்றது ஹாரி பாட்டர். அதை விட சிறந்த படம் என்று ஃபானின் புதிர்வட்டப் பாதையைச் சொல்லலாம். காரணம், இது வெறும் பொழுதுபோக்கான சாகசங்களை மட்டுமே கொண்டதல்ல. 1939-இலிருந்து துவங்கி 39 ஆண்டுகள் ஸ்பெய்னின் சர்வாதிகாரியாக இருந்த ஃப்ராங்கோவின் கொடுமையான ஆட்சியின் பின்னணியையும் கதைக்களனாகக் கொண்டிருக்கிறது. கதை நடப்பது 1944-ஆம் வருடம். ஹிட்லர், முசோலினி ஆகிய ஃபாஸிஸ்டுகளோடு ஒப்பிடப்பட வேண்டியவன் ஃப்ராங்கோ. அது மட்டும் அல்லாமல், ஃப்ராங்கோ மிகத் தந்திரமாக இரண்டாம் உலகப் போரிலும் கலந்து கொள்ளாமல் போனதால் 1978 வரை அவனால் ஆட்சியில் நீடித்திருக்க முடிந்தது. உலக வரலாற்றில் மக்களுக்கு எதிரான மிக நீண்ட சர்வாதிகார ஆட்சிகளில் ஒன்றாக இருந்தது ஃப்ராங்கோவின் ஆட்சி. அவனுடைய ஆட்சியில் கம்யூனிஸ்டுகள் எந்த விசாரணையும் இன்றி கொல்லப்பட்டார்கள். கம்யூனிஸ்ட் என்ற சந்தேகத்தின் பேரிலேயே அப்பாவியான பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டார்கள். இதில் கவிஞர்கள், ஓவியர்கள், நாடகக் கலைஞர்கள் என்று பலரும் அடக்கம். உலகப் புகழ்பெற்ற கவியும் நாடகாசிரியருமான கார்சியா லோர்க்காவும் அவரது 38ஆவது வயதில் ஃப்ராங்கோவின் ராணுவத்தால் நடுத்தெருவில் வைத்துக் கொல்லப்பட்டார். இப்படியாக 1939-இலிருந்து 1945 வரை கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையே நான்கு லட்சத்தைத் தாண்டியது. பெரும் குழிகளாகத் தோண்டி அதில் நூற்றுக்கணக்கான பிணங்களைப் போட்டு மண்ணை மூடுவது அப்போது ராணுவத்தின் வழக்கமாக இருந்தது. அதே போன்ற காட்சிகள் ஃபானின் புதிர்வட்டப்பாதையில் இடம் பெற்றிருக்கின்றன.

ஃப்ராங்கோவின் ஆட்சி எப்படி இருந்தது என்பதற்கு உதாரணமாக ஒரு

https://telegram.me/aedahamlibrary

காட்சி: தகப்பனும் மகனுமான இரண்டு கிராமவாசிகள் வேட்டைக்குப் போய் விட்டுத் திரும்பும் வழியில் கேப்டனின் ஆட்களால் பிடிக்கப்படுகிறார்கள். வேட்டைக்குச் செல்பவர்கள் என்பதால் அவர்களிடம் துப்பாக்கி இருக்கிறது. துப்பாக்கி வைத்திருப்பதால் அவர்கள் கம்யூனிஸ்டுகள் என்று சந்தேகிக்கப்படுகி றார்கள். செய்தி கேட்டு அங்கே வருகிறார் கேப்டன். கிராமவாசிகள் இருவரும் முயலைப் பிடித்துக் கொண்டு வருகிறோம் என்கிறார்கள். இருவரையும் சுட்டுக் கொன்று விட்டு அவர்களின் பைகளை ஆராயும் போது இரண்டு முயல்கள் இருக்கின்றன. உடனே கேப்டன் தன் ஆட்களிடம், “இனிமேல் இதுபோல் என் நேரத்தை வீணடிக்காதீர்கள்; இன்றைக்கு இந்த முயல்களை எனக்குச் சமையுங்கள்” என்கிறார்.

11 வயது ஒஃபேலியா தன் தாயுடன் காட்டுக்குள் இருக்கும் ராணுவ இல்லத்துக்கு வந்த பிறகு அவள் ஒரு ஃபானைப் பார்க்கிறாள். ஃபான் பற்றி ஏற்கனவே பார்த்தோம்; ஆட்டுத் தலையும் மனித உருவமும் கொண்ட ஒரு வினோத ஜீவி. ஒரு பக்கம் கேப்டன் ஒஃபேலியாவை மோசமாக நடத்துகிறான். தாயோ நிறைமாத கர்ப்பிணி. அவளால் கேப்டனை எதிர்த்து எதுவும் செய்ய முடியவில்லை. இந்த நிலையில் பான் ஒஃபேலியாவிடம் ஒரு உதவி கேட்கிறது. அந்த உதவியைச் செய்தால் அவளுக்கு மரணமே இல்லாத சொர்க்க வாழ்வைத் தருவதாகச் சொல்கிறது. ஒஃபேலியா அந்த உதவியைச் செய்தாளா? அவளுக்கு மரணம் இல்லாத சொர்க்கம் கிடைத்ததா? இதையெல்லாம் நீங்களே படத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஒரு முக்கியமான விஷயம். நமக்கு ஹாரி பாட்டரைத் தெரிகிறது. ஆனால் மெக்ஸிகோ சினிமா என்பதால் ஃபானின் புதிர் வட்டப் பாதை பற்றித் தெரியவில்லை. நான் பார்த்த சாகச சினிமாக்களிலேயே ஆகச் சிறந்த படம் என்று இதைச் சொல்லலாம்.

https://telegram.me/aedahamlibrary

8

Lawrence of Arabia (1962)

David Lean

டேவிட் லீன் - உலக சினிமாவின் முக்கியமான பத்து இயக்குனர்களில் ஒருவராக இடம் பெறக் கூடியவர். சிறந்த இயக்குனர் பிரிவில் இவரது பெயர் ஏழு முறை ஆஸ்கர் பரிசுக்கு சிபாரிசு செய்யப்பட்டு, இரண்டு முறை (த பிரிட்ஜ் ஆன் த ரிவர் க்வாய், லாரன்ஸ் ஆஃப் அரேபியா) அப்பரிசைப் பெற்றார். பிரிட்டனைச் சேர்ந்த லீனின் படங்கள் காவியம் என்று சொல்லத்தக்கவை. நூறு இருநூறு பக்கங்களைக் கொண்ட ஒரு நாவலுக்கும் மகாபாரதத்துக்கும் உள்ள வித்தியாசம்தான் மற்ற படங்களுக்கும் டேவிட் லீனின் படங்களுக்குமான வித்தியாசம். முக்கியமாக, அவருடைய த ப்ரிட்ஜ் ஆன் த ரிவர் க்வாய் (1957), லாரன்ஸ் ஆஃப் அரேபியா (1962), டாக்டர் ஷிவாகோ (1965), எ பேஸேஜ் டு இண்டியா (1984) ஆகிய நான்கு படங்களையும் இத்தொடருக்காகப் பார்த்தேன். முதல் படமும் நான்காவது படமும் இரண்டே முக்கால் மணி நேரம், லாரன்ஸ் ஆஃப் அரேபியா மூன்றே முக்கால் மணி நேரம், டாக்டர் ஷிவாகோ மூன்றே கால் மணி நேரம் ஓடக் கூடியவை. படங்களின் நீளத்தைச் சொல்வதற்குக் காரணம், இவற்றின் காவியத்தன்மைக்கு இந்த நீளமும் ஒரு அத்தியாவசிய அம்சமாக அமைந்திருக்கிறது என்பதால்தான். ஆனால் இவ்வளவு நீண்டதாக இருந்தாலும் பலமுறை காணக் கூடியவையாக இருக்கின்றன டேவிட் லீனின் படங்கள். உதாரணமாக,

https://telegram.me/aedahamlibrary

லாரன்ஸ் ஆஃப் அரேபியாவை எத்தனை முறை பார்த்திருக்கிறேன் என்ற கணக்கே தப்பி விட்டது. அதை ஒருவர் பார்த்திருக்காவிட்டால் வாழ்வில் ஒரு அதிசயத்தை அனுபவம் கொள்ளத் தவறி விட்டார் என்றே சொல்லலாம்.

டேவிட் லீனின் சிறப்புகளில் ஆக முக்கியமானவை, பிரம்மாண்டமும் கலாச்சார நுண்கூறுகளும். லீனின் படங்களைப் பார்த்தால்தான் பிரம்மாண்டம் என்பதன் உண்மையான அர்த்தம் புரிகிறது. சுண்டெலியை விட பூனை பெருசுதான். ஆனால் பூனைக்கு அருகில் யானை நின்றால்? அந்த யானை போன்றதுதான் லீனின் பிரம்மாண்டம். போர்க்காட்சிகளைக் கொண்ட படங்களில் நாம் ஆயிரக்கணக்கான ஒட்டகங்கள், குதிரைகள், போர்வீரர்களையெல் லாம் பார்த்திருக்கிறோம். ஆனால் லாரன்ஸ் ஆஃப் அரேபியாவில் அவ்வளவு பெரிய படைகளை மிகக் கொடூரமான பாலைவனத்தின் நடுவே பார்க்கிறோம். ஆயிரக்கணக்கான அராபியர்கள் ஒட்ட கங்களில் அமர்ந்து செல்லும் காட்சியை லாங் ஷாட்டில் எடுத்திருப்பார் லீன். அந்தக் காட்சியைப் பார்ப்பதற்காகவே பல முறை திரையரங்குகளுக்குச் சென்றவர்கள் உண்டு.

படத்தில் ஒரு கட்டத்தில் லாரன்ஸும் அலியும் (ஓமர் ஷரீஃப்) ஔதா என்ற அராபியத் தலைவரும் நஃபூத் (Nafud) என்ற பாலைவனத்தைக் கடக்க வேண்டியிருக்கிறது. 290 கி.மீ. நீளமும் 225 கி.மீ. அகலமும் கொண்ட பிரம்மாண்டமான பாலைவனம் அது. அதைக் கடந்து போனால் செங்கடலில் இருக்கும் துறைமுக நகரமான அக்காபாவை அடைந்து விடலாம். அங்கே போய் விட்டால் அராபியர்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த துருக்கியரை வென்று விடலாம் என்று ஔதாவுக்கு ஆலோசனை சொல்கிறார் லாரன்ஸ். (அக்காபா இப்போது ஜோர்டனில் உள்ளது.) டேவிட் லீனின் படங்கள் பெரும்பாலும் உண்மையான வரலாற்றுச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டவை. அக்காபா போர் ஜூலை 6, 1917-ஆம் ஆண்டு நடந்தது. லாரன்ஸின் ஆலோசனையின்படி நடந்ததால் அந்தப் போரில் ஔதா வென்றார்.

அடுத்து, கலாச்சார நுண்கூறுகள். டேவிட் லீன் எந்த தேசத்தைப் பற்றி எடுக்கிறாரோ அந்த தேசத்திலேயே பிறந்து வளர்ந்தவரைப் போல், அந்தக் கலாச்சாரத்திலேயே ஊறித் திளைத்தவரைப் போல் எடுப்பார். மேலே குறிப்பிட்ட காட்சியை வேறு யாரேனும் எடுத்திருந்தால்

https://telegram.me/aedahamlibrary

ஔதாவின் படைகள் அக்காபாவை நோக்கிப் புறப்படுவதை மட்டுமே காண்பித்திருப்பார்கள். ஆனால் லீன் அந்தக் காட்சியில் ஒரு கலாச்சார அடையாளத்தை வைக்கிறார்...

சிறந்த படம், சிறந்த இயக்கம், சிறந்த இசை, சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த ஆர்ட் டைரக்ஷன், சிறந்த படத் தொகுப்பு, சிறந்த சவுண்ட் மிக்ஸிங் என்ற ஏழு பிரிவுகளில் ஆஸ்கர் பரிசை வென்ற படம் லாரன்ஸ் ஆஃப் அரேபியா. டி.இ. லாரன்ஸ் என்ற பிரிட்டிஷ் அதிகாரியின் முதலாம் உலகப் போர் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட இந்தப் படத்தில் லாரன்ஸைப் போலவே மற்றொரு முக்கிய கதாபாத்திரம் ஔதா அபு தாயீ. துருக்கியரின் அடக்குமுறையிலிருந்து அராபிய மக்களை விடுவித்த வீரர்களில் முதன்மையானவர். ஆனால் வாஸ்தவத்தில் அராபியர் என்ற பதமே சென்ற நூற்றாண்டில் புழக்கத்தில் இல்லை. அதெல்லாம் மேற்கத்தியரின் பார்வை. படத்தில் ஔதா சொல்கிறார், "லாரன்ஸ், நீங்கள்தான் அராபியா என்றும் அராபியர் என்றும் சொல்கிறீர்கள். எனக்குத் தெரிந்ததெல்லாம் ஹௌவீதத், ருவாலா, ஹரீத் என்பதுதான்." இந்தப் பெயர்களெல்லாம் சவூதி அரேபியா, ஜோர்டன் பகுதிகளில் வசித்த தனித்தனியான இனக்குழுக்களைக் குறிப்பவை. அந்த இனங்கள் அப்போது தங்களுக்குள் கடுமையாக சண்டையிட்டுக் கொண்டிருந்தன. அலி (ஓமர் ஷரீஃப்) ஹரீத் இனத்தைச் சேர்ந்தவர்; ஔதா (அந்தோனி குவின்) ஹௌவீதத் இனம். தன்னுடைய கிணற்றில் ஹௌவீதத் இனத்தைச் சேர்ந்த ஒருவன் நீர் அருந்தி விட்டான் என்பதற்காக அலி அவனைக் கொன்று விடுகிறான்.

ஔதா கடைசி வரை பாலைவனத்திலேயேதான் வாழ்ந்தார். அவரை உலகம் முழுவதும் அறியச் செய்தவர் லாரன்ஸ். படையெடுப்புகளில் கொள்ளையடித்த பொருட்களையெல்லாம் தன் இனத்து மக்களுக்குக் கொடுத்து விட்டு கடைசி வரை தனக்கென்று எதுவும் இல்லாதவராக வாழ்ந்தார் ஔதா. அவருடைய வரலாறு புராணங்களில் வருவதைப் போல் இருக்கும். 28 முறை திருமணம் செய்து கொண்டார்; பதினைந்து முறை போரில் காயம் அடைந்தார்; பிற இனத்தைச் சேர்ந்த அராபியர்களில் 75 பேரை அவர் கையாலேயே கொன்றார்; துருக்கியர்களில் எத்தனை பேரைக் கொன்றார் என்பதற்குக் கணக்கே இல்லை. ஆனால் அராபிய இனத்தவரிடையே இருந்த உட்பூசலைக் கொண்டு துருக்கியர் ஔதாவை பணத்தால் விலைக்கு வாங்கலாம் என்று பலமுறை முயன்றனர். ஆனால் அப்போது, "நான் அரபுப் பாலைவனத்தைச் சேர்ந்தவன்; என்னை நீங்கள் ஒருபோதும் விலைக்கு

https://telegram.me/aedahamlibrary

வாங்க முடியாது” என்று சொன்னார் ஔதா. அரபி மண்ணின் மகத்தான வீரரான ஔதா தனது நாற்பதாவது வயதில் இறந்தார்.

திருமணம் போன்ற வைபவங்களில் இஸ்லாமியப் பெண்கள் தங்கள் நாக்கினால் ஒருவித விசித்திரமான சப்தத்தை எழுப்புவார்கள். பல பெண்கள் சேர்ந்து ஒரே நேரத்தில் அந்த சப்தத்தை எழுப்பு வதைக் கேட்கும் அனுபவம் அலாதியானது. உலகம் முழுவதும் இஸ்லாமியரிடையே வழக்கத்தில் உள்ள இதற்குப் பெயர் உலூ விடுதல். ஔதா, அலி, லாரன்ஸ் மூவரும் தங்கள் படைகளுடன் அக்காபா நோக்கி அராபியப் பாலைவனத்தில் செல்லும் போது மலை முகடுகளில் நின்று கொண்டு கறுப்பு ஆடையை அணிந்த பெண்கள் உலூ சப்தத்தை எழுப்ப, அந்த சப்தம் எல்லா மலைகளிலும் (பாறை மலைகள்) எதிரொலிப்பதைக் கேட்பது ஒரு அற்புதமான அனுபவம்.

உலகப் புகழ்பெற்ற சினிமா விமர்சகர் ரோஜர் எபர்ட் இந்தப் படத்தை காவியம் என்று சொல்வதற்கு ஒரு காரணம் சொல்கிறார். காவியம் என்பது பெரும் பட்ஜெட்டைப் போட்டு எடுப்பதல்ல. குறைந்த செலவில் எடுக்கப்பட்ட வெர்னர் ஹெர்ஸாகின் Aguirre, the Wrath of God என்ற படம் கூட ஒரு காவியம்தான்; அதே சமயம் பெரும் செலவில் எடுக்கப்பட்ட பேர்ள் ஹார்பர் ஒரு சராசரி படம். ஒரு சினிமாவை காவியமாக மாற்றுவது வாழ்க்கை பற்றிய அதன் தரிசனம்தான். அந்த வகையில், லாரன்ஸ் ஆஃப் அரேபியா ஒரு காவியம்; நம்ப முடியாத ஒரு அதிசயம்.

https://telegram.me/aedahamlibrary

9

Knife in the Water (1962)

Roman Polanski

அமெரிக்காவில் இந்தியாவை விடக் குற்றங்கள் அதிகம் என்றாலும் குற்றம் செய்பவர் ஜனாதிபதியாகவே இருந்தாலும் உள்ளே போட்டு விடுவார்கள். ஜனாதிபதி, நடிகர், பிச்சைக்காரர் என்ற வித்தியாசமெல்லாம் அங்கே கிடையாது. 1977-இல் ரோமன் பொலான்ஸ்கி 13 வயதான ஒரு பெண்ணை வன்கலவி செய்து விட்டார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. அமெரிக்காவில் 14 வயதுக்குக் குறைவான பெண்ணோடு உறவு கொண்டால் 50 ஆண்டுகள் சிறைத் தண்டனை உண்டு. பொலான்ஸ்கியின் வாழ்க்கையே முடிந்து விடும். அப்போது அவர் வயது 44தான். நீதிமன்றத்தில் குற்றம் நிரூபிக்கப்பட்டு விட்டது என்பதை எப்படியோ அறிந்து கொண்ட பொலான்ஸ்கி உடனடியாக ஃப்ரான்ஸுக்குத் தப்பிச் சென்று விட்டார். உலகத்திலேயே கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் அதிக அளவில் மதிக்கும் தேசம் ஃப்ரான்ஸ். ஒருமுறை ஜான் ஜெனே மீது எக்கச்சக்கமான குற்றச்சாட்டுகள் இருந்தன. எல்லாவற்றுக்கும் சேர்த்து தண்டனை கொடுத்தால் அவர் சாகும் வரை சிறையிலேயேதான் இருக்க வேண்டியிருக்கும். அப்போது பிக்காஸோ, சார்த்தர் போன்ற கலைஞர்களும் தத்துவவாதிகளும் சேர்ந்து ஃப்ரான்ஸ் அதிபருக்கு எழுதினர். “ஜெனே ஒரு சராசரி மனிதர் அல்ல; ஃப்ரெஞ்ச் மொழியின்

https://telegram.me/aedahamlibrary

அபூர்வ மான சொத்து; அவர் காப்பாற்றப்பட வேண்டும்.” ஜெனேவுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. அதற்கு மேல் அவர் எந்தக் குற்றச் செயலிலும் ஈடுபடவில்லை. ஃப்ரான்ஸே கொண்டாடிய மாபெரும் எழுத்தாளர் ஆனார் ஜெனே.

பொலான்ஸ்கி ஃப்ரான்ஸுக்குச் சென்றதன் காரணம், போலந்தில் பிறந்து வளர்ந்தவராக இருந்தாலும் அவருக்கு ஃப்ரெஞ்சுக் குடியுரிமையும் இருந்தது. ஆனாலும் அமெரிக்கா தொடர்ந்து அவரை ஒரு குற்றவாளியாகவே அறிவித்துக் கொண்டிருந்ததால் அவரால் அமெரிக்கா பக்கமே செல்ல முடியவில்லை. சம்பவம் நடந்து 32 ஆண்டுகள் கழித்து 1977-இல் சுவிட்சர்லாந்தில் அவருக்கு உலக சினிமாவின் வாழ்நாள் சாதனையாளர் பட்டம் அறிவிக்கப்பட்டது. அதில் கலந்து கொள்வதற்காகச் சென்ற போது இண்டர்போலின் உதவியோடு அவரை சுவிட்சர்லாந்தில் கைது செய்ய வைத்தது அமெரிக்கா. அப்போது அவர் வயது 76. பொலான்ஸ்கியை எங்கள் நாட்டுக்கு அனுப்புங்கள் என்றது அமெரிக்கா. ஆனால் ஃப்ரான்ஸ் கொடுத்த நெருக்கடியால் அவர் ஃப்ரான்ஸுக்கே திருப்பி அனுப்பப்பட்டார். இப்போது போலந்தில் வசிக்கும் பொலான்ஸ்கியை சென்ற ஆண்டு கூட திருப்பி அனுப்பச் சொல்லி போலந்துக்கு அமெரிக்கா நெருக்கடி கொடுத்தது. போலந்து மறுத்து விட்டது.

நைஃப் இன் த வாட்டரில் ஆந்த்ரேஸ் என்பவன் தன் மனைவி க்றிஸ்டினாவோடு விடுமுறையைக் கழிக்க ஒரு ஏரிக்குச் செல்கிறான். வழியில் 20 வயது கூட நிரம்பாத ஒரு இளைஞனை சந்திக்கிறான். அவனையும் தன்னுடைய படகில் ஏறிக் கொள்ளச் சொல்கிறான். ஆனால் இளைனனின் மீது கொண்ட பொறாமையால் தொடர்ந்து அவனை அவமானப்படுத்துகிறான் ஆந்த்ரேஸ். அதன் காரணமாக, இருவருக்கும் ஏற்படும் ஒரு சண்டையில் இளைஞன் ஏரியில் விழுந்து விடுகிறான். அவனுக்கு நீச்சல் தெரியாது என்பது தெரிந்தும் ஆந்த்ரேஸ் அவனைக் காப்பாற்ற முயல்வதில்லை. க்றிஸ்டினா அவனைக் கொலைகாரன் என்று திட்டுவதால் ஏரியில் குதித்துத் தேடுகிறான். இதற்கிடையில் நீரிலேயே மறைந்திருந்து பிறகு படகுக்குத் திரும்புகிறான் இளைஞன். (நீச்சல் தெரியாது என்று பொய் சொல்லியிருக்கிறான்.) இளைஞனைத் தேடிப் போன ஆந்த்ரேஸ் அப்படியே கரைக்குப் போய் விடுகிறான். படகில் தனித்து விடப்படும் கிறிஸ்டினாவும் இளைஞனும் உடலுறவில் ஈடுபடுகிறார்கள். படகு கரைக்கு வந்ததும் தான் வந்த சுவடே தெரியாமல் போய் விடுகிறான்

https://telegram.me/aedahamlibrary

இளைஞன்.

போலீஸுக்குப் போனால் மாட்டிக் கொள்வோம் என்று தெரிந்தும் போலீஸுக்குப் போகிறேன் என்று கிறிஸ்டினாவிடம் சொல்கிறான் ஆந்த்ரேஸ். அவளிடம் தான் நேர்மையானவன் என்பதை அவன் நிரூபித்தாக வேண்டும். அவள் அவனை சமாதானப்படுத்துவதற்காக நடந்த விஷயத்தைச் சொல்கிறாள். நீ பொய் சொல்கிறாய் என்கிறான் ஆந்த்ரேஸ். அதோடு படம் முடிகிறது.

படத்தின் சாரம் இதுதான்: போலீஸிடம் போனால் கொலைகாரன் பட்டம். இல்லாவிட்டால், இன்னொருவனோடு உறவு கொண்ட மனைவியோடு வாழ வேண்டும். இரண்டு வகையிலுமே ஆந்த்ரேஸ் தோற்றவனாகிறான். அதிகாரம் எப்படி ஒரு மனிதனை வீழ்த்துகிறது என்பதுதான் நைஃப் இன் த வாட்டரின் அடியோட்டம்.

https:/ /telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

10

Xala (1975)

Ousmane Sembène

மேற்கு ஆப்ரிக்காவில் உள்ள செனகல் நாட்டை உலகத்துக்குத் தெரிய வைத்த இயக்குனர் உஸ்மான் செம்பீன் (1923-2007). ஆஃப்ரிக்க சினிமாவின் தந்தை என்று போற்றப்படும் இவர் ஒரு எழுத்தாளரும் கூட. தான் எழுதிய ஸாலா என்ற நாவலையே சினிமாவாகவும் எடுத்தார். செரர் என்ற பழங்குடி இனத்தைச் சேர்ந்த உஸ்மான் செம்பீன் அந்த இனத்தின் கலாச்சார விழுமியங்களைத் தன் எழுத்திலும் சினிமாவிலும் கலையாக மாற்றினார். இஸ்லாமைத் தழுவியவர்களாக இருந்தாலும் அவர்களின் பழங்குடி நம்பிக்கைகள் - குறிப்பாக வான சாஸ்திரம், மருத்துவம், இயற்கையை வழிபடுதல் போன்றவை இந்திய வேத மரபை ஒத்தவையாக இருக்கின்றன. மட்டுமல்லாமல், செனகல் ஃப்ரெஞ்சுக் காலனி நாடாக இருந்ததால் ஃப்ரெஞ்சு மொழியும் கலாச்சாரமும் கூடவே சேர்ந்து கொண்டது. ஆக, செரர் பழங்குடி இனம், இஸ்லாம், கிறித்தவம் ஆகிய மூன்று மதங்கள், ஃப்ரெஞ்சு, அரபி, தாய்மொழியான வொலோஃப் என்ற மூன்று மொழிகள், மற்றும் அந்த மூன்று கலாச்சாரங்கள் ஆகியவற்றின் வாரிசாக வளர்ந்தவர் உஸ்மான். ஃப்ரெஞ்சுத் தொடர்பின் மூலம் அவருக்குக் கம்யூனிச அறிமுகமும் கிடைத்தது. அதன் காரணமாக, தனது இனத்தில் காணப்படும் மிகக் கொடுமையான பெண்ணடிமைத்தனத்தைத் தனது படைப்புகளின்

https://telegram.me/aedahamlibrary

மூலம் விமர்சித்தார்.

ஆஃப்ரிக்காவைப் பொறுத்தவரை ஆட்டமும் இசையும் அவர்களின் வாழ்வோடு சம்பந்தப்பட்டது. ஆடலோ பாடலோ இல்லாமல் அவர்களுடைய எந்தச் செயலுமே நடைபெறாது. அதிலும் குறிப்பாக செனகல், இசைக்குப் புகழ் பெற்ற ஒரு தேசம். எனவே செம்பீனின் படங்களில் செனகல் நாட்டு ஆதிகுடிகளின் இசை பிரதானமான இடத்தை வகிப்பதைக் காணலாம். ஸாலாவின் முதல் காட்சியில் தலைநகரின் வணிக சபையிலிருந்து வெள்ளையர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். செனகல் தேசத்தைச் சேர்ந்த கறுப்பின மக்களே வணிக சபையின் உறுப்பினராகிறார்கள். “இனிமேல் நமக்குள் ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் ஒழிந்தது. சமத்துவமும் சகோதரத்துவமும் வந்து விட்டது” என்று பேசுகிறார் தலைவர். பேச்சை முடிக்கும் போது, “நாம் என்னதான் கம்யூனிஸ்டுகளாக இருந்தாலும் நம்முடைய பழைய மரபை விட்டு விட முடியுமா? அதன்படி நம்முடைய வணிக சபையைச் சேர்ந்த அப்துல் காதர் இன்றைய தினம் தனது மூன்றாவது மனைவியை ஏற்கிறார். அந்தத் திருமண வைபவத்துக்குக் கிளம்புவோம்” என்கிறார்.

அப்போது பதவியிலிருந்து விலக்கப்பட்ட வெள்ளை அதிகாரிகள் பெட்டி பெட்டியாக ஒவ்வொரு உறுப்பினரின் மேஜையிலும் லஞ்சப் பணத்தை வைக்கிறார்கள். உறுப்பினர் அனைவரின் முகத்திலும் பூரிப்பு. தலைவர் காரில் கிளம்பும் போது முன்னேயும் பின்னேயும் டஜன் கணக்கில் கார்கள் போகின்றன. (பின்தங்கிய நாடுகளின் அரசியல் சூழல் ஒரே மாதிரிதான் இருக்கும் போலிருக்கிறது.)

அப்துல் காதர் மத்திய வயதைக் கடந்தவர். அவர் மணக்கப் போகும் பெண்ணின் வயதில் அவருக்கு ஒரு மகள் இருக்கிறாள். அவள் தன் அன்னையிடம் “ஏன் நீ தந்தையிடமிருந்து விவாகரத்து வாங்கக் கூடாது? நானாக இருந்தால் என் கணவனை எந்தப் பெண்ணோடும் பங்கு போட மாட்டேன்” என்று சொல்கிறாள். அதற்கு அந்தப் பெண், “விவாகரத்து செய்து விட்டு என்ன செய்வது? வேறு யாருக்காவது மூன்றாவது அல்லது நாலாவது தாரமாகத்தான் வாழ்க்கைப்பட வேண்டும். அதை விட இந்த ஆளுடனேயே இருந்து விட்டுப் போகிறேன்” என்கிறாள்.

இதற்கிடையில் அப்துல்காதருக்குப் பெண் கொடுக்கப் போகும் வீட்டில் சீர்வரிசைப் பொருட்கள் அலங்காரமாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு டிவி, ஒரு சிறிய பெட்டி நிறைய தங்க

https://telegram.me/aedahamlibrary

நகைகள், ஒரு கார் சாவி... இப்படி ஆடம்பரமாக நடைபெறும் திருமணத்தின் முதல் இரவு அன்று அப்துல் காதர் தன் ஆண்மையை இழந்து விடுகிறார்... (ஸாலா என்றால் ஆண்மை இழத்தல் என்று பொருள்!)

பெர்க்மன், டர்க்காவ்ஸ்கி போன்ற மேதைகளின் படங்களில் காணக்கூடிய சினிமா நுணுக்கங்கள் ஸாலாவில் இல்லை என்றாலும் செனகல் சமூகத்தின் எதார்த்தத்தை மிக ஆழமாகத் திரைப்படமாக்கியதால் உஸ்மான் செம்பீனின் திரைப்படங்கள் உலக சினிமாவின் முன் வரிசையில் இடம் பெறுகின்றன. அரை நிமிடம் வரக் கூடிய காட்சியில் கூட செனகல் சமூகத்தின் அவலத்தை முகத்தில் அடித்தாற்போல் காண்பிக்கிறார் செம்பீன். உதாரணமாக, செனகல் நாட்டு மொழி வொலோஃப். ஆனால் அந்த மொழியை கீழ்த்தட்டு மக்களும் பிச்சைக்காரர்களும் மட்டுமே பேசுகின்றனர். மற்றவர் அனைவரும் பேசுவது ஃப்ரெஞ்ச். ஒரு காட்சியில் ஒரு சிறுவன் அப்துல் காதரின் அலுவலகத்தின் உள்ளே போய் அங்கே இருக்கும் ஒரு பெண்ணிடம் "வொலோஃப் மொழியில் வரும் ஒரே பத்திரிகையை வாங்கிக் கொள்வீர்களா?" என்று கேட்டு பத்திரிகையை நீட்டுகிறான். ஒரு சில நொடிகளே வரும் இந்தக் காட்சியின் மூலம் அந்த நாட்டின் தாய்மொழிக்கு நேர்ந்திருக்கும் அவலத்தைப் புரிந்து கொள்கிறோம்.

அப்துல் காதரின் முதல் மனைவியின் மகள் ரமா கல்லூரி மாணவி. தந்தைக்கு நேர்ந்திருக்கும் ஸாலா பிரச்சினை பற்றி அவரிடம் பேசப் போவதாக தாயிடம் சொல்கிறாள். ஒரு மகள் தந்தையிடம் பேசக் கூடிய விஷயமா இது என்று தடுக்கிறாள் தாய். ஏற்கனவே ரமா அவருடைய மூன்றாவது திருமணம் பற்றிப் பேசியிருக்கிறாள். இப்படியெல்லாம் பல பெண்களைத் திருமணம் செய்து கொள்பவர்கள் மிருகங்கள் என்கிறாள் ரமா. இன்னொரு முறை சொல் என்கிறார் காதர். சொல்கிறாள். "நம் நாட்டுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்த என்னையா அப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டு அவளை அறைகிறார் காதர். அதிலிருந்து தந்தையிடமிருந்து பிரிந்து தனியாகத் தங்கிப் படிக்கிறாள் ரமா.

ஆஃப்ரிக்க சமூகங்களில் பெண்ணின் தாம்பத்ய வாழ்க்கை என்பது உணவைப் போலவே மிகவும் அடிப்படையான விஷயமாகக் கருதப்படுகிறது. முதலிரவு முடிந்த மறுநாள் காலையில் மணப்பெண்ணின் தாய் மணமக்கள் படுத்திருந்த படுக்கையை சோதிப்பது வழக்கம். அது மட்டும் அல்லாமல், தன் பெண்ணிடமும் வெளிப்படையாக மாப்பிள்ளை எப்படி என்று கேட்பாள் தாய். மணப்பெண் வெட்கத்தோடு போனால் சரி; இல்லாமல் சுணங்கினால்

https://telegram.me/aedahamlibrary

அந்த வீட்டுப் பெண்கள் அத்தனை பேரும் சேர்ந்து கொண்டு அவளைத் துளைத்து எடுத்து விடுவார்கள். அந்த அளவுக்கு வெளிப்படையான சமூகம் அது. ஸாலாவிலும் அப்படி ஒரு காட்சி வருகிறது. அப்துல் காதருக்கும் அவருடைய மூன்றாவது மனைவிக்கும் நடக்கும் முதலிரவு. காலையில் படுக்கையறைக்கு வந்து விசாரிக்கும் அன்னையிடம் அந்தப் பெண் வருத்தத்துடன் எனக்குக் கன்னி கழியவில்லை என்று சொல்கிறாள்.

இவ்வளவு வெளிப்படையான சமூகம் என்பதால்தான் ரமா தன் அன்னையின் தாம்பத்யம் பற்றிக் கவலை கொள்கிறாள். தந்தை ஆண்மையிழந்தவர் என்றால் இனி அன்னையின் கதி என்ன? யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் தந்தையைக் காணச் செல்கிறாள். ஆனால் அவளால் அங்கே ஒரு நிமிடம் கூட இயல்பாக இருக்க முடியவில்லை. அப்துல் காதர் மகளுக்குத் தண்ணீர் கொடுக்கிறார். அது ஃப்ரான்ஸிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. வேறோர் இடத்தில் அப்துல் காதர் "நான் பயன்படுத்தும் எல்லா விஷயங்களும் ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதுதான்" என்கிறார். அவருடைய பென்ஸ் காரைத் துடைப்பது கூட அந்த

ஃப்ரெஞ்ச் மினரல் வாட்டரில்தான். தந்தை கொடுக்கும் தண்ணீரை மறுத்து ரமா சொல்கிறாள்: "இறக்குமதி செய்யப்பட்ட எந்தப் பொருளையும் நான் தொடுவதில்லை." இப்படியே தந்தைக்கும் மகளுக்கும் ஏட்டிக்குப் போட்டியாகவே போகிறது. கடைசியில் காதர் கோபத்துடன் கேட்கிறார்: "என்ன நான் ஃப்ரெஞ்சிலேயே பேசிக் கொண்டிருக்கிறேன்; நீ வொலோஃபிலேயே பதில் சொல்கிறாய்?"

இதே காதர் மீது ஊழல் குற்றச்சாட்டு வைக்கப்படும் போது வணிக சபையில் "வொலோஃப் மொழியில்தான் பேசுவேன்" என்கிறார். தயவுசெய்து இந்தப் படத்தைப் பார்த்து விடுங்கள். அச்சு அசலாக தமிழ்நாட்டின் அரசியலை செனகலில் பார்க்கலாம்.

https://telegram.me/aedahamlibrary

11

Sambizanga (1972)

Sarah Maldoror

ஜெர்மனியின் பிரதம மந்திரி ஆஞ்ஜலா மெர்க்கல் அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு நேர்மாறானவர். தங்கள் சொந்த நாட்டில் வாழ வழியில்லாமல் ஓடி வரும் அகதிகளுக்கு ஐரோப்பிய நாடுகள் புகலிடம் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, தன் நாட்டின் எல்லையை அவர்களுக்காகத் திறந்து விட்டார். அடுத்து ஒருசில மாதங்களில் ஜெர்மனியில் ஒரு ஆப்கன் அகதி கோடரியும் கத்தியும் கொண்டு ரயில் பயணிகளை வெட்டினான். யாரும் சாகவில்லை. அகதி சுட்டுக் கொல்லப்பட்டான். ம்யூனிச்சில் 18 வயது இளைஞன் ஒருவன் வணிக வளாகத்தில் நின்றிருந்தவர்களைச் சுட்டான். ஒன்பது சிறுவர்கள் செத்தனர். சுட்டவன் ஈரானிய அகதிக் குடும்பத்தைச் சேர்ந்தவன். இப்படி பல சம்பவங்கள். உடனே எல்லோரும் ஆஞ்ஜலாவைக் கடுமையாக விமர்சிக்க ஆரம்பித்தனர்.

இச்செய்திகளை மேலோட்டமாக வாசித்தால் நாமும் ட்ரம்பின் ஆதரவாளர்களாக மாறி விடுவோம். ஆனால் இம்மாதிரியான அன்றாட செய்திகளின் உள்ளே ஒரு பெரும் வரலாறு ஒளிந்திருக்கிறது. சென்ற பல நூற்றாண்டுகளாக ஐரோப்பிய நாடுகள் பின்பற்றிய காலனி ஆதிக்க மனோபாவம்தான் இன்றைய உலகின் அமைதியின்மைக்குக் காரணம். உதாரணமாக, தென்னமெரிக்க நாடுகளை எடுத்துக் கொள்வோம். அந்த நாடுகள் ஒவ்வொன்றிலும் பல நூறு இனக்குழுக்கள் வாழ்ந்தன. ஒவ்வொரு இனக்குழுவின் மொழி, கலாச்சாரம், கடவுள் வழிபாடு எல்லாமே தனித்துவம் வாய்ந்தவையாக இருந்தன. இந்தத் தென்னமெரிக்க நாடுகளுக்கு தங்கமும் பொருளும் தேடி

https://telegram.me/aedahamlibrary

ஐரோப்பியாவிலிருந்து பாய்மரக் கப்பலில் ஏறிய சிலர் அந்த பூமியைப் போய்ச் சேர்ந்து, தாங்கள் வைத்திருந்த துப்பாக்கி முனையில் அங்கிருந்த பூர்வ குடியினரிடம் பின்வரும் இரண்டில் ஒன்றைத் தெர்ந்தெடுக்கச் சொன்னார்கள்:

ஒன்று, உங்கள் மதத்தை விட்டு விட்டு, எங்கள் மதத்துக்கு வாருங்கள். அல்லது, துப்பாக்கிக்கு பலியாகுங்கள். இப்படியாகத்தான் தென்ன மெரிக்க கண்டம் முழுவதுமாகக் கிறித்தவமும் ஐரோப்பிய மொழிகளான ஸ்பானிஷும், போர்த்துகீசும் பரவின.

காலனியாதிக்கம் அதோடு நிற்கவில்லை. தங்க வேட்டை தவிர வியாபாரத்தை முன்வைத்தும் பாய்மரக் கப்பலில் ஏறினார்கள் ஐரோப்பியர்கள். அதில் ஒரு கும்பல் ஆஃப்ரிக்காவைச் சென்ற டைந்தது. அங்கே தன்னிச்சையாக வாழ்ந்து வந்த மனிதர்களை வலை போட்டுப் பிடித்து, கை கால்களில் சங்கிலி பிணைத்துத் தென்னமெரிக்காவுக்குக் கொண்டு வந்து அடிமைகளாக விற்றனர். அப்படித் தன் மக்களை அடிமைகளாகக் கொடுத்த ஆஃப்ரிக்க தேசங்களில் ஒன்று, அங்கோலா. 1484-ஆம் ஆண்டு தியோகோ காவ் என்ற போர்த்துகீசியன் அங்கோலா கடற்கரையில் காலடி வைத்ததிலிருந்து தொடங்குகிறது அந்த அடிமை வரலாறு. பின்னர் பல ஆயிரம் கறுப்பின மக்கள் விலங்குகளைப் போல் பிடிக்கப்பட்டு ப்ரஸீலுக்கு அடிமைகளாக விற்கப்பட்டனர். ப்ரஸீலும் அப்போது போர்த்துகீசிய காலனியாக இருந்தது. தென்னமெரிக்காவின் ப்ரஸீல், ஆஃப்ரிக்காவின் அங்கோலா ஆகிய இரண்டு வெவ்வேறு நாடுகளின் தேசிய மொழியும் போர்த்துகீஸாக இருப்பதற்கு இதுதான் காரணம். இப்படித் தொடங்கிய அடிமை வரலாறு பல நூற்றாண்டுகள் சென்று 1975-இல் அங்கோலா சுதந்திரம் பெற்ற போதுதான் முடிவுக்கு வந்தது.

பல நூற்றாண்டுகளாகத் தங்கள் சொந்த மண்ணில் அடிமைகளாக வாழ்ந்தனர் அங்கோலா மக்கள். வியாபாரம் செய்ய வந்த போர்த்துகீசியர் எஜமானர்கள். இவ்வளவுக்கும் ஸ்பெய்ன், போர்த்துகல் எல்லாம் ஐரோப்பாவில் ஏழை நாடுகள். அந்த அடிமைத்தனத்தை எதிர்த்து 1961-இல் அங்கோலாவில் ஒரு சிறிய கிளர்ச்சி ஏற்பட்டது. பெரிய சுதந்திரப் போராட்டம் எல்லாம் அல்ல; தங்கள் ஊதியத்தை உயர்த்திக் கொடுக்கச் சொல்லிப் போராடினார்கள் விவசாயிகள். உடனே போர்த்துகீசிய ராணுவம் எங்கெல்லாம் கூலி உயர்வுப் போராட்டம் நடந்ததோ அங்கெல்லாம் குண்டு வீசித் தாக்கியது. 7000 விவசாயிகள் மாண்டனர். இந்தச் சம்பவம் நேரடியாக படத்தில் வராவிட்டாலும் இதுதான் அங்கோலா தேசத்தைச் சேர்ந்த

https://telegram.me/aedahamlibrary

சாம்பிஸாங்கா என்ற மகத்தான படத்தின் அடிப்படை.

உலக சினிமா அட்டவணையில் ஆஃப்ரிக்க சினிமா பற்றி அவ்வளவாக யாரும் பேசுவதில்லை. அப்படியே பேசினாலும் அங்கோலா சினிமா பற்றி ஒரு குறிப்பும் கிடையாது. இந்த நிலையில் சாரா மால்தொரோர் என்ற பெண் 1972-இல் இயக்கிய சாம்பிஸாங்கா என்ற படம் உலக சினிமா ஆர்வலர்களை அங்கோலா பக்கம் திருப்பியது. சாராவின் பின்னணி மிகவும் பலமானது. உலகின் புரட்சிகர சினிமாவில் மிக முக்கியமானதாகக் கருதப்படும் Battle of Algiers (1966) படத்தில் உதவி இயக்குனராகப் பணி புரிந்தவர் சாரா. அவர் கணவர் மரியோ தெ ஆந்த்ராதே அங்கோலாவின் புரட்சிகர இயக்கத்தில் போராளியாக இருந்தவர்.

அங்கோலாவின் சுதந்திரப் போராட்டம் 1961 பெப்ருவர் 4-ஆம் தேதி தொடங்கி 1974-இல் போர்த்துகீசியர்களின் வெளியேற்றத்துடன் முடிவுற்றது. தொமிங்கோ ஒரு டிராக்டர் டிரைவர். அவன் மனைவி மரியா. ஒருநாள் போர்த்துகீசிய போலீஸ் தொமிங்கோவை அடித்து இழுத்துக் கொண்டு போய் விடுகிறது.

தொமிங்கோ புரட்சிகர இயக்கத்தின் போராளிகளில் ஒருவன். அவனிடம் போலீஸ் அவனது சக போராளிகளைக் காட்டிக் கொடுக்கச் சொல்கிறது. தொமிங்கோ மறுக்கிறான். மறுக்க மறுக்க சித்ரவதை அதிகரிக்கிறது. இதற்கிடையில் தன் கைக்குழந்தையைத் தூக்கிக் கொண்டு தொமிங்கோவைத் தேடி தலைநகர் லுவாண்டா செல்கிறாள் மரியா. “போலீஸிடம் நன்றாக அழு; குழந்தையையும் அழ விடு; அப்போதுதான் தொமிங்கோவை விடுவார்கள்” என்று சொல்லி அனுப்புகிறாள் தொமிங்கோவின் தாய். லுவாண்டாவை நோக்கிய மரியாவின் நெடும்பயணத்தினூடே இயக்குனர் அங்கோலாவின் எதார்த்த வாழ்வை வெகு நேர்த்தியாகப் படமாக்கியிருக்கிறார். படம் முழுதுவதுமே துயரமான பாடல் ஒன்று ஒரு பெண் குரலில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. சட்டை அணியாத சிறுவர்கள் தெருவில் கோலி விளையாடுகிறார்கள். மரத்தால் கிதார் செய்து வாசிக்கிறார்கள். தெருக்களில் பன்றிகள் சுதந்திரமாக மேய்கின்றன.

லுவாண்டாவில் மரியா அரசியல் கைதிகளை அடைத்து வைத்திருக்கும் இடத்துக்கு வருகிறாள். அப்போது தொமிங்கோவிடம் போர்த்துகீசிய போலீஸ் அதிகாரி, “நீ எதுவுமே சொல்ல வேண்டாம். உங்கள் குழுவில் இருக்கும் வெள்ளைக்காரன் மட்டும் யார் என்று சொல்லி விட்டுக் கிளம்பு. உன் மனைவி வெளியே நிற்கிறாள். வாழ்வா சாவா என்று முடிவு செய்” என்கிறான். “நீ என்னை என்ன செய்தாலும் அதைச்

https://telegram.me/aedahamlibrary

சொல்ல மாட்டேன்” என்று சொல்லும் தொமிங்கோவை அடித்தே கொல்கிறார்கள்.

புரட்சிகர இயக்கத்தைச் சேர்ந்த போராளிகள் ஒரு கார்னிவல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். படத்தில் 15 நிமிடம் வருகிறது அந்தக் காட்சி. வெறும் ஆட்டமும் பாட்டமும்தான். கார்னிவல் என்பது ஆப்ரிக்க வாழ்க்கையின் அங்கம் என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். அப்போது போராளித் தலைவனுக்கு தொமிங்கோவின் மரணச் செய்தி கிடைக்கிறது. அவன் அதை சக போராளிகளுக்கு அறிவிக்கிறான். “யாரும் இந்தச் செய்தியால் சோர்ந்து விடாதீர்கள். தொமிங்கோ தனது மரணத்தின் மூலம் போர்த்துகீசிய காலனி ஆதிக்கவாதிகளை வீழ்த்தியிருக்கிறான். உண்மையில் இது நம்முடைய வெற்றி. அடித்தே கொல்லப்பட்டாலும் கூட ஆரம்பத்திலிருந்து முடிவு வரை நம்மைப் பற்றி அவன் ஒரு வார்த்தை பேசவில்லை. அந்த வீரத்தை நமது ஆதாரமாகக் கொண்டு புரட்சியைத் தொடர்வோம்” என்கிறான் தலைவன். கார்னிவல் தொடர்கிறது.

சாம்பிஸாங்கா, ஹோரசே லுவாந்தினோ வியேராவின் நாவலைத் தழுவி எடுக்கப்பட்ட படம். வியேரா போர்த்துகீசியராக இருந்தாலும் அங்கோலாவின் கறுப்பின மக்களிடையே வளர்ந்தவர். அவர்களின் மொழியிலேயே எழுதினார். அங்கோலாவின் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டு பதினோரு ஆண்டுகள் சிறையில் இருந்தார். அவருடைய நூல்கள் போர்த்துகீசிய அரசால் தடை செய்யப்பட்டிருந்தன. பத்து ஆண்டுகளுக்கு முன்பு போர்த்துகீசிய அரசு கொடுத்த 72 லட்சம் ரூபாய் மதிப்புள்ள இலக்கியப் பரிசை வாங்கிக்கொள்ள மறுத்து விட்டார்.

90 சதவிகிதம் பரம ஏழை; 10 சதவிகிதம் பெரும் பணக்காரர்கள். இதுதான் அங்கோலாவின் இப்போதைய நிலை. புகைப்படம் லுவாண்டாவில் ஒரு தெரு.

https://telegram.me/aedahamlibrary

12

Aguirre, the Wrath of God (1972)

Werner Herzog

ஹெர்ஸாக் பற்றித் தனியாக ஒரு புத்தகம் எழுத வேண்டும் என்று பல ஆண்டுகளாக நினைத்துக் கொண்டிருக்கிறேன். அவருடைய எல்லாப் படங்களையும் பார்த்திருக்கிறேன். திருவனந்த புரம் திரைப்பட விழாவுக்கு ஆண்டு தோறும் வரும் அவரை அவ்வப்போது அங்கே தூரத்திலிருந்து பார்த்திருக்கிறேன்; அதிசயப் பட்டிருக்கிறேன். ஆம், அவர் ஒரு அதிசயமான கலைஞர்.

ஹெர்ஸாகின் நண்பர் ஒருவர், பல காலமாக ஒரு படம் எடுக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார். வீட்டில் வளர்க்கும் நாய், பூனை போன்ற செல்லப் பிராணிகள் இறந்து போனால் அவற்றைப் புதைப்பார்கள் அல்லவா, அங்கே சென்று தங்கள் செல்லப் பிராணிகளின் கல்லறைகளில் மலர்களை வைத்துச் செல்லும் மனிதர்களிடம் பேட்டி எடுத்து அதை ஆவணப்படமாக்க வேண்டும் என்பதே ஹெர்ஸாகின் நண்பரின் ஆவல். ஆனால் அந்த நண்பர் அந்த விஷயத்தைச் சொல்லிக் கொண்டே இருந்தாரே தவிர, செயல்படுத்தவில்லை.

ஒருநாள் ஹெர்ஸாக் தன் நண்பரிடம், “நீ மட்டும் அந்தப் படத்தை எடுத்து விட்டால், நான் என்னுடைய ஷூவைத் தின்கிறேன்” என்று சொல்லிப் பந்தயம் கட்டுகிறார். கடைசியில் அந்த நண்பர் தான் சொன்னபடி அந்தப் படத்தை எடுத்து விட்டார். சொர்க்கத்தின் வாசல்கள் (1978) என்பது தலைப்பு. படம் வந்ததும் ஹெர்ஸாக் தான் சொன்னபடி தன் ஷூவைத் தின்கிறார். அவர் தன் ஷூவைத் தின்பதை அவருடைய நண்பர் ஒருவர் ஆவணப்படமாக எடுக்கிறார். Werner Herzog Eats His Shoes (1980) அமெரிக்காவின் கலிஃபோர்னியாவில் உள்ள பெர்க்லி என்ற நகரில், செஸ் பனிஸ் ரெஸ்டாரண்ட்டில்

https://telegram.me/aedahamlibrary

ஹெர்ஸாக் தன் ஷூவைத் தின்றார். பூண்டு, வெங்காயம், மூலிகை இலைகள், உப்பு, காரம் எல்லாவற்றோடும் ஷூவைப் போட்டு குக்கரில் ஐந்து மணி நேரம் வேக வைத்தார் ஹெர்ஸாக். இதற்கு, அந்த ரெஸ்டாரண்ட்டின் சமையல்காரரும், உரிமையாளருமான ஆலிஸ் வாட்டர்ஸ் உதவி புரிந்தார்.

பிறகு ஃபோர்க், ஸ்பூன் சகிதமாக ஒரு ஷூவைத் தின்றார் ஹெர்ஸாக். ஆனால் ஷூவின் அடிப்பகுதியைத் தின்னவில்லை. ஏனென்று கேட்டபோது "சிக்கன் சாப்பிடும்போது அதன் எலும்பையுமா தின்கிறீர்கள்?" என்று கேட்டார்.

உலகத்தில் எத்தனையோ பயணக் கட்டுரைகள் எழுதப்பட்டிருக் கின்றன. முகம்மது பின் துக்ளக் காலத்தில், அவனது அரசவையில் இருந்த இப்ன் பதூதாவின் பயண நூல் உலகப் புகழ் பெற்ற ஒன்று. ஆனால் ஹெர்ஸாக் எழுதிய பயண நூலை வேறு எந்தப் பயண நூலும் மிஞ்ச முடியாது.

புனித யாத்திரைகளை மேற்கொள்வது இந்திய மரபு. ஹெர்ஸாக் மேற்கொண்டதும் அப்படி ஒரு புனித யாத்திரையே. டிசம்பர் மாதத்தில் ஐரோப்பியக் குளிர் எப்படியிருக்கும் என்பது அதை அனுபவித்தவர்களுக்குத் தெரியும். எங்கு பார்த்தாலும் உறைபனி. மரங்களில் இலைகளே கண்ணுக்குத் தெரியாத அளவுக்கு பனி மூடியிருக்கும். தார் சாலையில் நடந்தால் கண்ணாடிச் சாலையில் நடப்பது போல் அல்லது ஸ்கேட்டிங் செல்வது போல் இருக்கும். சாலை இல்லாத இடம் என்றால் ஒரு அடிக்குக் கால்கள் பனியில் புதையும். அப்படிப்பட்ட பனிக்காலத்தில் 1974 நவம்பர் இறுதியில், பாரிஸிலிருந்து ஹெர்ஸாகுக்கு ஒரு ஃபோன் வருகிறது.

"லோட்டே ஐஸ்னர் சாகக் கிடக்கிறார். இன்னும் சில மணி நேரமோ அல்லது ஒரு நாளோதான் கெடு. உடனே விமானத்தைப் பிடித்து வா" என்கிறது நண்பரின் குரல். "என்னது, ஐஸ்னர் சாகக் கிடக்கிறாரா? ஐஸ்னர் செத்து விட்டால் அப்புறம் ஜெர்மன் சினிமா என்ன ஆவது? முடியாது. அவரை சாக விட மாட்டேன். இதோ வருகிறேன்" என்று ஃபோனிலேயே கதறி விட்டு ஒரு காம்பஸூம் பையுமாகக் கிளம்புகிறார் ஹெர்ஸாக்.

பனியைத் தாங்கும் கடினமான புதிய ஷூவை அணிந்து கொண்டு ம்யூனிச் நகரிலிருந்து நடந்தே பாரிஸூக்குக் கிளம்புகிறார். இந்த வரிகளைத் தட்டச்சு செய்யும் போது, எழுத்துக்களே தெரியாத அளவுக்கு என் கண்கள் பனிக்கின்றன. எப்பேர்ப்பட்ட மனிதன்! ம்யூனிச்சிலிருந்து

https://telegram.me/aedahamlibrary

நடந்தே பாரிஸுக்குக் கிளம்பி விட்டார். அதுவரை உயிரோடு இருப்பார் ஐஸ்னர். நவம்பர் 23-ஆம் தேதி கிளம்பியவர் டிசம்பர் 14 அன்று பாரிஸ் வந்து சேர்ந்தார்.

லோட்டே ஐஸ்னர் மரணப் படுக்கையில் கிடந்த போது அவர் வயது 78. எந்த நொடியிலும் இறந்து விடலாம் என்ற நிலை. அந்த நிலையில்தான் ம்யூனிச்சிலிருந்து பாரிஸுக்கு நடக்க ஆரம்பிக்கிறார் ஹெர்சாக். மைனஸ் 5 டிகிரி குளிரில் உறைபனியில் மூன்று வாரங்கள் நடந்து டிசம்பர் 14 அன்று பாரிஸ் வந்த போது லோட்டே ஐஸ்னர் சாகவில்லை; உயிரோடு இருந்தார். அதற்குப் பிறகும் 9 ஆண்டுகள் வாழ்ந்து தன்னுடைய 87-ஆவது வயதில்தான் இறந்தார் லோட்டே ஐஸ்னர். தன்னுடைய நடை அனுபவத்தை ஹெர்சாக் Of Walking In Ice என்ற தலைப்பில் புத்தகமாகவும் எழுதியிருக்கிறார்.

அப்படிப்பட்ட நம்பமுடியாத மனிதர் ஹெர்சாக். அவரது எல்லா படங்களுமே நம்முடைய உலக சினிமா பட்டியலில் இடம் பெறக்கூடியவை என்றாலும் அகிர்ரேவை மட்டும் எடுத்துக் கொண்டதன் காரணம், ஏற்கனவே குறிப்பிட்டது போல் ஐரோப்பியர் தென்னமெரிக்கா முழுவதிலும் இருந்த பூர்வகுடி மக்களின் கடவுளையும் மொழிகளையும் கலாச்சாரத்தையும் அழித்து விட்டு, தங்களுடைய கடவுளையும் மொழியையும் கலாச்சாரத்தையும் திணித்தார்கள். 'நீங்கள் காட்டுமிராண்டிகள்; நாகரீகம் அடைந்த எங்களைப் பின்பற்றுங்கள்' என்று சொல்லி ஒரு செவ்விந்தியனிடம் ஒரு ஸ்பானியப் பாதிரி தன்னுடைய புனித நூலைக் கொடுக்கும் காட்சி அகிர்ரேவில் வருகிறது. ஸ்பானியர்கள் செவ்விந்தியரைப் பற்றி இப்படி நினைத்ததற்குக் காரணம், பூர்வகுடிப் பெண்கள் மேலாடை அணிவதில்லை; எழுதப் படிக்கத் தெரியாது. ஆனால் இதெல்லாம் தெரிந்த ஐரோப்பியர் இன்னொரு நிலத்தைக் கொள்ளையடித்த கொள்ளைக்காரர்கள் என்கிறார் ஹெர்ஸாக்.

எல் தொராதோ என்ற இடத்தில் மலைமலையாகத் தங்கம் கிடைக்கிறது என்பதைக் கேள்விப்பட்டு 1560 டிசம்பர் 25-ஆம் தேதி ஒரு ஸ்பானியக் குழு பெருவின் மழைக்காடுகளுக்குள் நுழைகிறது. குழுவின் தலைவன் பிசார்ரோ. ஃபெப்ருவரி முடிவு வரை தேடுகிறார்கள். எல் தொராதோவைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதுதான் கதை. இதற்கிடையில் ஸ்பானியர்கள் எப்படி பூர்வகுடி மக்களை அழித்தார்கள் என்பதை மிகுந்த உக்கிரத்துடனும் கலைநயத்துடனும் படமாக்கியிருக்கிறார் ஹெர்ஸாக். அந்த ஸ்பானியக் குழுவினர் செவ்விந்தியரை கைகளில் விலங்கு மாட்டி அடிமைகளாக இட்டுச்

https://telegram.me/aedahamlibrary

செல்கிறார்கள். அதில் ஒரு செவ்விந்தியன் சொல்கிறான்.

“நேற்று வரை நான் இந்தப் பூமியின் தலைவனாக இருந்தேன். யாரும் என் முகம் பார்த்துக் கூட பேச மாட்டார்கள். இன்று என் மக்களோடு மக்களாக கைவிலங்கோடு வாழ்கிறேன்… எங்கள் நாட்டில் பூகம்பம் வந்தது; வெள்ளம் வந்தது. ஆனால் அந்த அழிவுகளை விட ஸ்பானியர்களால் நாங்கள் அடைந்த துயரம் அதிகம். ஏனென்றால், அவர்கள் எங்களிடமிருந்த எல்லாவற்றையும் திருடிக் கொண்டு விட்டார்கள்.”

படத்தின் ஆரம்பக் காட்சியே திரை வரலாற்றில் நம்ப முடியாத ஒன்று. ஒரு செங்குத்தான மலை உச்சியிலிருந்து ஒரு குழு கீழே இறங்கி வருகிறது. ஒருவரது கால் இடறினாலும் எல்லோரும் ஒருவர் பின் ஒருவராக சரிய வேண்டியதுதான். படத்தின் மற்றொரு பலம், க்ளாஸ் கின்ஸ்கி. இவரைப் போன்ற நடிகர்கள் உலக அளவிலேயே கம்மி. ஒரு கட்டத்தில் அவர் “இனிமேல் இந்தப் படத்தில் நடிக்க முடியாது” என்று மறுத்து விடுகிறார். அப்போது ஹெர்ஸாக் தன் பிஸ்டலை க்ளாஸ் கின்ஸ்கியின் கழுத்தில் வைத்து “நடிக்காவிட்டால் சுட்டு விடுவேன்” என்று சொல்லி நடிக்கச் செய்திருக்கிறார்.

அதிகார போதை ஒரு மனிதனை எப்படியெல்லாம் சீரழிவில் கொண்டு தள்ளும் என்பதுதான் படத்தின் செய்தி. காஸ்பர் தெ கர்வஹல் என்ற பாதிரியாரும் எல் தொராதோ குழுவில் இருக்கிறார். அவர்தான் இந்த அனுபவங்களை எழுதியிருக்கிறார். அதை ஆதாரமாகக் கொண்டதே அகிர்ரே, த ராத் ஆப் காட்.

https://telegram.me/aedahamlibrary

13

Blow-Up (1966)

Michelangelo Antonioni

இத்தாலியின் முக்கியமான இயக்குனர்களில் ஒருவரான அந்த்தோனியோனியின் முதல் ஆங்கிலப் படம் ப்ளோ-அப். அர்ஜெண்டினாவைச் சேர்ந்த ஹூலியோ கொர்த்தசாரின் சிறுகதை ஒன்றைத் தழுவி எடுக்கப்பட்டது. லண்டன் நகரின் பிரபலமான ஃபாஷன் புகைப்படக் கலைஞன் தாமஸ். ரோல்ஸ் ராய்ஸ் காரில் வலம் வரும் அவனிடம் புகைப்படம் எடுத்துக் கொள்ள அந்நகரில் வசிக்கும் அத்தனை அழகிகளும் போட்டி போடுகின்றனர். தொழிலில் அவனுக்குப் பணம் கொட்டுகிறது. இருந்தாலும் பார்த்துப் பார்த்து அலுத்துப் போன ஜீவனே இல்லாத பெண்கள், அவர்களுடைய செயற்கையான சிரிப்பு எல்லாம் அவனுக்கு வாழ்வின் மீதே சலிப்பைத் தருகிறது. சமயங்களில் ஃபாஷன் புகைப்படத் தொழிலில் கவர்ச்சிப் படங்களும் எடுக்கிறான். அப்படிப்பட்ட ஒரு புகைப்படக் காட்சி ஒரு ஆண் பெண் கலவியைப் போலவே படத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

தாமஸ் புகைப்படம் எடுக்கும் காட்சிகளே படத்தில் திரும்பத் திரும்பக் காண்பிக்கப்படுவதன் அர்த்தம். பணம், புகழ், பெண்கள் என்று எல்லாம் இருந்தாலும் அவனுடைய வாழ்க்கை அர்த்தமற்றதாக இருக்கிறது என்பதை வலியுறுத்துவதற்காகத்தான். தாமஸ் புகைப்படம் எடுத்துக் கொண்டிருக்கும் போது ஒருநாள் ஒரு பூங்காவில் ஒரு ஆணும் பெண்ணும் முத்தமிட்டுக் கொண்டிருப்பதை யும் எடுக்கிறான். சலிப்பூட்டும் வாழ்வில் அது அவனுக்கு ஒரு உற்சாகத்தைத் தருகிறது. ஆனால் அந்தப் பெண் அவனைப் பார்த்து விடுகிறாள். அவனிடம் வந்து

https://telegram.me/aedahamlibrary

நெகடிவைக் கேட்கிறாள். அவன் தர மறுக்கிறான்.

பிறகு தாமஸின் வீட்டைக் கண்டுபிடித்து வந்து விடுகிறாள். “நெகடிவைக் கொடுத்து விடு, நீ என்ன கேட்டாலும் தருகிறேன்” என்று சொல்லி, தன் ஆடையைக் கழற்றுகிறாள். அதற்கு அவசியம் இல்லை என்று நெகடிவை அவளிடம் கொடுக்கிறான் தாமஸ். அவள் சென்ற பிறகு தன்னிடம் உள்ள மற்றொரு நெகடிவை வைத்துப் பார்க்கும் போது அந்தப் பெண்ணோடு இருந்த ஆடவனை செடி மறைவில் நிற்கும் ஒருவன் துப்பாக்கியால் கொல்ல முயற்சிக்கும் காட்சி புகைப்படத்தில் பதிவாகி இருப்பது தெரிகிறது. படத்தை ப்ளோ-அப் செய்து பார்த்து உறுதி செய்து கொண்டு அந்தப் பூங்காவுக்குச் செல்கிறான். அதற்குள் நள்ளிரவு ஆகி விடுகிறது. பூங்காவில் அந்த ஜோடி நின்று கொண்டிருந்த இடத்தில் அவன் பார்த்த ஆணின் பிரேதம் கிடக்கிறது.

திகிலுடன் வீட்டுக்குத் திரும்பும் தாமஸ் மறுநாள் காலையில் வந்து பார்க்கும் போது பிரேதம் இருந்த சுவடே இல்லை. இதோடு படம் முடிந்திருந்தால் இது உலகப் படமாக ஆகியிருக்காது. அடுத்த காட்சியில் இரண்டு பேர் டென்னிஸ் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பந்து இல்லை. டென்னிஸ் பந்தோடு இரண்டு பேர் எப்படி டென்னிஸ் ஆடுவார்களோ அதேபோல் தத்ரூபமாக அந்த இருவரும் பந்து இல்லாமலேயே ஆடுகிறார்கள். பார்வையாளர்களும் அதே ஆர்வத்துடன் பார்க்கிறார்கள். ஒரு கட்டத்தில் ’பந்து’ வெகுதொலைவில் வந்து விழுந்து விடுகிறது. (பந்தே இல்லை என்பதை ஞாபகம் கொள்க.) ‘பந்தை’ எடுத்துப் போடும்படி தாமஸைக் கேட்டுக் கொள்கிறான் ஒரு ஆட்டக்காரன். தாமஸும் ‘பந்தை’ எடுத்துப் போடுகிறான். எப்போதும் தான் பார்க்கும் காட்சிகளையெல்லாம் படம் எடுத்துத் தள்ளும் தாமஸ் அந்த விநோத விளையாட்டைப் படம் எடுப்பதில்லை.

ஆதி சங்கரரின் மாயா தத்துவம் என்ன சொல்கிறது? அதேதான் இந்தப் படம். எது எதார்த்தம்? எது மாயை? அவன் பார்த்த கொலை உண்மையில் கொலையா? அல்லது அவன் கற்பனையா? ஒரு ஜென் துறவியிடம் சீடன் கேட்டான். குருவே, இலை அசைகிறதா? காற்று அசைகிறதா?

குரு சொன்னார்: உன் மனம்தான் அசைகிறது.

அதேபோல் ஒரு சாதாரண கொலைச் சம்பவத்தை தத்துவார்த்தத் தளத்துக்கு உயர்த்துவதே அந்த்தோனியோனியின் சினிமா.

https://telegram.me/aedahamlibrary

14

8½ (1963)

Federico Fellini

இரண்டாம் உலகப் போரின் முடிவுக்குப் பிறகு இத்தாலிய சினிமா உலக சினிமாவுக்கு வழங்கிய கொடை நியோரியலிசம். இத்தாலிய சர்வாதிகாரி முசோலினியின் ஃபாசிச ஆட்சியில் சமூக அவலங்களை இத்தாலிய இயக்குனர்களால் சினிமாவில் சொல்ல முடியவில்லை. எனவே முசோலினியின் முடிவுக்குப் பிறகு ரோசலினி, தெ சிக்கா, விஸ்காண்ட்டி போன்ற இயக்குனர்கள் சினிமாவில் ஒரு புதிய காட்சி மொழியை அறிமுகப்படுத்தினார்கள். அதுதான் நியோரியலிசம் என்று அழைக்கப்பட்டது. அந்தப் பள்ளியின் முக்கியமான இயக்குனர்களில் ஒருவர் ஃபெட்ரிகோ ஃபெலினி. அவருடைய தெரு (1954) என்ற படம் நியோரியலிச சினிமாவின் கிளாசிக் என்று கருதப்படுகிறது. அதன் பின்னர் ஃபெலினி நியோரியலிசத்தைக் கைவிட்டார். தனி மனித உறவுகள், அவற்றின் சிடுக்குகள் போன்றவற்றைக் காட்சிப்படுத்துவதற்கு நியோரியலிசம் மட்டுமே போதாது என்பதை உணர்ந்தார். ஃபெலினியின் அந்த மாற்றத்தையே எட்டரை என்ற படத்தில் காண்கிறோம்.

வசனங்களால் உருவாக்கப்படும் தமிழ் சினிமாவையே பார்த்து வளரும் நமக்கு ஃபெலினியின் சினிமா வேறு வகையான புரிதலைத் தருகிறது. அதாவது, சினிமா என்பது சொல் அல்ல; வசனம் அல்ல; காட்சிகளாகவும் படிமங்களாகவும் ஆனதே சினிமா. இதை எண்பதுகளில் தில்லியில் இந்தப் படத்தின் முதல் காட்சியைப் பார்க்கும்

https://telegram.me/aedahamlibrary

போது புரிந்து கொண்டேன். படத்தின் கதாநாயகன் கீடோ ஒரு சினிமா இயக்குனன். அந்தக் கதாபாத்திரத்தில் நடிப்பது வேறொருவர் என்றாலும் அந்தப் பாத்திரம் ஃபெலினி தான். ஒரு சுரங்கப் பாதையில் நூற்றுக்கணக்கான கார்கள் மெதுவாகச் சென்று கொண்டிருக்கின்றன. அதில் ஒரு காரில் இருக்கும் கீடோ மூச்சுவிட முடியாமல் தவிக்கிறான். Claustrophobia என்பது அந்த நோயின் பெயர். ஒருவரை நெருக்கமான இடத்தில் போட்டால் வருகின்ற உளவியல் பிரச்னையே க்ளாஸ்ட்ரோஃபோபியா. கைகாலை உதைத்துக் கண்ணாடியை உடைத்துக் கொண்டு ஆகாயத்தில் பறக்கிறான். அவனுடைய உதவியாளர்கள் கயிறைப் போட்டு அவனைக் கீழே இழுக்கிறார்கள். இந்தக் காட்சி எதைக் குறிப்பிடுகிறது? இந்தப் புதிரை அவிழ்ப்பதுதான் ‘எட்டரை’. படத்தில் கதை என்று எதுவும் இல்லை. கீடோ தன் தயாரிப்பாளரிடம் ஒரு சயன்ஸ் ஃபிக்‌ஷனுக்கான கதை தயாராக இருப்பதாகச் சொல்லி விடுகிறான். அதற்காக ஒரு பிரம்மாண்டமான செட்டும் போடப்படுகிறது. அதே சமயத்தில் அவனுக்கு ஒரு மனைவியும் ஒரு காதலியும் இருக்கிறார்கள். அவர்கள் இருவரையும் வேறு அவன் சமாளிக்க வேண்டியிருக்கிறது. காதலியாக நடிக்கும் சாந்த்ரா மிலோ ஃபெலினியின் நிஜக் காதலியும் ஆவார். கற்பனைக்கும் நிஜத்துக்குமான ஊடாட்டத்தில் உருவாகும் படைப்புகளே ஆட்டோஃபிக்‌ஷன். அந்த வகையில் ஆட்டோஃபிக்‌ஷன் என்ற வகையில் எழுதப்பட்ட என் எழுத்துக்கு முன்னோடியாக இருந்தது ஃபெலினியின் படங்கள்தான். உலக சினிமாவின் முதல் ஆட்டோஃபிக்‌ஷன் படமும் எட்டரைதான். படத்தின் பல சந்தர்ப்பங்களில் இது கற்பனையா அல்லது நிஜமா என்ற சந்தேகத்தைக் கிளப்பி விட்டு விடுகிறார் ஃபெலினி. ஜெர்மன் கவி ரில்கே ஷேக்ஸ்பியரின் டெம்பஸ்ட் நாடகத்தைப் படித்து விட்டு எழுதுகிறார்: “படைப்பாளி என்பவன் பொம்மலாட்டத்தில் மற்ற பொம்மைகள் ஆடும் போது தன் கழுத்திலும் கயிற்றை மாட்டிக் கொண்டு ஆடி விட்டு, பார்வையாளர்களிடம் பாராட்டை எதிர்நோக்குபவன்.” அதாவது, தன்னையே அழித்துக் கொண்டுதான் அவன் தன் படைப்பை உருவாக்குகிறான். இந்த விளக்கம் ஆட்டோஃபிக்‌ஷனுக்கு மிகவும் பொருந்தும்.

கயிற்றின் மூலம் தரைக்கு இழுக்கப்பட்ட காட்சிக்கு அடுத்த காட்சியில், கீடோ ஒரு மருத்துவரிடம் இருக்கிறான். “இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? பழையபடியே நம்பிக்கையற்ற மற்றொரு படமா?” என்று கேட்கிறார் அவர்.

இந்தப் படம் வெளிவந்த போது படம் புரியவில்லை என்றும் காட்சிகள்

https://telegram.me/aedahamlibrary

ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் இருப்பதாகவும் சொல்லப்பட்டது. இத்தாலியில் ஒரு ஊரில் படத்தின் ஆபரேட்டரை அடித்து விட்டார்கள். ஆனால் இன்று உலகம் பூராவும் எட்டரை உலகின் மிகச் சிறந்த பத்து படங்களில் ஒன்றாகக் கொண்டாடப் படுகிறது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

15

Farewell My Concubine (1993)

Chen Kaige

டேவிட் லீனின் டாக்டர் ஷிவாகோ, லாரன்ஸ் ஆப் அரேபியா இரண்டையும் காவியங்கள் என்று சொல்லலாம். அதேவிதமாக எடுக்கப்பட்ட ஒரு சினிமா காவியம், ஃபேர்வெல் மை கான்குபைன். இயக்குனர் ஷென் காய்கே, இந்தப் படத்தின் மூலம் உலகத்தையே சீனத்து சினிமாவின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தார். 1925-1977 வரையிலான காலகட்டத்தில் நகர்கிறது படம். சர்வதேச அளவில் பல விருதுகளைப் பெற்ற இந்தப் படம், சீனாவில் இரண்டு முறை தடை செய்யப்பட்டு, இரண்டு முறையும் தடையை வென்றது.

ஒரு பெரிய கண்காட்சியில், ஒரு நாடகக் குழு, சீனத்தின் பாரம்பரிய நாடகம் ஒன்றை நிகழ்த்துவதிலிருந்து படம் துவங்குகிறது. அந்த நாடகக் கம்பெனியில் நடிகர்களாக இருக்கும் தவுசி, ஷிட்டு என்ற இரண்டு சிறுவர்களின் கதைதான் படம்.

படத்தின் ஆரம்ப காட்சிகள் அனைத்தும், நாடகக் கம்பெனியில் நடிகர்களாக இருக்கும் சிறுவர்கள் படும் தாங்கொணா கொடுமை களைச் சித்தரிக்கிறது. ஒரு பெண், தன் மகனின் பசியைப் போக்க எந்த வழியும் தெரியாமல், அவனை நாடகக் கம்பெனியில் சேர்த்து விடலாம் என்று முயற்சிக்கிறாள். சிறுவனைப் பரிசோதிக்கும் மூத்த குரு, அவனுக்கு ஆறு விரல்கள் இருப்பதால், அது துரதிர்ஷ்டத்தைக் கொண்டு வரும்; சேர்த்துக் கொள்ள முடியாது என்கிறார். “ஓ… அப்படியா” என்று, பையனை வீட்டுக்கு இழுத்துக் கொண்டு போகும் அவள், அவனுடைய ஆறாவது விரலை, பெரிய கத்தி ஒன்றால் வெட்டித் துண்டித்து விடுகிறாள். மீண்டும் அவனை நாடகக் கம்பெனிக்கு இட்டுச் சென்று சேர்த்தும் விடுகிறாள். கம்பெனியின் ஒப்பந்தப் பத்திரத்தில், ரத்தம் தோய்ந்த தன் விரல்களால் கைரேகை பதிக்கிறாள். 1930களில் சீனாவின் வறுமை எப்படி இருந்தது என்பதற்கு, இந்த ஒரு காட்சியே

https://telegram.me/aedahamlibrary

போதுமானது.

மாவோவின் தலைமையிலான கம்யூனிச சீனாவின் இருண்ட காலம் என்று கலாசாரப் புரட்சியைக் கூறலாம். 1966-1976 வரை நடந்த அந்தக் கலாசாரப் புரட்சியின் போது, ஒரு கோடி மக்களுக்கும் மேல் கொல்லப்பட்டனர். அதை விட அதிகமானோர், கட்டாய உழைப்பில் ஈடுபடுத்தப்பட்டனர். உதாரணமாக, எந்தக் குற்றமும் செய்யாத ஒரு கல்லூரிப் பேராசிரியரை, “நீ பூர்ஷ்வா, உனக்கு உடல் உழைப்பு என்றால் என்னவென்று தெரிய வேண்டும்” என்று சொல்லி கிராமங்களுக்கு அனுப்பி விடுவார்கள். அங்கே சரியான உணவு கூட இல்லாமல், தினமும் 18 மணி நேரம் மாடு போல் உழைக்க வேண்டும். கலாச்சாரப் புரட்சியின் போது இந்தக் கட்டாய உடல் உழைப்பிலேயே பல லட்சம் சீனர்கள் இறந்து போனார்கள். படத்தின் இயக்குனர் ஷென்னும், அப்படிப்பட்ட முகாம்களுக்கு அனுப்பப்பட்டவர்தான்!

1969இல், தன் பதினேழாவது வயதில், ஷென் கட்டாய உழைப்பு முகாமுக்கு சென்றார். ஷென்னின் தந்தையும் இதே வதைமுகாமில் பல ஆண்டுகளைக் கழித்தவர். படத்தில் வரும் நாடகக் குழுவில், சிறுவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனைகளெல்லாம், கலாச்சாரப் புரட்சியின் போது ஷென் அனுபவித்தவையே! பயிற்சியின் போது ஏதேனும் சிறு பிழை நேர்ந்தால் கூட, சிறார்களின் ஆடைகளைக் கழற்றி விட்டு, குப்புறப்படுக்க வைத்து, புட்டத்தில் பிரம்பால் அடிப்பது அப்போதைய தண்டனை முறையாக இருந்தது.

இந்தப் படம், உலகின் மகத்தான படங்களில் ஒன்றாக கருதப்படுவதன் காரணம், ஒரு காதல் கதையைச் சொல்லும் போதே, அதன் ஊடாக சீனாவின் வரலாறு, கலாச்சாரம், அரசியல் உள்ளிட்ட பல விஷயங்களையும், மிக ஆழமாக உள்ளடக்கிக் கொண்டு சென்றதே. உதாரணமாக, இதில் வரும் சீனாவின் பாரம்பரிய கலைகள்; அவற்றின் உடை அலங்காரம்; மேலும், கலாச்சாரம் எனும் பெயரில், அந்த தேசமே அனுபவித்த துன்பம்...

நாடகக் கம்பெனியில் சிறுவன் தௌசி சேர்க்கப்பட்டதற்கு வறுமை மட்டுமே காரணம் அல்ல; அவன் தாய் ஒரு விலைமாது. எனவே தௌசி அந்த இடத்தை விட்டு வெளியேறாவிட்டால் அவன் வாழ்க்கையும் விலைமாதர்களுடனேயே இருந்து வீணாகி விடும் என்று அஞ்சியே அவனுடைய விரலை வெட்டியாவது நாடகக் கம்பெனியில் சேர்த்து விட வேண்டுமென்று நினைக்கிறாள் அவன் தாய். அந்த ஆண்டு 1924. நாடகக் கம்பெனியின் கொடூரமான நடைமுறைகளுக்கும் ஆசிரியரின் தண்டனைகளுக்கும் அஞ்சி ஒரு மாணவன் அங்கே தூக்கு மாட்டிக்

https://telegram.me/aedahamlibrary

கொண்டு சாகிறான்.

அடுத்த பத்தாண்டுகளில் தௌசியும் ஷிட்டுவும் பெரும் நாடகக் கலைஞர்களாகப் பிரபலம் அடைகிறார்கள். ஃபேர்வெல் மை கான்குபைன் என்ற நாடகத்தில் சிறுவயதிலிருந்தே தௌசி தாசியாகவும் ஷிட்டு அரசனாகவும் நடித்து வருகிறார்கள். அதன் கதை: கி.மு. 202-ஆம் ஆண்டு சூ என்ற பிராந்தியத்தின் மன்னனான ஷியாங் யூவின் மீது, ஹான் பேரரசன் போர் தொடுக்கிறான். போர் ஹான் பேரரசனுக்கே சாதகமாக இருக்கிறது. ஷியாங் யூவின் தாசி போர்க்களத்திலும் அவனைத் தொடர்ந்து செல்கிறாள். கிட்டத்தட்ட போர் முடிவுக்கு வந்து விட்ட நிலை. இன்னும் ஒருநாள் போர் மிச்சம் இருக்கிறது. யூவைக் கொல்வது அல்லது சிறைப் பிடிப்பதற்கான போர். அன்றைய தினம் யூவும் தாசியும் தோல்வியை மறக்க மது அருந்துகிறார்கள். அரசன் உறங்கியதும் தாசி போர்க்களத்தினூடே நடந்து செல்கிறாள். எங்கு பார்த்தாலும் இறந்து போன மனித உடல்கள்; காயமடைந்தவர்களின் அரற்றல்கள். அதையும் மீறி ஒரு கூடாரத்தில் பேச்சு சப்தம் கேட்கிறது. நாளை எப்படியும் மன்னனைக் கொன்று விடுவார்கள்; அதற்குள் நாம் ஓடி விடலாம் என்று பேசிக் கொள்கிறார்கள் சிப்பாய்கள். மன்னனுக்கும் அது தெரிந்து விடுகிறது. அவனைவிட அவனுடைய குதிரை அதை உணர்ந்து சோகமாக கனைக்கிறது.

தான் இறந்த பிறகு தன் காதலியின் கதி என்ன என்று யோசிக்கிறான் மன்னன். "இதோ, என் குதிரையை எடுத்துக் கொண்டு தப்பி விடு" என்கிறான். அவள் அதைக் கேட்பதாக இல்லை. அதைவிட என் உயிரை மாய்த்துக் கொள்வேன் அரசே என்று சொல்லியபடி அவனுடைய வாளை உருவித் தன்னைக் குத்திக் கொண்டு சாகிறாள். எந்த நிலையிலும் அவனுக்குத் தான் ஒரு சுமையாக இருந்து விடக் கூடாது என்ற எண்ணமே அவளுடைய அந்த முடிவுக்குக் காரணம். 22 நூற்றாண்டுகளாக சீன நாடகப் பாரம்பரியத்தில் நிகழ்த்தப்பட்டு வந்த அந்த நாடகமே இந்தப் படத்தின் ஆதாரம். படத்தின் கதையும் கூட கிட்டத்தட்ட அந்தக் காதலியின் கதை போன்றதுதான்.

நாடகத்தில் தாசியாக நடித்து நடித்த தௌசி தன்னையே அந்த தாசியாகவும் ஷிட்டுவை அரசனாகவும் நினைக்க ஆரம்பிக்கிறான். ஷிட்டுவோ அப்படி நினைப்பதில்லை. அவன் சூஷியான் என்ற ஒரு விலைமாதுவை மணந்து கொள்கிறான். ஷிட்டுவின் திருமணத்தை ஏற்க முடியாமல் கடுமையாக எதிர்க்கிறான் தௌசி. அப்போது ஷிட்டு, "நீ வேண்டுமானால் தாசியாக இருந்துகொள்; நான் நிஜ அரசன் இல்லை" என்று சொல்லிவிட்டு சூஷியானோடு போகிறான். அன்று இரவு

https://telegram.me/aedahamlibrary

வாளினால் தன் கழுத்தை அறுத்துக் கொள்ள முயல்கிறான் தௌசி. அவன் மீது மிகுந்த பிரேமை கொண்ட ஒரு பிரபுவால் காப்பாற்றப்படுகிறான். இனிமேல் நாம் இருவரும் சேர்ந்து நடிக்கப் போவதில்லை என்று அறிவிக்கிறான் தௌசி. அன்றுதான் ஜப்பானியத் துருப்புகள் பீகீங் நகருக்குள் நுழைகின்றன.

இப்படியாக 1930களின் பிற்பகுதியில் சீனாவின் மீதான ஜப்பானின் ஆக்ரமிப்பு, இரண்டாம் உலகப் போர் முடியும் தறுவாயில் ஜப்பானிய ராணுவம் சரணடைந்தது, 1949-இல் கம்யூனிஸ்டுகள் ஆட்சியைப் பிடித்தது, அதைத் தொடர்ந்து நடந்த கலாச்சாரப் புரட்சி ஆகிய வரலாற்று நிகழ்வுகள் அனைத்தும் கதையினூடே பின்னணியாக வந்து கொண்டே இருக்கின்றன. இந்தப் படத்தை எத்தனை முறை பார்த்திருப்பேன் என்ற எண்ணிக்கையே மறந்து விட்டது. அப்படிப்பட்ட ஒரு திரைக் காவியம் ஃபேர்வல் மை கான்குபைன்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

16

Dancer (2016)

Stéphanie Di Giusto

சங்கீதம், ஓவியம், எழுத்து போன்ற துறைகளைப் போலவே நடனமும் அதில் ஈடுபடும் கலைஞனின் மொத்த வாழ்வையும் ஆன்மாவையும் தனக்கு ஆகுதியாகக் கோரும் ஒரு கலையாக இருக்கிறது. அதற்கு மைக்கேல் ஜாக்ஸனின் வாழ்க்கை ஒரு உதாரணம். சராசரி வாழ்வின் எந்தக் கூறுகளையும் சட்ட திட்டங்களையும் நாம் மேற்கண்ட கலைத்துறைகளில் ஈடுபடுபவர்களிடம் காண முடியாது. ஒரு கவிஞன் குடித்துக் குடித்தே தன்னை அழித்துக் கொள்கிறான் எனில் அந்த மதுபானம் அனைத்தும் அவன் தன் கவிதைக் கடவுளுக்குச் செலுத்தும் அர்ப்பண நீர் என்றே கொள்ள வேண்டும். கலை என்ற பீடத்தில் தன் ஆன்மாவையும் உடலையும் பலி கொடுத்தே அவன் உலக மாந்தருக்கு ஒளி பாய்ச்சுபவனாக விளங்குகிறான். அப்படிப்பட்டவனே கலைஞன். அப்படி ஒரு மகா கலைஞியைப் பற்றிய படம் ஒன்றை சமீபத்தில் (ஜனவரி 2017) சென்னையில் நடந்து முடிந்த சர்வதேசத் திரைப்பட விழாவில் கண்டேன். படம் முடிந்ததும் பார்வையாளர்கள் அத்தனை பேரும் எழுந்து நின்று மூன்று நிமிடங்களுக்கு மேல் கை தட்டிய வண்ணமே இருந்தார்கள். ஏனென்றால், டான்ஸர் என்ற அந்த ஃப்ரெஞ்ச் படத்தில் கடவுளே ஒரு நடனக்காரியாக வந்து நடனமாடியது போல் இருந்தது. யாராலும் நம்ப முடியவில்லை; இப்படியும் ஒரு நடனம் சாத்தியமா என்று வியந்து போனார்கள். இந்தப் படத்தைப் பார்க்கச்

https://telegram.me/aedahamlibrary

சொல்லி சிபாரிசு செய்த நண்பனும் என்னிடம் அப்படித்தான் சொல்லியிருந்தான். “இப்படி ஒரு படத்தை உங்கள் ஆயுளில் பார்த்திருக்க முடியாது.” உண்மைதான். எப்போதாவது உங்களுக்கு அந்த அதிர்ஷ்டம் வாய்த்தால் நான் சொல்வதில் உள்ள உண்மையை நீங்கள் உணர முடியும்.

Stéphanie Di Giusto இயக்கி 2016-இல் வெளிவந்த ஃப்ரெஞ்ச் படம் டான்ஸர். லூயி ஃபுல்லர் (1862-1928) என்ற சென்ற நூற்றாண்டைச் சேர்ந்த அமெரிக்கப் பெண்தான் நவீன நடனம் மற்றும் அரங்க ஒளி அமைப்பு ஆகியவற்றின் முன்னோடி என்று கருதப்படுகிறார். ஃபுல்லரின் காலகட்டத்தில்தான் மின்சாரம் மக்கள் புழக்கத்துக்கு வந்து கொண்டிருந்தது என்பதையும் இங்கே ஞாபகப்படுத்திக் கொண்டால் நடன/நாடக அரங்குகளில் மின்சாரத்தைப் பயன்படுத்துவதில் ஃபுல்லர் எதிர்கொண்ட பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள முடியும். பல்ப் வெடித்து அரங்கமே தீப்பற்றிக் கொண்டு விடும்; பார்வையாளர்கள் தீயில் கருகிச் சாக நேரிடும் என்றெல்லாம் அந்தக் காலகட்டத்தில் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் அச்சுறுத்தப்பட்டார்கள். இதையெல்லாம் மீறித்தான் ஃபுல்லர் தனது நடன நிகழ்ச்சிகளில் மின்சார விளக்குகளையும் வண்ணங்களையும் பயன்படுத்தினார். விளக்குகளுக்கான அபரிமிதமான செலவுகளைத் தன் ஊதியத்தில் கழித்துக் கொண்டார். இதையெல்லாம் வைத்தே டான்ஸரின் கதையை உருவாக்கியிருக்கிறார் இயக்குனர் ஸ்தெஃபானி தி ஜியுஸ்தோ. ஃபுல்லராக நடித்திருக்கும் ஸோக்கோ (முழுப்பெயர் ஸோகோலின்ஸ்கி) ஓரளவு ஃபுல்லர் போலவே வாழ்ந்து கொண்டிருப்பவர்தான். பாடகரும் நடிகருமான ஸோக்கோ தன்னை தீவீsமீஜ்பணீறீ ஆக அறிவித்துக் கொண்டிருப்பவர். அரங்குகளில் நள்ளிரவு வரை எந்த இடையூறும் இல்லாமல் பார்வையாளர்களுக்காகப் பாடும் பழக்கம் வழக்கம் உடையவர் ஸோக்கோ.

அமெரிக்காவில் பிறந்த லூயி ஃபுல்லரின் சிறுவயது கொடூரமான வறுமையில் கழிந்தது. ஒருவேளை உணவுக்கும் வழியில்லாத நிலை. அப்படியே கிடைத்தாலும் காய்ந்து போன ஒன்றிரண்டு ரொட்டித் துண்டுகளே கிடைக்கும். அப்படிப்பட்ட நிலையில் வாய்ப்புத் தேடிப் போகும் போது -அவருடைய வாடி வதங்கிய உருவம், வற்றிய கன்னம், குழி விழுந்த கண்கள், கிழிந்து போன கவுன் ஆகியவற்றைப் பார்த்து பரிகாசமும் ஏளனமும்தான் பதிலாகக் கிடைத்ததே தவிர அவருடைய

https://telegram.me/aedahamlibrary

பாடும் திறமையை யாரும் கண்டு கொள்ளவில்லை.

அப்படிப்பட்ட அவருடைய வாழ்க்கையில் நெஞ்சை உருக்கும் ஒரு இடம் வருகிறது. ஃபுல்லர் ஒரு நாடகக் கம்பெனியில் வேலை கேட்கிறார்:

“உனக்கு என்ன வேண்டும்?”

“வேலை.”

”என்ன வேலை செய்வாய்?”

”என்ன வேலையானாலும் செய்வேன். ஆடுவேன். பாடுவேன். நடிப்பேன். ஷேக்ஸ்பியர் நாடகங்கள் மனப்பாடமாகத் தெரியும். ஆனாலும் வாய்ப்பு கிடைக்கவில்லை. இரண்டு வேளை சாப்பிட வேண்டும். அதற்காக ஒரு வேலை வேண்டும்.”

இப்படித் தொடங்கிய ஃபுல்லரின் கலை வாழ்க்கை கடுமையான போராட்டங்களோடு தொடர்ந்தது. ஒரு கட்டத்தில் தானே வடிவமைத்த நடனங்களை அவர் மேடையில் ஆட ஆரம்பித்தார். மிக நீண்ட ஸாட்டின் துணிகளை அணிந்து கொண்டு அவற்றின் மூலம் உருவாக்கப்பட்ட புதிய வகை நடனம் அது. கூடவே மின்வண்ணங்களும் சேர்ந்து மேடையில் ஒரு ஃபாண்டஸி உலகையே சிருஷ்டி செய்தார் ஃபுல்லர். ஆனாலும் பத்திரிகைகள் அவரைக் கடுமையாக விமர்சித்தன. 1891-ஆம் ஆண்டு அவர் உருவாக்கிய சர்ப்ப நடனம் என்ற நடனத்துக்கும் வரவேற்பு கிடைக்கவில்லை. இந்த உதாசீனத்துக்கு முக்கிய காரணம், ஃபுல்லர் சேரியைச் சேர்ந்தவராக இருந்தார். ஆரம்ப நிலைக் கல்வியை மட்டுமே முடித்திருந்தார். நடனத்திலும் அவர் மற்ற மேட்டுக்குடி கலைஞர்களைப் போல் முறையான பயிற்சி பெற்றிருக்கவில்லை.

ஒரு லாரியில் அடைக்கப்படக் கூடிய அளவுக்கு ஸாட்டின் துணிகளைத் தன் உடலில் பரவ விட்டபடி அவற்றைக் காற்றில் அலையலையாக சுழலச் செய்து கூடவே தன் உடலையும் சுழற்றி ஆடிய ஃபுல்லரின் நடனத்தை நடனமே அல்ல என்றார்கள் விமர்சகர்கள். ஆனாலும் அந்தத் துணிகளின் மீது வண்ண ஒளிகள் மாறி மாறிப் பாயும் போது ஏற்படும் அதிரூபப் படிமங்களைப் பார்த்து ‘ஒளியின் கடவுள்’ என்று கொண்டாடினார்கள் ஃப்ரெஞ்சுக் காரர்கள். ஆம். அமெரிக்காவில் தன்னுடைய கலை யாருக்கும் புரியவில்லை என்பதால் ஃபுல்லர் 1892-இல் ஃப்ரான்ஸுக்குக் கிளம்பிச் சென்று விட்டார்.

பாரிஸில் அவரைக் கொண்டாடினார்கள். ஒரே நாளில் - ஆம், இருபத்து

https://telegram.me/aedahamlibrary

நான்கு மணி நேரத்தில் - உலகப் புகழ் அடைந்தார் ஃபுல்லர். அப்போது அவர் வயது 30. ஃப்ரான்ஸில் இருந்த அத்தனை கலைஞர்களும் அவரைக் கொண்டாடினார்கள். அதன் பிறகு இடையிடையே அவர் அமெரிக்கா சென்று வந்தாலும் கடைசி வரை பாரிஸிலேயே வாழ்ந்தார். ஃப்ரான்ஸில் அவருக்கு நெருங்கிய நண்பர்களாக இருந்தவர்கள் நாவலாசிரியர் அலெக்ஸாந்தர் துய்மா, சிற்பி ஆகஸ்த் ரோதின், விஞ்ஞானி மேரி க்யூரி.

தன் காலத்தில் மிக அதிக ஊதியம் பெற்றவராக இருந்த போதிலும் ஃபுல்லரின் நிதிநிலை எப்போதும் துயரகரமாகவே இருந்தது. அவருடைய நடன நிகழ்ச்சிகளுக்கு வந்த பணத்தை அவரால் கையாளத் தெரியாததால் மீண்டும் மீண்டும் கடனில் வீழ்ந்தார். மட்டுமல்லாமல், நடனத்தின் போதும் பயிற்சிகளின் போதும் அவர் சுமந்து கொண்டிருக்கும் எக்கச்சக்கமான துணிகளின் அதீதமான எடையினால் அவர் உடல் பெரிதும் பாதிக்கப்பட்டது. தசைகளும் எலும்புகளும் உடைந்து விடும் அளவுக்கு வலித்தன. வலியிலிருந்து விடுபடுவதற்காக ஐஸ் கட்டிகளிலேயே படுத்துக் கொள்வார். கழுத்தில் ஐஸ் கட்டிகளை வைப்பார். ஐஸ் கட்டிகளிலேயே நீண்ட நேரம் படுத்ததால் உடம்பெல்லாம் மரத்துப் போய் பலமுறை அவரது உயிருக்கே ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. ஒருமுறை இருமுறை அல்ல; பல தடவைகள் இப்படி மரணத்தின் விளிம்பு வரை சென்று மீண்டிருக்கிறார் ஃபுல்லர்.

நடன நிகழ்ச்சிகளின் போது பயன்படுத்தப்படும் அதிக வெளிச்சமுள்ள மின்விளக்குகள் நேரடியாக அவர் முகத்தில் வீசியதால் அவரது கண் பார்வையிலும் பிரச்சினை ஏற்பட்டது. பார்வையே போய் விடும் என்று எச்சரித்தார் மருத்துவர். ஃபுல்லர் மருத்துவரின் பேச்சைக் கேட்கவில்லை. மேடையில் ஏறவில்லையானால் என் உயிர் பிரிந்து விடும் என்றார்.

தன் வாழ்நாளில் உலகப் புகழை எட்டியிருந்த லூயி ஃபுல்லரின் பெயர் இன்று வரலாற்றின் ஏடுகளில் மறைந்து விட்டது. எந்த நடனக் கலைஞருக்கும் அவர் பெயர் தெரியாது. அப்படி எல்லோருமே மறந்து விட்ட ஒரு கலைஞரின் வாழ்வை அற்புதமாகப் படமாக்கியிருக்கிறார் ஸ்தெஃபானி தி ஜியுஸ்தோ. ஃபுல்லராக நடித்திருக்கும் ஸோக்கோ ஃபுல்லராகவே வாழ்ந்திருக்கிறார் என்று சொல்லலாம். படத்தில் ஸோக்கோ ஆடும் நடனங்களை ஒருவர் வாழ்நாளில் மறக்க முடியாது.

https://telegram.me/aedahamlibrary

17

Amadeus (1984)

Miloš Forman

இங்கிலாந்தைச் சேர்ந்த பீட்டர் லெவின் ஷாஃபர் என்ற பிரபலமான நாடகாசிரியரின் நாடகத்தைத் தழுவி எடுக்கப்பட்ட படம் அமாதியூஸ். இது ஒரு பீரியட் படம்; அதே சமயம் பயோபிக்சர் எனப்படும் வாழ்க்கை வரலாற்றுப் படம். 1756-இல் ஆஸ்த்ரியாவின் சால்ஸ்பர்க் நகரில் பிறந்து 1791-இல் இறந்த வுல்ஃப்காங்க் அமாதியூஸ் மொஸார்ட்டின் வாழ்க்கையே இந்தப் படம்.

தான் வாழ்ந்த வெறும் 35 ஆண்டுகளில், இந்தப் பூமி வாழும் வரை அழியாத இசைக் காவியங்களை உருவாக்கிய மொஸார்ட்டின் வாழ்க்கையை நாம் அறிந்து வைத்துள்ள விஞ்ஞான தர்க்கங்களைக் கொண்டு புரிந்து கொள்ள முடியாது. காரணம், மேற்கத்திய சாஸ்த்ரீய சங்கீத இசைக் கோர்வைகளை உருவாக்கத் தொடங்கிய போது மொஸார்ட்டின் வயது ஐந்து. மொஸார்ட்டின் தந்தையும் இசைக் கலைஞர். அப்போது அவர் தன் புதல்வன் மொஸார்ட்டுடன் ஆஸ்த்ரியாவுக்கு வெளியே மற்ற ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்தார். ஐந்து வயது சிறுவனான மொஸார்ட்டின் இசை மேதமையைக் கண்டு அப்போதைய இசை ரசிகர்கள் அனைவருமே வியந்தனர்.

மொஸார்ட் தன்னுடைய முதல் சிம்ஃபனியை ஏழு வயது சிறுவனாக இருக்கும்போது உருவாக்கினார். தன் வாழ்நாளில் அவர் 600 இசைப் படைப்புகளை உருவாக்கினார். ஜென்மத் தொடர்ச்சி என்பதைத் தவிர இதற்கு வேறு காரணம் எதுவும் சொல்லத் தோன்றவில்லை. வள்ளலாரும் எந்தப் பள்ளிக்கும் போகாமல், எந்தப் புத்தகத்தையும் படிக்காமல் ஆறு வயதிலேயே கவி பாடும் திறம் பெற்றிருந்தார். மிகச்

https://telegram.me/aedahamlibrary

சிறிய வயதிலேயே ஆன்மீகப் பிரசங்கமும் செய்தார்.

எட்டு ஆஸ்கர் விருதுகளைப் பெற்ற அமாதியூஸ், 1823-இல் அந்தோனியோ சலியேரி என்பவன் “நான்தான் மொஸார்ட்டைக் கொன்றேன்” என்று சொல்லிக் கொண்டு தன் கழுத்தை அறுத்துத் தற்கொலை செய்துகொள்ள முயற்சிக்கும் காட்சியிலிருந்து துவங்குகிறது. அப்போது குறுக்கிடும் ஒரு இளம் பாதிரி சலியேரியிடம், “உன் துயரத்தை என்னிடம் சொல்” என்று கேட்க, சலியேரி தன் கதையைச் சொல்லத் துவங்குகிறான். அதுதான் மொஸார்ட்டின் கதையாக விரிகிறது.

மொஸார்ட்டின் சமகாலத்தவனான சலியேரி ஒரு மகத்தான இசைக் கலைஞனாக விரும்புகிறான். தீவிரமான கடவுள் பக்தி கொண்ட அவன் அதற்காக அனுதினமும் பிரார்த்திக்கிறான். தன் கனவு நனவாக வேண்டுமென திருமணமே செய்து கொள்ளாமல் பிரம்மச்சரியம் காக்கிறான். அவன் வேண்டியது போலவே அவனுடைய இசை அரசவையில் மரியாதை பெறுகிறது. வியன்னாவில் அரசவைக் கலைஞனாகிறான்.

அப்போது அவனை விட ஆறு வயது சிறியவனான மொஸார்ட் வியன்னாவுக்கு வருகிறான். மொஸார்ட்டைக் கேட்கும் சலியேரி அந்த இசைக்கு முன்னால் தன்னுடைய இசை வெறும் குப்பை என உணர்கிறான். ஆனால் அதை விட அதிர்ச்சி என்னவென்றால், கலை பற்றிய அவனுடைய அதுவரையிலான நம்பிக்கைகள் அனைத்தும் மொஸார்ட்டால் தவிடுபொடியாகின்றன. மொஸார்ட் ஒரு பெண் பித்தன், குடிகாரன். ஆனால் இசையிலோ கடவுள். இப்படி ஒரு கலைஞன் சாத்தியமா என்ற அளவுக்கு இருக்கின்றன மொஸார்ட்டின் ஆக்கங்கள். மொஸார்ட் எப்படிப்பட்ட மேதை என்பது சமூகத்துக்கோ அரசனுக்கோ தெரியவில்லை. அவர்களைப் பொறுத்தவரை சலியேரிதான் கலைஞன். ஆனால் சலியேரிக்கு மட்டும்தான் மொஸார்ட்டின் மேதமை புரிகிறது.

இந்தப் படம் அமெரிக்காவில் பெருமளவுக்குப் பிரசித்தமானதன் காரணம், அமெரிக்கர்களின் மேற்கத்திய சாஸ்த்ரீய சங்கீதத்தின் மீதான அபிமானம் அல்ல. அமெரிக்கர்கள் ஐரோப்பியர்களைப் போல் சாஸ்த்ரீய சங்கீதம் கேட்பதில்லை. ஆனால் அமாதியூஸ் படத்தில் மொஸார்ட் ஒரு கலகக்காரனாகச் சித்தரிக்கப்படுகிறார். எழுபதுகள், எண்பதுகளில் அமெரிக்காவில் உருவான ஹிப்பி இயக்கத்தோடு இந்தப் படத்தை நாம் பொருத்திப் பார்க்கலாம். கலை ரசனை அறவே இல்லாமல், வெறும் பணத்தையும் ஆடம்பரத்தையும் போற்றிய

https://telegram.me/aedahamlibrary

அதிகாரவர்க்கத்தைத் தங்களின் கலக வாழ்க்கையின் மூலம் எதிர்த்தார்கள் ஹிப்பிகள். அதைப் பதினெட்டாம் நூற்றாண்டில் செய்த கலைஞன் மொஸார்ட்.

சலியேரி தற்கொலைக்கு முயன்றார் என்று குறிப்பிட்டேன் அல்லவா? அப்போது அவரது பணியாளர்கள் அவரை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்கின்றனர். அப்போது இசைக் கப்படும் பின்னணி இசை மொஸார்ட் உருவாக்கிய, 25வது சிம்ஃபனி. இந்தப் படத்தைப் பார்ப்பவர்கள், அதற்குப்பின், அந்த இசை தங்கள் வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்து போவதை உணர்வர். சிகிச்சைக்குப்பின் மனநோய் விடுதியில் அடைக்கப்படுகிறார் சலியேரி. அங்கேதான் சலியேரியை சந்திக்கிறான் ஒரு இளம் பாதிரி. பாதிரியிடம், “என்னைத் தனியே விடு, தொந்தரவு செய்யாதே” என்கிறார் சலியேரி. அதற்குப் பாதிரி, “துன்பத்தில் இருக்கும் ஆத்மாவை எப்படி நான் தனியே விடுவது?” என்று சொல்லி அவரைப் பேசத் தூண்டுகிறான்.

“உனக்கு சங்கீதம் தெரியுமா?” என்கிறார் சலியேரி. “ஏதோ கொஞ்சம் பரிச்சயம் உண்டு” என்கிறான் பாதிரி. “அப்படியானால் இது என்ன சொல்?” என்று சொல்லி தன் பாடல் ஒன்றை பியானோவில் இசைக்கிறார்.

பாதிரி அதை முன்பின் கேட்டதில்லை. பின் இன்னொன்றை இசைக் கிறார் சலியேரி. பாதிரி அதையும் கேட்டதில்லை. “என் காலத்தில் நான் ஐரோப்பாவின் புகழ்பெற்ற இசைக்கலைஞனாக இருந்தேன். 40 ஆபராக்களை (இசை நாடகம்) உருவாக்கியிருக்கிறேன். ஒன்று கூட உனக்குத் தெரியாதா? சரி, இதைக் கேள்” என்று சொல்லி முதல் வரியை பியானோவில் இசைக்கத் துவங்கியதுமே மீதியைத் தானே பாட ஆரம்பிக்கிறான் பாதிரி. பின் சலியேரியிடம், “ஆஹா, இதை அடிக்கடி கேட்டிருக்கிறேனே. நீங்கள்தான் இதை உருவாக்கியது என்று தெரியாமல் போயிற்றே?” என்கிறான் பாதிரி. “இல்லை; இதை எழுதியது மொஸார்ட்” என்கிறார் சலியேரி, கண்களில் வெறுமையுடன்!

ஒரு சிறிய இரவின் இசை (Eine isine Nachimusik) எனும் அந்த இசைக் கோர்வையை உலகில் கேட்காதவர்களே இருக்க முடியாது. தமிழ்ப் படங்களில் கூட பின்னணி இசையாக பல இசையமைப்பாளர்களால் அது பயன்படுத்தப்பட்டுள்ளது. சலியேரியாக நடித்திருக்கும் முர்ரே ஆப்ரஹாம் சிறந்த நடிகருக்கான ஆஸ்கர் பரிசைப் பெற்றிருக்கிறார். நடிப்பைக் கலையாகப் பயிலும் மாணவர்கள் அனைவரும் இந்தப் படத்தில் முர்ரே ஆப்ரஹாமின் நடிப்பைப் பார்க்க வேண்டும். பாதிரியிடம் தன் ஆபராவின் ஆரம்பத்தை பியானோவில் இசைத்துக்

https://telegram.me/aedahamlibrary

காட்டி விட்டு, அதன் அடுத்தடுத்த பகுதிகளைத் தன் கற்பனையிலேயே கேட்கும் இடம் இந்தப் படத்தின் அற்புதமான தருணங்களில் ஒன்று.

“நான்தான் மொஸார்ட்டைக் கொன்றேன்; ஏனென்றால், மொஸார்ட் கடவுளின் இசைத் தூதனாக விளங்கினான். கடவுள் ஏன் என்னைத் தேர்ந்தெடுக்கவில்லை? நான் கடவுளைத்தானே என் இசையால் துதிக்க விரும்பினேன்? கடவுள் என்னைத் தேர்ந்தெடுக்காவிட்டால் எனக்கு ஏன் இந்த அளவுக்கு இசை ஆர்வத்தைக் கொடுத்தார்?” என்று சலியேரி சொன்னாலும், மொஸார்ட்டைக் கொன்றது வறுமையும் நோயும்தான்! அந்த வறுமைக்குக் காரணமாக இருந்தது சலியேரி. மொஸார்ட்டின் வாழ்நாள் முழுவதும் அவரோடு நெருங்கிப் பழகியபடியே, அவருக்கு எதிராகப் பல காரியங்களைச் செய்தார் சலியேரி. மொஸார்ட் தன் வறுமை பற்றிச் சிறிதளவும் கவலைப்படவில்லை. ஏனென்றால், இசையைத் தவிர வேறு எதைப் பற்றியுமே அவர் யோசித்ததில்லை. ஆனால், மொஸார்ட்டை வாழவிடாமல் செய்தாலும் சலியேரியைப் பொறுத்தவரை மொஸார்ட் ஓர் இசைக் கடவுள் என்பதை உணர்ந்திருந்தார் சலியேரி. சலியேரியின் இந்த உள்முரண்பாடுதான் அமாதியூஸின் மையச் சரடு என்று சொல்லலாம். கடைசிக் காட்சியில் மொஸார்ட் தன் மரணப் படுக்கையில் கிடக்கிறார். அப்போது சலியேரி மொஸார்ட்டிடம், “என் வாழ்நாளில் உங்களைப் போன்ற ஒரு இசை மேதையை நான் கண்டதில்லை” என்று கூறியதும், “நான் உங்களைப் பற்றித் தவறாக நினைத்துக் கொண்டிருந்து விட்டேன். என்னை மன்னியுங்கள்" என்கிறார் மொஸார்ட்.

எப்படிப்பட்ட மானுட மாண்பு அது! மொஸார்ட்டுக்கு எதிராகத் தொடர்ந்து சதி செய்கிறார் சலியேரி. இருந்தும் அப்படிப்பட்ட சலியேரியிடம் “உங்களைப் பற்றித் தவறாக நினைத்து விட்டேன், மன்னியுங்கள்” என்கிறார் மொஸார்ட். மொஸார்ட் மட்டுமல்ல; உலகிலுள்ள அத்தனை கலைஞர்களுமே அப்படித்தான் வாழ்ந்திருக்கி றார்கள். காதலிக்காகத் தன் காதை அறுத்துக் கொடுத்த ஓவியன் வான்கோ, குதிரையை அடிக்க வேண்டாம் என்று குதிரைக்காரனின் சவுக்குக்கு முன்னே நின்ற தத்துவவாதி நீட்ஷே, வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலார்... இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

மரணப் படுக்கையில் கிடக்கும் மொஸார்ட் தன்னுடைய கடைசி சிம்ஃபனியாகிய ரெக்வீம் மாஸை (மரணத்தின் பாடல்) சலியேரியிடம் படிப்படியாகச் சொல்கிறார். அவர் சொல்லச் சொல்ல சலியேரி எழுதுகிறார். அரை மணி நேரம் படமாக்கப்பட்டுள்ள அந்தக் காட்சி

https://telegram.me/aedahamlibrary

உலக சினிமாவின் மறக்க முடியாத தருணங்களில் ஒன்று. மொஸார்ட் அந்த சிம்ஃபனியை டிக்டேட் செய்யும் போது கடவுளே நேரில் வந்து உங்களோடு பேசுவது போல் இருக்கும். காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் விதமும் அப்படித்தான் இருக்கிறது. சலியேரியே அடிக்கடி மொஸார்ட் பற்றி “கடவுள் தனது மந்திரப் புல்லாங்குழலை மொஸார்ட்டாக அனுப்பினார்” என்று பாதிரியிடம் சொல்கிறார். அப்போது மொஸார்ட் பற்றி அனுதாபமாகப் பேசும் பாதிரியிடம், “நீ அனுதாபப்பட வேண்டியது என் மீதுதான். 1791-இல், மொஸார்ட் 35 வயதில் இறந்து போனான். அவன் இறந்த பிறகு நான் வாழ்ந்த இந்த 32 ஆண்டுகளும் எனக்கு நரகமாகவே இருந்தது. புகழின் உச்சத்தில் இருந்த என் பெயர் சில ஆண்டுகளுக்குப் பிறகு யாருக்குமே தெரியவில்லை. ஒருவன் தன் வாழ்நாளிலேயே தன் வீழ்ச்சியைப் பார்க்க நேர்வது எத்தனை கொடூரமான தண்டனை தெரியுமா? நான் ஒரு மூடன். மூடர்களின் கடவுள் நான். சராசரிகளின் பிரதிநிதி நான்” என்கிறார் சலியேரி.

படத்தின் பெயர் அமாதியூஸ் என்று இருந்தாலும் சலியேரியின் பொறாமையையும் அந்தப் பொறாமையே அவர் வாழ்நாள் முழுமைக்குமான தண்டனையாக அமைந்ததையுமே விவரிக்கிறது படம். கலையை ஒழுக்கம் என்ற சட்டத்துக்குள் வைத்துப் பார்த்ததுதான் சலியேரியின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. ‘கடவுளிடம் கொடுத்த சத்தியத்துக்காக நான் வாழ்நாள் முழுவதும் பிரம்மச்சாரியாக இருக்கிறேன். ஆனால் கடவுளோ குடிகாரனும் ஸ்த்ரீலோலனுமான மொஸார்ட்டுக்குத் தன் மகத்தான இசைத் திறமையைக் கொடுத்துப் பெரும் பிழை செய்து விட்டார். கடவுளின் அந்தப் பிழையை நான் மொஸார்ட்டின் மரணத்தின் மூலம் சரி செய்கிறேன்.’ இதுதான் படம் முழுவதும் சலியேரியின் மன ஓட்டம்.

மொஸார்ட்டின் மரணத்தை ஒருவிதத்தில் விதியின் விளையாட்டு என்றும் கூறலாம். மரண கீதம் என்ற சிம்ஃபனியை எழுதிக் கொண்டிருக்கும் போதே தனக்கு மரணம் நெருங்கி விட்டது என்பதை உணர்கிறார் மொஸார்ட். தன்னுடைய முற்றுப் பெறாத மரண கீதம் சிம்ஃபனியின் காகிதங்களைக் கையில் வைத்தபடி கண் கலங்குகிறார். என்னுடைய மரண கீதத்தை நானே எழுதும்படி ஆகி விட்டதா?

மொஸார்ட்டின் காவியத் துயரம் அவரது மரணத்தோடு முடியவில்லை. அவருடைய உடல் வியன்னா நகரின் ஏழைகளின் மயானத்தில் புதைக்கப்பட்டது. ஒரு பெரிய குழியைத் தோண்டி அதில் எல்லா பிணங்களையும் தூக்கி எறிந்து விடுவார்கள். அவ்வளவுதான். மொஸார்ட் இறந்த தினம் வியன்னாவில் கடும் மழையும் புயலுமாக

https://telegram.me/aedahamlibrary

இருந்ததால் அவருடைய நெருங்கிய நண்பர்களால் கூட இடுகாட்டுக்கு வர முடியாமல் போனது.

இன்றைய வியன்னாவில் உள்ள செயிண்ட் மார்க்ஸ் சிமெட்ரியில் மொஸார்ட்டின் நினைவிடம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந் தாலும் 1791-ஆம் ஆண்டு டிசம்பர் ஏழாம் தேதி அந்த இடம் வெறும் ஒரு குழியாகத்தான் இருந்தது. அதில்தான் மொஸார்ட்டின் பிணம் தூக்கியெறியப்பட்டது.

மொஸார்ட் என்ற இசைக் கடவுளின் மரணம் அப்படித்தான் நிகழ்ந்தது. எளிதில் மறக்க முடியாத திரைக்காவியம் அமாதியூஸ்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

18

Three Seasons (1999)

Tony Bui

நாம் கொண்டு செல்லும் பாத்திரத்துக்கு ஏற்ற அளவுதான் கொண்டு வர முடியும் - நீரோ உணவோ ஞானமோ. ஞானத்தேடலில் ஈடுபடும் பலருக்கும் ஞானம் கிடைப்பதில்லை. ஏன்? ஏற்கனவே தங்களுடைய அரைகுறை அறிவின் மூலம் அறிந்தவற்றைப் பாத்தி ரத்தில் போட்டுக் கொண்டு தேடச் செல்கிறார்கள். ஏற்கனவே குப்பைகளால் நிரம்பியிருக்கும் பாத்திரத்தில் ஞானம் எப்படிச் சேரும்? த்ரீ சீசன்ஸ் எந்தவித முன்முடிவுகளும் அற்று வாழ்வை அணுகுகிறது. அதன் காரணமாகவே மகத்தான உண்மைகளைக் கண்டடைகிறது.

கவிஞர் தாவோவுக்குத் தொழுநோயின் காரணமாக முகமும் கைகால் விரல்களும் பாதிக்கப்படுகின்றன. இவற்றோடு முதுமையும் சேர்ந்து கொள்ள சமூக வாழ்விலிருந்து தன்னை முற்றாக விலக்கிக் கொள்ளும் அவர் ஒரு பழமையான கோவிலில் வாழ்கிறார். கோவிலைச் சுற்றிலும் தாமரைக் குளம். குளத்தில் மலரும் தாமரையைப் பறித்து ஊரில் கொண்டு போய் விற்று வரும் வேலையைச் செய்யும் பெண்களில் ஒருத்தியாக வந்து சேர்கிறாள் ஆன். தாமரையைப் பறிக்கும் போது பெண்கள் பாடுகிறார்கள். ஆன் தனக்குத் தெரிந்த ஒரு பாடலைப் பாட, அந்தப் பாடல் மூலம் கவிஞரோடு நெருக்கமாகிறாள். தன் இறுதிக் காலத்தில் விரல்களும் அற்ற நிலையில் கவிதைகளை எழுத ஆள் இல்லாமல் இருந்த கவிஞர் மீண்டும் தன்னிடம் எஞ்சியிருக்கும் கவிதைகளை ஆனிடம் சொல்கிறார். வெறும் பூக்காரியாக இருந்த ஆனின் வாழ்க்கை இப்படியாக ஒரு முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

ஹாய் ஒரு ரிக்ஷாக்காரன். அவன் லான் என்ற பாலியல்

https://telegram.me/aedahamlibrary

தொழிலாளியைச் சந்திக்கிறான். லான் பணக்கார ஓட்டல்களில் மட்டுமே தொழிலுக்குச் சென்று வருபவள். என்றாலும் அவள் ஒரு சேரியில்தான் வசிக்கிறாள். இரவுகளில் ரிக்ஷாவில் அவளை அவள் வீட்டுக்கு அழைத்து வரும் போது ஒருநாள் ரிக்ஷாக்காரன் ஹாயிடம் சொல்கிறாள், “இந்த ஓட்டல்களில் என்றாவது ஒருநாள் எனக்குத் தங்க வேண்டும் என்று ஆசை” என. ஒருமுறை சைக்கிள் ரிக்ஷா பந்தயத்தில் வெற்றி பெறும் ஹாய் அந்தப் பணத்தைக் கொண்டு ஒரு ஓட்டலில் அவளோடு தங்குகிறான். அன்று இரவு அவளை ஒரு குழந்தையைப் போல் சீராட்டுகிறான். அனைவராலும் சதைப் பிண்டமாகவே பார்க்கப்பட்ட அவள், அன்பு என்றால் என்ன என்பதை அன்று இரவு உணர்கிறாள்.

அடுத்த கதை ஜேம்ஸ் என்ற அமெரிக்கனையும் வூடி என்ற ஆறு வயதுச் சிறுவனையும் பற்றியது. வூடியின் கழுத்தில் ஒரு பெட்டி. அதில் லைட்டர், சூயிங்கம், சிகரெட் பாக்கெட்டுகள். தெருக்களில் சிகரெட் விற்றுப் பிழைக்கும் அனாதைச் சிறுவன் வூடி. வியட்நாம் போரின் போது சைகோனில் சண்டையிட்ட அமெரிக்கப் படை வீரர்களில் ஒருவன் ஜேம்ஸ். 30 ஆண்டுகளுக்கு முன்பு தான் காதலித்த ஒரு வியட்நாமியப் பெண்ணுக்கும் தனக்கும் பிறந்த மகளைத் தேடி வந்திருக்கிறான். ஒரு மதுபானக் கூடத்தில் ஜேம்ஸிடம் வந்து சிகரெட் வேண்டுமா என்று கேட்கிறான் வூடி. வூடிக்கும் சிறிது மதுவை ஊற்றிக் கொடுக்கிறான் ஜேம்ஸ். வூடி எழுந்து பார்க்கும் போது ஜேம்ஸும் இல்லை; பெட்டியும் இல்லை. அந்த அமெரிக்கன்தான் தன்னுடைய பெட்டியைத் திருடிக் கொண்டு போய் விட்டான் என்று நினைக்கிறான் வூடி.

படத்தின் மற்றொரு முக்கியமான அம்சம், சைகோன் நகரமும் அதன் மக்களும். படம் முழுவதும் ஏழை எளிய மக்களின் வாழ்க்கை சலனச் சித்திரக் காட்சிகளாக வந்து கொண்டேயிருக்கிறது. தெருநாய்கள் ஒட்டிய வயிறுடன் குறுக்கும் நெடுக்குமாக அலைந்து கொண்டிருக்கின்றன. மூன்று வயதுச் சிறுமி ஒருத்தி தெருவில் கிடக்கும் ரொட்டித் துண்டுகளை எடுத்துத் தின்கிறாள். ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டுகளைப் போட்டு மூடிய தகரக் குடிசைகள். அருவருப்பான தெருக்கள். குடிசைகளின் அருகில் மின்சார ரயில்கள். ஏழ்மையும் துயரமும் கண்ணீரை வரவழைப்பது அல்ல; மாறாக எப்படி அது ஒரு கலை அனுபவமாக மாற முடியும் என்பதற்கு த்ரீ சீசன்ஸ் ஒரு உதாரணம்.

தன் ரிக்ஷாவில் லானை அவள் வீட்டுக்கு அழைத்துச் செல்லும் போது

https://telegram.me/aedahamlibrary

ஒருநாள் அவளுடைய மனம் புண்படாத வகையில் “பணம் ஈட்ட வேறு வழிகளும் உள்ளன” என்கிறான் ஹாய். அதற்கு லான் சொல்கிறாள்: “என்ன ஆனாலும் என் அம்மா மாதிரி ஆக மாட்டேன். உழைத்து உழைத்து ஓடாய்த் தேய்ந்து இறந்து போனாள். அந்த நட்சத்திர ஓட்டல்களின் உள்ளே போய் பார்த்திருக்கிறாயா நீ? அவர்கள் நம்மைப் போல் இல்லை. வேறு மாதிரி இருக்கிறார்கள்; வேறு மாதிரி பேசுகிறார்கள். சூரியன் அவர்களுக்காகத்தான் உதிக்கிறது. நமக்காக அல்ல. நாம் அவர்களின் நிழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நட்சத்திர விடுதிகள் பெருகப் பெருக நிழல்களும் நீண்டு கொண்டிருக்கின்றன. ஒருநாள் நான் அவர்களின் உலகில் அவர்களில் ஒருத்தியாக வாழப் போகிறேன்.”

“உன் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அது அல்ல வழி.”

“பிறகு? உன்னைப் போல் ஒரு ரிக்ஷாக்காரனை மணந்து கொள்ளச் சொல்கிறாயா?”

அதற்கு மேல் உரையாடல் தொடர்வதில்லை. ஆனால் லான் ஆசைப்பட்டது போல் மேட்டுக்குடி வாழ்வை எட்ட முடியவில்லை. அப்போது ஒருநாள் அவளுக்கு ஜுரம் வந்து அவளை கவனிக்க யாருமில்லாமல் தனியே கிடக்கும் போது அவளைப் பராமரித்துக் காப்பாற்றுகிறான் ஹாய். இரண்டாவது முறையாக அன்பின் தரிசனம் அவளுக்குக் கிடைக்கிறது. கடைசியில் ஹாயை மணந்து கொள்கிறாள் லான்.

ஏழ்மை பற்றி எத்தனையோ படங்கள் வந்துள்ளன. ஆனால் அவற்றுக்கும் இந்தப் படத்துக்கும் உள்ள வித்தியாசம், இதன் இயக்குனரே சொல்வது போல், இது வாழ்க்கையின் அற்புதங்களைப் பேசுகிறது. இயக்குனர் டோனி புயி சொல்கிறார்: “மூன்றாம் உலக நாடுகளின் சினிமா வறுமையையும் துயரத்தையும் பற்றி மட்டுமே பேசுகின்றன. நான் வாழ்வின் இருண்ட பக்கங்களையும் மீறி அதனூடே தெரியும் நம்பிக்கையின் ஒளிக்கீற்றுகளைப் பற்றிப் பேசுகிறேன்.”

எப்படி என்று பார்ப்போம். படம் முழுவதுமே குழந்தைத் தொழிலாளர்களும் பிச்சை எடுக்கும் சிறுமிகளும் தெருநாய்களுமே நிறைந்திருக்கின்றன. படம் முழுவதுமே வெயிலின் கொடுமை பற்றி மக்கள் புலம்பிக் கொண்டேயிருக்கிறார்கள். ஆனால் இந்தத் துயரங்களுக்கு இடையிலேயும் அற்புதங்களின் மகரந்தச் சேர்க்கை நடந்து கொண்டேதான் இருக்கிறது. உதாரணமாக, வூடியின் வாழ்க்கை. வயிற்றுப் பிழைப்புக்கு ஆதாரமான அவனுடைய பெட்டி காணாமல்

https://telegram.me/aedahamlibrary

போய் விடுகிறது. ஒரு சினிமா தியேட்டருக்குள் நுழைகிறான். திரையில் வரும் சண்டைக் காட்சியில் ஒன்றிப் போய் இவனே எழுந்து அந்தத் திரைச் சண்டையில் கலந்து கொள்ள திரை கிழிந்து விடுகிறது. அடிக்க வரும் பார்வையாளர்களிடமிருந்து தப்பி ஓடி வருகிறான். அப்போது அவன் மீது வேறு ஒரு சிறுவன் வந்து விழுகிறான். “இன்னொரு தடவை என் கடைக்கு வந்தாயானால் உதை கொடுப்பேன்” என்கிறான் அந்தச் சிறுவனை அடித்து விரட்டிய ரெஸ்டாரண்ட் முதலாளி. அந்தச் சிறுவன் காலி பியர் கேன் பொறுக்கி விற்பவன். ரெஸ்டாரண்டிலும் போய் தொல்லை தந்ததால் விரட்டப்படுகிறான். ரோட்டில் விழுந்ததும் அவனுடைய சாக்குமூட்டை பிரிந்து பியர் கேன்கள் தரையில் சிதறுகின்றன. அதையெல்லாம் பொறுமையாகப் பொறுக்கி எடுத்து சிறுவனிடம் கொடுத்து விட்டு நடக்கிறான் வூடி. மழை நீரில் காகிதக் கப்பல் விடுகிறான். கடைசிக் காட்சியில் வூடியும் மற்ற சிறுவர்களும் கொட்டும் மழையில் சாலையில் கால்பந்து விளையாடுகிறார்கள். மிகவும் கொண்டாட்டமான காட்சி அது.

அதே போன்ற மற்றொரு அற்புதம், தொழுநோயாளியான கவிஞர் தாவோ மற்றும் பூக்காரி ஆனின் வாழ்க்கை. தன் மரணம் நெருங்கி விட்டதை உணரும் தாவோ ஆனிடமிருந்தும் தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்கிறார். அப்போது ஆன் அவரிடம், “இவ்வளவு காலம் தனியே இருந்து விட்டு இப்போது நான் உங்கள் கவிதைகளை எழுதித் தர வந்த பிறகு சாகப் போகிறீர்களே; உங்கள் எழுத்தின் மீது நீங்கள் வைத்திருக்கும் மதிப்பு இவ்வளவுதானா?” என்று கேட்கிறாள். அப்போது அவர், “பெண்ணே, என்னிடமிருந்த எல்லா கவிதைகளையும் உன்னிடம் கொடுத்து விட்டேன். இனிமேல் எதுவும் இல்லை. அந்தக் கவிதைகளின் காரணமாகத்தான் மரணத்திடமிருந்து இவ்வளவு காலம் ஒளிந்து வாழ்ந்தேன். இப்போது காலம் வந்து விட்டது. என் கடைசி விருந்தாளியை நான் கௌரவப்படுத்தி விட வேண்டியதுதான்” என்கிறார்.

த்ரீ சீஸன்ஸ் ஒரு மகத்தான கலை அனுபவம்; ஆன்மீக அனுபவமும் கூட.

https://telegram.me/aedahamlibrary

19

Perfume: The Story of a Murderer (2006)

Tom Tykwer

இசைக்கு சப்த ஸ்வரங்கள் என்று சொல்வது போல, எல்லா வாசனைத் திரவியத்துக்கும் அடிப்படை 12 மணங்கள். இவற்றின் விதவிதமான கலவைகள்தான் பலவித வாசனைத் திரவியங்கள். ஆனால் பதின்மூன்றாவது மணம் ஒன்று இருக்கிறது. அதை இந்தப் பனிரண்டோடு கலந்தால் அந்த மணத்தை யார் வைத்திருக்கிறாரோ அவருக்கு இந்த உலகம் அடிமை. அப்படி ஒரு அற்புத வாசனையை உருவாக்குவதுதான் கிரனோயியின் குறிக்கோள். ஒருநாள் ஒரு மீன் சந்தையில் நடந்து போய்க் கொண்டிருக்கும் போது ஒரு பெண்ணிடம் அந்தப் பதின்மூன்றாவது மணம் வீசுவதை உணர்ந்து அவளைத் தொடுவான். அவள் பயந்து போய்த் திமிறும் போது அவள் கத்தி விடக் கூடாது என்று அவள் வாயைப் பிடிப்பான். மூச்சு விட முடியாமல் அவள் இறந்து விடுகிறாள். உடனே அவளுடைய ஆடைகளைக் கழற்றி அவள் உடலின் மணத்தைத் தன் உடம்புக்குக் கொண்டு வருகிறான் கிரனோயி. ஆனாலும் அது பிரேதம்தானே? அந்த மணம் சிறிது நேரத்தில் காணாமல் போய் விடுகிறது. ஆனாலும் அந்த மணம் அவன் மனதில் தங்கி விடுகிறது.

பிறகு வேறொரு ஊருக்குப் போகிறான் கிரனோயி. அங்கே ஒரு பிரபுவின் மகள் உடம்பில் அந்த மணம் இருப்பது தெரிகிறது. அவள்

https://telegram.me/aedahamlibrary

பெயர் லாரா. அவள் ஒரு கோட்டையில் இருப்பதால் அவனால் அவளை அணுக முடிவதில்லை. ஆனாலும் அந்த மணம் உள்ள மற்ற பெண்களைக் கொன்று, அவர்கள் உடம்பிலிருக்கும் மணத்தைத் திரவமாக மாற்றி எடுத்துக் கொள்கிறான். ஒரே ஊரில் ஒரு டஜன் பெண்கள், அதுவும் கன்னிப் பெண்கள் கொலை செய்யப்பட்டதால் ஊரே திமிலோகப்படுகிறது. கொலையாளியைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

லாராவின் தந்தைக்குக் கொலையாளி பற்றிய ஒரு விஷயம் புரிபடுகிறது. கொலை செய்யப்பட்ட பெண்களிடம் ஒரு பொதுத்தன்மை இருக்கிறது. அதைத் தேடித்தான் கொலையாளி அவர்களைக் கொல்கிறான். ஒருநாள் அவர் கனவில் லாராவை அவன் கொலை செய்வது போல் தெரிய, ஓடி வந்து பார்க்கிறார். நிஜமாகவே அவன் லாராவைக் கொலை செய்யத்தான் இருந்தான். காலடி சத்தம் கேட்டு ஓடி விடுகிறான். இனியும் லாரா இந்த ஊரில் இருந்தால் ஆபத்து என்று அறிந்து அவளை ஒரு பல்லக்கில் வைத்து ஒரு பக்கம் அனுப்பி விட்டு, மற்றொரு பக்கம் வெறும் பல்லக்கை ஆடம்பரமாக அனுப்பி வைக்கிறார் அவள் தந்தை. அந்த வெறும் பல்லக்கில்தான் லாரா இருக்கிறாள் என்று பணியாட்களிடம் சொல்லியிருக்கிறார். ஆனால் மணத்தை வைத்து லாராவைக் கண்டு பிடித்துக் கொன்று விடுகிறான் கிரனோயி. அதோடு அவனுடைய தேவை முடிந்து விடுகிறது. அந்தப் பதின்மூன்றாவது வாசனைப் பொருளை உருவாக்கி விடுகிறான். அதே சமயம் கிரனோயி பிடி பட்டு விடுகிறான். கை கால்களில் விலங்கு மாட்டி தூக்குத் தண்டனைக்காகக் கொண்டு வருகிறார்கள். ஊரே அவனுக்கு எதிராகத் திரண்டு நிற்கிறது. கொல்லுங்கள் கொல்லுங்கள் என்ற கூக்குரல் வானைப் பிளக்கிறது. இதுதான் பெர்ஃப்யூம் படத்தின் முதல் காட்சி.

அதே காட்சிதான் கடைசியிலும் வருகிறது. அப்போது கிரனோயி தன் ஆடைக்குள் ஒளித்து வைத்திருக்கும் வாசனைத் திரவத்தை ஒரு கைக்குட்டையில் தெளித்து காற்றில் பறக்க விடுகிறான். ஒட்டு மொத்த மக்கள் கூட்டமே அந்த மணத்தில் வசியமாகிக் கிறங்குகிறது. எல்லோரும் அவனை ஒரு தேவதூதனைப் போல் பார்க்கிறார்கள். மயக்கம் அதிகமாக ஆக அத்தனை பேரும் தங்கள் ஆடைகளைக் களைந்து விட்டுக் கலவியில் ஈடுபடத் துவங்குகிறார்கள். ஆனால் அந்தக் காட்சியில் துளிக்கூட ஆபாசம் தெரியவில்லை. உலக சினிமாவிலேயே இப்படி ஒரு காட்சியைக் காண்பது அரிது என்றுதான் நினைக்கிறேன். மீண்டும் படத்தின் ஆரம்பத்தில் பார்த்த மீன் சந்தை. அங்கே வரும் கிரனோயி அந்த வாசனைத் திரவத்தைத் தன் உடல் மீது ஊற்றிக்

https://telegram.me/aedahamlibrary

கொள்கிறான். மக்கள் கூட்டம் பித்தம் முற்றியது போல் அவனைப் பிய்த்துத் தின்ன ஆரம்பிக்கிறார்கள். காலையில் அவன் உருவமே அங்கே இல்லாமல் போகிறது. குப்பியிலிருந்து ஒரே ஒரு சொட்டு கல்தரையில் விழுகிறது.

மேஜிகல் ரியலிசத்தின் உச்சபட்ச கலைச் சாதனை பெர்ஃப்யூம்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

20

Andrei Rublev (1966)

Andrei Tarkovsky

ரஷ்ய இயக்குனர் ஆந்த்ரே டர்க்காவ்ஸ்கியை (1932-1986) சினிமா உலகின் கடவுள் என்று சொல்லலாம். இவர் இயக்குனராக இருந்த 27 ஆண்டுகளில் இவான்ஸ் சைல்ட்ஹுட், ஆந்த்ரே ருப்லேவ், சோலாரிஸ், மிரர், ஸ்டாக்கர், நாஸ்டால்ஜியா, சேக்ரிஃபைஸ் என்ற ஏழு படங்களை மட்டுமே எடுத்தார். அதற்கு சோவியத் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தின் கெடுபிடிகளே காரணம் என்றாலும், அப்படங்களில் அவர் எந்த சமரசமும் செய்து கொள்ளவில்லை. டர்க்காவ்ஸ்கியின் ஏழு படங்களுமே நம்முடைய உலக சினிமா பட்டியலில் இடம் பெறக் கூடியவை.

டர்க்காவ்ஸ்கியின் படங்கள் தனித்துவமிக்க ஒரு சினிமா மொழியைக் கொண்டிருக்கின்றன. அவற்றைப் பார்க்கும் போது கவிதை என்ற எழுத்து வடிவமே சினிமாவாக மாறி விட்டது போல் தோன்று கிறது. காடு, மழை, மரம், பிரம்மாண்டமான நீர்ப்பரப்பு போன்ற இயற்கைக் காட்சிகள் பார்வையாளர்களின் மனதில் ஒருவித கனவு நிலையைத் தோற்றுவிக்கின்றன. கண்ணுக்குக் குளிர்ச்சியான இயற்கைக் காட்சிகளாக மட்டுமே அவை காண்பிக்கப்படுவதில்லை. அக்காட்சிகளை அவர் தத்துவார்த்தமாகப் பயன்படுத்துகிறார். இந்தியத் தத்துவ மரபில் குறிக்கப்படும் பஞ்ச பூதங்களில் நிலம், நீர், காற்று, நெருப்பு ஆகிய நான்கும் அவர் படங்களில் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கின்றன. மிரர் படத்தில் வீட்டுக்குள்ளேயே மழை பெய்கிறது; சோலாரிஸின் கடைசிக் காட்சியிலும் வீட்டுக்குள்ளேயே மழை; ஆந்த்ரே ருப்லேவ் படம் முழுவதும் மழை. டர்க்காவ்ஸ்கியின்

https://telegram.me/aedahamlibrary

படங்களைப் பார்த்து முடித்த பிறகும் கூட நம்மைச் சுற்றி மழை பொழிந்து கொண்டிருப்பது போன்ற பிரமையிலிருந்து நம்மால் மீள முடிவதில்லை. இது பற்றி டர்க்காவ்ஸ்கி சொல்கிறார்: “என் படங்களில் எப்போதும் நீர் நிறைந்திருக்கும். குறிப்பாக நீரோடைகள். கடல் பிரம்மாண்டமானது. எனக்குச் சிறிய விஷயங்களே பிடிக்கும். அந்த வகையில் இயற்கை குறித்த ஜப்பானியர்களின் பார்வையே என்னுடையதும் ஆகும். ஒரு சிறிய புள்ளியில் அவர்கள் எல்லையற்ற தன்மையை தியானிக்கிறார்கள். நீர் புதிரானது. நீரை விட அழகானது எதுவும் இல்லை.”

நீரைப் போல் இயற்கையின் மற்றொரு அங்கம், அக்னி. மிரர் படத்தில் வீடு பற்றியெரியும் காட்சி ஒரு உதாரணம். நாஸ்டால்ஜியா வில் ஒருவர் மெழுகுவர்த்தியை அது எரிந்து முடிக்கும் வரை பிடித்துக் கொண்டேயிருப்பார். ஒன்பது நிமிடம் ஓடும் காட்சி அது. அதன் பின்னணி இசையோடு சேர்த்துப் பார்த்தால் அந்தக் காட்சியில் அக்னியே கடவுளாக அனுபவம் கொடுப்பது போல் இருக்கும். உலக சினிமாவில் மறக்கவே முடியாத ஆகப் பிரமாதமான காட்சிகளில் ஒன்று அது. இதற்கு டர்க்காவ்ஸ்கி சொல்லும் விளக்கம்: “பொருள்களின் ஆதார சக்தி அக்னி.”

ஒரு பெரும் வனத்தில் நாம் தனியாக அமர்ந்திருப்பது போன்ற தியான நிலையையே அவரது காட்சிகள் உருவாக்குகின்றன. அதனால் காட்சிகள் சடசடவென மாறுவதில்லை; நீண்ட நேரத்தை எடுத்துக் கொள்கின்றன. ஒருவித வசியத்துக்கு ஆட்பட்டது போல காட்சிகள் திரையில் மிக மெதுவாக சலனம் கொள்கின்றன. அதனாலேயே க்ளோஸப் ஷாட்டுகளைத் தவிர்த்து விட்டு லாங் ஷாட்டுகளையே அதிகம் பயன்படுத்துகிறார் டர்க்காவ்ஸ்கி. இதை இன்னும் விளக்கமாகப் புரிந்து கொள்ள நாம் அவர் எழுதிய ஷிநீuறீஜீtவீஸீரீ வீஸீ ஜிவீனீமீ என்ற நூலைப் படிக்கலாம். சினிமாவை ஓர் கலையாகப் பயிலும் மாணவர்கள் அவசியம் படிக்க வேண்டிய நூல் அது. அதில் அவர் சொல்கிறார்: “காலத்தைக் கையாள்வதுதான் சினிமா கலைஞனின் முக்கியமான வேலை.” அதாவது, சினிமாவில் அடுத்து என்ன நிகழப் போகிறது என்பது முக்கியமல்ல; இப்போது - இந்தக் கணத்தில் - என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதே முக்கியம். இந்தக் காரணங்களால்தான் டர்க்காவ்ஸ்கியின் படங்கள் நமக்கு ஒருவித ஆன்மீக அனுபவத்தைத் தருவதாக இருக்கின்றன.

டர்க்காவ்ஸ்கியின் நீண்ட ஷாட்டுகளில் ஒரே ஒரு ஷாட்டைத் தீர்மானிப்பதற்காக இரண்டு தினங்கள் கூட அவர் செலவிடுவது

https://telegram.me/aedahamlibrary

வழக்கம். 90 நொடியிலிருந்து மூன்று நிமிடங்கள் வரை செல்லும் இந்த ஷாட்டுகள் -முதலில் பாத்திரத்தின் முகத்திலிருந்து துவங்கி, பின்னர் பின்னோக்கிச் சென்று -அந்த இடத்தின் முழுப் பரிமாணத்தையும் காண்பித்து, கடைசியில் மீண்டும் அந்தப் பாத்திரத்துக்கே வந்து சேர்கிறது. டர்க்காவ்ஸ்கியின் படங்களைத் திரைப்பட மாணவர்கள் திரும்பத் திரும்பப் பார்த்து ஆய்வு செய்வதன் மூலம் திரைப்படக் கலையை மிகச் சிறப்பாகப் பயின்று விட முடியும். ஏன் இது போன்ற ஷாட்டுகள் என்றால், நாம் எந்த விஷயத்தையும் வணிக நோக்கத்துடனேயே அணுகுகின்றோம்; மேலோட்டமாகவே புரிந்து கொள்கிறோம்; விஷயங்களின் ஆழத்துக்குச் செல்வதில்லை; அவற்றின் சாரத்தை எடுத்துக் கொள்வதில்லை. இந்தப் போக்கை டர்க்காவ்ஸ்கி தன் சினிமாவில் மாற்ற முயற்சிக்கிறார்.

ஆந்த்ரே ருப்லேவின் முக்கியமான கதைக் கருக்களில் ஒன்று, கருத்துச் சுதந்திரம். எட்டு பகுதிகளைக் கொண்ட ஆந்த்ரே ருப்லேவ் ரஷ்யாவில் வெளியாக அனுமதிக்கப்பட வில்லை. ஆந்த்ரே ருப்லேவ் 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு ரஷ்ய ஓவியர். ஆந்த்ரே, தானில், கிரில் ஆகிய மூவரும் துறவிகள். இவர்கள் தாங்கள் வசித்து வந்த ஊரை விட்டு மாஸ்கோவை நோக்கிப் புறப்படுகிறார்கள். வழியில் மழைக்காக ஒரு இடத்தில் ஒதுங்குகிறார்கள். அது ஒரு மதுபான விடுதி. அங்கே ஒரு கோமாளி நிரம்பக் குடித்து விட்டு அரசையும் தேவாலயத்தையும் கிண்டல் செய்து பாடுகிறான். இதை கிரில் ராணுவத்தினரிடம் சென்று சொல்லி விடுகிறான். அவர்கள் வந்து அவனைக் கைது செய்து அழைத்துச் செல்கிறார்கள். போகும் போது அவனுடைய இசைக் கருவியையும் அடித்து உடைக்கிறார்கள். (பின்னர் அந்தக் கோமாளி கடும் சித்ரவதைகளுக்கு உள்ளாகி பத்தாண்டுகள் சிறைத் தண்டனை பெறுகிறான் என்று அறிந்து கொள்கிறோம்.) கோமாளிப் பாடகனை சிப்பாய்களிடம் காட்டிக் கொடுக்கும் கிரில்தான் மற்றொரு காட்சியில் தான் வளர்த்த நாயை குரூரமாகத் தன் கைத்தடியால் அடித்துக் கொல்கிறான். காரணம், ருப்லேவின் ஓவியத் திறமை மட்டும் மாஸ்கோவில் அங்கீகரிக்கப்பட்டது என்ற பொறாமை.

பதினைந்தாம் நூற்றாண்டில் கருத்துச் சுதந்திரத்துக்கு என்ன மரியாதை இருந்ததோ அதேதான் சோவியத் கம்யூனிஸ்ட் அரசிலும் இருந்தது என்பது டர்க்காவ்ஸ்கியின் செய்தி. படத்தின் அடியோட்டமாக இருந்த ஆன்மீகத்தினால் எரிச்சலுற்ற கம்யூனிஸ்ட் அரசு ஆந்த்ரே ருப்லேவுக்கு சகல விதமான நெருக்கடிகளையும் கொடுத்தது. பொதுவாக சோவியத் யூனியனில் படம் எடுப்பதற்கு முன்னால் படத்தின் எழுத்து வடிவத்தை

https://telegram.me/aedahamlibrary

அரசிடம் கொடுத்து அனுமதி பெற்ற பிறகே எடுக்க வேண்டும். ஆந்த்ரே ருப்லேவ் அப்படி எடுக்கப்பட்டும் மூன்றரை மணி நேரப் படத்தில் இரண்டு மணி நேரப் படத்தை வெட்டிப் போட்டது கம்யூனிஸ்ட் அரசு. 1966-இல் எடுக்கப்பட்ட இந்தப் படம் 1973 வரை பிரிட்டனுக்கு வர முடியவில்லை. ரஷ்யாவின் காட்டுமிராண்டித்தனமான பழைய வரலாற்றைக் கடும் விமர்சனப் பார்வையுடன் காண்பித்ததால் கம்யூனிஸ்டுகளின் எதிரியான அலெக்ஸாண்டர் சோல்ஷெனிட்ஸன் போன்ற ரஷ்ய தேசியவாதிகளுக்கும் படம் பிடிக்கவில்லை.

ரஷ்யாவின் பழைய வரலாறு எப்படி இருந்தது என்பதற்கு ஒரு உதாரணம்: ஒரு இளவரசன் ஒரு வீட்டைக் கட்டுகிறான். வீட்டுச் சுவர்களின் வண்ணம் அவனுக்குப் பிடிக்கவில்லை. திரும்பக் கட்டச் சொல்கிறான். ஆனால் தொழிலாளர்கள் ஏற்கனவே ஒப்புக் கொண்ட வேலைக்குச் செல்ல வேண்டும். அது இளவரசனின் சகோதரனின் வேலை. அதனால் கோபமடைந்த இளவரசன் தன் சிப்பாய்களைக் கொண்டு தொழிலாளர்களின் கண்களைப் பிடுங்கி விடுகிறான்.

ஆந்த்ரே ருப்லேவ் பற்றி எழுத வேண்டுமானால் அதற்குத் தனியாக ஒரு புத்தகமே தேவை. ஹாலிவுட்டின் மெகா பட்ஜெட் படங்கள் மற்றும் ஜப்பானிய சாமுராய் படங்களுக்கெல்லாம் முன்னாலேயே வெளிவந்த ஆந்த்ரே ருப்லேவ் மூன்றே முக்கால் மணி நேரம் ஓடுகிறது. படத்தில் மொத்தம் எட்டுப் பகுதிகள் இருக்கின்றன. அவை ருப்லேவின் (1360-1430) வாழ்வில் 23 ஆண்டுகளை விவரிக்கின்றன. கலை ஒன்றே மனித வாழ்வை மேம்படுத்தக் கூடியது என்பதே டர்க்காவ்ஸ்கி என்ற மகா கலைஞனின் செய்தி.

https://telegram.me/aedahamlibrary

21

Harakiri (1962)

Masaki Kobayashi

ஜப்பானிய சாமுராய் தன் வயிற்றை வாளினால் கிழித்துக் கொண்டு சாகும் சடங்கே ஹராகிரி என்று அழைக்கப்பட்டது. வயிற்றைக் கிழித்துக் கொண்டதும் சாமுராயின் அருகிலேயே நிற்கும் ஒரு வீரன் அவன் தலையை வாளால் வெட்டிக் கொல்வான். மஸாகி கோபயாஷி இயக்கத்தில் வெளிவந்த ஹராகிரி 1630-ஆம் ஆண்டு நடந்த ஒரு துயரமான கதையை விவரிக்கிறது. ஹன்ஷிரோ ஒரு சாமுராய் வீரன். அவன் ஐயி என்ற அரண்மனைக்கு வந்து தான் ஹராகிரி செய்து கொண்டு சாக விரும்புவதாகச் சொல்கிறான். காரணம், பல ஆண்டுகளாக நாட்டில் அமைதி நிலவுகிறது. அதனால் சாமுராய்களுக்கு வேலை இல்லை. அவர்களுக்கு வேறு எந்த வேலையும் யாரும் தருவதில்லை. பட்டினி கிடந்து அவமானப் படுவதை விட ஹராகிரி செய்து கொள்வதே மேல் என்று வந்திருக்கிறான் ஹன்ஷிரோ. அரண்மனையின் தலைவன் சைட்டோ அவனிடம் ஒரு சம்பவத்தைச் சொல்கிறான். “இப்போதெல்லாம் பல சாமுராய்கள் இப்படிக் கிளம்பி விட்டார்கள். ஹராகிரி செய்து கொள்வதைப் பார்க்க அஞ்சும் பணக்காரர்கள் அவர்களுக்குப் பணமோ அல்லது வேலையோ கொடுத்து விடுகிறார்கள். அப்படித்தான் சமீபத்தில் மொத்தொமே என்று ஒரு சாமுராய் வந்து ஹராகிரி செய்து கொள்ளப் போவதாகச்

https://telegram.me/aedahamlibrary

சொன்னான். பணமோ வேலையோ கிடைக்கும் என்பதுதான் அவன் நினைப்பு. ஆனால் நான் அவனை ஹராகிரியே செய்துகொள் என்று சொல்லி விட்டேன். வேடிக்கை என்னவென்றால், அவனுடைய வாளைக்கூட அவன் விற்று விட்டான் போலிருக்கிறது. அவனிடம் இருந்தது மூங்கில் வாள். அதைக் கொண்டு வயிற்றைக் கிழித்துக் கொள்வதற்குள் படாதபாடு பட்டுவிட்டான். பிறகுதான் அவன் தலை வெட்டப்பட்டது. அதனால் நீ உண்மையைச் சொல்லி விடு. உன் நோக்கம் என்ன? ஹராகிரி செய்யத்தான் வந்தாயா, அல்லது, பணம் வேண்டுமா?"

ஹராகிரிக்காகத்தான் வந்தேன் என்று சொல்லும் ஹன்ஷிரோ அதற்கு முன் தான் ஒரு கதை சொல்லப் போவதாகச் சொல்கிறான். கதையை ஆரம்பிப்பதற்கு முன் ஹன்ஷிரோவின் தலையை வெட்டும் வாள்வீரனைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஹன்ஷிரோ ஒருவனின் பெயரைச் சொல்கிறான். அவன் உடல் நலம் குன்றி விடுப்பு எடுத்திருக்கிறான். மற்றொருவனின் பெயரைச் சொல்கிறான். அவனும் உடல் நலமின்றி விடுப்பில் இருக்கிறான். மூன்றாவது ஆளும் அப்படியே. இப்போது கதை துவங்குகிறது. "சாமுராய்களுக்கு வேலை இல்லாததால் என் நண்பன் ஒருவன் ஹராகிரி செய்து கொண்டான். அவனுடைய மகன்தான் நீங்கள் சொன்ன மொத்தொமே. அவன் என் பொறுப்பில்தான் இருந்தான். என் மகளை ஒரு வயதான தனவந்தன் திருமணம் செய்து கொள்வதாகச் சொன்னான். பிறகு அரசரின் அந்தப்புரத்தில் உள்ள நூற்றுக்கணக்கான வைப்பாட்டிகளில் ஒருத்தியாக இருப்ப தற்குக் கேட்டார்கள். நான் மறுத்து விட்டேன். பிறகு அவளை மொத்தொமேவுக்குத் திருமணம் செய்து கொடுத்தேன். வறுமை மேலும் அதிகரித்ததே தவிர கொஞ்சமும் குறையவில்லை. கடின உழைப்பாலும் சரியான உணவு இல்லாததாலும் என் மகளின் உடல்நிலை சீர் கெட்டது. அந்த நிலையில் ஒருநாள் மொத்தமேவின் குழந்தைக்கு ஜுரம் வந்தது. மருந்து வாங்கக் காசு இல்லை. வீட்டில் இருந்த எல்லாப் பொருட்களையும் விற்று விட்டிருந்தோம். குழந்தையின் ஜுரம் அதிகரித்துக் கொண்டே போனது.

"நான் நகருக்குப் போய் ஏதாவது பணம் ஏற்பாடு செய்து மருத்துவரை அழைத்துக் கொண்டு மாலைக்குள் வருகிறேன்" என்று போனான் மொத்தமே. மாலை வந்தது, இரவும் வந்தது. அவன் வரவேயில்லை.

https://telegram.me/aedahamlibrary

மறுநாள் அவனுடைய பிணம் மட்டுமே வந்தது. ஹராகிரி செய்து கொள்ளப் போகிறேன் என்று சொல்லிப் பணம் பெற்று வரலாம் என்று நினைத்திருக்கிறான். கடைசியில் மூங்கில் குச்சியால் வயிற்றைக் கிழித்துக் கொள்ள வேண்டிய அவலம் நேர்ந்திருக்கிறது. ஒரு சாமுராய்க்கு வாள்தான் ஆன்மா. அப்படிப்பட்ட வாளைக்கூட விற்று என் மகளையும் குழந்தையையும் காப்பாற்றி இருக்கிறான் அவன். எனக்கு என் வாளை விற்கத் தோன்றவில்லையே?”

வறுமையின் துயரம் பற்றி வந்துள்ள எத்தனையோ படங்களில் ஹராகிரி அளவுக்கு உக்கிரமான ஒரு படத்தை நான் பார்த்ததில்லை. என்னுடைய வாளை விற்க வேண்டும் என்று எனக்கு ஏன் தோன்றவில்லை என்று கதறுகிறான் ஹன்ஷிரோ. மூங்கில் கம்பினால் தன் வயிற்றைக் கிழித்துக் கொள்ள நேரும் மொத்தொமேயின் துயரத்தைப் பார்க்கும் போது, ஹன்ஷிரோவின் தெரிவு பற்றியே எனக்குள் சந்தேகம் வந்தது. தன் மகளை அவன் அரண்மனை வைப்பாட்டியாகவோ கிழட்டுப் பணக்காரனின் மனைவியாகவோ மணம் செய்து கொடுத்திருக்க வேண்டுமோ, தர்மம் இறுதியில் வெல்லும் என்பதெல்லாம் மாயையோ என்பது போன்ற பல கேள்விகள் எனக்குள் எழுந்தன.

தன் தலையைக் கொய்வதற்கான வாள்வீரனுக்காக, ஒருவன் மாற்றி ஒருவனாக மூவரின் பெயரைச் ஹன்ஷிரோ சொன்னான் அல்லவா? அவர்கள் மூவருமே உடம்பு சரியில்லை என்று சொல்லி அரண்மனைக்கு வரவில்லை. கூப்பிட்டு அனுப்பியும் வரவில்லை. நடந்தது என்னவென்றால், தன் மருமகனான மொத்தொமேயின் குரூர மரணத்துக்குக் காரணமாக இருந்த அந்த மூவரோடும் சண்டையிட்டு அவர்களின் குடுமியை அறுத்து விடும் ஹன்ஷிரோ, அரண்மனைத் தலைவன் சைட்டோவின் முன்னே அந்த மூன்று குடுமிகளையும் வீசி எறிகிறான். பழம் பெருமை வாய்ந்த ஐயி அரண்மனையின் மானமே போயிற்று. அதன்பின் தொடரும் வாள் சண்டையில் ஹன்ஷிரோ அவர்களின் கடவுள் சிலையையே அடித்து நொறுக்கி விட்டு ஹராகிரி செய்து கொள்கிறான்.

நவீன வரலாற்றிலும் இப்படி ஒரு ஹராகிரி நடந்துள்ளது. யுகியோ மிஷிமா என்ற உலகப்புகழ் பெற்ற ஜப்பானிய எழுத்தாளர் ஒரு சிறந்த வாள்வீரர். அவர் தனிப்பட்ட முறையில் ஒரு வாள்படையையும் திரட்டி வைத்திருந்தார். 1970 நவம்பர் 25ம் தேதி அன்று ஜப்பானிய அரசரைக் கவிழ்த்துவிட எண்ணி, ஒரு ராணுவ அதிகாரியை அவருடைய அறையில் சிறைப்படுத்தினார் மிஷிமா. பின் ராணுவ வீரர்களிடம் தன் நோக்கத்தைப் பற்றி உரையாற்றினார். ஆனால் வீரர்களோ அவரைக்

https://telegram.me/aedahamlibrary

கேலி செய்து சிரித்தனர். அதனால் அவமானம் அடைந்த மிஷிமா உடனேயே ஹராகிரி செய்து கொண்டார்.

சிறிய கத்தியால் வயிற்றின் இடப்பக்கமிருந்து வலப்பக்கம் வரை கிழிக்க வேண்டும். அப்போதும் உயிர் போகாது. உடனே பக்கத்தில் நின்று கொண்டிருக்கும் வாள் வீரன் ஹராகிரி செய்து கொண்டவனின் தலையை ஒரே வீச்சில் தனியாகத் துண்டாட வேண்டும். மிஷிமா ஹராகிரி செய்து கொண்ட போது அவர் வயது 45. அவர் தலையைத் துண்டாக்க வேண்டிய மிஷிமாவின் படையைச் சேர்ந்த வீரன் பலமுறை முயன்றும் தலையைத் துண்டாக்க முடியாததால், தன் வயிற்றைக் கத்தியால் குத்திக் கொண்டு அவனும் இறக்கிறான்.

ஹராகிரி எந்த வகையில் உலகின் சிறந்த சினிமாக்களில் ஒன்றாக நிலைத்திருக்கிறது என்றால், இயக்குனர் கோபயாஷி அதிகாரத்துக்கு எதிரான வலுவான குரலை இப்படத்தில் பதிவு செய்திருக்கிறார். சினிமாவில் மட்டும் அல்ல, தன் வாழ்க்கையிலும் கூட அதைக் கடைப்பிடித்தவர் அவர். அமைதியின் ஆதரவாளரான கோபயாஷி ராணுவத்தில் அவருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரி பதவியை ஏற்க மறுத்துவிட்டார். “நான் ஒரு அமைதி ஆதரவாளன்; அமைதிக்கு எதிரான ராணுவத்தில் பணியாற்றுவதோடு அல்லாமல் பதவி உயர்வும் பெறுவது அறம் அல்ல” என்றார் அவர். ஜப்பானின் வரலாறு எவ்வளவு குரூரமாக இருந்திருக்கிறது என்றும், சராசரி மனிதர்களின் வாழ்க்கை எப்படி நசுக்கப்பட்டது என்றும் கடும் விமர்சனங்களை வைத்திருப்பதுதான் ஹராகிரியின் சிறப்பு.

ஹராகிரியைப் பார்த்த போது நம்முடைய வரலாற்றைப் பற்றி நினைத்துப் பார்த்தேன். தமிழ்நாட்டின் சேர, சோழ, பாண்டியர் பற்றியும் நம் பழைய வரலாற்றைப் பற்றியும் விமர்சனங்களை முன்வைக்கும் படங்கள் ஒன்றாவது வந்திருக்கிறதா என்ற கேள்வி எழுந்தது. நாவல் வந்திருக்கிறது. சோழர் காலத்தை மிகக் கடுமையாக விமர்சிக்கும் ஒரு நாவல் அது. அரு.ராமநாதன் எழுதிய வீரபாண்டியன் மனைவி. ஆனால் அப்படி ஒரு நாவல் இருப்பதே பலருக்கும் தெரியாது. பொன்னியின் செல்வன் அளவுக்கு விறுவிறுப்பான நாவல் அது. ஆனால் சோழர் காலம் பற்றிய அலங்காரப் பூச்சுகள் எதுவும் அதில் கிடையாது. அதைப் படமாக எடுத்தால் ஒருவேளை அது இங்கே தடை செய்யப்படலாம்.

https://telegram.me/aedahamlibrary

22

Ugetsu (1953)

Kenji Mizoguchi

ஜப்பானிய சினிமாவின் மூன்று மேதைகள் கெஞ்ஜி மிசோகுச்சி, யசூஜிரோ ஓஸு, அகிரா குரசவா. இந்த மூவரில் உலக சினிமா ரசிகர்களிடையே பிரபலமான பெயர் அகிரா குரசவா மட்டும்தான். ஆனால் என் பார்வையில் அவரைவிட சிறந்த இயக்குனர் மிஸோகுச்சி (1898-1956). அது மட்டுமல்ல, உலகின் தலைசிறந்த இயக்குனர்கள் என பத்து பேரைச் சொன்னால் அதில் வரக் கூடியவர் மிஸோகுச்சி. அப்படிப்பட்ட மிஸோகுச்சியின் பெயர் பலருக்கும் தெரியாமலே போனதன் காரணம் என்ன? அதை நாம் குரசவா, மிசோகுச்சி இருவரின் படங்களை ஒப்பிட்டுப் பார்த்தாலே புரிந்து கொள்ளலாம். குரசவாவின் படங்கள் காவியத்தன்மை கொண்டவை, சாகசங்கள் நிறைந்தவை. ஒருவகையில் ஹாலிவுட்டின் பிரம்மாண்டமான படங்களுக்கு முன்னோடி என குரசவாவின் படங்களைச் சொல்லலாம். எப்படிப்பட்ட ரசிகரையும் இருக்கை முனையில் அமர்த்தி வைக்கக்கூடிய அளவுக்கு சுவாரசியமானவை. ஆனால் மிசோகுச்சியின் படங்கள் மனித வாழ்வின் துயரத்தையும் அவலத்தையும் மிக ஆழமாகச் சொல்பவை. சிந்தனையின் பாதையினூடே நம்மைத் தனித்து இட்டுச் செல்பவை.

மிசோகுச்சி எடுத்த பாதி படங்கள் பாதுகாக்கப்படாமல் அழிந்து விட்டன. 1923-இலிருந்து 1929 வரை அவர் 43 படங்கள் எடுத்தார். அதில் ஒன்றுதான் இப்போது நமக்குக் கிடைக்கிறது. பின்னர், 1956-இல் அவர் மறையும் வரை 42 படங்கள் எடுத்தார். அதில் 30 படங்களே

https://telegram.me/aedahamlibrary

நமக்குக் கிடைக்கின்றன. அவற்றில் பத்துக்கும் மேற்பட்ட படங்கள் இப்போது நாம் பார்க்கும் உலக சினிமா பட்டியலில் சேர்க்கத் தகுந்தவை. அவற்றில் சில: வாட்டர் மெஜீஷியன், ஒசாகா எலிஜி, சிஸ்டர்ஸ் ஆஃப் த ஜியோன், த ஸ்டோரி ஆஃப் த க்ரிசாந்தமம்ஸ், த 47 ரோனின் (நான்கு மணி நேரப் படமான இதை உலகின் அரசியல் சினிமாக்களின் உச்சம் என்று சொல்லலாம்), விமன் ஆஃப் த நைட், மிஸ் ஓயு, த லைஃப் ஆஃப் ஒஹாரு, உகேட்ஸு, சான்ஷோ தாயு, பிரின்சஸ் யாங் க்வே ஃபே, ஸ்ட்ரீட் ஆஃப் ஷேம்.

மீசான் சென் (Mise-en-scène) என்ற ஃப்ரெஞ்ச் வார்த்தைக்கு நாடக அரங்கத்தை உருவாக்குதல் என்று பொருள். சினிமாவில் இதை, ஒரு காட்சியின் செட்டிங், லைட்டிங், உடை, நடிப்பு, கேமரா கோணம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த தன்மை என்று சொல்லலாம். அதாவது, இயக்குனர் கேமராவின் முன்னே ஒரு காட்சியை அரங்கேற்றுகிறார். தமிழ் சினிமாவில் மணி ரத்னம், மிஷ்கின் ஆகியோரின் சினிமாவை மீசான் சென் என்று சொல்லலாம். ஒரு காட்சியில் உள்ள ஒவ்வொரு பொருளையும் அர்த்த முக்கியத்துவத்தோடு பயன்படுத்துதல். ஓநாயும் ஆட்டுக்குட்டியும் படத்தை மீசான் சென் கோட்பாட்டுக்குச் சிறந்த உதாரணமாகக் கூறலாம். இன்றைய உலக சினிமாவில் ஒரு இயக்குனரை படைப்பாளி (auteur) என்ற நிலைக்கு உயர்த்தும் முக்கியமான தகுதி மீசான் சென் கோட்பாடுதான். அக்கோட்பாட்டைக் கண்டு பிடித்த முன்னோடிகளில் ஒருவர் மிசோகுச்சி.

18-ஆம் நூற்றாண்டு ஜப்பானிய இலக்கியத்தின் முக்கியமான பெயர் ஹிமீபீணீ Ueda Akinari (1734-1809). அவர் எழுதிய ஒரு பிரபலமான கதையைத் தழுவிய படமே உகேட்சு. கதை 16-ஆம் நூற்றாண்டில் நடக்கிறது. கெஞ்சுரோ ஒரு குயவன். அவன், தான் செய்த மட்பாண்டங்களை எடுத்துக் கொண்டு பக்கத்து நகர் சந்தைக்குச் செல்கிறான். நாட்டில் அமைதி இல்லை. உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருக்கிறது. அதனால் வியாபாரிகளுக்குக் கொள்ளை லாபம். இப்போது பாண்டங்களை விற்றால் அதிகம் பணம் பார்க்கலாம் என்பது கெஞ்சுரோவின் எண்ணம். ஆனால் வெளியூர் செல்வதில் ஆபத்து இருக்கிறது. அப்படி ஏன் காசு சேர்க்க வேண்டும், கூழோ கஞ்சியோ நீ என் பக்கத்தில் இருந்தாலே போதும் என்கிறாள் மனைவி. ஒரு கைக்குழந்தை வேறு இருக்கிறது. ஆனால் கெஞ்சுரோ கிளம்பி விடுகிறான். அவன் கூடவே தோபே என்ற அவன் ஊர்க்காரனும் சேர்ந்து கொள்கிறான். தோபேவுக்கு எப்படியாவது தான் ஒரு சாமுராய் ஆகி விட வேண்டும் என்று விருப்பம்.

https://telegram.me/aedahamlibrary

உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருப்பதால் மட்பாண்டங்களுக்கு சாதாரண காலத்தை விட அதிகமாகவே பணம் கிடைக்கிறது. அதனால் அடுத்த முறையும் பாண்டங்களைச் சுட்டு எடுத்துக் கொண்டு தோபே, தோபேவின் மனைவி இருவரோடும் நகரத்துக்குச் செல்கிறான் கெஞ்சுரோ. நாடு பூராவும் பஞ்சம் பசி திருட்டு என்று வாழ்க்கை கடினமாக இருக்கிறது. அப்போது சந்தையில் ஒரு பணக்காரப் பெண்ணும் ஒரு மூதாட்டியும் கெஞ்சுரோவிடம் மட்பாண்டங்களைத் தங்கள் வீட்டில் கொண்டு வந்து தர முடியுமா என்று கேட்கிறார்கள். அங்கே போனால் அந்தப் பெண் அவனைத் தங்களோடு கூடவே இருக்கும்படி சொல்கிறாள். அங்கே இருக்கும் ஆடம்பரத்தையும் இளம்பெண்ணையும் பார்த்து, தன் மனைவியை யும் குழந்தையையும் மறந்து போன கெஞ்சுரோ அவர்களுடனேயே தங்கி விடுகிறான்.

இதற்கிடையில் சந்தையில் ஒரு சாமுராய்க் கூட்டத்தைப் பார்த்து விட்டு மனைவியை விட்டுவிட்டு அவர்கள் பின்னே ஓடி விடுகிறான் தோபே. அப்போது எதிரணியால் தேடப்பட்ட ஒரு சாமுராய்த் தலைவன் ஹராகிரி செய்து கொள்கிறான். அவனுடைய தலை வெட்டப்பட்டு கீழே கிடக்கிறது. அந்தத் தலையைக் கொண்டு வருபவனுக்குப் பெரும் பரிசுகள் கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதிர்ஷ்டவசமாக அந்தத் தலை தோபேவுக்குக் கிடைக்கிறது. தோபே பெரிய சாமுராய்த் தலைவனாகி விடுகிறான். ஆனால் அவன் மனைவி திருடர்களால் கெடுக்கப்பட்டு ஒரு விபச்சார விடுதிக்கு வந்து சேர்கிறாள்.

அரண்மனையில் வாழும் கெஞ்சுரோ ஒருநாள் வெளியே வரும் போது அவனைப் பார்க்கும் ஒரு முதியவன், "நீ பேய்களோடு வாழ்கிறாய். உன் முகத்தில் மரணக்களை வந்து விட்டது. இனி அங்கே போகாதே" என்று எச்சரித்து அவனுக்கு ஒரு தாயத்தையும் அளிக்கிறான். அதை அணிந்து கொண்டு அவர்கள் பேய்கள்தானா என்பதை சோதிப்பதற்காக அங்கே திரும்பவும் போகிறான் கெஞ்சுரோ. பேய்கள்தான் என்று தெரிந்து விடுகிறது. தாயத்தின் உதவியாலும் அரண்மனையில் இருக்கும் ஒரு வாளைக் கொண்டும் அவர்களிடமிருந்து தப்பிக்கிறான். மயக்கமடித்து விழுந்து கிடக்கும் அவனைக் காவலர்கள் சிலர் எழுப்பி திருடன் என்று குற்றம் சாட்டுகிறார்கள். காரணம், அந்த ஊர் மன்னனின் அரண்மனை வாள் அவன் கையில் இருக்கிறது. "நான் திருடவில்லை, நான் தங்கியிருந்த அரண்மனையில் கிடைத்தது; இதோ இந்த அரண்மனைதான்" என்று சொல்லி தான் தங்கியிருந்த இடத்தைக் காண்பிக்கிறான். பார்த்தால் அங்கே அரண்மனை இல்லை. பாழடைந்த

https://telegram.me/aedahamlibrary

சுவர்கள் மட்டுமே இருக்கின்றன. பின்னர் அவர்களிடம் கெஞ்சிக் கூத்தாடி மன்னிப்பு பெற்று தன் கிராமத்துக்கு வந்து சேர்கிறான். வீடு இடிந்து கிடக்கிறது. உள்ளே ஆள் நடமாட்டமே இல்லை. துயரத்துடன் உள்ளே போனால் அவன் மனைவி. அவனுக்கு சூடாக சாக்கே மதுவும் உணவும் கொடுத்து இப்போதாவது வந்து சேர்ந்தாயே என்று அரவணைத்துக் கொள்கிறாள். குழந்தை படுக்கையில் உறங்குகிறான். காலையில் ஊர்த்தலைவர் ஆட்களோடு அவன் வீட்டுக்கு வருகிறார். “வாருங்கள், என் மனைவியின் அன்பான உபசரிப்பில் கொஞ்சம் அதிகமாகத் தூங்கி விட்டேன்” என்கிறான் கெஞ்சுரோ. அப்புறம் ஊர்த்தலைவர் சொல்லித்தான் தெரிகிறது, அவன் மனைவி இறந்து பல காலம் ஆகிறது என்று. “உன் பையன் என்னிடம்தான் வளர்ந்தான். சில நாட்களாக அவனுக்குக் கடும் ஜுரம். இறந்து விடுவானோ என்று பயந்து கொண்டிருந்தேன். என் வீட்டில் நேற்று ஜன்னியில் பிதற்றிக் கொண்டிருந்த அவன் எப்படி இங்கே வந்தான்? நீ வந்திருக்கிறாய் என்பது அவனுக்கு எப்படித் தெரிந்தது?” என்று ஆச்சரியப்படுகிறார் ஊர்த் தலைவர்.

தோபேவும் விபச்சார விடுதியில் தன் மனைவியைச் சந்தித்து அவளை ஊருக்கு அழைத்துக் கொண்டு வருகிறான். கதையின் நீதியாக, ‘பணம் பணம் என்று அலையாதீர்கள்; அதைவிட அன்புதான் முக்கியம்’ என்கிறார் இயக்குனர் மிசோகுச்சி. ஆனால் அதே சமயத்தில் ஜப்பானின் வரலாறு எந்த அளவுக்குக் கொடூரமாக இருந்தது என்பதையும் காண்பிக்கிறார். அதனாலேயே உகேட்சு உலகின் மிகச் சிறந்த படங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

https://telegram.me/aedahamlibrary

23

Taxi Driver (1976)

Martin Scorsese

ஃப்ரெஞ்ச் இயக்குனர் ஃப்ரான்ஸ்வா த்ரூஃபோ 1954-இல் ஆத்தர் தியரி (Auteur theory) என்ற கோட்பாட்டை உருவாக்கினார். தமிழில் படைப்பாளி கோட்பாடு என்று சொல்லலாம். (ஆத்தர் என்ற ஃப்ரெஞ்ச் வார்த்தையின் பொருள் படைப்பாளி). ஒரு படத்தை உருவாக்குவதற்கு கதை, வசனம், இசை, ஒளிப்பதிவு என்று பல துறை வல்லுனர்கள் தங்கள் பங்களிப்பைச் செய்கிறார்கள். என்றாலும், ஒருசில படங்களில் மற்ற எல்லா கலைஞர்களையும் மீறி அதன் இயக்குனரே அப்படத்தின் முழுமுதல் படைப்பாளியாகத் தன்னை வெளிப்படுத்துவார். இப்படி ஹாலிவுட் சினிமாவில் தனித்துவம் பெற்ற படைப்பாளிகளில் ஒருவர் மார்ட்டின் ஸ்கார்ஸஸி.

50 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் ஸ்கார்ஸஸியின் படங்களான டாக்ஸி டிரைவர், ரேஜிங் புல், கலர் ஆஃப் மனி, லாஸ்ட் டெம்டேஷன் ஆஃப் க்றைஸ்ட், குட்ஃபெலாஸ், கஸீனோ, குந்துன், கேங்க்ஸ் ஆஃப் நியூயார்க், வுல்ஃப் ஆஃப் வால் ஸ்ட்ரீட், சைலன்ஸ் என்ற பத்து படங்களையாவது இந்த உலக சினிமாப் பட்டியலில் நாம் சேர்க்கலாம். வுல்ஃப் ஆஃப் வால் ஸ்ட்ரீட் 2013-இல் வெளிவந்த போது ஸ்கார்ஸஸியின் வயது 71. அந்த வயதில் அப்படி ஒரு படத்தை எடுக்க முடிவதே பெரும் அதிசயம். அந்தப் படத்தின் வேகமும் வெறியும் அப்படிப்பட்டது. தமிழ் சினிமாவிலோ இயக்குனர்களின் முதல் படத்தின் வெற்றிக்குப் பிறகு அடுத்த படத்திலேயே குப்புற விழுந்து விடுகிறார்கள். ஆனால் ஸ்கார்ஸஸி இடைவெளியே இல்லாமல்

https://telegram.me/aedahamlibrary

தொடர்ந்து தன் கலைப் படைப்புகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்.

படைப்பாளி கோட்பாட்டின்படி ஒரு படத்தின் இயக்குனர் ஒரு நாவலாசிரியரைப் போல் அந்தப் படத்தின் ஒட்டு மொத்த சிறப்புக்கும் உரித்தாகிறார் என்று பார்த்தோம். ஆனால் அதன் பொருள் எல்லா வேலைகளையும் இயக்குனரே செய்கிறார் என்பதல்ல. ஸ்கார்ஸஸி தனது படங்களின் நடிகர்களில் பலரை 40 ஆண்டுகளாக மாற்றவில்லை. முக்கியமாக, ராபர்ட் டி நீரோ, ஜோ பெஸ்ச்சி. அதேபோல் அவர் படங்களில் 40 ஆண்டுகளாக எடிட்டராகப் பணி புரிபவர் தெல்மா ஷூன்மேக்கர். 1980-இல் வந்த ரேஜிங் புல் படத்திலிருந்து தொடங்கி ஸ்கார்ஸஸியின் எல்லா படங்களையும் எடிட் செய்வது தெல்மா ஷூன்மேக்கர்தான். சிறந்த படத் தொகுப்புக்காக ஏழு முறை ஆஸ்கர் விருதுக்குப் பரிந்துரைக்கப் பட்டு, மூன்று முறை அந்தப் பரிசை வென்றிருக்கிறார். எல்லாமே ஸ்கார்ஸஸி படங்கள்.

ஸ்கார்ஸஸியின் படங்களில் வன்முறை அதிகம் என்ற குற்றச்சாட்டு எழுவதுண்டு. ஆனால் கதையின் சுவாரசியத்துக்காக அவர் வன்முறையைத் திணிப்பதில்லை. அவர் கண்ட அமெரிக்க சமூகத்தின் வன்முறையையே அப்பட்டமாகத் தன் படைப்புகளில் காண்பித்தார். டாக்ஸி டிரைவர் படத்தில் கதாநாயகன் ட்ராவிஸ் (ராபர்ட் டி நீரோ) தன் டாக்ஸியை ஓட்டிக் கொண்டு செல்லும் போது தெருவில் திரிந்து கொண்டிருக்கும் கறுப்பினச் சிறுவர்கள் காரில் கற்களை எடுத்து அடிக்கிறார்கள். மேலும், அவர் படங்களில் அமெரிக்கவாழ் இத்தாலியரின் வாழ்க்கையே பிரதானமாக வருகிறது. குறிப்பாக, சிசிலி பகுதியினர். காட்ஃபாதர் படம் ஞாபகம் இருக்கிறதா? அதுவும் அமெரிக்க வாழ் சிசிலியரின் கதைதான். குட்ஃபெலாஸ் படத்தில் வரும் இத்தாலியனான ஹென்றி தன் யூதக் காதலி கேரனை மணக்க நினைக்கும் போது கேரனின் தாய், "அந்த இத்தாலிய முரடனை எப்படி நீ மணக்கலாம்?" என்கிறாள். அமெரிக்க வாழ் இத்தாலியர் மற்றும் கறுப்பு இனத்தவரின் வாழ்க்கை அத்தனை வன்முறை நிறைந்ததாகத்தான் இருக்கிறது. இதை மறைத்து, அவர்களை 'ரொமாண்டிசைஸ்' செய்திருந்தால்தான் ஸ்கார்ஸஸியை விமர்சிக்க முடியும். மாறாக, அவர் எதார்த்தத்தைக் காண்பித்தார்.

இந்த நிலையில் ஸ்கார்ஸஸியின் எந்தப் படத்தைப் பற்றி எழுதுவது? ஸ்கார்ஸஸியின் ஆன்மீகத் தேடலின் விளைவுகளான லாஸ்ட் டெம்டேஷன் ஆஃப் கிறைஸ்ட், குந்துன், சைலன்ஸ் ஆகிய மூன்றும் காவியங்கள் என்று சொல்லத்தக்கவை. அவற்றில் ஒன்றைப் பற்றி எழுதாமல் டாக்ஸி டிரைவர் என்ற ஆக்ஷன் த்ரில்லர் பற்றி எழுத என்ன

https://telegram.me/aedahamlibrary

காரணம்?

லாஸ்ட் டெம்டேஷன் ஆஃப் கிறைஸ்ட், குந்துன், சைலன்ஸ் ஆகிய மூன்றும் ஆன்மீகம் சார்ந்தவை. ஒரு ஆன்மீகவாதியின் தத்துவத் தேடலை விட, ஒரு சாதாரண டாக்ஸி டிரைவரின் பிரச்சினையைத் தத்துவார்த்த ரீதியாகப் புரிந்து கொள்ள முயல்வது தான் கலையின் உச்சபட்ச சாதனையாக இருக்க முடியும். அதனால் தான் டாக்ஸி டிரைவர் பற்றிப் பேசுகிறோம்.

வியட்நாம் போரில் பங்கு பெற்று வெளியே வந்த 26 வயது இளைஞன் டிராவிஸ். நியூயார்க் நகரில் தனியாக வசிக்கும் டாக்ஸி டிரைவர். அவனுக்கு நண்பர்கள் யாரும் கிடையாது. நிறைய புத்தகங்கள் படிக்கிறான். தன் அனுபவங்களை நோட்டுப் புத்தகத்தில் எழுதுகிறான். அவனுடைய ஒரு முக்கியமான பிரச்சினை, இரவில் தூக்கம் வராது. அதனால் இரவிலும் டாக்ஸி ஓட்டுகிறான். பார்ப்பதற்குக் கவர்ச்சிகரமான டிராவிஸ் (ராபர்ட் டி நீரோ) பெட்ஸி என்ற பெண்ணைச் சந்திக்கிறான். இரண்டொரு சந்திப்பிலேயே அவளை ஒரு நீலப்படத்துக்கு அழைத்துப் போகிறான். அவள் அதிர்ச்சியுடன் திரையரங்கிலிருந்து எழுந்து போகிறாள். இதுதான் இந்தப் படத்தை உலக சினிமாவோடு சேர்க்கும் காரணம். பொதுவாக ஒரு இளைஞன் தன்னோடு சினிமாவுக்கு வரத் துணியும் பெண்ணிடம் நல்ல பெயர் வாங்கத்தான் விருப்பப்படுவானே ஒழிய முதல் சந்திப்பிலேயே நீலப்படத்துக்கா அழைத்துச் செல்வான்? ஆனால் டிராவிஸ் அப்படி நினைப்பதில்லை. ஒரு பெண்ணும் ஆணும் முதல் சந்திப்பிலேயே நீலப்படம் பார்க்க மாட்டார்கள் என்பதே அவனுக்குத் தெரியாது! “உனக்கு அந்தப் படம் பிடிக்கவில்லையானால் சொல்லியிருக்கலாமே? நாம் வேறு ஒரு படத்துக்குப் போயிருக்கலாமே?”

“நீ இது போன்ற படங்களைத்தான் பார்க்கிறாயா?”

அவன் பதில் சொல்லத் தடுமாறுகிறான். அவனுக்குப் புரியவில்லை. “எனக்கு சினிமா பற்றி அவ்வளவாகத் தெரியாது. எப்போதாவது இங்கே வருவேன்” என்கிறான். விஷயம் என்னவென்றால், அவனிடம் எந்தத் தவறான நோக்கமும் இல்லை. ஒரு சராசரிப் பெண்ணான அவளுக்கு அது புரியவில்லை. அவன் மன்னிப்புக் கேட்கிறான். அவள் ஏற்கவில்லை. ஃபோனில் தொடர்பு கொள்கிறான். இனிமேல் நாம் பார்க்க வேண்டாம் என்கிறாள். அதுவும் அவனுக்குப் புரியவில்லை. அவனுடைய நட்பு மிக மூர்க்கமாக நிராகரிக்கப்படுகிறது. அப்போது கேமரா அவனுடைய முகத்தைக் காண்பிக்காமல் வலது பக்கம் ஸ்லோமோஷனில் நகர்ந்து அங்கிருந்து ஒரு நீண்ட வராந்தாவைக்

https://telegram.me/aedahamlibrary

காண்பிக்கிறது. ஏன் இப்படி ஒரு காட்சி? கடைசி காட்சியில் டிராவிஸ் ஒரு வேசியைக் காப்பாற்றுவதற்காக அவளைக் கட்டாய விபச்சாரத்தில் ஈடுபடுத்துபவர்களை சுட்டுக் கொல்கிறான். அந்தக் காட்சியும் ஸ்லோமோஷனில் வருகிறது. நகரங்கள் எப்படி ஒரு இளைஞனை அந்நியனாக மாற்றுகிறது என்பதை விளக்குவதற்கே இப்படிப்பட்ட காட்சிகள். (வியட்நாம் போரிலிருந்து திரும்பிய பல அமெரிக்க வீரர்கள் வாழ்நாள் முழுவதும் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாக இருந்தார்கள் என்பதையும் இங்கே நாம் நினைவுகூர வேண்டும்.)

நியூயார்க் நகரில் உள்ள மன்ஹாட்டனின் டைம்ஸ் ஸ்கொயரின் இரவுகள் செக்ஸ் தொழிலாளிகளாலும் தரகர்களாலும் நிரம்பியது. திரும்பத்திரும்ப இந்த இடத்துக்கு வரும் டிராவிஸ் மிகக் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகிறான். வறுமை, விபச்சாரம், அசுத்தம், ஏழைக்கும் பணக்காரனுக்குமான அளவிட முடியாத வித்தியாசம், அந்த வித்தியாசத்தினால் ஏற்படும் சமூக முரண்பாடுகள், வன்முறை போன்ற எல்லாம் சேர்ந்து அவனை அந்த சமூகத்திலிருந்து அந்நியமாக்கி விடுகிறது. இந்த இடத்தில் டிராவிஸ் ஆல்பெர் கம்யூ, காஃப்கா போன்றவர்களின் நாயகர்களைப் போலவே ஒரு தீவிர எக்ஸிஸ்டென்ஷியல் angst என்ற உணர்வுக்குள் தள்ளப்படுகிறான். தத்துவத் துறையில் அதிகம் பயன்படுத்தப்படும் இந்த ஆங்ஸ்ட் என்ற ஜெர்மன் வார்த்தைக்கு நேரடித் தமிழ் வார்த்தை இல்லை என்றாலும், இதை பயம், பதற்றம், கவலை, துயரம், விரக்தி என்று எல்லாமும் கலந்த ஒரு உணர்வாகச் சொல்லலாம். நியூயார்க் நகரத்தின் ஆடம்பரத்தை நாம் ஆயிரக்கணக்கான காணொளிகளில் பார்க்க முடியும். ஆனால் ஸ்கார்ஸஸி டாக்ஸி டிரைவரில் காண்பித்திருப்பது ஒரு நரகம். அந்த நிஜத்தைச் சொல்வதால்தான் அவர் கொண்டாடப்படுகிறார்.

https://telegram.me/aedahamlibrary

24

I, the Worst of All (1990)

María Luisa Bemberg

‘லத்தீன் அமெரிக்க சினிமா பற்றிப் பேசாமல் உலக சினிமா பற்றிப் பேசுவது சினிமா என்ற கலைச் சாதனத்துக்கே செய்யும் துரோகமாகும்...’ என்ற ரீதியில் எல்லோரையும் விட மோசமானவள் நான் என்ற இந்த அர்ஜெண்டீனியப் படத்தைப் பார்த்த போது நினைத்தேன். அர்ஜெண்டினா, ப்ரஸீல், சீலே, மெக்ஸிகோ போன்ற மத்திய அமெரிக்க, தென்னமெரிக்கப் படங்களின் நிழலைக் கூட ஹாலிவுட் படங்களால் தொடமுடியாது. அப்படி என்ன சிறப்பு இந்த லத்தீன் அமெரிக்க சினிமாவில்? பாரதிக்கும் மற்ற கவிகளுக்கும் உள்ள வித்தியாசம்தான். பாரதி வெறுமனே கவிதைக்காகக் கவிதை எழுதவில்லை. ஊணையும் உயிரையும் உருக்கி எழுதினான். காக்கைக் குருவி எங்கள் ஜாதி என்றால் தன்னுடைய உணவைக் காகங்களுக்குக் கொடுத்து, தான் பட்டினி கிடந்து எழுதிய கவிதை அது. அதேபோல் எடுக்கப்படுவதுதான் லத்தீன் அமெரிக்க சினிமா. அதில் ஒன்றுதான் இந்தப் படம்.

சிஸ்டர் ஹுவானா பதினேழாம் நூற்றாண்டில் மெக்ஸிகோ நகரில் வாழ்ந்தவர். காலம், 1651-1695. ‘லத்தீன் அமெரிக்காவின் முதல் கவி, மகாகவி’ என்று ஹுவானா பற்றிச் சொல்கிறார் கார்லோஸ் ஃபுவெந்த்தெஸ். இந்தத் தொடருக்காக நாற்பது பக்கங்களில் நீண்ட அவருடைய முதல் கனவு என்ற குறுங்காவியத்தைப் படித்தேன். பதினேழாம் நூற்றாண்டில் எழுதியது போலவே இல்லை; இன்று

https://telegram.me/aedahamlibrary

எழுதியதைப் போல் அத்தனை நவீனமாக இருந்தது. ஹுவானாவின் வாழ்க்கை வரலாற்றை ஸ்பானிஷ் மொழியின் ஆகச் சிறந்த கவிஞரான ஒக்தாவியோ பாஸ் ஒரு நீண்ட நூலாக எழுதியிருக்கிறார். சிஸ்டர் ஹுவானாவின் இரண்டாவது கனவு என்ற தலைப்பில் Alicia Gaspar de Alba ஒரு நாவல் எழுதியிருக்கிறார்.

ஸ்பெயினின் காலனி நாடான மெக்ஸிகோ அப்போது நியூ ஸ்பெய்ன் என்றே அழைக்கப்பட்டது. மெக்ஸிகோ மட்டுமல்ல, ஒட்டு மொத்த தென்னமெரிக்காவுமே ஸ்பெயினின் காலனியாகத்தான் இருந்தது. ப்ரஸீல் மட்டும் போர்ச்சுகலின் காலனி. அதனால்தான் தென்னமெரிக்க நாடுகளில் ஸ்பானிஷும் ப்ரஸீலில் போர்ச்சுகீஸ் மொழியும் பேசப்படுகின்றன. ஐரோப்பியரின் இந்தக் காலனி ஆதிக்கத்தின் போது தென்னமெரிக்காவில் இருந்த பல நூறு மொழிகளும், அந்த மக்களின் மதங்களும் அழிக்கப்பட்டன. மதம் மாறாதவர்கள் அனைவரும் உயிரோடு எரிக்கப்பட்டனர். இது Auto-da-fe என்று சொல்லப்படுகிறது. நம்பிக்கையின் பேரால் செய்யப்படும் காரியம். மதம் மாறாதவர்கள் மட்டுமல்ல; திருச்சபையைக் கேள்வி கேட்ட பல பாதிரிமார்களும் கூட உயிரோடு கொளுத்தப்பட்டனர்.

சிஸ்டர் ஹுவானா திருச்சபையை எதிர்த்துக் கேள்வியெல்லாம் கேட்கவில்லை. ஆனால் அதை விட ஆபத்தான ஒரு வேலையைச் செய்தார். கவிதை எழுதினார். அவ்வளவுதான். எழுத்தில்தான் வாழ்கிறான் சாத்தான் என்றார் பிஷப். “ஆமாம், எழுத்து என்பதே சமூகத்தை விமர்சிப்பதுதான்; சமூகத்துக்கு எதிரானதுதான்” என்றார் சிஸ்டர் ஹுவானா. ஆனால் அவர் அப்படி ஒன்றும் சமூகத்துக்கு எதிராக எழுதி விடவில்லை. ஆணும் பெண்ணும் சமம் என்று எழுதினார். நிலவைப் பாடினார். பெண்களின் தாபத்தை எழுதினார். இதெல்லாம்தான் சாத்தானின் வார்த்தைகள். எனவே ஹுவானாவின் நூலகத்தை மூடுங்கள் என உத்தரவிட்டார் பிஷப். ஹுவானாவின் நூலகம் அப்போது மெக்ஸிகோ முழுவதும் பிரபலமாகியிருந்தது. தேசத்தின் பிரபலமான கவிகளும் புத்தி ஜீவிகளும் ஹுவானாவின் நூலகத்தில்தான் சந்தித்தனர். அப்படி ஒரு பெரிய நூலகம் அப்போது மெக்ஸிகோவிலேயே இல்லை. 4000 நூல்கள் அந்த நூலகத்தில் இருந்தன.

“எனக்கு வாழ்க்கை என்று எதுவும் இல்லை; என் அடையாளமே என் எழுத்தும் நூலகமும்தான்” என்று வாழ்ந்து கொண்டிருந்த ஹுவானாவின் நூலகம் மூடப்பட்டதும் அவர் பிஷப்பின் காவலர்களிடம் சொன்னார்: “அந்த மூடனிடம் போய்ச் சொல்லுங் கள்;

https://telegram.me/aedahamlibrary

நூலகத்தை மூடி விட்டால் நான் ஆகாயத்தில் சென்று எழுதுவேன் என்று; புல் தரையில் அமர்ந்து எழுதுவேன் என்று.” மூடப்பட்ட நூலகம் அன்று மதியமே திறக்கப்பட்டது. எப்படி?

மெக்ஸிகோவின் ஆட்சிப் பொறுப்பு ஸ்பெயினிலிருந்து அனுப்பப்பட்ட வைஸ்ராயிடம் இருந்தது. சிஸ்டர் ஹுவானாவின் நல்லதிர்ஷ்டம் வைஸ்ராயும் அவர் மனைவியும் பெரும் இலக்கிய வாசகர்களாக இருந்தனர். ஹுவானாவின் கவிதைகளைத் தன் உயிரை விட மேலாக நேசித்தாள் வைஸ்ராயின் மனைவி. ஹுவானாவை அவள் தன்னுடைய பிரதிபிம்பமாகவே கண்டாள். “உனக்கும் எனக்கும் எந்த வித்தியாசமும் இல்லை ஹுவானா. உனக்கு முகத்திரை என்றால் எனக்கு கிரீடம். உனக்கு கான்வெண்ட் என்றால் எனக்கு அரண்மனை. உன்னைக் கட்டுப்படுத்த ஏராளமான சட்டதிட்டங்கள்; எனக்கோ சம்பிரதாயங்கள். நீ எப்போது இங்கே கன்னிகாஸ்த்ரியாக ஆனாயோ அதே வயதில்தான் நான் திருமணம் செய்து வைக்கப்பட்டேன்” என்கிறாள் வைஸ்ராயின் மனைவி. அதற்கு ஹுவானாவின் பதில்: “ஆன்மாவுக்குச் சிறைகள் இல்லை. ஆன்மாவை யாரும் எதுவும் செய்ய முடியாது. ஆன்மாவின் தளைகளை ஆன்மாவேதான் உருவாக்கிக் கொள்கிறது.”

பிஷப்பை அழைத்து ஹுவானாவின் நூலகத்தை மூடியதன் காரணத்தைக் கேட்கிறார் வைஸ்ராய். “அவள் கவிதை எழுதுகிறாள்” என்கிறார் பிஷப். “என்ன, கவிதை எழுதினாள் என்றா தண்டித்தீர்கள்? இன்று மதியத்துக்குள் நூலகம் திறக்கப்பட்டாக வேண்டும்.” அதற்கு பிஷப், “முடியாது; அவள் என் அதிகாரத்தில் இருக்கிறாள்” என மறுக்கவே, “அப்படியானால் நீர் என்னோடு போர் தொடுக்கிறீர் என்று அர்த்தம். மெக்ஸிகோவில் நான் வைத்ததுதான் சட்டம். உம்மைப் பற்றி ஸ்பெய்னுக்கு எழுதி விடுவேன்” (அதாவது, பிஷப் ஸ்பெய்னுக்கு மாற்றப்படுவார்) என்று மிரட்டிய பிறகுதான் நூலகத்தைத் திறக்கிறார் பிஷப்.

ஹுவானாவை மட்டும் அல்ல; பெண் இனத்தையே வெறுப்பவர் பிஷப். ஆண்களை பாவம் செய்யத் தூண்டுபவர்களே பெண்கள்தான் என்று நம்புகிறார். பெண்கள் பேசும் போது நச்சுப் பாம்பு மூச்சு விடுவது போல் இருப்பதாகக் கூறுகிறார். இப்படிப்பட்டவர் ஹுவானாவை முன்வைத்து வைஸ்ராயினால் அவமானப்பட்டதால் ஸ்பெய்னில் உள்ள தன் தொடர்புகளை வைத்து வைஸ்ராயையே ஸ்பெய்னுக்கு மாற்றி விடுகிறார். கிளம்பும்போது வைஸ்ராயின் மனைவி ஹுவானா எழுதிய எல்லா கவிதைகளையும் நாடகங்களையும் தன்னோடு எடுத்துக் கொண்டு போகிறாள். அப்படி அவர் எடுத்துச் சென்றிருக்காவிட்டால்

https://telegram.me/aedahamlibrary

இன்று ஹுவானாவின் எழுத்து எதுவுமே நமக்குக் கிடைத்திருக்காது. வைஸ்ராய் ஸ்பெய்னுக்குக் கிளம்பிய அடுத்த நிமிடமே ஹுவானாவின் நூலகத்தில் உள்ள புத்தகங்களையெல்லாம் தீக்கிரையாக்கினார் பிஷப். பிறகு ஹுவானாவின் மீது விசாரணை நடத்துகிறார். அவள் மீதான குற்றச்சாட்டுகளைக் கூறுகிறார். உடனே ஹுவானா தன் பதிலை அவரிடம் எழுதிக் கொடுக்கிறார். அதற்கு பிஷப் சொல்லும் பதிலும் ஹுவானாவின் எதிர்வினையும் படத்தின் அற்புதமான தருணங்களில் ஒன்று.

“ஹுவானா, உனக்குப் புரியவே புரியாதா? எதுவும் கற்றுக் கொள்ளவே மாட்டாயா? எழுத்து சாத்தான் என்பதை எத்தனை முறை உனக்கு நான் சொல்வது? உன் மீது இவ்வளவு பெரிய குற்றச்சாட்டு இருக்கும் போதும் எழுத்துதான் பதிலா? இதுவே உன் குற்றத்தை நிரூபிக்கும் சாட்சி என்பது கூடவா உனக்குப் புரியவில்லை?” அதற்கு ஹுவானா ஏதோ பதில் சொல்ல, “அப்பன் பெயர் தெரியாதவளே” என்று திட்டுகிறார் பிஷப். (ஆம், ஹுவானா ஒரு வேசியின் மகள்.)

அதற்கு ஹுவானா கடுமையான குரலில் சொல்லும் பதில்: “என்ன சொன்னாய்? நாங்கள்தான் சாத்தான். பெண்கள்தான் சாத்தான். இதுதான் சாத்தானின் மணம். ஆனால் உண்மை என்னவென்றால் நீ தான் சாத்தான்!”

கடைசியில் ஹுவானாவை கடுமையான உடல் உழைப்பில் ஈடுபடுத்தும் கடைநிலை பணிப்பெண்ணாக வாழும்படி தண்டனை அளிக்கிறார் பிஷப். வழக்கம் போல் ஹுவானாவையும் உயிரோடுதான் எரித்திருப்பார். ஆனால் ஹுவானாவின் கவிதைகளில் ஈர்க்கப்பட்ட சில பாதிரிகளையும் எழுத்தாளர்களையும் முழுவதுமாக அவரால் பகைத்துக்கொள்ள முடியவில்லை.

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்கப் பெண் கவி ஸாஃபோதான் உலகின் முதல் லெஸ்பியன் கவி. அந்த வரிசையில் வந்த மற்றொரு லெஸ்பியன் கவி சிஸ்டர் ஹுவானா. முதல் கனவு என்ற அவரது நீண்ட கவிதையை அவர் நிலவொளியில் நிர்வாணமாக அமர்ந்து எழுதியதாகப் பதிவு செய்கிறார். உலகெங்கும் உள்ள மாற்றுப் பாலின ஆதரவாளர்களின் (எல்ஜிபிடி) ஆதர்சமாக விளங்குகிறார் சிஸ்டர் ஹுவானா.

https://telegram.me/aedahamlibrary

25

Yole (1982)

Yılmaz Güney (1937 - 1984)

துருக்கியில் ஒருவர் குர்து மொழி பேசுபவராக இருந்தால் அவர் தனது இன அடையாளத்தையும் மொழி அடையாளத்தையும் துறந்து விட வேண்டும். குர்து மொழியைப் பேசினாலே சிறை. துருக்கியின் சிறைச்சாலைகள் வதைமுகாம்கள். கைதிகளுக்கு சிறைகளில் உணவு வழங்கப்படுவதில்லை. அவர்களேதான் வேலை செய்து சம்பாதித்து சமைத்து உண்ண வேண்டும். கடுமையாக வேலை செய்து கிடைக்கும் சொற்பமான கூலி பற்பசையும் சோப்பும் வாங்குவதற்குத்தான் காணும். அதனால் துருக்கி சிறைகளில் பலரும் பட்டினி கிடந்து சாவதும் சகஜமானதுதான்.

கைதிகள் பெரும்பாலும் அரசியல் காரணங்களுக்காகத் தண்டிக்கப் பட்டவர்களே. ஒரு உதாரணம்: மெஹ்தி சானா என்பவர் “நான் இனி துருக்கி மொழி பேச மாட்டேன்; என் தாய்மொழி குர்துதான் பேசுவேன்” என்றார். அரசு அவரை சிறையில் அடைத்தது. அவர் மனைவி லைலாவை மக்கள் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுத்தார்கள். ஒருமுறை அவர் பாராளுமன்றத்துக்கு வந்த போது பச்சை, மஞ்சள், சிவப்பு நிறத்திலான பட்டியைத் தலையில் அணிந்திருந்தார் என்பதால் சிறைக்கு அனுப்பப்பட்டார். காரணம், அம்மூன்று நிறங்களும் குர்து இனத்தவரின் கலாச்சார அடையாளங்கள்!

இவ்வளவுக்கும் துருக்கியின் கிழக்கு மற்றும் தென்கிழக்குப் பகுதியில் வாழும் குர்து இனத்தவர் நாட்டின் மக்கள் தொகையில் 20 சதவிகிதம். குர்து இனத்தவர் வாழும் கிழக்கு துருக்கியில் மக்கள் நிம்மதியாக வாழ்ந்து பல ஆண்டுகள் ஆகி விட்டன. மக்களின் வசிப்பிடங்களில்

https://telegram.me/aedahamlibrary

ராணுவம் குண்டு வீசுவதும் ராணுவத்துக்கு எதிராக குர்து மக்கள் கற்களை வீசித் தாக்குவதும் அங்கே தினசரி நிகழ்ச்சி. இன்றும் நிலைமை இப்படித்தான் இருக்கிறது.

துருக்கி மொழியில் படங்களை இயக்கிய யில்மாஸ் குனே குர்து இனத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவரும் அரசு அடக்குமுறைக்கு உள்ளானார். ஆனால் அதற்கு முன்னே அவர் மிகப் பிரபலமான நடிகராக இருந்தார். வெறும் நடிகராக அல்ல; சூப்பர் ஸ்டார். 1964-இலிருந்து 1974 வரையிலான காலகட்டத்தில் அவர் சுமார் 150 படங்களில் நடித்தார். அறுபதுகளின் இறுதியில் அவர் படங்கள் வருடத்தில் இருபதுக்கு மேல் வெளிவந்தன. அதே சமயத்தில் அவர் பல படங்களை இயக்கவும் செய்தார். அவர் இயக்கிய படங்கள் சர்வதேச அளவில் பேசப்பட்டன. அவரும் உலகத் தரமான இயக்குனர்கள் வரிசையில் வைக்கப்பட்டார். ஆனால் 1972-இல் அரசுக்கு எதிரான செயல்களுக்காகக் கைது செய்யப்பட்டார். சிறையில் இருக்கும் போதே அவருடைய வழிகாட்டுதலில் அவரது உதவியாளர்கள்தான் குனேவின் படத்தை இயக்கினார்கள். கொஞ்சம் நம் நாட்டு சினிமாவோடு இதை ஒப்பிட்டுப் பாருங்கள். இயக்குனரை அரசு தேசத் துரோகி என்று சொல்லி சிறையில் அடைக்கிறது. இயக்குனரோ சிறையில் இருந்து கொண்டே தன் படங்களை இயக்குகிறார். அந்தப் படங்கள் உலகம் பூராவும் கொண்டாடப்படுகின்றன. நாம் இப்போது பேச இருக்கும் யோல் என்ற படமும் குனே சிறையில் இருக்கும் போது தன் உதவியாளர் மூலம் இயக்கியதுதான்.

1980-இல் துருக்கி ராணுவ ஆட்சியின் கீழ் வந்தது. வந்தவுடன் ராணுவம் செய்த முதல் காரியம், யில்மாஸ் குனேவின் படங்களைத் தடை செய்ததுதான். 1981-இல் ஒன்பது ஆண்டு சிறைவாசத்துக்குப் பிறகு குனே சிறையிலிருந்து தப்பி ஃப்ரான்ஸுக்குப் போய் விட்டார். உலகம் முழுவதும் உள்ள கலைஞர்களின் புகலிடமான ஃப்ரான்ஸ் அவரை வெகுவாக ஆதரித்தது. 1984-இல் பாரிஸில் புற்றுநோயினால் தன் 47-ஆவது வயதில் இறந்தார் குனே. பாரிஸ் நகரில் பியர் லாச்செஸ் என்ற ஒரு கல்லறைத் தோட்டம் இருக்கிறது. நான் பாரிஸ் சென்ற போது பியர் லாச்செஸில் உள்ள யில்மாஸ் குனேவின் கல்லறைக்குச் சென்று நீண்ட நேரம் கண்களை மூடி அமர்ந்திருந்தேன். காரணம், யில்மாஸ் குனே சிறையிலிருந்து தப்பி பாரிஸுக்குச் சென்று, அங்கிருந்து படங்களை இயக்கியபோது சொன்னார்: எனக்கு முன்னே இரண்டு பாதைகளே இருக்கின்றன. ஒன்று, போராடுவது; இரண்டாவது, சரணடைவது. நான் முதல் பாதையைத் தேர்ந்தெடுத்தேன். (யோல்

https://telegram.me/aedahamlibrary

என்றால் பாதை).

துருக்கியின் மர்மரா கடலில் உள்ளது இம்ராலி தீவு. அங்குள்ள சிறைச்சாலைக்காகவே இன்றளவும் பிரபலமான தீவு அது. அங்கே கைதிகளாக இருக்கும் ஐந்து பேருக்குத் தங்கள் வீட்டுக்குச் சென்று வர விடுப்பு கிடைக்கிறது. அப்போது அவர்களுக்கு நடக்கும் சம்பவங்களின் மூலம் துருக்கியே பெரும் சிறைச்சாலையாக இருந்தது என்பதைக் காண்பிக்கிறார் குனே. ஐவரில் ஒருவன் செயத் அலி. அவன் சிறையில் இருக்கும் போது அவன் மனைவி சீனே வேறு சிலரோடு உறவு கொள்கிறாள். குடும்ப மானத்தைக் காப்பாற்றுவதற்காக அவள் பெற்றோர் அவளை ஒரு கொட்டடியில் கையிலும் காலிலும் இரும்புச் சங்கிலியால் பிணைத்து அடைத்து விடுகின்றனர். உணவும் குடிப்பதற்குத் தண்ணீரும் மட்டுமே கொடுக்கிறார்கள். மற்றபடி அவள் குளிப்பதற்குக் கூட தண்ணீர் கிடையாது. இப்படியே இருந்து கொட்டடியிலேயே சாக வேண்டும்; அதுதான் அவளுக்கான தண்டனை.

அவள் கொட்டடியில் அடைக்கப்பட்டு ஒன்பது மாதங்கள் ஆன நிலையில் செயத் அலி அவளைப் பார்க்க சிறையிலிருந்து வருகிறான். செய்யதும் சீனேவும் வாழ்ந்த ஊர் வேறு. சீனேயின் பெற்றோர் இருக்கும் ஊர் வேறு. அந்த ஊருக்குப் போக வேண்டுமானால் ஒரு பனிப் பாலைவனத்தைக் கடக்க வேண்டும். அது ஒரு கடும் குளிர்காலம். பனிப்பாலையைக் கடக்கும் போது ஏற்கனவே சிலர் இறந்திருக்கிறார்கள். இருந்தாலும் செய்யதுக்கு, தனக்குத் துரோகம் செய்து விட்ட சீனேவைப் பார்த்தே ஆக வேண்டும் என்று இருக்கிறது. அவன் சிறுவயதில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த போது அவன் வாசிக்கும் புல்லாங்குழல் கேட்டு உணர்ச்சிவசப்பட்ட நிலையில் கண்ணீர் விட்டவள் சீனே. செய்யதின் மாமன் மகள். அப்பேர்ப்பட்டவள் எப்படித் தனக்கு துரோகம் செய்ய முடியும்? இதை மட்டும் அவன் அவளிடம் கேட்க வேண்டும்.

பனிப்பாலையில் ஒரு குதிரையில் பயணம் செய்கிறான் செயத். குளிர் தாங்க முடியாமல் குதிரை படுத்து விடுகிறது. செயத் அதைச் சுட்டுக் கொன்று விட்டு தன் பயணத்தைத் தொடர்கிறான். (அந்தப் பனியில் குற்றுயிரும் குலையுயிருமாக வதைபடுவதை விட மரணமே விடுதலை.) படம் முழுவதுமே பயணங்களின் மூலமாகத்தான் கதை சொல்லப்படுகிறது. சிறையிலிருந்து விடுப்பு கிடைத்த ஐந்து பேரும் தங்கள் ஊர்களுக்கு ரயிலில் பயணம் செய்கிறார்கள். படம் முழுவதுமே இடைவிடாமல் ரயில் போய்க் கொண்டே இருக்கிறது. செய்யத்

https://telegram.me/aedahamlibrary

அலியின் கதை மட்டும் பனிப்பாலையில் நடக்கிறது. வாழ்வில் மறக்கவே முடியாத காட்சிப் படிமங்களைக் கொண்ட பகுதி அது.

கடைசியில் சீனேவின் கிராமத்தை வந்தடைகிறான் செய்யத். கொட்டடியில் அவளைச் சந்திக்கிறான். “ஊரில் என் மானமே போய் விட்டது; எப்படி நீ சைத்தானின் இச்சைக்கு மசிந்தாய்? நான் உன்னைக் கொலை செய்ய வரவில்லை. கடவுள்தான் உன்னைத் தண்டிக்க வேண்டும்” என்கிறான். அவன் கேட்டுக் கொண்டதால் சீனேவின் தந்தை அவள் குளிப்பதற்கு அனுமதிக்கிறார். “அவளை மன்னித்து விடாதே; மன்னித்தால் உன்னை என் மரணத்துக்குப் பிறகும் வந்து துன்புறுத்துவேன்” என்கிறார். அவரைப் பொறுத்தவரை மனித உறவுகளை விட குடும்ப மானம்தான் பெரிது. செய்யத் சீனேவையும் மகனையும் அழைத்துக் கொண்டு திரும்பவும் தன் ஊருக்குச் செல்கிறான். திரும்பவும் பனிப்பாலை. சீனேவின் கால்களும் கைகளும் ஒவ்வொன்றாக மரத்துப் போகிறது. செய்யதிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்கிறாள். குதிரை இறந்து போன இடம் வருகிறது. கழுகுகளும் ஓநாய்களும் குதிரையின் மாமிசத்தைத் தின்று விட அதன் எலும்புக் கூடு மட்டுமே மிஞ்சிக் கிடக்கிறது. “செய்யத், நான் கொட்டடியில் கிடக்கும் போது மரணம் வேண்டியிருந்தது; மரணமே விடுதலையாக இருந்தது. ஆனால் இப்போது உன் அன்பு கிடைத்த பிறகு எனக்கு வாழ வேண்டும் என்ற ஆசை வந்து விட்டது. என் உடம்பை மிருகங்கள் தின்னக் கொடுத்து விடாதே” என்று கெஞ்சுகிறாள் சீனே. அவளை முதுகில் சுமந்து கொண்டு நடக்கிறான் செய்யத்.

சமூகத்தின் ஒழுக்க விதிகளை மீறிய பெண்கள் துருக்கியில் எத்தனை கீழ்த்தரமாக நடத்தப்படுகிறார்கள் என்பதை சீனேவின் கதை மூலம் விளக்குகிறார் குனே. சீனேவை அவள் கணவன் செய்யத் தன்னுடன் அழைத்துச் செல்ல முடிவெடுக்கும் போது அவர்களின் மகனே, “அம்மா ஒரு சைத்தான்; அவளை அழைத்துச் செல்ல வேண்டாம்” என்று சொல்லித் தடுக்கிறான்.

பனிப்பாலையில் செய்யத், சீனேவை முதுகில் சுமந்து நடந்தாலும் குளிர் தாங்க முடியாமல் கடைசியில் இறந்து போகிறாள் சீனே. சிறையிலிருந்து விடுமுறையில் வந்த மற்ற நால்வரில் ஒருவன் முகமத் சாலி. அவன் சிறைக்குப் போனது எப்படியென்றால், அவனும் அவன் மைத்துனனும் திருடச் செல்லும் போது ஊராரிடம் மாட்டிக் கொள்கிறார்கள். அப்போது சாலி மைத்துனனை விட்டு விட்டு ஓடி விடுகிறான். அவன் அப்படி ஓடாமல் இருந்திருந்தால் தங்கள் மகன்

https://telegram.me/aedahamlibrary

உயிரோடு இருந்திருப்பான் என்று நினைத்து சாலியை அவன் மனைவி எமின் வீட்டில் வெறுக்கிறார்கள். விடுமுறையில் எமினையும் மகனையும்தான் பார்க்க வந்திருக்கிறான் சாலி. துரோகி என்று சொல்லி அடித்து விரட்டுகிறார்கள் எமின் வீட்டில். ஆனால் எமின் அவனைப் புரிந்து கொள்கிறாள். இரவோடு இரவாக எமினை அழைத்துக்கொண்டு வேற்றூருக்குக் கிளம்புகிறான் சாலி. எமின் திருட்டுத்தனமாகப் போய் விட்டதால், ஏன் நம் மகளை சரியாகக் கண்காணிக்கவில்லை என்று சொல்லி எமினின் தந்தை தன் மனைவியை ஓட ஓட விரட்டி அடிக்கிறார். இப்படி படத்தின் ஒவ்வொரு தருணத்திலும் துருக்கியில் பெண்களின் நிலையை விவரிக்கிறார் குனே.

பல காலம் ஒருவருக்கொருவர் ஸ்பரிசமே இல்லாத சாலியும், எமினும் ரயிலின் கழிப்பறைக்குள் சென்று உறவு கொள்கிறார்கள். அதை சகபயணி ஒருவர் பார்த்து விட, இரண்டு 'ஒழுக்கமற்றவர்களையும்' அடித்தே கொல்வதற்கு சகபயணிகள் முயற்சிக்கும் போது ரயில்வே அதிகாரி அவர்களைக் காப்பாற்றுகிறார். ஆனால் இறந்து போனவ னின் தம்பி (எமினின் தம்பி) அதே ரயிலில் ஏறி வந்து சாலியையும் எமினையும் சுட்டுக் கொல்கிறான்.

சிறையிலிருந்து கிளம்பும் ஐவரில் இளையவனான யூசுப் தன் மனைவியைக் காண்பதற்காக வெகுதூரம் செல்கிறான். ஆனால் அடையாள அட்டையைத் தொலைத்து விட்டதால் கைது செய்யப்பட்டு மீண்டும் சிறைக்கு அனுப்பப்படுகிறான். இந்தக் கதைகளைச் சொல்லும் போதே, துருக்கியின் சமூகநிலையையும் காண்பித்துக் கொண்டே போகிறார் இயக்குனர். உதாரணமாக, தியார்பாகிர் ரயில்வே ஸ்டேஷனில் சிறுவர்கள் பண்டங்களைக் கூவிக் கூவி விற்கிறார்கள். நாடெங்கும் பிச்சைக்கார சிறுவர்கள், பிச்சைக்காரர்கள், சேரிகள், குடிசைகள். தெருக்களில் நான்கு வயது கூட ஆகியிராத சிறு குழந்தைகள்கூட சிகரெட் குடிக்கின்றன. அக்காட்சிகள் இந்தப் படத்துக்காக எடுக்கப்படவில்லை. ஆவணப்படத்தைப் போல் வருகின்றன அக்காட்சிகள். இத்தனை துயரமான படத்திலும் ப்ளாக் ஹ்யூமருக்குப் பஞ்சமில்லாமல் இருக்கிறது. யூசுப் தன்னுடைய அடையாள அட்டையைத் தன் சகாக்களிடன் காண்பித்து, என்னைக் கொலைகாரனைப் போல் போட்டோ எடுத்திருக்கிறான் பார் என்கிறான். நீ என்ன செய்து விட்டு ஜெயிலுக்குப் போனாய் என்று கேட்கிறான் ஒருவன். ஒருவனைக் கொலை செய்தேன் என்று அப்பாவியாக பதில் சொல்கிறான் யூசுப்.

இந்தப் படத்தின் மூலம் குனே சொல்ல வரும் செய்தி என்னவென் றால்,

https://telegram.me/aedahamlibrary

ராணுவ ஆட்சியின் போது துருக்கியின் சிறைச்சாலைகளை விட துருக்கி என்ற தேசம் மனிதர்களின் உயிருக்குப் பாதுகாப்பு இல்லாததாக இருந்தது என்பதுதான். உதாரணமாக, ஐவரில் ஒருவனான ஓமர் தன் கிராமத்துக்கு வந்து பார்க்கும் போது அந்த கிராமமே காணாமல் போயிருக்கிறது. போரில் சிதைந்து போன குடிசைகள் வெற்றுச் சுவர்களாக நின்று கொண்டிருக்கின்றன. ஊர் மக்கள் ராணுவத்தால் கொல்லப்பட்டிருந்தார்கள். கொல்லப்படாத வர்கள் குர்துக்களின் புரட்சிப் படையில் சேர்ந்திருந்தார்கள். (துருக்கியில் குர்து இனத்தவரின் நிலை இப்போதும் அப்படித்தான் இருக்கிறது.) அப்போது ஓமருக்கு இரண்டு வழிகள் இருந்தன. ராணுவத்தால் கொல்லப்பட்ட தன் சகோதரனின் மனைவியை மணந்து கொண்டு, சிறைக்குத் திரும்பிப் போய் தண்டனையை அனுபவித்து விட்டு வந்து அவளோடு வாழலாம். அல்லது, புரட்சியாளர்களோடு சேரலாம். ஓமர் இரண்டாவது வழியைத் தேர்ந்தெடுக்கிறான்...

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

26

Blue is the Warmest Colour (2013)

Abdellatif Kechiche

உலக வரைபடத்தைப் பார்த்தால் வட ஆஃப்ரிக்காவில் கண் ணுக்கே புலப்படாத ஒரு சிறிய நாடாகத் தெரியும் துனீஷியா. பெரும்பான்மை மக்கள் இஸ்லாமியர். இருந்தாலும் அது

ஃப்ரெஞ்ச் காலனியாக இருந்ததால் மதரீதியான கட்டுப்பாடுகள் அதிகம் இல்லை. துனீஷியாவில் சினிமா என்பதன் அர்த்தம் நம் நாட்டில் இருப்பதைப் போல் அல்ல. அங்கே சினிமா என்றால் கலை வெளிப்பாட்டுக்கான ஒரு சாதனம்; அடக்குமுறைக்கு எதிரான ஒரு போராட்ட ஆயுதம்; மானுட சுதந்திரத்துக்கான ஒரு பணிக்களம். அதற்காக முக்கிய நகரங்களில் சினிமா சங்கங்களை உருவாக்கி, அதன் மூலம் புதிய சினிமாவை உருவாக்குகிறார்கள். "ஆயுதங்களின் மூலமாக அல்ல, சினிமாவின் மூலம் எங்கள் வலிகளையும் வேதனைகளையும் உலகுக்குச் சொல்லுவோம்" என்கிறார்கள் துனீஷியாவின் சினிமாக் கலைஞர்கள். உதாரணமாக, மாஹர் பென் கலிஃபா என்ற 17 வயது இளைஞர். இவருடைய குறும்படம் நாய்களுக்கான கறி (Kari for dogs). ஈராக்கின் அபு காரிப் என்ற சிறையில் இருந்த நாய்களுக்கு சித்ரவதையின் போது இறந்து போன கைதிகளின் உடலிலிருந்து உணவு தயாரிக்கப்பட்டது என்ற விஷயத்தைச் சொல்கிறது இந்தப் படம்.

ஹிச்சம் பென் அமர் என்பவர் துனீஷியாவின் முக்கியமான இயக்குனர். இவரது படங்கள் கற்பனைக்கும் எதார்த்தத்துக்கும் இடையே ஊடாடுபவை. குறிப்பாக மெம்வார் நுவார் (கறுப்பு நினைவுகள்) என்ற ஆவணப் படம், 1957-இலிருந்து 1987 வரை துனீஷியாவின் சர்வாதிகாரியாக இருந்த ஹபீப் புர்கீபாவின் ஆட்சியில் நடந்த சித்ரவதைகளைக் காண்பிக்கிறது. தன்னை விமர்சிப்பவர்களை அவர் தேசத்துரோகிகளாக அறிவித்து சிறையில் அடைத்துப் பலவிதமாக

https://telegram.me/aedahamlibrary

சித்ரவதை செய்தார்.

உலக சினிமா பற்றிப் பேசும் போது கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான துனீஷிய இயக்குனர்கள் அப்துல்லத்தீப் பென் அமர், ரிதா பேஹி, மூஃபிதா த்லாத்லி, நாசர் கமீர், நூரி பூஸித், ஃபரீத் பூகதீர், ரஜா அமரி, அப்துல்லத்தீஃப் கெச்சிச்சே ஆகியோர். இவர்களில் கெச்சிச்சே மற்றவர்களை விட சர்வதேச அளவில் பிரபலமானவர். இவருடைய படம்தான் கான் திரைப்பட விழாவில் பாம்தோர் விருது பெற்ற ப்ளூ இஸ் தெ வார்மஸ்ட் கலர்.

ஜூலி மேரோ எழுதிய கிராஃபிக் நாவலையும் பியர் மாரிவா எழுதிய மரியனின் வாழ்க்கை என்ற 18-ஆம் நூற்றாண்டு நாவலையும் அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட படம் ப்ளூ. படக் கதை என்று சொல்கிறோம் அல்லவா, அதுதான் கிராஃபிக் நாவல். ஆனால் தமிழில் அந்த வகை இன்னும் சரியாக வளரவில்லை. அதெல் என்ற கல்லூரி மாணவியின் கதையைச் சொல்வதிலிருந்து துவங்குகிறது இந்த மூன்று மணி நேரப் படம். இதை ஒரு காதல் கதை என்பதை விட இளைஞர்களின் வாழ்வில் ஏற்படும் 'ஆன்வீ' (ennui) என்கிற விரக்தி கலந்த சோர்வையும் தனிமை உணர்வையும் சொல்லும் படம் என்று சொல்லலாம்.

ஃப்ரெஞ்சில் 'ஜூ ந ஸே க்வா' (je ne sais quoi) என்று ஒரு பிரயோகம் உண்டு. அதன் பொருள், 'என்னன்னே தெரியல, ஒரு மாதிரி இருக்கு' என்ற அபத்த மனநிலை. இதுதான் படத்தின் கரு. இம்மனநிலை ஃப்ரெஞ்ச் இளைஞர்களிடம் ஏன் ஏற்படுகிறது? படத்தில் ஒரு பாடலின் மூலம் சொல்லப்படும் காரணங்கள்: அந்த இளைஞர்கள் நாடற்றவர்கள்; காசு பணம் இல்லாதவர்கள்; முதியோரால் ஒடுக்கப்படுபவர்கள். தங்கள் சொந்த தேசத்தை விட்டு அந்நிய மண்ணில் வாழ்வதன் துயரமும் இதோடு சேரும்.

அதெல் ஒரு கீழ்த்தட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவள். தினமும் டவுன் பஸ்ஸைப் பிடித்து நீண்ட தூரத்தில் இருக்கும் கல்லூரிக்குச் செல்லும் 19 வயது மாணவி. கல்லூரியில் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். சிகரெட் குடிக்கிறார்கள். ஆண்களும் பெண்களும் டேட்டிங் செல்கிறார்கள். ஆனால் அதெலுக்கு இதிலெல்லாம் திருப்தி இல்லை. மற்றபடி அவளுடைய கனவு ஒரு ஆசிரியையாக ஆக வேண்டும் என்பதுதான்.

அதெல் மற்றும் அவளை ஒத்த பதின்பருவ மாணவர்களின் வெறுமைக்குக் காரணங்களாக இயக்குனர் பல்வேறு காரணங்களைப் பதிவு செய்கிறார். முக்கியமாக, சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வும் அகதி

https://telegram.me/aedahamlibrary

வாழ்க்கையும். மக்ரிப் நாடுகள் என்று சொல்லப்படும் வட கிழக்கு ஆஃப்ரிக்க நாடுகள் ஃப்ரெஞ்ச் காலனியாக இருந்ததால் அந்த நாட்டு மக்கள் இன்று ஃப்ரான்ஸுக்கு பிழைப்புத் தேடி புலம் பெயர்ந்து வந்து கொண்டிருக்கின்றனர். நாங்கள் வீடு அற்றவர்களாக, முகமற்றவர்களாக, தேசமற்றவர்களாக இருக்கிறோம் என்று ஒரு பாடலில் அவர்கள் தங்கள் நிலையை வெளிப்படுத்துகிறார்கள்.

இயக்குனர் அப்துல்லத்தீஃப் கெச்சீசேவுக்கு கான் திரைப்பட விழாவின் பாம்தோர் விருது கொடுக்கப்பட்ட போது விருதுக் குழுவின் நடுவராக இருந்த ஸ்டீவன் ஸ்பீல்பர்க் அந்த விருது, படத்தில் நடித்த இரண்டு பெண்களுக்கும் கூட பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும் என்று சொன்னார். அந்த அளவுக்கு அதெலும் அவரது காதலியாக நடிக்கும் லேயாவும் நடித்திருந்தனர். ஆம், அதெல் தன்னுடைய பாலின அடையாளத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக மற்றொரு பெண்ணின் மூலமே கண்டு கொள்கிறாள். அவளுக்கு ஆண்களிடம் ஈடுபாடு இல்லை. மாறாக, எம்மா என்ற கல்லூரி மாணவியிடம் (லேயா) காதல் வயப்படுகிறாள் அதெல். படத்தில் வரும் பாலியல் காட்சிகள் பற்றி பல சர்ச்சைகள் எழுந்தன. ஆனால் எத்தனையோ வணிகப் படங்களில் பெண்ணின் உடல் வெறும் கேளிக்கைப் பண்டமாகத்தான் காண்பிக்கப்படுகிறது. ஆனால் இந்தப் படத்தில் அப்படி இல்லை.

அதெல் கூச்ச சுபாவம் உள்ள ஒரு பள்ளி இறுதியாண்டு மாணவி. எம்மா ஓவியக் கல்லூரியில் இறுதி ஆண்டு படிப்பவள். அவள்தான் அதெலுக்குப் பல்வேறு விஷயங்களைக் கற்பிக்கிறாள். ஒருநாள் அதெல் எம்மாவுடன் பள்ளியிலிருந்து கிளம்புவதைப் பார்த்து விட்டு அதெலின் சக மாணவிகள் அவளை மிகக் கேவலமாகப் பேசி அவமானப்படுத்துகிறார்கள். எம்மா மேட்டுக்குடியைச் சேர்ந்தவள். அதெல் உழைக்கும் வர்க்கம். எம்மாவின் வீட்டுக்கு அதெல் வரும் போது எம்மாவின் பெற்றோர் அவர்கள் இருவரைப் பற்றியும் நன்கு தெரிந்தும் அதை இயல்பாக எடுத்துக் கொள்கின்றனர். ஆனால் எம்மா அதெல் வீட்டுக்கு வரும் போது அதெலின் பெற்றோரிடம் எம்மா பற்றி பல்வேறு பொய்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

தன்பால் கவர்ச்சிக்கு எதிராக வைக்கப்படும் வாதங்களில் ஒன்று, அது கடைசியில் தோற்று விடும் என்பது. எல்லா முதல் காதல்களுமே தோற்று விடும் என்பது போல் அதெல்-எம்மா காதலும் படத்தின் இறுதியில் முடிவுக்கு வருகிறது. ஆனாலும் படத்தின் செய்தியாக நான் கருதுவது, மனித சுதந்திரம். அதெலும் எம்மாவும் ஒருமுறை ஜான் பால் சார்த்தரின் எக்ஸிஸ்டென்ஷியலிசம் பற்றிப் பேசிக் கொள்கிறார்கள்.

https://telegram.me/aedahamlibrary

மனித வாழ்க்கை முதலில் வந்ததா, மனித வாழ்வின் அர்த்தம் முதலில் வந்ததா என்று கேட்கிறார் சார்த்தர். இது பற்றி எம்மா விரிவாகப் பேசும் போது, “எனக்கு இந்தத் தத்துவமெல்லாம் தெரியாது; முட்டை முதலில் வந்ததா, கோழி முதலில் வந்ததா என்று சொன்னால்தான் எனக்குப் புரியும்” என்கிறாள் அதெல்.

அதெலும் எம்மாவும் சேர்ந்து வாழ ஆரம்பிக்கின்றனர். அதெல் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான பள்ளி ஆசிரியையாக ஆகிறாள். ஆனால் எம்மா மேட்டுக்குடி பெண் என்பதால் அவளுடைய ஓவிய நண்பர்களுடனும் புத்திஜீவிகளுடனும் அவள் வாழ்க்கை உயர்ந்து கொண்டே போகிறது. அதெலும் தன்னைப் போல் ஒரு புத்திஜீவியாக மாற வேண்டும் என்று எதிர்பார்க்கிறாள் எம்மா. ஆனால் அதெலுக்கு எம்மாவின் மேட்டுக்குடி வாழ்க்கை போலியாகப் படுகிறது. அதெலை மீண்டும் சூழ்கிறது தனிமை. ஒரு கட்டத்தில் அதெலை வீட்டை விட்டுத் துரத்துகிறாள் எம்மா. அப்போதும் தன் பள்ளிக்கூடத்திலுள்ள சிறு குழந்தைகளோடு பழகுவதைப் பெரிதாக நினைக்கிறாள் அதெல்.

அதெலுக்கு அன்பும் எம்மாவுக்கு லௌகீக வெற்றியும் தங்கள் வாழ்வின் அர்த்தமாகத் தோன்றுவதை மிகவும் வலுவாகக் காண்பித்திருக்கிறார் இயக்குனர். மூன்று மணி நேரம் ஓடும் இந்தப் படத்தை ஒருமுறை பார்த்தால் எந்நாளும் மறக்கவியலாது.

https://telegram.me/aedahamlibrary

27

Metropolis (1927)

Fritz Lang

சினிமா உலகின் மேதைகளில் ஒருவரான ப்ரிட்ஸ் லாங் (1890-1976) ஆஸ்திரியாவை சேர்ந்தவர். இவரது மெட்ரொபொலீஸ், சினிமா உலகின் முதல் சயின்ஸ் பிக்ஷன் படமாகவும், பேட்மேன் போன்ற படங்களுக்கு முன்னோடியாகவும் விளங்குகிறது.

இந்தப் படத்தின் பாணியில் இதுவரை நூற்றுக்கணக்கான படங்கள் எடுக்கப்பட்டு விட்டன; தமிழின் எந்திரன் உட்பட. இரண்டரை மணி நேரம் ஓடக்கூடிய மவுனப்படமான மெட்ரொபொலீஸின் ஒரிஜினல் பிரின்ட், படம் வெளியான உடனேயே காணாமல் போய் விட்டது. கிடைத்த பிரின்டில், படத்தின் கால் பகுதியை காணோம். பிறகு, 2008இல் தான் அர்ஜென்டினாவின் புவனோஸ் அய்ரஸ் நகரில் உள்ள ஒரு அருங்காட்சியகத்தில் படத்தின் மூல நகல் முழுமையாகக் கிடைத்தது. இப்போதுள்ள தொழில்நுட்ப வசதிகள் எதுவும் இல்லாத காலத்தில் எடுக்கப்பட்டதாக இருந்தாலும், இந்தப் படம் ராட்சசத்தனமான பிரமாண்டத்தைக் கொண்டிருக்கிறது.

கதை நடப்பது 2026இல். அதாவது படம் எடுக்கப்பட்ட ஆண்டிலிருந்து சரியாக நூறு ஆண்டுகள் கழித்து ஒரு நகரம் எப்படி இருக்கும் என்பதை வானளாவிய கட்டடங்கள், நீண்ட மேம்பாலங்கள், பிரமாண்டமான விளையாட்டு அரங்குகள் மூலமாக அப்போதே தன் சினிமாவில் உருவாக்கிவிட்டார் லாங். இது தவிர, படத்தில் 25 ஆயிரம் துணை நடிகர்களும் நடித்திருக்கின்றனர். பிரம்மாண்டம் என்ற விஷயத்தின் சாட்சியாக விளங்குகிறது மெட்ரொபொலீஸ்.

ஹிட்லருக்கும் நாஜிகளுக்கும் பிடித்த ஒரு விஷயம் பிரம்மாண்டம். ஏனென்றால், பிரம்மாண்டம் என்பது அதிகாரத்தின் குறியீடு. அதிலும், சர்வாதிகாரியாக இருந்தால் பிரம்மாண்டம்தான் அந்த ஆட்சியின்

https://telegram.me/aedahamlibrary

ஆணிவேர். காரணம், அதிகாரமும் அச்சுறுத்தலும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள். ஒன்றில்லாமல் ஒன்று இல்லை. அதனால், மெட்ரொபொலீஸ் அதிகாரத்துக்கு எதிரான படமாக இருந்தாலும், நாஜிகளுக்கு அந்தப் படம் பிடித்து விட்டது.

ஃப்ரிட்ஸ் லாங்கை அழைத்த கோயபல்ஸ் தங்கள் ஆட்சியின் ஆஸ்தான சினிமா கலைஞராக இருக்கும்படி சொன்னார். ஆனால், அதை மறுத்து விட்ட லாங் அன்று இரவே ஜெர்மனியிலிருந்து தப்பி பாரிஸ் போனார். பின் அங்கிருந்து கிளம்பி ஹாலிவுட் போய்ச் சேர்ந்தார். அதன்பின் அமெரிக்காவே அவரது நிரந்தரமான வசிப்பிடமாயிற்று.

இந்த இடத்தில் ஒரு விஷயத்தை நினைவு கூர வேண்டும். ஹிட்லரைச் சுற்றி ஒரு புத்திஜீவிகளின் கூட்டம் இருந்தது. அவர்களே ஹிட்லரின் யூத எதிர்ப்பு/மனித விரோதக் கொள்கைகளுக்கு கோட்பாட்டு விளக்கங்களைக் கொடுத்துக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் லெனி ரீஃபன்ஸ்தால். இவருடைய Triumph of the Will (1935) என்ற படத்தில் மெட்ரொபொலீஸின் தாக்கத்தைக் காணலாம். லெனியின் படத்தைத் தயாரித்தவர் ஹிட்லர்.

மெட்ரொபொலீஸ் என்ற நகரில் பெரும் பணக்காரர்கள் மற்றும் அடிமைத் தொழிலாளர்கள் என்று இரண்டு வகையான மனிதர்கள் வாழ்கின்றனர். அடிமைத் தொழிலாளர்கள் நகரின் கீழே பாதாளக் கிடங்குகளில் வசிக்கின்றனர். பிரடெர்சன் என்பவர்தான் நகரின் அதிபர், சர்வாதிகாரி. அவரது மகன் பிரடர் எந்த வேலையும் செய்யாமல் உல்லாசமாகப் பொழுதைக் கழிப்பவன். அப்படி ஒருநாள் அவன் ஒரு உல்லாசப் பூங்காவில் இருக்கும்போது, தொழிலாளர்களின் குழந்தைகளை அழைத்துக் கொண்டு நகரின் மேற்புறத்தில் இருக்கும் பூங்காவுக்கு வருகிறாள் மரியா.

மரியாவின் அழகில் தன்னைப் பறிகொடுக்கும் பிரடர் அந்த நகரின் இரண்டு பகுதிகளையும் இயக்கிக் கொண்டிருக்கும் விஞ்ஞானியான ரோட்வாங் பற்றித் தெரிந்துகொள்கிறான். பின் பிரடர் அந்த பாதாள உலகத்துக்குச் சென்று அடிமைத் தொழிலாளர்களின் விடுதலைக்காகப் பாடுபடும் மரியாவுக்குத் துணை செய்கிறான்.

இதற்கிடையில் விஞ்ஞானி ரோட் வாங் ஒரு ரோபோவை உருவாக்கி, மரியாவைப் பிடித்து அவளுடைய முகத்தை ரோபோவுக்குப் பொருத்தி விடுகிறான். தன் மூலம் மரியாவைப் பின்பற்றும் தொழிலாளர்களை அடக்கிவிடலாம் என்பது அவன் திட்டம்.

மெட்ரொபொலீஸைப் பார்க்கும் எவருக்கும் கணினி கண்டு

https://telegram.me/aedahamlibrary

பிடிக்கப்படாத காலத்தில் எப்படி இத்தனை பிரம்மாண்டத்தைக் காட்சிப்படுத்த முடிந்தது என்ற சந்தேகமும் வியப்பும் தோன்றும். யூஜன் ஷஃப்டன் என்ற ஜெர்மானியர் மெட்ரொபொலீஸ் படத்துக்காகவே முதன்முதலில் ஒரு டெக்னிக்கைக் கண்டுபிடித்தார். (அதனால் அதற்கு ஷஃப்டன் ப்ராஸஸ் என்றே பெயரிடப்பட்டது.) அதாவது, ஷஃப்டனும் லாங்கும் தங்களுக்குத் தேவையான பிரம்மாண்டத்தை 'மினியேச்சர்' செட்டுகளாக உருவாக்கிக் கொண்டு, கேமரா லென்ஸுக்கு 45 டிகிரி கோணத்தில் ஒரு கண்ணாடியை வைத்து கேமராவின் வியூஃபைண்டர் மூலம் நடிகர்களை வைக்கும் இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். அதன் பிறகு மேலும் சில கண்ணாடிகளை வைத்து, அவற்றின் பிம்பங்களின் மூலம் நிஜமான அளவை பிரம்மாண்டமாக்கினார் ஷஃப்டன். இப்படி பல தொழில்நுட்ப சாதனைகளைக் கொண்டது மெட்ரொபொலீஸ்.

படத்தின் மற்றொரு சிறப்பு, எந்த ஒரு தேசத்துக்கு மட்டுமாக இல்லாமல், எந்த ஒரு காலத்துக்கு மட்டுமாக இல்லாமல் எல்லா தேசத்துக்கும் எல்லா காலத்துக்கும் பொருந்துவதாக இருக்கிறது மெட்ரொபொலீஸ். உதாரணமாக, ஒரு தேசத்தின் புத்திசாலிகளும் படித்தவர்களும் எந்த அளவுக்கு சமூகத்தின் ஓரத்துக்குத் தள்ளப்பட்ட பெருவாரி மக்களிடம் கருணையோடும் அன்போடும் இருக்கிறார்கள் என்ற கேள்விதான் படம் நெடுகிலும் அடிச்சரடாக ஓடுகிறது. மெட்ரொபோலிஸ் நகரின் மேல்பக்கத்தில் வானளாவிய கட்டிடங்களின் இடையே - ஆகாயத்தில் மிதப்பது போன்ற பாலங்களில் வாகனங்கள் செல்கின்றன. கட்டிடங்களுக்கு இடையே வானவூர்திகள் பறக்கின்றன. நகர அதிபர் பிரடெர்சனின் வாய்மொழி உத்தரவுகளையும் பேச்சுக்களையும் மூன்று உதவியாளர் கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். பிரடெர்சனின் வேகம் உதவியாளர்களில் ஒருவருக்கு வியர்வையை வரவழைக்கிறது. அடிக்கடி கைத்துணியால் நெற்றியைத் துடைத்துக் கொள்கிறார். இத்தனை அறிவும் புத்திசாலித்தனமும் இருந்தும் பிரடெர்சன் என்ன செய்கிறார்? பெரும் மக்கள் கூட்டத்தை அடிமையாக்கி பாதாளத் தொழிற்சாலைகளில் போட்டு விட்டு பணக்காரர்களின் உலகைக் கட்டமைக்கிறார். கீழே தொழிலாளர்கள் வாய் பேசாத ஊமைகளாக ரோபோக்கள் போலவே ஒரே அச்சில் வார்க்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால் தன் தந்தையைப் போல் 'அறிவு' இல்லாத பிரெடர் அந்த அடிமைகளின் மீது அக்கறை கொள்கிறான். "இத்தனை பிரம்மாண்டமான நகரை உருவாக்கிய தொழிலாளர்கள் என்

https://telegram.me/aedahamlibrary

சகோதரர்கள் இல்லையா? அவர்களும் நம்மோடு இங்கே இந்த நகரத்தில் வாழ வேண்டாமா?” என்று தந்தையிடம் கேட்கிறான். அவரோ, “அவர்கள் எங்கே இருக்க வேண்டுமோ அங்கேதான் இருக்கிறார்கள்” என்கிறார்.

மெட்ரொபொலீஸ் ஒரு நாவலைத் தழுவி எடுக்கப்பட்டது. மூன்று மணி நேரம் ஓடக் கூடிய இப்படத்தின் இப்போதைய பிரதி இரண்டரை மணி நேரமே ஓடக் கூடியதாக இருக்கிறது. அரை மணி நேரப் படம் நிரந்தரமாகத் தொலைந்து விட்டது. எந்திரன் போன்ற படங்களின் தொழில்நுட்பத்தைப் பார்த்து பலரும் பிரமித்தார்கள். ஆனால் மெட்ரொபொலீஸைப் பார்த்தால் தெரியும், எந்திரனின் ஒரிஜினல் 90 ஆண்டுகளுக்கு முன்பு இயக்குனர் ஃப்ரிட்ஸ் லாங்கால் எடுக்கப்பட்டது என்று.

படத்தின் முக்கியமான காட்சிகளில் ஒன்று, பிரெடர் பாதாள உலகுக்கு வரும் போது அங்கே ஒரு தொழிற்சாலை விபத்து ஏற்படுகிறது. பல தொழிலாளர்கள் சாகிறார்கள். ஆனால் யாருக்கும் அந்த மரணங்கள் பற்றிக் கவலையில்லை. ராட்சஸ எந்திரம் எப்போதும் வேலை செய்து கொண்டே இருக்க வேண்டும். ஒரு நிமிடம் கூட நிற்கக் கூடாது. அதனால் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் செத்தும் கூட அடுத்த வரிசைத் தொழிலாளர்கள் எந்திரத்தின் முன்னே அனுப்பப்படுகிறார்கள். எந்திரம் நிற்கக் கூடாது. நின்றால் நகரம் ஸ்தம்பித்து விடும். இந்த மொத்த சம்பவத்தையும் பிரெடர் வேறொரு விதமாகக் கற்பனை செய்கிறான். ஒரு பிசாசின் பசியைத் தணிப்பதற்காக நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் அதன் வாய்க்குள் அனுப்பப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

இதை நாம் எல்லா சமூகங்களின் வரலாற்றோடும் ஒப்பு நோக்க வேண்டும். நூற்றாண்டு நூற்றாண்டுகளாய் சமூகத்தின் மைய நீரோட்டத்திலிருந்து விலக்கப்பட்டவர்களின் வாழ்க்கை எப்படி இருந்திருக்கிறது? ஃப்ரிட்ஸ் லாங் தன் படத்தில் அதற்கு ஒரு தீர்வைத் தருகிறார். மூளைக்கும் (சிந்தனையாளர்கள், ஆட்சியாளர்கள்) கைகளுக்கும் (தொழிலாளர்கள்) இடையில் புகுந்து இரண்டையும் இணைக்க வேண்டியது எது? இதயம் என்கிறார் இயக்குனர்.

https://telegram.me/aedahamlibrary

28

An Andalusian Dog (1929)

Luis Buñuel

சினிமா உலகின் மேதைகளில் ஒருவரான லூயிஸ் புனுவல் (1900-1983) ஸ்பெய்ன், மெக்ஸிகோ, ஃப்ரான்ஸ் ஆகிய மூன்று நாடுகளிலும் வாழ்ந்து திரைப்படங்களை உருவாக்கியவர். புனுவல் இயக்கிய 33 படங்களில் 15 படங்களாவது கிளாசிக் என்ற ரகத்தைச் சேர்ந்தவை. 1929-இல் அவர் எடுத்த முதல் படம் ஒரு அந்தாலூசியன் நாய். அது சால்வதோர் தாலியுடன் இணைந்து எடுத்தது. தன்னுடைய உருகும் கடிகார ஓவியங்களுக்காகவும், முகத்தில் இரண்டு கம்பிகளைப் போல் ஆகாயத்தை நோக்கி நீண்டிருந்த கத்தி மீசைக்காகவும் பிரபலமானவர் சால்வதோர் தாலி. சர்ரியலிசப் பாணி ஓவியங்களின் பிதாமகர். 16 நிமிடங்கள் மட்டுமே ஓடும் மௌனப்படமான ஒரு அந்தாலூசியன் நாயை மௌனப்பட உலகின் சாதனையாகக் கருதுகிறார்கள் விமர்சகர்கள். புனுவலின் மேதமைக்கு இன்னொரு உதாரணம், அவர் தன்னுடைய 77-ஆவது வயதில் - முதல் படம் வெளிவந்து 48 ஆண்டுகள் கழித்து எடுத்த தட் ஆப்ஸ்கியூர் ஆப்ஜெக்ட் ஆஃப் டிசைர் என்ற கடைசிப் படமும் சர்வதேச அளவில் பல பரிசுகளை வென்றது.

மற்ற இயக்குனர்களுக்கும் புனுவலுக்கும் உள்ள வித்தியாசம் என்ன வென்றால், ஒரு கலை வெளிப்பாடு என்பது பார்வையாளருக்குப் புரியவேண்டிய அவசியம் இல்லை என்பது புனுவலின் கருத்து. காரணம், புனுவலின் படைப்பு உலகம் அவரது கனவுகளை அடிப்படையாகக் கொண்டது. ஒரு முழுநிலவை மேகக்கீற்று ஒன்று

https://telegram.me/aedahamlibrary

வெட்டிக் கொண்டு செல்வது போல் அவர் ஒரு கனவு கண்டார். அந்தாலூசியன் நாயில் ஒரு பெண்ணின் கண்ணைக் கத்தி கொண்டு அறுப்பான் ஒருவன். அவர் கண்ட கனவுதான் இந்தக் காட்சிக்குக் காரணம். இன்னொரு காட்சியில் ஒருவன் ஒரு பெரிய பியானோவை இழுத்துக் கொண்டு வருகிறான்; அதன் மேல் இரண்டு பாதிரிகளும் இறந்து போன கழுதையும் இருக்கும். இக்காட்சிகளை நாம் எதார்த்த பாணியிலேயே பார்த்து மிரண்டு இயக்குனரைத் திட்டக் கூடாது. சர்ரியலிச ஓவியம், சினிமா எல்லாமே எதார்த்த உலக தர்க்கங்களுக்கு அப்பாற்பட்டது. மேலும், கத்தி, கண் என்பதெல்லாம் பாலியல் குறியீடுகள்.

புனுவலும் தாலியும் மற்ற சர்ரியலிஸ்டுகளும் ஏன் இதைச் செய்தார்கள் என்றால் அதற்கும் புனுவலே தன் சுயசரிதையில் பதில் சொல்கிறார். “நாங்கள் எங்களை பயங்கரவாதிகளைப் போல் கருதிக் கொள்ளவில்லை; ஆனால் நாங்கள் வெறுத்த இந்த சமூகத்தோடு இப்படித்தான் போராடினோம். நாங்கள் துப்பாக்கிகளை எடுக்கவில்லை; அதற்கு மாறாக கடுமையான சர்ச்சைகளையும் அதிர்ச்சிகளையும் ஏற்படுத்தினோம்.” அதிர்ச்சிக்காகவே புனுவல் பல காட்சிகளை உருவாக்கினார். மற்றொரு படத்தில் ஒரு விருந்தின் போது அங்கே வந்திருப்போர் அனைவரும் பொது ஹாலிலேயே மலஜலம் கழிப்பார்கள். புனுவலின் சில படங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத பல சம்பவங்களின் தொகுப்பாக இருக்கும். இதை நான்லீனியர் என்று சொல்கிறார்கள். அந்தாலூசியன் நாயின் கதை என்ன என்றால், அதன் 16 நிமிடங்களில் வரும் பல காட்சிகளை மட்டுமே சொல்ல முடியும். வேறு கதை எதுவும் கிடையாது. ஒரு மனிதனின் உள்ளங்கையில் உள்ள எறும்புகள், சைக்கிளில் செல்லும் ஒரு திருநங்கை, முடி அடர்ந்த அக்குள், ஒரு பெண்ணை பலாத்காரம் செய்ய முயலும் ஆண் என்று பல காட்சிகள். ஆனால் பல மனோதத்துவ நிபுணர்கள் இந்தப் படத்தில் வரும் ஒவ்வொன்றுக்குமே அர்த்தம் இருக்கிறது என்றும் அவையெல்லாமே வேறு ஒன்றின் குறியீடாக வருகின்றன என்றும் சொல்கிறார்கள். உதாரணமாக, படம் முழுவதும் ஆணின் கை அடிக்கடி காட்டப்படுகிறது. கடைசிக் காட்சியில் ஒரு வெட்டப்பட்ட கை சாலையில் கிடக்கிறது. இதெல்லாம் உளவியல் அறிஞர் சிக்மண்ட் ஃப்ராய்டின் கோட்பாடுகளை விளக்குகின்றன. குறிப்பாக, ஜனன உறுப்பை வெட்டி எறிதலின் குறியீடு. உலகம் முழுவதும் உள்ள பெண்ணியவாதிகள் இந்தப் படத்தை இப்படித்தான் அர்த்தப்படுத்துகிறார்கள்.

https://telegram.me/aedahamlibrary

அதே சமயம் புனுவல், கதைகளோடு கூடிய படங்களையும் இயக்கியிருக்கிறார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

29

Nazarin (1959)

Luis Buñuel

பால்சாக், டால்ஸ்டாய் போன்றவர்களோடு ஒப்பிடக் கூடியவரான Benito Pérez Galdós (1843 - 1920 எழுதிய ஒரு நாவலை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டது நாசரீன். விலைமாதர்களும், திருடர்களும், பிச்சைக்காரர்களும் வசிக்கக் கூடிய சேரிப்பகுதியில் வாழும் ஒரு பாதிரி நசாரியோ. காலம் 1900. எங்கு பார்த்தாலும் வறுமையின் கோரமான காட்சிகள். நசாரியோவின் குடிசையில் அவருக்கான மாற்று அங்கியைத் தவிர வேறு எதுவுமே இருப்பதில்லை. அந்த நிலையிலும் அவர் வைக்கும் சில்லறைகளைத் திருடிப் போய் விடுகிறார்கள் அக்கம்பக்கத்தில் வசிப்பவர்கள். காரணம், அவர் வீட்டுக்குப் பூட்டு கிடையாது. எவ்வளவு திருடு போனாலும் வீட்டைப் பூட்ட மாட்டேன் என்கிறார் நசாரியோ. தேவைப்படுவதால்தானே திருடுகிறார்கள் என்பது அவர் வாதம். கையில் பணமே இருப்பதில்லை என்பதால் ஒரு நாளில் ஒரு வேளை கூட அவரால் சாப்பிட முடிவதில்லை. அதைப்பற்றி அவர் வருந்துவதும் இல்லை. அவர் நிலை கண்டு இரங்கி சில பாதிரிகள் அவரிடம் அன்றாட வாழ்வுக்கு என்ன செய்கிறீர்கள் என்று கேட்க, யாசித்து வாழ்கிறேன் என்கிறார். “இதில் உங்களுக்கு அவமானம் இல்லையா?” என்ற கேள்விக்கு “இறைவனுக்கும் மக்களுக்கும் தொண்டு செய்து யாசகம் பெற்று வாழ்வதில் என்ன அவமானம் இருக்க

https://telegram.me/aedahamlibrary

முடியும்?" என்று பதில் தருகிறார். அந்தப் பாதிரிகள் கொடுக்கும் இரண்டு நாணயங்களையும் தன் வீடு தேடி வந்து யாசிப்பவர்களிடம் கொடுத்து விடுகிறார். நீண்ட காலமாகக் கொடுக்கப்படாமல் இருக்கும் வாடகையை வசூலிக்க வரும் வீட்டின் சொந்தக்காரி, அவர் பல நாட்களாக உணவு உண்ணாமல் இருப்பதைப் பார்த்து விட்டு ரொட்டி சுட்டுக் கொடுக்கிறாள்.

இப்படியாகப் போய்க் கொண்டிருக்கும் ரொசாரியோவின் வாழ்வில் ஒரு சம்பவம் குறுக்கிடுகிறது. இரண்டு விலைமாதர்களுக்குள் சண்டை. ஒருத்தியின் சட்டை பட்டனை இன்னொருத்தி திருடி விட்டாள். சண்டையின் முடிவில் ஒருத்தி இன்னொருத்தியைக் கத்தியால் குத்த அவள் செத்து விடுகிறாள். கொலை செய்த ஆந்தரா, ரொசாரியோவின் இல்லத்தில் அடைக்கலம் புகுகிறாள். அவள் கடுமையாகக் காயம் அடைந்திருந்ததால் அவளை சொஸ்தப்படுத்துவதற்காகத் தன் இல்லத்தில் வைத்திருக்கிறார் ரொசாரியோ. அதன் காரணமாக ரொசாரியோவும் ஆந்தராவும் போலீசால் தேடப்படும் குற்றவாளி ஆகிறார்கள். இவர்களோடு ஆந்தராவின் சகோதரி பியாத்ரிசும் சேர்ந்து கொள்கிறாள். மூவரும் ஊர் ஊராகச் சுற்றி மக்களுக்கு சேவை செய்கிறார்கள். எவ்வளவு எளிமையாக வாழ்ந்தாலும் ஏழைகளுக்கு சேவை செய்தாலும் திருச்சபை ரொசாரியோவை வேறுவிதமாகப் பார்க்கிறது.

"நீர் ஏன் மற்ற பாதிரிகளைப் போல் வாழ மறுக்கிறீர்? எங்களுக்குத் தேவை உம்முடைய மக்கள் சேவை அல்ல; இந்த ஆண்டு எத்தனை பேரை மதமாற்றம் செய்திருக்கிறீர்?"

ஆனால் ரொசாரியோ மதமாற்றம் செய்வதில் அக்கறை காட்டு வதில்லை. அவருடைய எண்ணம் எல்லாமே மக்கள் சேவையும் இறைத் தொண்டுமாக மட்டுமே இருக்கிறது. அது மட்டும் அல்லாமல் பாதிரிக்கு உரிய துறவு வாழ்வுக்குப் புறம்பாக அவர் இரண்டு பெண்களோடு வாழ்வதாகவும் திருச்சபை குற்றம் சாட்டுகிறது. (ஆனால் உண்மையில் ரொசாரியோ எல்லா பெண்களையும் தன் குழந்தைகளாகவே பார்க்கிறார்.)

ஒரு ஊரில் பிளேக் நோயால் எல்லோரும் மரித்துக் கொண்டிருக்கி றார்கள். அங்கே செல்லும் ரொசாரியோ தன் உயிரையும் பொருட் படுத்தாமல் பிணங்களை அப்புறப்படுத்துவது, நோயாளிகளுக்குப்

https://telegram.me/aedahamlibrary

பணிவிடை செய்வது போன்ற பணிகளையெல்லாம் செய்கிறார். ஆந்தராவையும் பியாத்ரிசையும் அந்தப் பணிகளில் ஈடுபடுத்துகிறார். ஆனால் கடைசியில் அந்த ஊரும் அவர்களை விரட்டி அடிக்கிறது.

இறுதியில் ஆந்தராவும் பாதிரியும் சிறையில் அடைக்கப்படுகிறார்கள். சிறையில் கைதி ஒருவன் ரொசாரியோவைக் கடுமையாகத் தாக்குகிறான். மற்றொருவன், அவரிடம் இருக்கும் ஒரே ஒரு நாணயத்தை யாசித்துப் பெற்றுக் கொள்கிறான். பிறகு, திருச்சபையின் குறுக்கீடு காரணமாக விடுதலை செய்யப்படுகிறார் ரொசாரியோ.

புனுவலின் படங்களை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். ஒன்று, ஃப்ரெஞ்ச் சர்ரியலிசப் பாணி படங்கள். இரண்டாவது, மெக்ஸிகோவில் இருந்த போது அவர் எடுத்தவை. இரண்டாவதில் அவர் கதைசொல்லியாக மாறி மகத்தான படங்களைத் தருகிறார். அந்தப் படங்கள் ஒருவரின் ஆளுமையையே மாற்றக் கூடியவை என்பதில் சந்தேகமில்லை.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

30

Sur (1988)

Fernando Solanas

இப்போது 82 வயது ஆகும் ஃபெர்னாந்தோ சொலானாஸ் மற்ற உலகப் புகழ் பெற்ற திரைக்கலைஞர்களைப் போல் வெறும் இயக்குனர் மட்டும் அல்ல; சினிமா என்ற கலைச் சாதனத்தின் மூலம் அர்ஜெண்டினாவின் அரசியலையும் பேசியவர். அதன் விளைவாக அவரது நடிகர் ஒருவர் கொல்லப்பட்டார்; ஒருமுறை சொலானாஸூம் கடத்தப்பட்டார். மற்றொரு முறை அவர் மீது கொலை முயற்சி நடந்தது. 1989-இலிருந்து 1999 வரை கார்லோஸ் மெனம் என்பவர் அர்ஜெண்டீனிய அதிபராக இருந்தார். 1991-இல் சொலானாஸ் கார்லோஸை கடுமையாக விமர்சித்துப் பேசினார். அதற்கு மூன்று நாள் கழித்து சொலானாஸ் மீது ஒருவர் ஆறு முறை சுட்டார். குண்டுகள் காலில் பட்டதால் உயிர் பிழைத்தார் சொலானாஸ்.

எனவே சொலானாஸ் சினிமாவில் அரசியல் பேசினார் என்பதை நம்முடைய சூழலில் வைத்துப் புரிந்து கொள்ளக் கூடாது. அவரது ஹவர் ஆஃப் த ஃபர்னஸஸ் (1968) என்ற நான்கரை மணி நேர ஆவணப்படத்தின் மூலம் மூன்றாம் சினிமா என்ற ஒரு புதிய சினிமா கோட்பாட்டையே உருவாக்கினார் சொலானாஸ். அந்தப் படம்தான் அவரது முதல் முழுநீள சினிமாவும் கூட. உலக சினிமா ரசிகர்களிடையேயும், இடதுசாரிகளிடையேயும் மிகப் பிரபலமான ஹவர் ஆஃப் த ஃபர்னஸஸ் இன்றளவும் ஆவணப்படங்களிலேயே ஒரு சாதனையாகக் கருதப்படுகிறது. இந்த ஒரே படத்தின் மூலம் சொலானாஸ் பல சர்வதேசத் திரைப்பட விழாக்களில் நடுவராக

https://telegram.me/aedahamlibrary

இருந்திருக்கிறார். இந்தப் படத்தை அவர் ஒக்தாவியோ ஜெத்தினோவுடன் சேர்ந்து இயக்கினார். அரசியல் படம் என்பதால் இதன் பெரும்பகுதி ரகசியமாக எடுக்கப்பட்டிருந்தது. உதாரணமாக இப்படி நாம் யோசித்துப் பார்க்கலாம். தமிழகத்தில் ஜஸ்டிஸ் பார்ட்டியிலிருந்து துவங்கிய திராவிட இயக்கத்தின் எழுச்சி, மற்றும் அதன் இன்றைய வீழ்ச்சி வரை சுமார் ஆறு மணி நேரம் ஓடக் கூடிய ஆவணப் படம் எடுக்கப்பட்டிருந்தால் எப்படி இருந்திருக்கும்?

சொலானாஸும், ஜெத்தினோவும் ஆசியா, ஆஃப்ரிக்கா, தென்னமெரிக்க நாடுகளின் சினிமாவையே மூன்றாம் சினிமா என்று அழைத்தார்கள். இந்த இயக்கத்தோடு பொலிவியாவைச் சேர்ந்த ஹோர்ஹே சான்ஹீனஸ் (Jorge Sanjines), ப்ரஸீலைச் சேர்ந்த க்ளாபர் ரோச்சா (Glauber Rocha) மற்றும் கூபாவைச் சேர்ந்த ஹூலியோ கார்சியா எஸ்பினோசா (Julio Garcia Espinosa) ஆகிய மூன்று பேரும் சேர்ந்து கொண்டனர்.

மூன்றாம் சினிமாவின் நோக்கம், சமூகத்தில் ஒடுக்கப்பட்டிருப்பவர்களின் விடுதலைக்குப் பாடுபடுவது. உதாரணமாக, சோஷியல் ஜெனொசைட் என்ற ஆவணப் படத்தில் விளிம்புநிலையில் வாழும் மனிதர்களையே பேச வைத்திருக்கிறார் சொலானாஸ். 1976-இல் அர்ஜெண்டினாவில் ராணுவ ஆட்சி ஏற்பட்டதிலிருந்து 2001 வரையிலான 25 ஆண்டுகளில் அர்ஜெண்டினாவின் பெரும்பான்மை மக்கள் பிச்சைக்காரர்களாக்கப் பட்டார்கள். அதற்கு முக்கியமான காரணமாக இருந்தது பன்னாட்டு நிறுவனங்கள். மிகப்பெரும் இயற்கை வளங்கள் நிறைந்த அந்த நாட்டின் ஏராளமான பிரஜைகள் குப்பைத்தொட்டிகளில் நாய்களோடு நாய்களாக அமர்ந்து ரொட்டித் துண்டுகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தார்கள். அதே சமயம் நட்சத்திர ஓட்டல்களில் மதுபான விருந்துகள் வெகு ஆடம்பரமாக நடந்து கொண்டிருந்தன. பெரும்பான்மை மக்களின் ஒரு ஆண்டு ஊதியம் மேட்டுக்குடியினரின் ஒரு நாளைய செலவாக இருந்ததை இந்த ஆவணப் படத்தில் கடும் சீற்றத்துடன் காண்பித்திருக்கிறார் சொலானாஸ்.

முதல் சினிமா என்று ஹாலிவுட் சினிமாவைக் குறிப்பிட்டார் சொலானாஸ். இந்த சினிமாவின் பிரதான நோக்கம், மக்களின் பிரச்சினைகளிலிருந்து அவர்களைத் திசை திருப்பி, ஒருவித போலியான கேளிக்கையை அளிப்பதாக இருக்கிறது. இரண்டாவது சினிமா என்பது ஐரோப்பிய சினிமா. இது ஹாலிவுட்டின் வியாபார நோக்கங்களையும் மலினமான பொழுதுபோக்குத் தன்மையையும் தீவிரமாக

https://telegram.me/aedahamlibrary

நிராகரித்தாலும் மக்களிடமிருந்து வெகு தூரத்திலேயே இருக்கிறது. ஆர்ட் ஃபில்ம் என்று சொல்லக்கூடிய படங்களைப் பார்க்கும் புத்திஜீவிகளே இந்த ஐரோப்பியப் படங்களுக்குத் தோதானவர்கள் என்பது அவர் கருத்து. அதனால்தான் மக்களின் பிரச்சினையை மக்களே பார்க்கக் கூடிய, படத்திலேயே வந்து பேசக்கூடிய படங்களை எடுத்தார் சொலானாஸ்.

சே குவேராவின் தாய்நாடான அர்ஜென்டினா பெரும்பாலும் ஒரு ஐரோப்பிய நாட்டை ஒத்திருக்கிறதே தவிர அதை ஒரு தென்னமெரிக்க நாடு என்று மிகவும் தயக்கத்துடனேயே சொல்லலாம். பார்ப்பதற்குக் கூட அர்ஜென்டினியர்கள் தென்னமெரிக்கர்களை ஒத்திருப்பதில்லை. அர்ஜென்டினிய சிவப்பிந்தியப் பெண்கள் அழகற்றவர்கள் எனக் கருதப்பட்டதால் தென்னமெரிக்க நாடுகளைத் தங்கள் காலனி நாடுகளாக மாற்றிய ஸ்பானியர்களுக்கும் இவர்களுக்கும் இடையில் துவக்கத்திலிருந்தே இனக்கலப்பு ஏற்படவில்லை. இன்று சிவப்பிந்தியர்கள் அர்ஜெண்டினாவின் தெற்கு மூலையில் மிகக் கொடிய வறுமையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இயக்குநர் சொலானாஸின் படங்கள் உலகின் மற்ற எல்லா இயக்குனர் களிடமிருந்தும் வித்தியாசமானவை என்று குறிப்பிட்டேன். இதற்கான காரணம் சொலானாஸின் வார்த்தைகளில்: “என் சினிமா வெறும் பொழுதுபோக்குக்கான கலை வெளிப்பாடு அல்ல; புத்திஜீவிகளால் விவாதங்களுக்கு உட்படுவது கூட இவற்றின் நோக்கம் அல்ல. எங்கெல்லாம் மக்கள் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கிறார்களோ அங்கெல்லாம் அப்போராட்டங் களைக் கூர்மைப்படுத்திக் கொள்ள என் சினிமா உதவுமானால் அதுவே என் படைப்பு இயக்கத்தின் நோக்கம்.” ஆனால் இந்த நோக்கத்துடன் வெளிவரும் படங்கள் பொதுவாகக் கலையாக வெற்றி அடையாமல் வெறும் பிரச்சாரமாகவே நின்று விடுவதை நாம் பார்த்து வருகிறோம். ஆனால் சொலானாஸின் படங்கள் அந்த விஷயத்திலும் சமரசம் செய்து கொள்ளாதவை. என்றுமே அவர் படங்கள் பிரச்சாரமாக இருந்ததில்லை.

சொலானாஸ் தன் சினிமாவை மக்களுக்கான சினிமா என்று அழைக்கிறார். நம் ஜனரஞ்சக இயக்குனர்களும் இதையேதான் சொல்கிறார்கள் என்கிற போது இரண்டுக்குமான வித்தியாசம் என்ன? சொலானாஸ் தன் படங்களில் மக்களையே நேரடியாகப் பேச வைக்கிறார். கதைக்கு வெளியே நிற்காமல் கதையோடு கதையாக அதைச் செய்கிறார். அதனால் அவரது ஆவணப்படம் கற்பனைப் படம் போலவும், கற்பனைப் படம் ஆவணப் படம் போலவும்

https://telegram.me/aedahamlibrary

தோற்றமளிக்கிறது. சரியாகச் சொன்னால், இரண்டுக்குமான இடைவெளி சொலானாஸின் படங்களில் குறைவு. உதாரணமாக, ஹவர் ஆஃப் த ஃபர்னஸஸின் முதல் பாகத்தின் முடிவில் மூன்று நிமிடங்களுக்கு சே குவேராவின் முகம் க்ளோஸப்பில் காட்டப்படுகிறது. திரையில் வேறு சலனமே இருப்பதில்லை. மூன்று நிமிடங்களுக்கு ஏதோ ஒரு தியான சம்பவத்தைப் போல் காட்டப்படுகிறது அந்த முகம். 8-10-67 அன்று சி.ஐ.ஏ.வினால் பொலிவியாவில் சுட்டுக் கொல்லப்பட்ட சே குவேராவின் முகத்தை உலகெங்கிலும் உள்ள ஒடுக்கப்பட்டவர்களின் போராட்டத்தைக் குறிப்பிடும் ஒரு குறியீடாக அந்த மூன்று நிமிடங்களில் நாம் புரிந்து கொள்கிறோம்.

சொலானாஸின் படங்களில் நாம் காணக்கூடிய மற்றொரு அம்சம், அர்ஜெண்டினாவில் நிலவும் சமூக வேறுபாடு. உதாரணமாக, தென்னமெரிக்காவின் முதல் நகரம் என்று கருதப்படும் புவனோஸ் அய்ரஸ் உலகின் ஐந்தாவது பெரிய நகரமாகத் திகழ்கிறது. சொலானாஸ் இந்த நகர் முழுவதும் காணக்கூடிய வானுயர்ந்த கட்டிடங்களைத் தரையில் கேமராவை வைத்துக் காண்பிக்கிறார். 460 அடி அகலமுள்ள உலகின் மிகப் பெரிய தெரு இங்குதான் உள்ளது. சாலையோரங்களில் நான்கு ஐந்து மைல் நீளமுள்ள பூங்காக்கள், ஒரு லட்சம் பேர் அமரக்கூடிய ஸ்டேடியம், 16 தினசரிகள் (இரண்டு ப்ரெஞ்ச், இரண்டு ஜெர்மன், மற்றும் இதாலியன், ஆங்கிலம் ஆகியவற்றில் ஒவ்வொன்று), 700 கலைக்கூடங்கள் - இவையெல்லாம் இந்நகரத்தின் வேறு சில விசேஷ அம்சங்கள். இந்நகரத்தின் ‘ரெகொலெடா இடுகாடு’ மிகவும் புகழ்பெற்ற ஒன்று. “வாழ்நாள் பூராவும் ஆடம்பரமாக வாழ்வதை விட ரெகொலெடா இடுகாட்டில் புதைக்கப்படுவது அதிகம் செலவாகிற ஒன்று” என்று சொல்லப்படுகிற அளவுக்கு இங்கு கல்லறைக்கான கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சுருக்கமாகச் சொன்னால், அர்ஜென்டினா என்ற தேசத்தின் நல்வாழ்வையே விலையாகக் கொடுத்து கட்டப்பட்ட நகரம் புவனோஸ் அய்ரஸ். ஆனால் அந்நகரைச் சுற்றியிருக்கும் மிகவும் அருவருக்கத்தக்க சேரிகளை சொலானாஸ் நமக்குக் காட்டுகிறார். ரயில் ஓடிக்கொண்டிருக்கும் பொழுது மிகவும் அபாயகரமான ஒரு பாலத்தில் கை நீட்டி பிச்சை கேட்டு ரயிலுடனேயே ஓடிவருகிறார் கள் நிர்வாணச் சிறுவர்கள். இந்தக் காட்சியைத் தொடர்ந்து, இம்மாதிரி ஆயிரக்கணக்கில் பெற்றோர்களால் புறக்கணிக்கப்பட்ட அனாதைச் சிறுவர்கள் அரசாங்கத்திற்குப் பெரும் பிரச்சினையாக இருக்கிறார்கள் என்று சொல்லும் அரசு அதிகாரியின் பேட்டி ஒன்றும் காட்டப்படுகிறது.

https://telegram.me/aedahamlibrary

அர்ஜெண்டினாவில் 1930-இலிருந்து 1983 வரையிலான காலகட்டத்தில் 25 ஆண்டுகள் ராணுவம் ஆட்சி செய்தது. ஒவ்வொரு முறை மக்கள் ஆட்சி தொடங்கியதும் ராணுவம் ஆட்சியைப் பறித்துக் கொண்டது. கடைசி ராணுவ ஆட்சி 1976-இல் தொடங்கி 1983-இல் முடிந்தது. இந்த எட்டு ஆண்டுகளில் நாட்டிலுள்ள எல்லா இடதுசாரிகளையும் எந்த விசாரணையும் இன்றி கடத்திச் சென்று கொன்று விட்டது ராணுவம். இப்படிக் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 30,000. இந்த முப்பதாயிரம் பேரின் சடலங்களும் கிடைக்கவில்லை. இதை அப்போது டர்ட்டி வார் என்று அழைத்தார்கள். இந்த ராணுவ ஆட்சிக்கு ஆதரவாக இருந்தது அமெரிக்க அரசு.

தங்கள் பிள்ளைகள் ராணுவ அரசால் காணாமல் அடிக்கப்பட்டதால் அவர்களின் தாய்மார்களெல்லாம் 1977 ஏப்ரலில் - தொடங்கி புவனோஸ் அய்ரஸில் உள்ள பிளாசா த மாயோ என்ற சதுக்கத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் மதியம் மூன்றரை மணிக்குக் கூடி அமைதியான முறையில் தங்கள் வேண்டுகோளை ராணுவ ஆட்சியின் முன்னே வைத்தார்கள். காணாமல் போன எங்கள் பிள்ளைகள் எங்கே? பல இளம் பெண்கள் ராணுவத்தால் கைது செய்யப்பட்ட போது கர்ப்பமாக இருந்தார்கள். அவர்களுக்குப் பிறந்த சிசுக்களின் கதி என்ன? இதுதான் அவர்கள் கேட்டது. உலக வரலாற்றில் எங்குமே நடக்காதபடி அந்த வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒரு வாரம் கூடத் தடங்கல் இல்லாமல் முப்பது ஆண்டுகள் தொடர்ந்து நடந்தது. 2007-இல் 80 குடும்பங்கள் தங்கள் பெண்களுக்குப் பிறந்து ராணுவத்தினரால் எடுத்து வளர்க்கப்பட்ட பேரக் குழந்தைகளின் அடையாளத்தைக் கண்டடைந்தனர்.

இந்தப் பின்னணியில்தான் ஸூர் (தெற்கு) படத்தின் கதை செல்கிறது. 1983-இல் ராணுவ ஆட்சி முடிவுக்கு வந்ததும் சிறையிலிருந்து வெளியே வருகிறான் ஃப்ளொரயால். எத்தனையோ படங்களின் முதல் காட்சி ஹீரோ சிறையிலிருந்து வெளியேறும் நிலையில் தொடங்குவதுண்டு. இந்தப் படத்திலும் அப்படித்தான். ஆனால் ஒரு சினிமாவை உலகத்தரத்துக்குக் கொண்டு செல்லும் தன்மை ஒளிப்பதிவுக்கு உண்டு. அது இந்தக் காட்சியை அப்படிக் கொண்டு செல்கிறது.

ஃப்ளொரயால் வீட்டுக்கு வருகிறான். பஸ்ஸிலிருந்து இறங்கியதும் அவனுக்குப் பின்னால் உள்ள சுவரில் பிளாசா த மாயோ என்று பெரிய எழுத்துக்களில் எழுதியிருக்கிறது. சாலை எங்கும் நோட்டீஸ்கள் சிதறிக் கிடக்கின்றன. வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்துக்கு வந்துவிடச் சொல்லி ஞாபகமூட்டும் நோட்டீஸ்கள்.

https://telegram.me/aedahamlibrary

ஒரு படம் அரசியலைப் பேச வேண்டும் என்றால் ஹீரோவுக்குப் பத்து நிமிடம் வசனத்தைக் கொடுத்துப் பேசச் சொல்ல வேண்டியதில்லை. சென்ற ஆண்டு ஒரு தமிழ்ப் படத்தில் சிறையிலிருந்து வெளியே வரும் ஹீரோ நாற்காலியில் அமர்ந்து கொண்டு நீதிபோதனை ஆசிரியரைப் போல் வகுப்பு எடுத்ததைப் பார்த்தேன். அதற்குப் பெயர் சினிமா அல்ல. சொல்வதை கலாபூர்வமாக சொல்வதுதான் சினிமா. ஒளிப்பதிவைப் போலவே, ஒரு படத்துக்கு இசை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கும் தெற்கு படமே ஒரு உதாரணமாக இருக்கும். வீட்டுக்குத் திரும்பி வரும் ஃப்ளொரயால் தன் மனைவி வேறொருவனோடு தொடர்பு வைத்திருப்பதை அறிகிறான். அந்தத் தருணத்தில் இசைக்கப்படும் பந்தோனியோன் கருவி நம் இதயத்தைச் சுண்டி இழுக்கிறது. பந்தோனியோன் என்பது அர்ஜெண்டினாவின் தாங்கோ ஆட்டத்தின் போது இசைக்கப்படும் கருவி. அந்தக் கருவியை இசைப்பதில் உச்சத்தைத் தொட்டவர் அஸ்தோர் பியாஸொல்லா. அவர்தான் இந்தப் படத்துக்கு இசை அமைத்திருக்கிறார்.

மனைவியைச் சந்திக்க விருப்பம் இல்லாமல் அந்த இரவில் தெருக்களில் சுற்றித் திரியும் ஃப்ளொரயால் மீண்டும் பழைய வாழ்க்கைக்குத் திரும்பி விடலாமா என்று யோசிக்கிறான். அப்போது அவனைச் சந்திக்கும் பழைய நண்பர் நெக்ரோ அவனிடம் டர்ட்டி வாரினால் ஏற்பட்ட இன்னல்கள் பற்றிச் சொல்லி அவன் மனதை மாற்றுகிறார். அவனும் சிறையில் இருக்க, ராணுவ ஆட்சியின் கொடூரத்துக்கு இடையே ஒரு பெண் எப்படித் தனியாக வாழ முடியும் என்று கேட்டு அவனைத் திரும்பவும் மனைவியை நோக்கிச் செல்ல வைக்கிறார் நெக்ரோ. இவ்வளவு சாதாரண கதையின் இடையேதான் ராணுவ ஆட்சியின் அத்தனை கொடூரங்களையும் சொல்கிறார் சொலானாஸ். அதனால்தான் இது உலகின் முக்கியமான சினிமாவாகிறது.

https://telegram.me/aedahamlibrary

31

Shoah (1985)

Claude Lanzmann

2001 ஜனவரி மாதம். பெர்லினில் வழக்கம் போல் பனி பொழிந்து கொண்டிருந்த ஒரு காலை நேரத்தில் சுசி இன்பா தம்பதியோடு கிளம்பினேன். பெர்லினிலிருந்து 35 கி.மீ. தூரத்தில் இருந்தது ஷாசன்ஹாசன் என்ற அந்த இடம். சென்ற முறை அங்கே போனபோது ஒரு வாரகாலம் சாப்பிட முடியாமல், தூங்க முடியாமல் அவஸ்தைப்பட்டதாகச் சொன்னார் இன்பா. அந்த இடம் அப்படிப்பட்டது. 1936-இலிருந்து 1945 வரை ஹிட்லரின் நாஜி ராணுவத்தால் அந்த இடத்தில் சோவியத் சிப்பாய்களும் யூதர்களுமாக மொத்தம் ஒரு லட்சம் பேர் கொல்லப்பட்டார்கள். ஆரம்பத்தில் நிற்க வைத்துத் துப்பாக்கியால் சுட்டார்கள். பிறகு ஆயிரக்கணக்கான பேரை அப்படி சுட்டுக் கொல்வது சாத்தியமில் லாமல் போனதால் கும்பல் கும்பலாக விஷவாயுக் கூடத்தில் தள்ளிக் கொன்றார்கள். ஆனால் இப்படிச் செத்ததை விட குளிராலும் பட்டினியாலும் நோயாலும் செத்தவர்களே அதிகம். விஷவாயுக் கூடம், கைதிகளின் குளியல் கூடம், படுக்கும் இடம் எல்லாம் அப்படி அப்படியே காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. எல்லாவற்றையும் நான் ஏற்கனவே பல ஆவணப் படங்களில் பார்த்திருந்ததால் அந்தக் கொடுமைகள் அத்தனையும் ஞாபகம் வந்தன. அந்த ஆவணப்படங்களையெல்லாம் ஹிட்லரே

https://telegram.me/aedahamlibrary

எடுத்தார். தன்னுடைய அரசின் சாதனைகளாக அதை ஜெர்மன் மக்களுக்குப் போட்டுக் காண்பித்தார். மக்களும் ஆரவாரமாக ரசித்துக் களித்தனர். எதை? லட்சக்கணக்கான யூதர்கள் விஷவாயுக் கூடங்களில் கொல்லப்படும் காட்சிகளை. எல்லாமே தேசப்பற்று என்ற பெயரால் அப்போது கொண்டாடப்பட்டன.

ஜெர்மனின் முன்னேற்றத்துக்கும் ஆரிய இனத்தின் தூய்மைக்கும் (ஹிட்லர் நம்பிய ஆரிய இனம் வேறு) யூதர்களே இடையூறாக இருக்கிறார்கள் என்று நம்பினான் ஹிட்லர். சமூகத்திலும் யூத வெறுப்பு கடுமையாகப் பரவியிருந்தது. ஹிட்லரின் நாஜி ராணுவம் 90 லட்சம் யூதர்களைக் கொன்றது. (மா சே துங், ஸ்டாலின் இருவரும் கூட சித்தாந்தத்தின் பேரால் அறுபதிலிருந்து தொண்ணூறு லட்சம் பேரைக் கொன்றார்கள் என்கிறது புள்ளிவிபரம்.)

ஷாசன்ஹாசனிலிருந்து திரும்பி வரும் போது இன்பாவின் முகத்தில் கருமை படர்ந்திருந்தது. மீண்டும் ஒரு வாரம் உண்ணவோ உறங்கவோ முடியாது. இனிமேல் இந்தியாவிலிருந்து வரும் நண்பர் களை ஷாசன்ஹாசனுக்கு அழைத்து வரப் போவதில்லை என்று தீர்மானமாகச் சொன்னார் இன்பா.

மொத்தம் ஒன்பதரை மணி நேரம் ஓடுகிறது ஷவா. 1941-இலிருந்து 1945 வரை ஹிட்லரின் நாஜி ராணுவம் யூதர்களைக் கொன்று குவித்த சம்பவமே ஷவா என்று அழைக்கப்படுகிறது. இந்தப் படத்தைத் தயாரிக்க ஃப்ரெஞ்ச் இயக்குனர் லான்ஸ்மனுக்கு 11 ஆண்டுகள் ஆயிற்று. இந்த ஒன்பதரை மணி நேரப் படத்தை பார்த்து முடிக்க எனக்கு மொத்தமாக முப்பது மணி நேரம் ஆனது. பல சமயங்களில் இதில் வரும் மனிதர்கள் பேசிக் கொண்டே இருக்கிறார்கள். அந்த சொற்கள் மனித வரலாற்றில் நடந்த அதிபயங்கரமான கொடூரத்தை விவரிக்கின்றன. உடனே படத்தை நிறுத்தி விட்டு அது பற்றி யோசிக்கிறேன். மீண்டும் படம். மீண்டும் யோசனை.

போலந்தில் செல்ம்னோ என்று ஒரு ஊர். சொர்க்கத்திலிருந்து பிய்ந்து விழுந்தது போன்ற ஒரு அழகிய இடம். அருகிலேயே ஒரு நதி. இங்கேதான் 1941-இலிருந்து 1945 வரை நான்கு லட்சம் யூதர்கள் விஷவாயு வண்டிகளில் ஏற்றிக் கொல்லப்பட்டார்கள். இந்த நான்கு லட்சம் பேரில் இரண்டே இரண்டு பேர் மட்டும் உயிர் தப்பினார்கள். அவர்களில் ஒருவன் ஸ்ரெப்னிக். பதிமூன்று வயது. அந்த இருவரையும் நாஜிகள் கொல்லவில்லை. காரணம், யூதர்களை விஷவாயுக்

https://telegram.me/aedahamlibrary

கூண்டுகளில் ஏற்றும் போது இருவரும் பாட வேண்டும். நாஜிகளுக்கும் கொஞ்சம் கேளிக்கை வேண்டுமே? நான்கு லட்சம் யூதர்களை தினமும் 3000 பேர் வீதம் கொல்லும் போது அது கொஞ்சம் சலிப்பைத் தரும் அல்லவா? ஸ்ரெப்னிக் நன்றாகப் பாடுவான். அவனுடைய தந்தையே விஷவாயுக் கூண்டில் ஏற்றப்பட்டார். அப்போதும் அவன் பாடினான். அந்த ஸ்ரெப்னிக்கின் பேட்டியோடு துவங்குகிறது ஷவா.

ஸ்ரெப்னிக் பாடினால் கேட்க நன்றாக இருந்தது. போரின் முடிவில் ரஷ்ய ராணுவம் செல்ம்னோ வதைமுகாமை நெருங்கி விட்டது என்று கேள்விப்படும் நாஜிகள் ஸ்ரெப்னிக்கின் தலையில் சுடுகிறார்கள். அதிர்ஷ்டவசமாக குண்டு குறி தவறியதால் மூளையும் மற்ற முக்கியமான நரம்புகளும் பாதிக்கப்படவில்லை. ஆனால் குண்டு தலையில் பட்டு ரத்தம் கொட்டியதால் சிறுவன் செத்து விட்டான் என்று கிளம்பி விட்டனர் நாஜிகள். குண்டடிபட்ட கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அங்கே ரஷ்ய ராணுவம் வந்து விட்டதால் தப்பினான் ஸ்ரெப்னிக்.

ஒன்பதரை மணி நேரம் ஓடும் ஷவாவைப் பார்க்க எனக்கு ஏன் 30 மணி நேரம் ஆகியது? நாலு லட்சம் பேர் விஷ வாயுக் கூண்டில் ஏற்றிக் கொல்லப்பட்ட ஒரு இடத்தில் பிழைத்துக் கொண்ட இரண்டே நபர்களில் ஒருவன் ஸ்ரெப்னிக். அவன்தான் நான். நீங்கள். நாம் எல்லோரும். அந்தச் சம்பவம் நடந்து 35 ஆண்டுகள் கடந்து இயக்குனர் க்ளாத் லான்ஸ்மென் தன்னுடைய ஆவணப் படத்துக்காக ஸ்ரெப்னிக்கைச் சந்திக்கிறார். ஸ்ரெப்னிக்கின் வயது இப்போது 50. இயக்குனர், ஸ்ரெப்னிக்கை அவர் வீட்டிலோ வேறு எங்குமோ சந்திக்கவில்லை. அவரை அழைத்துக் கொண்டு செல்ம்னோ வதைமுகாம் இருந்த காட்டுப் பகுதிக்கே வந்து விடுகிறார்.

40 ஆண்டுகளுக்கு முன்னால் நாலு லட்சம் யூதர்கள் கொல்லப்பட்ட அதே இடம். மரங்களைத் தவிர அங்கே வேறு எதுவுமே இல்லை. பக்கத்தில் அமைதியான ஒரு நதி. பார்ப்பதற்கு சொர்க்கலோகம் போல் இருக்கிறது. ஆனால் அங்கேதான் நாஜிகளால் ஒரு கொடூர மான நரகம் அரங்கேற்றப்பட்டது.

“ஸ்ரெப்னிக். 40 ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் இங்கே பார்த்த சம்பவங்களைப் பற்றிச் சொல்லுங்கள்” என்கிறார் இயக்குனர்.

“அதைப் பற்றி நான் பேச விரும்பவில்லை. மறக்கவே விரும்புகிறேன்.”

“அதைப் பற்றிப் பேசுவது உலகத்துக்கு நல்லது இல்லையா?”

“எனக்கு நல்லது அல்ல.”

https://telegram.me/aedahamlibrary

அப்படிச் சொன்னாலும் பிறகு பேச ஆரம்பிக்கிறார் ஸ்ரெப்னிக். “செத்துப் போன உடல்களையும் சாக இருக்கும் உடல்களையும் மட்டுமே பார்த்துக் கொண்டிருந்த நான் இந்த இடத்தை விட்டு உயிரோடு திரும்ப முடியும் என்று நினைத்ததே இல்லை. ஆனாலும் இப்போது இங்கே நின்று கொண்டிருக்கிறேன். மனிதக் கூட்டம் கொத்துக் கொத்தாக செத்துக் கொண்டிருக்கும் போது நான் மட்டும் பாடிக் கொண்டிருந்தேன்...”

அப்போது குறுக்கிடும் இயக்குனர் “ஏன் நீங்கள் எப்போதும் சிரித்துக் கொண்டே இருக்கிறீர்கள்?” என்று கேட்கிறார்.

“வேறு என்ன செய்வது? அழவா முடியும்? ஆனாலும் சில சமயங் களில் அழத்தான் செய்கிறேன். சில சமயங்களில் சிரிக்கிறேன். நாம் உயிரோடு இருக்கிறோம் என்பதற்கு அடையாளமே நாம் சிரிக்கிறோம் என்பதுதான் இல்லையா?”

இயக்குனர் லான்ஸ்மன் நாஜி வதைமுகாம்களிலிருந்து தப்பிய யூதர்களை உலகம் பூராவும் தேடி அலைந்து கொண்டிருந்த போது விஷவாயுக் கூடங்களுக்குள் அனுப்பப்படுபவர்களின் முடியைக் களையும் பணியைச் செய்த ஒரு முடிதிருத்துபவர் பற்றிக் கேள்விப்படுகிறார். ஹிட்லர் எடுத்த ஆவணப்படம் ஒன்றில் ஆஷ்விட்ச் வதைமுகாமின் வெளியே மலைமலையாக மனித முடி குவிந்து கிடப்பதைப் பார்த்தேன். மற்றோர் இடத்தில் மலைமலையாக குழந்தைகளின் காலணிகள். இந்த இடத்தில் படிப்பதை நிறுத்தி விட்டு சற்று யோசித்துப் பாருங்கள்.

விஷவாயுக் கூடத்தின் உள்ளே அனுப்பப்படுவதற்கு முன்னால் சிறார்களின் காலணிகள் அப்புறப்படுத்தப்படும். அனைவரின் முடியும் மழிக்கப்பட்டு அந்த முடியெல்லாம் தனியாக சேகரமாகும். இதெல்லாம்தான் வதைமுகாமுக்கு வெளியே மலைமலையாகக் குவிந்து கிடந்தன. இப்படி வதைமுகாம் ஒன்றில் முடிதிருத்திய யூதர் ஒருவரைப் பற்றிக் கேள்விப்பட்ட லான்ஸ்மன் நியூயார்க் நகரில் ப்ராங்க்ஸ் என்ற பகுதியில் அவரைச் சந்திக்கிறார்.

ஷவா என்பதன் பொருள், அழித்தொழிப்பு. இருந்த சுவடே தெரியாமல் ஒட்டு மொத்தமாக அழிப்பதை ஹீப்ரூ மொழியில் ஷவா என்பார்கள். ஜான் பால் சார்த்தர், மித்தராந்த் போன்றவர்களின் நண்பரான லான்ஸ்மனிடம் இந்த ஒன்பதரை மணி நேரப் படத்தை ஏன் எடுத்தீர்கள் என்று கேட்ட போது அவர், “அதற்குப் பதில் சொல்வதாக இருந்தால் ஒரு புத்தகம்தான் எழுத வேண்டும்” என்றார். நமக்குப் பார்க்கக்

https://telegram.me/aedahamlibrary

கிடைப்பது ஒன்பதரை மணி நேரம்தான் என்றாலும் இன்னமும் 350 மணி நேரப் படம் தொகுக்கப்படாமல் இருக்கிறது.

ஃப்ரெஞ்சுக்காரரான இயக்குனர் லான்ஸ்மன் ஒரு யூதர். இப்போது 92 வயது ஆகும் லான்ஸ்மனுக்கு நாஜிகள் ஃப்ரான்ஸுக்குள் நுழைந்த போது 17 வயது. அவர் தந்தை நாஜிகளை எதிர்க்கும் போராளிக் குழுவில் இருந்தார். விவாகரத்து ஆனவர். இருந்தாலும் தன் மூன்று குழந்தைகளையும் அவரே வளர்த்து வந்தார். அப்போது எந்த நேரமும் வீட்டுக் கதவைத் தட்டி நாஜிகள் தன்னையும் தன் குழந்தைகளையும் இழுத்துக் கொண்டு போய் விடக் கூடும் என்று அஞ்சிய லான்ஸ்மனின் தந்தை, மூவருக்கும் சில பயிற்சிகள் கொடுப்பாராம். தோட்டத்தில் ஒளிந்து கொள்ள ஒரு பதுங்கு குழியை நிலத்துக்குள்ளேயே தோண்டியிருந்தார். கதவை உடைத்துக் கொண்டு நாஜிகள் வருவதற்குள் மூன்று பிள்ளைகளும் தங்கள் ஆடைகளை அணிந்து கொண்டு பதுங்கு குழிக்குள் ஓடி விட வேண்டும். ஆடைகளை இருபதே நொடிகளுக்குள் மாற்றியாக வேண்டும். லான்ஸ்மனின் தந்தை தினமும் அதிகாலை நான்கு மணிக்குத் தன் பிள்ளைகளுக்கு இந்தப் பயிற்சியைக் கொடுப்பார். பயிற்சி முடிந்ததும் "சரியில்லை; நீங்கள் மாடிப்படியிலிருந்து தடதட வென்று ஓடி வருகிறீர்கள். நாஜிகளுக்கு அந்தச் சத்தம் கேட்டு உங்களைப் பிடித்து விடுவார்கள். துளிக்கூட சப்தம் இல்லாமல் வர வேண்டும்" என்பார்.

விஷவாயுக் கூண்டுக்குள் அனுப்பப்படுவதற்கு முன்னால் பெண்களின் முடி சுத்தமாக மழிக்கப்பட்டு விடும். ஆஷ்விட்ச் வதைமுகாமில் அந்த முடிதிருத்தும் வேலையைச் செய்தவர் ஆப்ரஹாம் போம்பா. அவர் நியுயார்க்கில் ப்ராங்ஸ் என்ற பகுதியில் இருக்கிறார் என்று கேள்விப்பட்டு அங்கே போகிறார் லான்ஸ்மன். ப்ராங்ஸ் விளிம்புநிலை மக்கள் வாழும் பகுதி. அங்கே போய் ஒவ்வொரு முடிதிருத்தும் கடையாக விசாரித்து ஆப்ரஹாமைக் கண்டு பிடித்தார் லான்ஸ்மன். அதன் பிறகு இரண்டு ஆண்டுகள் கழித்து அவரைப் படத்துக்காகப் பேட்டி எடுக்கலாம் என்று போன போது ஆப்ரஹாம் இஸ்ரேல் போய் விட்டிருந்தார். பிறகு இஸ்ரேலுக்குப் போய் அவரைக் கண்டு பிடிக்கிறார் லான்ஸ்மன். படத்தில் அது ஒரு முக்கியமான பகுதி. "நீங்கள் முடி திருத்தும் இடத்தில் கண்ணாடி இருந்ததா?" இதை லான்ஸ்மன் கேட்கும் போது ஆப்ரஹாம் ஒரு வாடிக்கையாளருக்கு முடி திருத்திக் கொண்டிருக்கிறார். ஆப்ரஹாமின் சலூனில்தான் பேட்டி நடக்கிறது. இல்லை என்று சொல்லும் ஆப்ரஹாமினால் இயக்குனரின் அடுத்தடுத்த கேள்விகளை எதிர்கொள்ள முடியவில்லை. அழுது கொண்டே,

https://telegram.me/aedahamlibrary

“என்னால் அந்த அனுபவங்களைத் திரும்பவும் நினைத்துப் பார்க்க முடியவில்லை” என்கிறார். ஆனால் லான்ஸ்மன் திரும்பத் திரும்ப வற்புறுத்தி அவரைப் பேசச் செய்கிறார்.

பொதுவாக இப்படிப்பட்ட அனுபவங்களைப் படிக்கும் போது அல்லது பார்க்கும் போது அவை நம் மனதில் செய்திகளாகப் பதிவாகின்றன. விஷவாயுக் கூடம், அதில் இறந்த மனிதர்கள், இப்படி இப்படி... ஆனால் ஷவா என்ற இந்த ஒன்பதரை மணி நேரப் படம், நம்மையே அந்த விஷவாயுக் கூடத்துக்குள் கொண்டு போய் அடைத்து விடுகிறது. அதிலிருந்து மீண்ட ஒருவர் சொல்கிறார், விஷவாயுக் கூடத்துக்குச் செல்பவர்கள் நின்ற வழியெல்லாம் ஒரே மலமாக இருக்கும் என்று. மரண பயம்.

ஷவாவை ஏன் நாம் பார்க்க வேண்டும்? ஏனென்றால், திரும்பத் திரும்ப அந்தச் சம்பவங்களை நினைவு கூர்வதன் மூலம் இம்மாதிரி யான இனம், மதம் மற்றும் பிராந்திய வெறிகளை நாம் அடையாளம் கண்டு கொண்டு அவற்றைக் கடந்து செல்ல முடியும்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

32

The Match Factory Girl (1990)

Aki Kaurismäki

வருடத்தில் ஏழு மாதங்கள் கடுங்குளிரான தட்பவெப்ப நிலையைக் கொண்ட வடக்கு ஐரோப்பிய நாடு ஃபின்லாந்து. பத்து டிகிரி செல்ஷியஸ்தான் சராசரி வெப்பநிலை; பல சமயங்களில் பூஜ்யத்துக் கும் கீழே பத்து இருபது செல்ஷியஸ் போய் விடும். ஸ்வீடன் மற்றும் ஃபின்லாந்து மக்களையும் அவர்கள் வாழ்வையும் புரிந்து கொள்ள அந்த நாடுகளின் குளிரைப் புரிந்து கொள்ள வேண்டும். ஸ்வீடிஷ் இயக்குனர் பெர்க்மனின் ஒரு படத்தில் ஒரு மகப்பேறு மருத்துவமனை வரும். தனது பிரசவத்தில் குழந்தை இறந்து போனதைக் கேள்வியுறும் தாய் ஒருத்தி, நம் நாட்டில் மகப்பேறு மருத்துவமனைகள் பிரேதக் கிடங்குகளாக இருக்கின்றன என்று சொல்லித் துயரப்படுவாள். குளிரும் பனியும் அங்கே தனிமை மற்றும் மரணத்தின் குறியீடுகளாகக் கருதப்படுகின்றன. இதை நாம் ஓரான் பாமுக்கின் பனி என்ற நாவலிலும் காணலாம்.

ஃபின்லாந்தின் கிராமங்களை எடுத்துக் கொண்டால் அடுத்த வீடு என்பதையே பத்து கிலோமீட்டர் தூரத்தில்தான் பார்க்க முடியும். வெளியே போகலாம் என்றால் குளிர் மைனசுக்கும் கீழே. இப்படிப்பட்ட குளிரில் வாழ்பவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் இருண்மை மட்டும்தான். இருண்மை என்றால் என்ன? படத்திலிருந்து பார்ப்போம்.

தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலை செய்யும் ஐரிஸ் வேலை முடிந்து வீட்டுக்குப் போகிறாள். தாய், தந்தை இருவருடனும் இரவு உணவு

https://telegram.me/aedahamlibrary

உண்கிறாள். மூவருமே ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்வதில்லை. ஆனால் தொலைக்காட்சியில் தியானன்மன் சதுக்கத்தில் மாணவர்கள் சீன ராணுவத்தால் சுட்டுக் கொல்லப்படும் காட்சிகள் ஒளிபரப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. (படத்தின் கதை தியானன்மன் சதுக்கப் படுகொலை நடந்த அதே 1989-இல் நடக்கிறது). ஆனால் அந்தப் படுகொலை எதுவுமே அந்த மூவரிடமும் எந்த சலனத்தையும் ஏற்படுத்துவதில்லை. இதுதான் இருண்மை. மனதின் உள்ளே ஏற்படும் இருள்.

பிறகு ஒரு ‘பப்’ப்புக்குச் செல்கிறாள் ஐரிஸ். மேடையில் பாடகர்கள் பாட, ஆண் பெண் இருபாலரும் ஜோடி ஜோடியாக நடனம் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். ஐரிஸோடு ஒரு பெஞ்சில் அமர்ந்திருக்கும் இரண்டு பெண்களைக் கூட தனியே வந்த ஆண்கள் நடனமாட அழைத்துச் சென்று விட்டனர். ஐரிஸை யாரும் அழைக்கவில்லை. நடனம் முடியும் வரை கூட அவள் அந்த பெஞ்சில் தனியேதான் அமர்ந்திருக்கிறாள். அவளுக்குக் கீழே காலியான ஐந்து பாட்டில்கள் இருக்கின்றன. வீட்டுக்கு வருகிறாள். வானொலிப் பெட்டியில் ஏதோ செய்தி ஓடிக் கொண்டிருக்கிறது. கம்பளியைப் போர்த்திக் கொண்டு கட்டிலில் படுக்கிறாள். ஆனால் அவள் கண்கள் திறந்தே இருக்கின்றன.

அடுத்த காட்சியில், ஒரு வனத்தை ஒத்த பூங்கா. அதன் நீண்ட பாதையில் ஐரிஸ் மட்டுமே நடந்து வருகிறாள். நடக்கும் போது அவள் கைகளைக் கூட அசைப்பதில்லை. பூங்காவில் வேறு மனிதச் சுவடே இல்லை. ஒரு உணவு விடுதிக்குச் செல்கிறாள். அங்கே ஒரு பணிப்பெண்ணைத் தவிர வேறு யாரும் இல்லை. ஒரு பியர் வாங்கித் தனியே அமர்ந்து அருந்துகிறாள்.

மறுநாள் மாலை. முந்தின தினத்தைப் போலவே தியானன்மன் சதுக்க நிகழ்வுகளைத் தெரிவிக்கிறது தொலைக்காட்சி. கூடவே போப்பாண்டவரின் ஃபின்லாந்துப் பயணம் பற்றிய செய்திகள். ஐரிஸ் துணிகளுக்கு அயர்ன் போடுகிறாள். தாயும் தகப்பனும் வெறுமனே அமர்ந்திருக்கிறார்கள். தொலைக்காட்சியில் இப்போது ஒரு டாங்கியின் முன்னே ஒரே ஒரு மாணவன் நின்று கொண்டு டாங்கியை மறிக்கும் காட்சி காண்பிக்கப்படுகிறது. டாங்கி அவனை ஒதுக்கி விட்டுப் பக்கவாட்டில் செல்ல முயல்கிறது. மாணவன் அங்கேயும் போய் மறிக்கிறான். டாங்கி நின்று விடுகிறது. உலகம் முழுவதும் ஒளிபரப்பான அந்தப் புகழ்பெற்ற காட்சி கூட ஐரிஸிடமும் அவள் பெற்றோரிடமும் எந்த சலனத்தையும் ஏற்படுத்துவதில்லை.

ஒரு மணி நேரப் படத்தில் இதுவரை 16 நிமிடம் ஓடியிருக்கிறது.

https://telegram.me/aedahamlibrary

தொலைக்காட்சி செய்திகளில் நாம் கேட்கும் செய்திகளைத் தவிர வசனம் என்று ஒரே ஒரு இடத்தில்தான் வருகிறது. (ஐரிஸ் “ஒரு கிளாஸ் பியர்” என்று உணவகப் பணிப்பெண்ணிடம் கேட்பது).

ஐரிஸ் வழக்கமாகச் செல்லும் பாரில் ஆர்னே என்பவனைச் சந்திக்கிறாள். அவன் அவளை பாலியல் தொழிலாளி என நினைத்துக்கொண்டு, அவளைத் தன் இருப்பிடத்துக்கு அழைத்துச் செல்கிறான். அவன் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறான் என்பதை அறியாத ஐரிஸ் அவனை அந்தக் கணமே காதலிக்கத் துவங்குகிறாள்.

ஆர்னேயைப் பொறுத்தவரை அந்த இரவோடு அவளை மறந்து விடுகிறான். சில தினங்கள் கழித்து ஆர்னே வீட்டுக்குச் செல்கிறாள் ஐரிஸ். இரவு உணவுக்கு அழைக்கும் அவளோடு வர சம்மதிக்கும் ஆர்னே, “நாம் இருவரும் காதலர்களாக இருப்பதோ, சேர்ந்து வாழ்வதோ சாத்தியமில்லை” என்கிறான்.

இதற்கிடையில் ஐரிஸ் கர்ப்பமடைகிறாள். இது பற்றி அவள் தன் பெற்றோரிடம் சொல்வதில்லை. ஆனால், ஆர்னேவுக்கு ஒரு கடிதம் எழுதி அவன் அலுவலகத்துச் சென்று கொடுக்கிறாள். அதைப் படித்த பிறகாவது அவன் மனம் மாறித் தன்னை ஏற்றுக் கொள்வான் என நம்புகிறாள். அவனோ, ஒரு பெரும் தொகையை அவளிடம் கொடுத்து கர்ப்பத்தைக் கலைத்து விடும்படி சொல்கிறான்.

இதை சற்றும் எதிர்பாராத ஐரிஸ் மனம் உடைந்து போகிறாள். பித்துப் பிடித்தவளைப் போல் சாலையில் நடந்து செல்லும் போது, காரில் அடிபட்டு கர்ப்பம் கலைகிறது. வாழ்வின் அபத்தமும் தனிமையும் அவளை அழுத்துகின்றன. இத்தனை பெரிய உலகில் தன் மீது அன்பு செலுத்த ஒரு ஆத்மா கூட இல்லையே என நினைத்து நினைத்து மருகுகிறாள். ஒருநாள் கொஞ்சம் எலி பாஷாணத்தை வாங்கி, ஒரு கவரில் போட்டுத் தன் பைக்குள் வைத்துக் கொள்கிறாள்.

ஆர்னேயின் வீட்டுக்கு வந்து, “இதுவே நான் உன்னைச் சந்திக்கும் கடைசி தினமாக இருக்கும்: உன்னுடைய பணத்தையும் நீயே வைத்துக் கொள்: கடைசியாக உன்னோடு வைன் அருந்த வேண்டும்” என்கிறாள். இதுவே கடைசி சந்திப்பு என்பதால் ஆசுவாசம் அடையும் ஆர்னே, இரண்டு கோப்பைகளில் மதுவை நிரப்பிக் கொண்டு வருகிறான்.

“எனக்குக் கொஞ்சம் ஐஸ் வேண்டும்” என்று சொல்லி ஆர்னேயை உள்ளே அனுப்பிவிட்டு பையிலிருந்து விஷத்தை எடுத்து ஆர்னேயின் கோப்பையில் கலக்குகிறாள் ஐரிஸ். பின், தன் கோப்பையை எடுத்து கடகட என்று குடித்துவிட்டுக் கிளம்புகிறாள். ஆர்னே மதுக்

https://telegram.me/aedahamlibrary

கோப்பையை எடுத்து மதுவை அருந்த ஆரம்பிக்கிறான்.

பாருக்கு வரும் ஐரிஸ் அங்கே ஒருவனைச் சந்திக்கிறாள். அவள் மீது ஈர்க்கப்பட்டு அவள் அருகே வரும் அவனுடைய கோப்பையிலும் விஷத்தைக் கலக்குகிறாள். பின் வீடு திரும்பும் ஐரிஸ், தன் பெற்றோரின் கோப்பைகளிலும் விஷத்தைக் கலக்க அவர்களும் இறந்து போகின்றனர். இறுதிக் காட்சியில், போலிஸ் அவளைக் கைது செய்கிறது.

கவ்ரிஸ்மாக்கியின் பெரும்பான்மையான படங்கள் சமூகத்தாலும் குடும்பத்தாலும் கைவிடப்பட்ட ஐரிஸ் போன்றவர்களின் கதையையே சொல்கின்றன. ஆனால், மிகுந்த கலாபூர்வமாக. அவருடைய சில பாத்திரங்கள் தற்கொலை செய்து கொள்கின்றன. ஏரியல் எனும் படத்தில், ஒரு தந்தையும் மகனும் ஒரு பாரில் அமர்ந்து குடித்துக் கொண்டிருக்கின்றனர். தகப்பன் கழிப்பறைக்குச் சென்று தன்னை சுட்டுக் கொண்டு சாகிறான்.

அதேசமயம், வேறு சில படங்களில் நம்பிக்கையின் வெளிச்சமும் சிறிது தெரியத்தான் செய்கிறது. கடந்த காலம் இல்லாத மனிதன் எனும் அவர் படத்தில், அதன் நாயகனுக்குக் கடந்த காலமே மறந்து போகிறது. ஆனாலும், அவன் தற்கொலை செய்து கொள்ளாமல் புதிய வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறான்.

தொடர்ந்து மனித குல விடுதலை பற்றியே யோசிக்கும் கவ்ரிஸ்மாக்கி, “இந்த உலகின் எல்லா வளங்களும் ஒரு சதவீத மனிதர்களிடமே இருக்கிறது. அரசியல்வாதிகளும் கூட அந்த ஒரு சதவீத மனிதர்களின் கைப்பாவைகள்தான்” என, ஒரு நேர்காணலில் கூறுகிறார். ஏன் உங்கள் படங்கள் இத்தனை துயரமாக இருக்கின்றன எனும் கேள்விக்கு, “என் வாழ்க்கை இதை விடத் துயரமானது” என்கிறார்.

ஆம், கவ்ரிஸ்மாக்கியின் படங்கள் துயருற்றவர்களின் கண்ணீர்க் கதைகள்.

https://telegram.me/aedahamlibrary

33

Tokyo Story (1953)

Yasujirō Ozu

ஒரு நதியை மூன்று விதமாகக் கடக்கலாம். ஆகாய மார்க்கம், தரைவழி. மூன்றாவது வழி, ஒரு படகில் அமர்ந்து செல்வது. அதுவே ஒரு பௌர்ணமி இரவாகவும் இருந்து விட்டால் அந்தப் பயணம் எப்படி இருக்கும்? நிலவின் ஒளி நதியில் பிரதிபலிக்கும் அழகும், தனிமையும், அமைதியும் சேர்ந்த அந்தச் சூழலையும் பயணத்தையும் வர்ணிக்க வார்த்தை ஏதும் உண்டா? ஜப்பானிய இயக்குனர் யசூஜிரோ ஓசுவின் படங்கள் அப்படிப்பட்டவை. அவர் படங்களைப் பார்ப்பது தியானத்தில் அமர்ந்து பெறும் அற்புதமான அனுபவத்தை ஒத்தது. ஓசுவின் படங்கள் உலகப் புகழ் பெற்ற ஜப்பானிய இயக்குனர் அகிரா குரசவாவின் படங்களைப் போல் ஆக்ரோஷமானதும், அதிரடி வேகத்துடனும் செல்வதல்ல. நம்முடைய சென்ற நூற்றாண்டு வாழ்க்கை எத்தனை மெதுவாக இருந்ததோ அத்தனை மெதுவானவை அவை. என் இமயமலைப் பயணங்களில் பல இடையர்களைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் தங்களுடைய இருப்பிடத்துக்குத் திரும்பிச் செல்லவே குறைந்த பட்சம் மூன்று மாதம் ஆகும். இன்னொரு மனிதரைப் பார்ப்பதற்கும் அதே கால இடைவெளிதான். முடிவே தெரியாத அந்த மலைப் பிராந்தியத்தில் ஆடுகளுடன் மட்டுமே வாழும் அந்த இடையர்களின் வாழ்க்கை எத்தனை அமைதியானதோ அத்தனை அமைதியானவை

https://telegram.me/aedahamlibrary

ஓசுவின் படங்கள். அது மட்டும் அல்லாமல் அவர் படங்கள் மிகுந்த ஜப்பானியத் தன்மை கொண்டதாக இருந்தன. அதாவது, மேற்கத்திய உலகம் புரிந்துகொள்ளும் வகையில் அவர் தன் படங்களை உருவாக்கவில்லை. ஜப்பானைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் மேற்குலகைச் சேர்ந்த நீங்கள்தான் இறங்கி வர வேண்டும் என்பது ஓசுவின் கொள்கை. உதாரணமாக, ஓசுவின் கேமரா தரையிலிருந்து மூன்று அடி கிழே இருந்துதான் படம் பிடிக்கும். காரணம், ஜப்பானியர்கள் தென்னிந்தியர்களைப் போல் தரையில் அமரும் பழக்கம் உள்ளவர்கள். இதைக் காட்சிப்படுத்துவதற்காகத்தான் அவரது கேமரா தரையை விட்டுக் கீழே இறங்கியது. கேமரா மட்டும் அல்லாமல் சினிமாவின் அத்தனை அம்சங்களிலுமே மேற்குலகம் அறியாத புதிய பாணிகளை வகுத்துக் கொண்டார் ஓசு. ஆனால் அகிரா குரசவா மேற்கத்திய சினிமா இலக்கணங்களைப் பின்பற்றியவர். அதனால்தான் ஹாலிவுட்காரர்கள் ஓசுவை விட்டு விட்டு குரசவாவைக் கொண்டாடித் தீர்த்தார்கள். தமிழ் சினிமா விலும் குரசவாவுக்கு வெறித்தனமாக ரசிகர்கள் உண்டு.

1903இல் பிறந்து 1963-இல் மறைந்த ஓசு தன் 60 ஆண்டு வாழ்க்கையில் மொத்தம் 54 படங்களை இயக்கினார். அவற்றில் பாதி படங்கள் கிளாஸிக் என்று சொல்லத்தக்கவை என்றாலும் டோக்யோ ஸ்டோரி என்ற படம் சர்வதேச சினிமாவின் ஆகச் சிறந்த பத்து படங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

ஓசுவின் படங்கள் குடும்ப உறவுகளைப் பற்றிப் பேசுபவை. அவரது மற்ற ஒரு முக்கியமான படமான Floating weeds-இல் வரும் நாடக இயக்குனர் தன் மனைவி தவிர வேறோரு பெண்ணோடு உறவு கொண்டு பிள்ளையும் பிறந்து விடுகிறது. குழந்தையாக இருக்கும் போது அவர்களைப் பிரிந்த அவர் பல ஆண்டுகள் கழித்துத் தன் நாடகக் குழுவோடு அந்த ஊருக்கு வரும் போது அவர் மகன் பெரிய பிள்ளையாக வளர்ந்து அரசு வேலையில் இருப்பதை அறிகிறார். ஆனால் மனைவிக்கும் ஊருக்கும் பயந்து கொண்டு அவனைத் தன் மகன் என்று அறிவிக்க மறுக்கிறார். அந்த நிலையில் அவர் மனைவி இந்த

https://telegram.me/aedahamlibrary

விஷயத்தை அறிந்து அந்தப் பிள்ளையை அவர் தன் மகன் என்று ஒப்புக்கொள்ள வைக்கிறாள்.

இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் நமக்குக் கிடைத்திருக்கும் வசதி வாய்ப்புகள் நம்முடைய வாழ்க்கையை எந்த அளவுக்கு மேம்படுத்தி இருக்கின்றன என்று யோசித்துப் பார்த்தால் எதிர்மறையான பதிலே கிடைக்கும். இதுதான் ஓசு யசூஜிரோவின் செய்தி. வயதான தம்பதியான சுகிச்சியும், டோமியும் தங்கள் மகள் கியோகோவுடன் டோக்யோ செல்கிறார்கள். டாக்டராக இருக்கும் மூத்த மகனுக்கும் சலூன் வைத்திருக்கும் மகளுக்கும் அவர்களை கவனிக்கவோ பேசவோ நேரம் இல்லை. மகன் வீட்டில் தங்கள் மகனை அவர்களுக்கு அறிமுகப்படுத்துகிறாள் மருமகள். "இதுதான் உன் தாத்தாவும் பாட்டியும்" என்று அவள் சொல்வதை பேரப் பிள்ளை கண்டு கொள்வது கூட இல்லை. குடும்ப உறவுகள் எந்த அளவுக்கு சிதைந்து போய் விட்டன என்பதற்கு அந்தக் காட்சி ஒரு உதாரணம். (டோக்யோ ஸ்டோரி 1953-இல் வெளிவந்த படம் என்பதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.) இன்றைய காலகட்டத்தில் வேண்டுமானால் கைபேசி மூலம் தாத்தா, பாட்டி தினத்துக்கு வாழ்த்து மெசேஜ் அனுப்புவார்களாக இருக்கும்!

இந்த நிலையில் அந்த வயதான தம்பதி தங்கள் இன்னொரு மகன் வீட்டுக்குச் செல்கிறார்கள். மகன் இறந்து எட்டு ஆண்டுகள் ஆகிறது. ஆனாலும் மருமகள் நோரிகோ தன் கணவனின் பெற்றோரை நன்கு கவனித்துக் கொள்கிறாள். அவர்களுக்கு டோக்யோ நகரத்தைச் சுற்றிக் காண்பிக்கிறாள். அவர்கள் நோரிகோவிடம் அவளை மறு மணம் செய்து கொள்ளச் சொல்கிறார்கள்.

டோக்யோவிலிருந்து கிளம்பும் சுகிச்சியும் டோமியும் திரும்பவும் தங்கள் வீட்டுக்கே வந்து விடுகிறார்கள். டோமி நோய்வாய்ப்பட்டு இறக்கிறாள். அவள் சாவுக்கு வரும் பிள்ளைகள் கடமைக்கு இருந்து விட்டு உடனே திரும்பி விடுகிறார்கள். மீண்டும் அவர்களுடைய கடைசி மருமகள் நோரிகோதான் மனைவியை இழந்த தன் மாமனா ருக்கு ஆறுதலாக மேலும் ஒரு நாள் தங்கி விட்டுச் செல்கிறாள்.

பெண்ணடிமைத்தனம் போன்ற பிரச்சினைகள் எல்லாம் இருந்தாலும் குடும்ப அமைப்பு மனிதர்களைத் தனியாக விடவில்லை. இன்று ஐரோப்பாவில் முழுமையாகவும் ஜப்பான் போன்ற ஆசிய நாடுகளில் ஓரளவுக்கும் குடும்ப அமைப்பு சிதைந்து போய் விட்டது. அதன் விளைவாக குழந்தைகளும் முதியோரும் தனிமையில் விடப்பட்டு விட்டனர். பூங்காக்களில் தொண்ணூறு வயதைக் கடந்த தம்பதிகளை

https://telegram.me/aedahamlibrary

நான் ஐரோப்பிய நாடுகளிலும் கிழக்காசிய நாடுகளிலும் அதிகம் பார்த்திருக்கிறேன். அவர்களின் கண்களில் தெரியும் சூன்யம் தனிமையின் மிகப் பெரும் துயரத்தைச் சொல்லக் கூடியது.

டோக்யோ ஸ்டோரியில் மற்றொரு முக்கியமான பாத்திரம், கியோகோ. கடைசி வரை அவள் தன் பெற்றோருடன் மட்டுமே இருக்கிறாள். தாய் இறந்த பிறகும் தந்தையுடனேயே இருக்க முடிவு செய்கிறாள். அவளுக்குத் திருமணம் ஆகியிருந்தால் அப்படி இருந்திருப்பாளா என்பது கதையில் தொக்கி நிற்கும் கேள்வி. குடும்ப அமைப்பின் சிக்கல்களில் அதுவும் ஒன்று. தென்னிந்தியச் சமூகங்களில் தங்கள் சகோதரிகளுக்குத் திருமணம் செய்து கொடுப்பதற்காக வாழ்நாள் முழுவதும் திருமணமே செய்து கொள்ளாத எத்தனையோ ஆடவர்களை சென்ற தலைமுறை கண்டிருக்கிறது. தமிழ் இலக்கியத்தில் லா.ச. ராமாமிர்தத்தின் பாற்கடல் போன்ற சிறுகதைகளும், தி.ஜானகிராமனின் அம்மா வந்தாள், செம்பருத்தி போன்ற நாவல்களும் குடும்ப அமைப்பின் சாதக பாதகங்களைக் காவியத் தரத்தில் பேசக் கூடியவை. ஓசு யசூஜிரோவின் படங்களைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு இந்த இரண்டு எழுத்தாளர்களையும் நினைக்காமல் இருக்க முடிந்ததில்லை.

ஓசுவின் படங்கள் வெறும் கதைகளை மட்டும் சொல்வதில்லை. தொழில்நுட்ப ரீதியாக அவரது படங்கள் உலகம் முழுவதும் உள்ள சினிமாத் துறையைச் சேர்ந்த மாணவர்களுக்கு சினிமா என்ற கலைச் சாதனத்தைப் பயிற்றுவிப்பதாகவே இருக்கின்றன. உதாரணமாக, ஓசுவின் லோ ஆங்கிள் ஷாட்டுகள் வெறும் டெக்னிக் அல்ல; ஜப்பானிய வாழ்வோடும் கலாச்சாரத்தோடும் தொடர்புடை யவை. ஜப்பானிய வாழ்க்கை மண்ணோடு தன்னைப் பிணைத்துக் கொண்டது. ஜப்பானியர்கள் தென்னிந்தியர்களைப் போல் தரையில் அமரும் பழக்கம் உள்ளவர்கள். தரையில் அமர்ந்தே உணவு உண்பார்கள்; தரையில் அமர்ந்தே ஜப்பானிய மதுவான சாக்கே அருந்துவார்கள். லோ ஆங்கிள் ஷாட்டில்தான் தரையை நாம் அவர்களின் வாழ்வியலோடு சேர்த்துக் காண முடிகிறது.

மற்றொரு உதாரணம், கேமராவை நடிகர்களின் முகத்துக்கு நேரே வைப்பது. அப்படி வைப்பதன் மூலம் பார்வையாளர்களும் ஓசுவின் படங்களோடு தாங்களும் பாத்திரமாக உணரத் துவங்குகிறார்கள். அகிரா குரஸவாவின் படங்களில் பார்வையாளர்கள் தாங்களும் பாத்திரங்களாக உணரவே முடியாது. ஆயிரக்கணக்கான குதிரைகள் கலந்து கொள்ளும் போர்கள் நடக்கும் கதையில் நமக்கு என்ன வேலை இருக்கிறது, பார்த்து ரசிப்பதைத் தவிர?

https://telegram.me/aedahamlibrary

அந்த வகையில் ஓசு யசூஜிரோ ஒரு சினிமா கலைஞர் மட்டுமல்ல; நம் வாழ்வை உய்விக்க வந்த ஞானிகளுள் ஒருவர்.

https://telegram.me/aedahamlibrary

34

Chronicle of the Years of Fire (1975)

Mohammed Lakhdar-Hamina

ஃப்ரெஞ்ச், ஸ்பானிஷ் போன்ற ஐரோப்பிய மொழிகளில் வரும் இலக்கியம், சினிமா பற்றி உலகம் முழுவதும் பேசப்படுகிறது. ஆங்கிலம் பற்றிச் சொல்லவே தேவையில்லை. அமெரிக்காவின் மொழி ஆங்கிலம் என்பதால் வேற்றுக்கிரகத்தில் வசிக்கும் ஜீவிகள் கூட ஆங்கிலத்தில்தான் பேசுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதுவும் அமெரிக்க ஆங்கிலத்தில். ஆனால் உலக இலக்கியத்தை ஊன்றிப் படிப்பவர்களுக்கு ஒரு ஆச்சரியமான விஷயம் புலனாகும். அது என்னவென்றால், ஃப்ரெஞ்ச், ஆங்கிலம், ஸ்பானிஷ் ஆகிய ஐரோப்பிய மொழிகளில் வெளிவரும் இலக்கியத்தை விட இன்றைய கால கட்டத்தில் அரபி மொழியில் வெளிவரும் படைப்புகள்தான் தரத்தில் மேலோங்கி நிற்கின்றன. ஆனால் மேற்கத்திய ஊடகங்களின் தாக்கத்தால் வளர்ந்த நமக்கு அரபி என்றால் அதை கிளாசிக்கல் அரபியோடும் சவூதி அரேபியாவின் ஒட்டகங்களோடும் மட்டும்தான் அடையாளப்படுத்திக் கொள்ள முடிகிறது. ஏன், நவீன அரபி இலக்கியத்தின் மகத்தான படைப்பாளியான அப்துல் ரஹ்மான் முனிஃப் கூட சவூதி அரேபியாவைச் சேர்ந்தவர்தான். ஆனால் நமக்கு ஐரோப்பிய மொழி எழுத்தாளர்களைத் தெரிந்த அளவுக்கு அரபி எழுத்தாளர்கள் பற்றி தெரிவதில்லை. அதை உலகத்துக்குத் தெரியப்படுத்த வேண்டியவர்களும் அது பற்றிக் கவலைப்படாததால்

https://telegram.me/aedahamlibrary

அரபி மொழியின் இலக்கிய சாதனைகள் யாவும் பேசப்படாமலே போகின்றன. அதேதான் சினிமாவிலும் நடக்கிறது. உலக சினிமா என்ற பட்டியலைப் பார்த்தால் அதில் பெரும்பாலும் ஹாலிவுட் படங்கள்தான் காணக் கிடைக்கின்றன. இல்லாவிட்டால், ஜப்பானியப் படங்கள். அல்லது, கொரியா. ஆனால் அரபி சினிமாவின் பிதாமகர்களில் ஒருவரான முகம்மது லக்தர் ஹமீனாவின் ஆகச் சிறந்த படைப்பான கிரானிக்கிள் ஆஃப் தெ இயர்ஸ் ஆஃப் ஃபயர் என்ற படத்துக்கு இன்றுவரை ஒரு மதிப்புரை கூட உலக அளவில் எழுதப்பட்டதில்லை. இத்தனைக்கும் இந்தப் படம் வெளிவந்து இப்போது 42 ஆண்டுகள் ஆகின்றன.

பொழுதுபோக்கை மட்டுமே நோக்கமாகக் கொண்ட ஹாலிவுட் சினிமா, கலைஞனின் தனித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ஐரோப்பிய சினிமா ஆகிய இரண்டைத் தவிர்த்த மூன்றாம் சினிமா பற்றி இந்தத் தொடரில் ஏற்கனவே பார்த்தோம். தென்னமெரிக்க நாடுகளிலும் ஆஃப்ரிக்க நாடுகளிலும்தான் மூன்றாம் சினிமா உருவாகி வருகிறது. அந்த மூன்றாம் சினிமாவைச் சேர்ந்த படைப் பாளிகளில் ஒருவர்தான் முகம்மது லக்தர் ஹமீனா. இப்போது 87 வயது ஆகும் ஹமீனா இன்று வரை சினிமா இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். மூன்று ஆண்டுகளுக்கு முன் அவர் இயக்கிய நிழல்களின் அந்திப்பொழுது ஆஸ்கர் விருதுக்கு அல்ஜீரியாவிலிருந்து அனுப்பப்பட்டது.

பொதுவாக மூன்றாம் சினிமா என்பது அந்த நாட்டு மக்களோடும் அவர்களின் போராட்டங்களோடும் பின்னிப் பிணைந்ததாக இருக்கிறது. உதாரணமாக, பேட்டில் ஆஃப் அல்ஜியர்ஸ் (1966) என்ற படம் 1954-இலிருந்து 1962 வரை நடந்த அல்ஜீரிய சுதந்திரப் போராட்டத்தைப் பற்றிய படம். இதில் அந்தப் போராட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் நடந்த சம்பவங்களின் ஆவணக் காட்சிகள்தான் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் பற்றிய இரண்டு மணி நேரப் படத்தில் ஒன்றரை மணி நேரம் அப்போது நிஜமாக நடந்த சம்பவங்களாகவே இருந்தால் எப்படி இருக்குமோ அப்படித்தான் இருந்தது பேட்டில் ஆஃப் அல்ஜியர்ஸ்.

முகம்மது லக்தர் ஹமீனாவின் வாழ்வு அரசியல் போராட்டங்களோடு தொடங்கியது. அல்ஜீரியாவின் மீதான ஃப்ரான்ஸின் காலனி

https://telegram.me/aedahamlibrary

ஆதிக்கத்தை எதிர்த்து துனீஷியாவில் போராடிக் கொண்டிருந்த ஒரு கெரில்லா குழுவில் 1958-இல் சேர்ந்தார் ஹமீனா. 1962-இல் அல்ஜீரியா சுதந்திரம் அடையும் வரை போராளிகளோடு போராளியாகவும் அதே சமயம் சினிமா இயக்கத்தோடும் தன்னைப் பிணைத்துக் கொண்டிருந்தார்.

கான் திரைப்பட விழாவின் பால்ம் தோர் விருது பெற்ற கிரானிக்கிள் ஆஃப் தெ இயர்ஸ் ஆஃப் ஃபயர், சினிமா என்று நாம் இதுவரை நினைத்துக் கொண்டிருந்த படிமங்களையெல்லாம் அடித்து நொறுக்கி விடுகிறது.

மூன்று மணி நேரம் ஓடக் கூடிய இந்தப் படம் உலக சினிமாவின் அதிமுக்கியமான இடத்தைப் பெறும் காரணம் என்னவென்றால், பொதுவாக மனித வரலாறு பாதிக்கப்பட்டவனின் பார்வையிலிருந்து எழுதப்படுவதில்லை. உதாரணமாக, பனிரண்டாம் நூற்றாண்டின் வரலாற்றை அப்போதைய ஒரு ஆவணம் பதிவு செய்கிறது என்றால், அது மன்னர்களின் வாழ்க்கையையே சொல்கிறது; மக்களின் வாழ்க்கையைச் சொல்வதில்லை.

அல்ஜீரியாவின் சுதந்திரப் போராட்டம் மிகக் கொடுமையான வன்முறையினால் நடத்திச் செல்லப்பட்டது. பள்ளிக்கூடம் செல்லும் ஃப்ரெஞ்சுக் குழந்தைகளின் பஸ்களில் புகுந்து குழந்தைகளை வெட்டிக் கொன்றார்கள் அல்ஜீரியப் போராளிகள். ஃப்ரான்ஸ் தேசமே கொதித்துப் போனது. தேசம் பூராவும் அல்ஜீரியாவுக்கு எதிராகப் பேசியது. அப்போது ஜான் பால் சார்த்தர் என்ற ஒரே ஒரு மனிதர் அல்ஜீரியாவுக்கு ஆதரவாகப் பேசினார். “நாம் இத்தனை ஆண்டுகளாக அல்ஜீரியாவில் என்ன செய்து கொண்டிருந்தோம்? 125 ஆண்டுகளுக்கும் மேலாக அல்ஜீரியர்களை அவர்களின் சொந்த மண்ணிலேயே நம்முடைய அடிமைகளாக வைத்திருந்த நாம்தான் கொள்ளையர்கள், வன்முறையாளர்கள்” என்று சொன்னார் சார்த்தர். தேசத் துரோகி சார்த்தரைக் கைது செய்யுங்கள் என்றார்கள் தேசபக்தர்கள். அதற்கு அப்போது ஃப்ரான்ஸின் அதிபராக இருந்த சார்ல்ஸ் தெ கால் “வால்டேரை யாரும் கைது செய்ய முடியாது” என்றார்.

முகம்மது லக்தர் ஹமீனா இந்தப் படத்தில் அல்ஜீரியாவின் வரலாற்றை அல்ஜீரிய மனிதனின் பார்வையிலிருந்து சொல்கிறார். 1930களின் பிற்பகுதி. வறட்சியால் பாதிக்கப்பட்ட ஒரு கிராமத்திலிருந்து துவங்குகிறது படம். மழை இல்லை. கால்நடைகள் பட்டினியால் செத்து மடிகின்றன. தங்கள் வாழ்வின் ஆதாரத்தையே இழந்த மக்களுக்கு என்ன

https://telegram.me/aedahamlibrary

செய்வது என்று தெரியவில்லை. நிலமெல்லாம் பாளம் பாளமாக வெடித்து விட்டன. இதுவரை சகோதரர்களாக வாழ்ந்த மனிதர்கள் தண்ணீருக்கான சண்டையில் வெட்டி மடிகிறார்கள். கிராமத்திலிருந்து ஒருவன் தன் மனைவி மக்களை விட்டு விட்டு ராணுவத்தில் சேருகிறான். "இப்படி உன் குடும்பத்தை அனாதையாக விட்டு விட்டுப் போகலாமா?" என்று கேட்கும் கிராமத்தாரிடம், "கடவுளே என்னைக் கை விட்ட பிறகு நான் யாரைக் கை விட்டால் என்ன? நானும் அவர்களோடு சேர்ந்து சாக வேண்டுமா?" என்று கேட்கிறான் அவன்.

ஏன் இந்த வறட்சி? - ஏன் இந்தப் பட்டினி? - இதுவரை நாம் வாழ்ந்து கொண்டிருந்த சந்தோஷமான வாழ்க்கை எங்கே போனது? இயற்கை மனிதனை ஒருபோதும் கை விட்டதில்லையே? காரணம், ஃப்ரெஞ்சுக்காரர்கள் அந்த கிராமத்துக்கு வரும் நதியின் குறுக்கே ஒரு அணையைக் கட்டி விடுகிறார்கள். ஒரு கிராமமே ஒரு மாதம் பயன்படுத்தக் கூடிய தண்ணீரை ஒரு ஃப்ரெஞ்சுக் குடும்பம் ஒரு நாளில் செலவிடுகிறது. ஒவ்வொரு வீட்டிலும் நீச்சல் குளம் இருக்கிறது.

'மனிதர்கள் பிறவியிலேயே வன்முறையாளர்களாவதில்லை; புறச் சூழல்களே அவர்களை அவ்வாறு மாற்றுகிறது' என்பதற்கு படத்தில் ஒரு காட்சி. அணையிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீர் ஒரே பக்கத்தில் போவதால் மலையின் எதிர்ப்பக்கத்தில் வசிக்கும் மக்கள் இந்தப் பகுதி மக்களோடு சண்டைக்குப் போகிறார்கள். போர்க் களமாக மாறுகிறது காட்சி. ஒருவரை ஒருவர் கடுமையாகத் தாக்கிக் கொள்கிறார்கள். ஆனால் ஒரே நிமிடத்தில் அது ஒரு கொண்டாட்ட நிகழ்ச்சியாக மாறுகிறது. காரணம், மழை. ஆனால் அதெல்லாம் ஒருநாள் கொண்டாட்டம்தான். வறட்சிக்கு நிரந்தரத் தீர்வு எதுவும் கிடைப்பதில்லை. ஒவ்வொரு வருடத்தைப் போலவும் அந்த வருடமும் வறட்சியும் பட்டினியுமே அந்தக் கிராம மக்களின் பாடாகப் போகிறது.

இந்த நிலையில்தான் அஹ்மத் தன் மனைவியையும் இரண்டு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு நகரத்துக்குக் கிளம்புகிறான். உன் தொப்புள் கொடியை அறுத்துக் கொண்டு செல்கிறாய் என்று எச்சரிக்கிறார் ஊர்ப் பெரியவர். ஏற்கனவே விதி என்னையும் என் நிலத்தையும் பிரித்து விட்டது என்கிறான் அஹ்மத். நகரத்தில் அவன் ஒருவனைச் சந்திக்கிறான். இந்த நாட்டில் சுடுகாட்டில்தான் உங்களுக்கு அமைதி கிடைக்கும் என்று சொல்லும் அவனைப் பைத்தியக்காரன் என்கிறான் அஹ்மத்.

"பள்ளிக்கூடம் செல்லும் ஃப்ரெஞ்சுக் குழந்தைகளின் பஸ்களில் புகுந்து குழந்தைகளை வெட்டிக் கொன்றார்கள் அல்ஜீரியப் போராளிகள்"

https://telegram.me/aedahamlibrary

என்ற ஒரு வாக்கியத்தைக் கட்டுரையின் ஆரம்பத்தில் வாசித்திருப்பீர்கள். அப்படிப்பட்ட நம்ப முடியாத வன்முறைக்குக் காரணம் என்ன என்பதை இந்தப் படத்தைப் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம்.

தன்னைப் பைத்தியம் என்று சொல்லும் அஹ்மதிடம் ஒரு சூஃபி ஞானியைப் போல் தோற்றம் கொண்டவன், “இன்றிரவைக் கழிக்க ஒரு கூரையில்லாத நீ என்னைப் பைத்தியம் என்கிறாயா?” என்று கேட்கிறான். அவன் பேசுவது சூஃபியைப் போலவும் இருக்கிறது; பைத்தியத்தைப் போலவும் இருக்கிறது. “ஏ மானிடர்களே! நீங்கள் தேடி வரும் நகரம் என்பது உண்மையில் கானல் நீர். இங்கே சுடுகாட்டில் மட்டுமே நீங்கள் அமைதியைக் காண முடியும். இங்கே ஃப்ரெஞ்சுக்காரர்கள் உங்களை அடிமைகளாக்கி வைத்திருக்கிறார்கள். தண்ணீரைத் தேடி மணலில் புதைந்து கொண்டிருக்கும் நீங்கள் விழித்தெழும் நேரம் வந்து விட்டது.”

இப்படியெல்லாம் சொன்னாலும் அஹ்மதை அவனுடைய ஒன்று விட்ட சகோதரனிடம் கொண்டு போய் விடுகிறான் அவன். ஆனால் நகர வாழ்க்கை அஹ்மதை நிலைகுலையச் செய்கிறது. கிராமத்தில் பட்டினி கிடந்தாலும் தன்மானத்தோடு வாழலாம். ஆனால் இங்கே நகரத்தில் எல்லோரும் ஃப்ரெஞ்சுக்காரர்களுக்கும், தரகு முதலாளிகளுக்கும் அடிமைகளாக வாழ்ந்தனர். அஹ்மதைக் கல் உடைக்கும் வேலைக்கு அழைத்துச் செல்கிறான் அவன் சகோ தரன். அங்கே தன் முன்னால் நின்று கொண்டிருக்கும் மனிதர்களைப் பார்த்துத் தன் விருப்பப்படி ஆட்களைப் பொறுக்கி எடுக்கிறார் முதலாளி. அஹ்மதைப் பார்த்து, “டேய், நீ வா, நீதான் பார்க்கக் கழுதை மாதிரி இருக்கிறாய்” என்கிறார் முதலாளி. கிராமத்தில் யாராவது இப்படிப் பேசியிருந்தால் - அதற்கு வாய்ப்பே இல்லை என்பது வேறு விஷயம் - பேசியவனின் நாக்கு துண்டாகியிருக்கும். ஆனால் நகரத்தில் ஒன்றும் செய்ய முடியாது. ரொட்டித் துண்டு கிடைக்கிறது. மதிய நேரத்தில் அஹ்மத் தன் பையனுடன் சாப்பிடுகிறான். அப்போது அங்கே வரும் மேனேஜர் அஹ்மத் ஒரு கல்லில் அமர்ந்து சாப்பிடுவதைப் பார்த்து தரையிலிருந்து மண்ணை அள்ளி அவனுடைய உணவில் போடுகிறான். அடிமைகள் எப்படி உட்கார்ந்து சாப்பிடலாம்? நின்று கொண்டேதான் சாப்பிட வேண்டும். சாப்பாட்டில் மண்ணைப் போட்டவனை அஹ்மத் அடித்து விடுகிறான்.

அடுத்த காட்சியில் அஹ்மதுக்குப் போலீஸ் ஸ்டேஷனில் கடுமை யான அடி உதை கிடைக்கிறது. பிறகு ஒருநாள் சாலையில் ஒரு கனவான்

https://telegram.me/aedahamlibrary

குதிரையில் சென்று கொண்டிருக்கும் போது அஹ்மத் சாலையோரத்தில் அமர்ந்திருக்கிறான். கனவான் அஹ்மதிடம் வந்து "டேய் அடிமைப் பயலே, என்னைப் பார்த்த பிறகும் நீ எப்படி உட்கார்ந்திருக்கலாம்?" என்று ஒரு அடி கொடுக்கிறான்.

வேலை இல்லாமல் இருக்கும் அஹ்மதுக்கு அவன் சகோதரன், தான் வேலை பார்க்கும் இடத்தில் கூலி வேலைக்கு ஏற்பாடு செய்கிறான். அங்கே பார்த்தால் அஹ்மதை அடித்த அதே கனவான். மரியாதை தெரியாத இவனுக்கு வேலை தர முடியாது என்று சொல்லும் கனவானின் காலில் விழுந்து கெஞ்சுகிறான் சகோதரன். அதன் பிறகு அஹ்மதுக்கு வேலை கிடைக்கிறது.

வேலை என்றால், பத்து ஆட்கள் செய்ய வேண்டிய வேலையை ஒரே ஆள் செய்ய வேண்டும். அதுவும் கல் உடைக்கும் வேலை. பல தொழிலாளிகள் வேலை செய்து கொண்டிருக்கும் போதே செத்து விழுகிறார்கள். அஹ்மதின் சகோதரனும் செத்து விழுகிறான்.

அந்த நகரத்தில் மனிதர்களின் வாழ்விடங்களும் தெருக்களும் பன்றிகள் வாழும் சாக்கடையை விட மோசமாக இருக்கின்றன. அரசு எந்த வசதியும் செய்து கொடுப்பதில்லை. ஊரில் டைபாய்ட் பரவுகிறது. ஊரே பிணக்காடாகிறது. இடுகாட்டிலேயே இடமில்லை. அஹ்மதின் குழந்தை ஒன்று இறந்து விடுகிறது. அதற்குப் பிறகும் இந்த நரகத்தில் வாழ்வதில் அர்த்தமில்லை என்று தன் சகோதரன் குடும்பத்தோடு தன் குடும்பத்தையும் அழைத்துக் கொண்டு கிராமத் துக்கே போய் விடலாம் என்று கிளம்புகிறான் அஹ்மத். ஊரில் டைபாய்ட் இருப்பதால் யாரும் ஊரை விட்டுப் போகக் கூடாது என்ற உத்தரவு வருகிறது. ஆனால் ஃப்ரெஞ்சுக்காரர்கள் மட்டும் தங்கள் நாட்டுக்குக் கிளம்புகிறார்கள்.

"ஹிட்லரின் படை ஃப்ரான்ஸைத் தோற்கடிக்கும்; ஹிட்லர் நம்மை விடுதலை செய்வார்; ஃப்ரெஞ்ச் கொடுங்கோலர்களின் ஆதிக்கம் முடிவுக்கு வரும்" என்று சொல்லும் சிலரைப் பார்த்து, "பசியாலும் நோயாலும் செத்து மடியும் என் குழந்தைக்கு முன்னே ஃப்ரெஞ்ச், அமெரிக்கா, ஹிட்லர் என்பதற்கெல்லாம் அர்த்தம் என்ன?" என்று கேட்கிறான் அஹ்மத்.

"டைஃபாய்டு நோய் பரவாமல் இருக்க, எல்லோரும் சோப்புப் போட்டு கையைக் கழுவுங்கள்; பழைய துணிகளை எரித்து விட்டுப் புத்தாடைகளை அணியுங்கள்; வீடுகளுக்கு வெள்ளை அடியுங்கள்" என்கிறது அரசு. ஆனால் சுவர்களே இல்லாத வீட்டுக்கு எப்படி வெள்ளை அடிப்பது? ஒட்டுத் துணிகளையே ஆடையாக

https://telegram.me/aedahamlibrary

அணிந்திருக்கும் போது எப்படிப் புத்தாடை வாங்குவது?

நோயினாலும் பசியினாலும் புழு பூச்சிகளைப் போல் மக்கள் மடிந்து கொண்டிருக்கிறார்கள். அஹ்மதின் கைக்குழந்தையைத் தவிர மற்ற அனைவரும் இறந்து விடுகிறார்கள். திரும்பவும் தண்ணீருக்காக இரண்டு கிராமத்தாருக்கு இடையே கலவரம் சூழும் நிலை ஏற்படுகிறது. சிலரது கைகளில் துப்பாக்கியும் இருக்கிறது. அப்போது அஹ்மது சொல்கிறான்: "ஏற்கனவே பஞ்சத்திலும் பட்டினியிலும் செத்துக் கொண்டிருக்கும் நாம் நமக்குள்ளேயே அடித்துக் கொண்டும் சாக வேண்டுமா? உங்களுக்கெல்லாம் வெட்கமாக இல்லையா? ஃப்ரெஞ்சுக்காரர்கள்தான் நம்மிடமிருந்த சொர்க்கத்தைப் பறித்துக் கொண்டு நம்மை நரகத்தில் தள்ளி விட்டார்கள். நாம் தண்ணீருக்காக ஒருவரை ஒருவர் தாக்கிக் கொன்று கொண்டிருக்கும் போது அவர்கள் நதியில் அணை கட்டி, தண்ணீரை அவர்கள் வீட்டுக்குத் திருப்பி விட்டு, நீச்சல் குளம் அமைத்து உல்லாசத்தில் திளைக்கிறார்கள். நாம் இப்போது செய்ய வேண்டியதெல்லாம் நமக்குள் அடித்துக் கொள்வதல்ல. உங்கள் வீரத்தை நம் நிலத்தையும் நமது நதிகளையும் நம்மிடமிருந்து பிடுங்கிக் கொண்ட ஃப்ரெஞ்சுக்காரர்களிடம் காண்பியுங்கள். உங்கள் துப்பாக்கிகளை அவர்களை நோக்கித் திருப்புங்கள்."

அணை குண்டு வைத்துத் தகர்க்கப்படுகிறது. அஹ்மதும் அவனது கூட்டாளிகளும் கைது செய்யப்பட்டு ஹிட்லரின் நாஜி ராணுவத்துக்கு எதிராகப் போரிட போர்க்களத்துக்கு அனுப்பப்படுகிறார்கள். போர் முடிந்து திரும்பி வந்து பார்த்தால் அவன் வாழ்ந்த நகரில் ஒருவர் கூட இல்லை. ஒரு பெரியவர் 1945 மே 8-ஆம் தேதி நடந்த சம்பவத்தைச் சொல்கிறார்: அல்ஜீரியாவின் ஃப்ரெஞ்சு அரசாங்கம் நாஜிகளுக்கு எதிரான தங்கள் வெற்றியைக் கொண்டாட அல்ஜீரியர்களைக் கொண்ட ஒரு பேரணியை ஏற்பாடு செய்கிறது. ஆனால் அந்தப் பேரணியே அல்ஜீரிய சுதந்திரப் போராட்டத்தின் ஆரம்பமாக அமைந்து போனது. காரணம், ஃப்ரெஞ்சு அரசு அல்ஜீரிய மக்களுக்கு அதிக உரிமைகளைத் தர வேண்டும் என்று குரல் கொடுத்த மெசாலி ஹஜ்ஜை சிறையில் அடைத்து விட்டது அரசு. (பின்னாளில் மெசாலி ஹஜ் அல்ஜீரியாவின் தேசத்தந்தை என்று அழைக்கப்பட்டார்.)

பேரணியில் கலந்து கொண்ட சிலர் "ஹஜ்ஜை விடுதலை செய்" என்று எழுதப்பட்ட பேனர்களை வைத்திருந்தனர். ஒரு சிறுவன் அல்ஜீரியக் கொடியைப் பிடித்திருந்தான். அவ்வளவுதான். தீ பற்றிக் கொண்டது. ஃப்ரெஞ்சு ராணுவத்தினர் பேரணியில் கலந்து கொண்டவர்களைச் சுட ஆரம்பித்தனர். இன்றளவும் செத்திஃப் படுகொலை என்று

https://telegram.me/aedahamlibrary

அழைக்கப்படும் அந்தச் சம்பவத்தில் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இறந்தவர்களின் எண்ணிக்கை 20,000. இறந்து போன ஃப்ரெஞ்சு ராணுவத்தினர் 102.

மூன்று மணி நேரப் படத்தில் இதுவரை நாம் பாதி கதையைத்தான் பார்த்திருக்கிறோம். யூட்யூபில் இந்தப் படம் சப்டைட்டிலோடு கிடைக்கிறது. அவசியம் பாருங்கள். கதையாலும் சம்பவங்களாலும் மட்டும் அல்ல; ஒளிப்பதிவு, இசை, நடிப்பு என்று எல்லா விதத்திலும் இப்படம் ஒரு நவீன காவியத்தைப் போல் இருக்கிறது. ஆனால் உலக அளவில் இன்று ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட் பற்றிப் பேசாதவர்களே இல்லை. அந்த நிலையில் உலக சினிமா - 100 பட்டியலில் முதல் பத்தில் வைக்கப்பட வேண்டிய கிரானிக்கிளைப் பற்றி இதுவரை ஒரு வார்த்தை கூட வெளிவராதது துரதிர்ஷ்டவசமானதுதான்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

35

Veronika Voss (1982)

Rainer Werner Fassbinder

பேட்மேன் போன்ற படங்களில் வரும் சாகச வீரன் வானளாவிய கட்டிடங்களில் சரசரவென்று ஏறுவான். கட்டிடத்தின் உச்சியிலிருந்து குதிப்பான். இது போன்ற காட்சிகளைப் பார்க்கும் சிறார்களும் இதைச் செய்து பார்த்து விடக்கூடாது என்பதற்காக படத்தின் ஆரம்பத்தில் அறிவிப்புகள் வரும் அல்லவா? அதைப் போலவேதான் எழுத்தாளர்கள், கலைஞர்கள், துறவிகள் போன்றவர்களின் வாழ்க்கையும் நம்மைப் போன்ற சாதரண மனிதர்களால் பின்பற்றக் கூடாததாக இருக்கிறது. இமயமலையில் பல துறவிகள் உடலில் ஆடையின்றி வெறும் சாம்பலைப் பூசிக் கொண்டு திரிவார்கள். வான்கோ என்ற ஓவியன் தன் காதலிக்காகத் தன் காதையே அறுத்துக் கொடுத்தான். அப்படித்தான் பல கலைஞர்களும் எழுத்தாளர்களும் போதை மருந்து அடிமையாக இருந்தார்கள். அதனாலேயே சிறு வயதில் இறந்தும் போனார்கள். தனக்கு முன்னால் உள்ள ஒட்டு மொத்த சமூகத்தைப் பற்றி சிந்திக்கும் ஒரு கலைஞன் தன்னைப் பற்றி சிந்திக்க முடியாதவனாக இருப்பது எதனால்?

சமீபத்தில் தஷ்வந்த் என்ற ஒரு இளைஞன் ஆறு வயது சிறுமியை வன்கலவி செய்து பெட்ரோல் ஊற்றி எரித்துக் கொன்றவன் ஜாமீனில் வெளியே வந்து தன் தாயையும் கொன்றான். அதைக் கேள்வியுறும் நாம் சமூகம் எப்படிக் கெட்டுப் போய் விட்டது என்று கொஞ்ச நேரம் கவலைப்பட்டு விட்டு அந்தச் சம்பவத்தைக் கடந்து சென்று விடுகிறோம்.

https://telegram.me/aedahamlibrary

ஆனால் ஒரு கலைஞன் அந்த ஆறு வயது சிறுமியைத் தன் குழந்தையாக பாவிக்கிறான். பதற்றத்துக்கு உள்ளாகிறான். அது மட்டும் அல்ல; சமூக அவலங்கள் அனைத்தையும் தன் மெலிந்த இதயத்தில் எடுத்துக் கொள்கிறான். தாங்க முடியாமல் போதையை உட்கொள்ள ஆரம்பித்து அதன் அடிமையாகி இளம் வயதிலேயே மடிந்து போகிறான்.

அப்படி தன் 37 வயதில் இறந்து போன ஒரு மகத்தான கலைஞன் தான் ஜெர்மன் இயக்குனரான ரெய்னர் வெர்னர் ஃபாஸ்பைண்டர் (1945-1982). நடிகர், நாடகாசிரியர், நாடக இயக்குனர் மற்றும் ஜெர்மன் சினிமாவுக்குத் தன் படங்களின் மூலம் புதிய பரிமாணங் களை அளித்தவர். 21 வயதில் ஃபாஸ்பைண்டரின் முதல் படம் வெளியானது. 37 வயதில் அவர் இறக்கும் போது 40 படங்களை இயக்கியிருந்தார். உலகில் இத்தனை வேகத்தில் படங்களை இயக்கிய வேறொரு கலைஞர் யாருமில்லை. 14 வருடங்களில் 40 படங்கள். அதிலும் ஒவ்வொரு படமும் உலகத் தரம். இது தவிர, எக்கச்சக்கமான தொலைக்காட்சிப் படங்களையும் நாடகங்களையும் இயக்கிக் கொண்டிருந்தார். அவர் இயக்கிய மேடை நாடகங்கள் 25. புதிதாக எழுதிய நாடகங்கள் 14.

நான் தில்லியில் இருந்த போது ஃபாஸ்பைண்டருக்கு அங்கே ஒரு பெரிய ரசிகர் வட்டமே இருந்தது. ஒரே வருடத்தில் அவரது மூன்று புதிய படங்கள் வெளியாகும். (1970களின் இறுதி, எண்பதுகளின் ஆரம்பம்) அப்படி இருந்தபோது ஒருநாள் ஃபாஸ்பைண்டரின் மரணச் செய்தி வந்தது; அத்தனை பேரும் இடிந்து போனார்கள். அப்போது நான் குறிப்பிட்டேன், “அவன் நம்மைப் போல் அல்ல; மூன்று முழு மனிதர்களின் ஆயுளை வாழ்ந்து முடித்து விட்டுச் சென்றிருக்கிறான்.” ஏனென்றால், அவர் புயல் வேகத்தில் படங்களை இயக்கியதோடு மட்டும் அல்ல; அப்படங்களின் ஆர்ட் டைரக்டரும் அவர்தான்; எடிட்டரும் அவர்தான். அது தவிர நடிக்கவும் செய்தார். அவர் இயக்கிய 40 படங்களில் 19-இல் அவர் நடித்திருக்கிறார். அதோடு மற்ற இயக்குனர்களின் படங்களிலும் நடித்தார்.

நாடகத்திலிருந்து வந்தவர் என்பதால் அவரது படங்கள் பெர்டோல்ட் ப்ரெஷ்ட்டின் கோட்பாடுகளையும், இயக்குனரின் இயக்குனர் என்று அழைக்கப்பட்ட ஃப்ரெஞ்ச் திரைப்பட மேதை ஜான் லுக் கோதாரின் சினிமா கோட்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டவை. அதனால் ஃபாஸ்பைண்டரின் திரை மொழி புதிதாகவும், சாதாரண சினிமா ரசிகர்களால் புரிந்து கொள்ள முடியாததாகவும் இருந்தது. ஆனால் அவரது பிற்காலப் படங்கள் வெகுஜன ரசிகர்களையும் ஈர்த்தன. உதாரணங்கள்: மரியா ப்ரானின் திருமணம், வெரோனிகா வாஸ்

https://telegram.me/aedahamlibrary

போன்றவை.

ஒரு கலைஞன் தன் படைப்புகளை உருவாக்கும்போது அந்தப் படைப்பு வேறு, கலைஞன் வேறு என்று பார்த்து ரசித்து வருவதே மரபு. வான்கோவின் வாழ்க்கைதான் அவன் ஓவியம். பாரதியின் வாழ்க்கைதான் அவன் கவிதை. அப்படிப்பட்ட ஓர் கலைஞன்தான் ரெய்னர் வெர்னர் ஃபாஸ்பைண்டர். அவருடைய எல்லா படைப்புகளிலும் அவர் இருந்தார். வெரோனிகாவில் அதிகமாக இருந்தார். வெரோனிகா 1982 ஃபெப்ருவரியில் வெளிவந்தது. அதே ஆண்டு ஜூனில் தன் 36-ஆவது வயதில் இறந்தார் ஃபாஸ்பைண்டர். கொகெய்ன் என்ற போதை மருந்தையும் அறுவை சிகிச்சைக்கு முன்னால் செலுத்தக் கூடிய பார்ப்பிச்சுரேட் என்ற மயக்க மருந்தையும் அதிக அளவில் எடுத்ததால் ஏற்பட்ட மரணம் அது. ஆனால் நகைமுரண் என்னவென்றால், அவர் உயிர் பிரிவதற்குச் சற்று முன்னால் பாரிஸில் உள்ள தன் நண்பருக்கு போன் செய்து தன்னிடமிருந்த எல்லா போதை மருந்துகளையும் கழிப்பறையில் கொட்டிவிட்டதாகவும் கடைசியாகக் கொஞ்சம் கொகெய்னை மட்டும் செலுத்திக் கொள்ளப் போவதாகவும் சொல்லியிருந்தார். அவர் கடைசி என்று சொன்னது வாழ்வின் கடைசி என்று ஆகி விட்டது.

ஃபாஸ்பைண்டர் அப்போது சண்டை என்ற படத்தை இயக்கி முடித்திருந்தார். அது ஃப்ரெஞ்ச் எழுத்தாளர் ஜான் ஜெனேயின் நாவலைத் தழுவியது. ஜெனேயும் ஃபாஸ்பைண்டரோடு ஒப்பிடத் தக்கவர்தான். ஜெனேயின் வாழ்க்கைதான் அவர் எழுத்தாக இருந்தது. ஜூன் 10, 1982 அதிகாலை மூன்றரை மணி. ஃபாஸ்பைண்டரோடு அப்போது வாழ்ந்து கொண்டிருந்த ஜூலியன் வீடு திரும்புகிறார். ஃபாஸ்பைண்டரின் அறையிலிருந்து தொலைக்காட்சி ஓடும் சத்தம் கேட்டுக் கொண்டிருக்கிறது. வெளியே மேஜையில் ரோஸா எல். என்ற அவரது அடுத்த படத்துக்கான ஸ்க்ரிப்ட் பாதி எழுதப்பட்ட நிலையில் கிடக்கிறது. ஃபாஸ்பைண்டரின் அறைக்குள் அவர் அனுமதியின்றி யாரும் நுழையக் கூடாது. ஆனாலும் அன்றைய தினம் எல்லாம் சற்று வித்தியாசமாகத் தெரியவே ஜூலியன் அந்த அறையின் உள்ளே போகிறார். அங்கே ஃபாஸ்பைண்டரின் உயிரற்ற உடல். உதட்டில் சிகரெட்.

வெரோனிகாவின் கதையும் கிட்டத்தட்ட இதேதான். ஹிட்லர் காலத்தில் புகழ்பெற்ற நடிகையாக இருந்த வெரோனிகா எப்படித் தற்கொலை செய்து கொள்கிறாள் என்பதுதான் படம். தற்கொலை மற்றும் கொலை என்ற இரண்டுக்கும் நடுவில் ஒன்று இருந்தால் அதுதான்

https://telegram.me/aedahamlibrary

ஃபாஸ்பைண்டருக்கும் வெரோனிகாவுக்கும் பொருந்தும். போதை மருந்துகளைத் தொடர்ந்து அதிக அளவில் உட்கொள்வதனால் ஏற்படும் மரணம். அதுதான் வெரோனிகாவுக்கும் நடக்கிறது; ஃபாஸ்பைண்டருக்கும் நடந்தது.

ஹிட்லர் காலத்தில் சிபில் என்ற புகழ் பெற்ற ஒரு நடிகை இருந்தார். கோயபல்ஸோடு உறவு வைத்திருந்தார் என்றெல்லாம் அப்போது பேசப்பட்டது. ஹிட்லரின் வீழ்ச்சிக்குப் பிறகு சிபிலின் புகழ் மங்கியது. சிறிய வேடங்களே கிடைத்தன. சமூகத்தில் மரியாதையும் போய் விட்டது. போதை மருந்துக்கு அடிமையாகித் தனிமையில் இறந்தார் சிபில். அவர் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டதுதான் வெரோனிகா. சூப்பர் ஸ்டாராக விளங்கிய மதுபாலா, சாவித்ரி போன்ற நடிகைகளின் வாழ்க்கையோடும் பாகவதருக்கு நேர்ந்த வீழ்ச்சியோடும் சிலுக்கு ஸ்மிதாவின் தனிமையோடும் கூட வெரோனிகாவை நாம் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

போதை மருந்துக்கு அடிமையான வெரோனிகா ஒருநாள் தற்செய லாக ராபர்ட் என்ற பத்திரிகையாளனைச் சந்திக்கிறாள். அவன் விளையாட்டுச் செய்திகளின் நிருபர் என்பதால் அவனுக்கு வெரோனிகாவை தெரியவில்லை. அதுவே அவளுக்கு ஒரு உற்சாகத்தைக் கொடுக்கிறது.

அவளுக்கு போதை மருந்து கொடுப்பவள் டாக்டர் மரியன். வெரோனிகாவின் சொத்துக்கு ஆசைப்பட்டு தொடர்ந்து மரியன் அவளுக்கு அதிக அளவில் போதை மருந்துகளைக் கொடுத்து வருகிறாள். இதை அறிந்து கொள்ளும் ராபர்ட் வெரோனிகாவைக் காப்பாற்ற முயல்கிறார். ஆனாலும் கடைசியில் வெரோனிகா இறக்கிறாள். தேடிச் சோறு நிதம் தின்று பல வெட்டிக் கதைகள் பேசி மடியும் வேடிக்கை மனிதரைப் போலே என்று பாரதி பாடுகிறார் அல்லவா, அப்படிப்பட்ட லௌகீக வாழ்வினை வன்மையான முறையில் விமர்சிக்கும் படம் வெரோனிகா.

https://telegram.me/aedahamlibrary

36

Ali: Fear Eats the Soul (1974)

Rainer Werner Fassbinder

ஏற்கனவே குறிப்பிட்டபடி ஃபாஸ்பைண்டரின் சினிமா வேறு, அவர் வேறு அல்ல. அவர்தான் அவருடைய சினிமாவும். அச்சம் ஆன்மாவைக் கொல்கிறது என்பது ஒரு அரபிப் பழமொழி. ஐரோப்பாவில் அரபி என்றால் ஆஃப்ரிக்க முஸ்லீம்கள் என்று பொருள். எந்த ஒரு உலக சினிமாப் பட்டியலிலும் இடம் பெற்றிராத இந்த சினிமாவைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், இதைத் தரவிறக்கம் செய்து பார்த்து விடுவதே நல்லது. பார்க்கும் போது இது ஃபாஸ்பைண்டரின் வாழ்க்கையும் கூட என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும். வெளிவந்து 43 ஆண்டுகள் ஆன பிறகும் இதில் பேசப்படும் விஷயங்களில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்பது போக பிரச்சினை இன்னும் தீவிரமாகித்தான் இருக்கிறது. உதாரணமாக, அகதிகளின் வாழ்க்கை. சென்ற நூற்றாண்டுகளில் ஐரோப்பாவினால் அடிமைப்படுத்தப்பட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள்தான் ஐரோப்பிய நாடுகளுக்குப் பிழைப்பு தேடி வருகிறார்கள். மக்ரிப் நாடுகள் என்று சொல்லப்படும் அல்ஜீரியா மற்றும் மொராக்கோவிலிருந்து ஆயிரக்கணக்கான அகதிகள் ஃப்ரான்ஸிலும் ஜெர்மனியிலும் வாழ்கிறார்கள். "நான் ஒரு ஜெர்மானியன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அடைகிறேன்" என்ற வாக்கியத்தோடு ஒரு ஆஃப்ரிக்கக்

https://telegram.me/aedahamlibrary

கறுப்பின மனிதனின் பெரியதொரு கட் அவுட்டை 2001-இல் பெர்லின் நகரம் எங்கும் பார்த்தேன். அரசாங்கத்தால் வைக்கப்பட்ட விளம்பரம் அது. அதன் அர்த்தம், கறுப்பின மனிதர்களும் உள்ளூர் மக்களும் இன்னும் இணையவில்லை என்பதுதானே?

மொராக்கோவிலிருந்து ஜெர்மனிக்கு வந்து கடுமையான உடல் உழைப்பில் ஈடுபடும் எண்ணற்ற அகதிகளில் ஒருவன் அலி. 40 வயது. மொராக்கோ அழகிய நாடு. ஆனால் பிழைப்புக்கு வழி இல்லை. 12 மணி நேர வேலை முடிந்து அவனைப் போன்ற அகதிகள் வரும் ஒரு பாருக்கு வருகிறான். அங்கே மழைக்கு ஒதுங்குகிறாள் 60 வயது ஜெர்மானிய மாது எம்மி. பாரில் அரபி இசை ஒலித்துக் கொண்டிருக்கிறது. (உண்மையில் அதன் பெயர் பெதூயின் இசை. பெதூயின் என்பது வட ஆஃப்ரிக்க நாடுகளில் வசிக்கும் நாடோடி இனத்தினரைக் குறிக்கும்.)

அந்தக் கிழவியோடு நடனமாடு என்று அலியைக் கிண்டல் செய்கி றார்கள் நண்பர்கள். ஆனால் அலியோ எந்த மனத்தடையும் இல்லாமல் எம்மியோடு நடனம் ஆடுகிறான். பிறகு அவள் வீட்டுக்குப் போகிறான்.

இங்கே ஐரோப்பா பற்றிய வேறு ஒரு பிரச்சினை சொல்லப்படுகிறது. நடுத்தர வயதிலேயே கணவன் இறந்து போனதால் பல ஆண்டு களாகத் தனிமையில் வசிக்கிறாள் எம்மி. ஒரு நிறுவனத்தில் துப்புரவுப் பணியாளராக வேலை செய்பவள். அந்த வயதிலும் வேலை செய்தால்தான் உணவு என்ற நிலை. அதைவிடக் கொடுமை, தனிமை. இரண்டு மகன்களும் ஒரு மகளும் இருந்தாலும் அவர்கள் வீட்டுக்கெல்லாம் அவளால் போக முடியாது. அதுதான் ஐரோப்பாவின் பிரச்சினை. யாரும் யாரையும் சார்ந்து வாழ முடியாது; வாழக் கூடாது. இதெல்லாம் மொராக்கோவில் நினைத்தும் பார்க்க முடியாத விஷயம் என்கிறான் அலி. அம்மாவை யாராவது தனியாக விட முடியுமா என்று அதிசயிக்கிறான். ஐரோப்பிய நாடுகளில் தனிமையினால் பலர் தற்கொலையும் செய்து கொள்வதுண்டு.

ஆனால் அகதிகளின் பிரச்சினை, வறுமை. ஆறு பேர் ஒரு அறையில் தங்கியிருக்கிறோம் என்கிறான் அலி. மிருகத்தனமான வாழ்க்கையாக இருக்கிறதே என்கிறாள் எம்மி. “ஆம்; அரபிகள் மிருகங்கள்தானே? நாள் பூராவும் வேலை செய்கிறேன். இரவில் குடிக்கிறேன். நான் மிருகம் அல்லாமல் வேறு என்ன?” என்று அலி கேட்கும் போது ஆஃப்ரிக்க கண்டத்தின் ஒட்டு மொத்த துயரத்தையே நம் முன் கொண்டு வந்து விடுகிறார் ஃபாஸ்பைண்டர்.

https://telegram.me/aedahamlibrary

நம்ப முடியாத அதிசயம் என்னவென்றால், அலி ஒரு நிஜமான பாத்திரம். அலியும் ஃபாஸ்பைண்டரும் கணவன் மனைவியைப் போல் ஒரு வீட்டில் வாழ்ந்தார்கள். கலாச்சார வேறுபாடுகளினால் அலிக்கும் ஃபாஸ்பைண்டருக்கும் உரசல்கள் ஏற்பட்டன. சினிமாவை விட அதிர்ச்சி தரும் விஷயங்கள் இருவரின் வாழ்விலும் நடந்தன.

ஒரு கட்டத்தில் எம்மியும் அலியும் திருமணம் செய்து கொள்கிறார்கள். அதனால் அவள் தோழிகளும் அண்டை அயலாரும் அவளைப் பற்றிக் கேவலமாகப் பேசுகிறார்கள். அந்த ஆஃப்ரிக்கக் கறுப்பன் வந்த பிறகு அந்தப் பகுதியே அசிங்கமாகி விட்டதாகவும் துர்நாற்றம் அடிப்பதாகவும் புகார் செய்கிறார்கள். என்னதான் காதல் வசப்பட் டாலும் எம்மியாலும் ஐரோப்பிய உயர்வு மனோபாவத்தை விட முடிவதில்லை. ஒரு கட்டத்தில் அலியும் எம்மியும் பிரிந்து விடுகிறார்கள்.

அலி மிகுந்த துயரம் அடைகிறான். அதன் விளைவாக அவனுக்கு வயிற்றில் அல்சர் பிரச்சினை உண்டாகிறது. அந்த நிலையில் அலியும் எம்மியும் முதன்முதலில் சந்தித்த பாரில் எதேச்சையாக மீண்டும் சந்திக்க நேர்கிறது. அலி அவளிடம் வந்து நடனம் ஆட வருகிறாயா என்று கேட்கிறான். நடனம் ஆடிக் கொண்டிருக்கும் போதே மயங்கி விழுகிறான். அவனைப் பரிசோதிக்கும் டாக்டர், அந்த வியாதிக்கு மருந்து இல்லை என்றும், வெளிநாடுகளிலிருந்து வரும் இது போன்ற கடைநிலை மனிதர்கள் அடிக்கடி இந்நோய்க்கு ஆட்படுகிறார்கள் என்றும், இப்போது குணப்படுத்தி அனுப்பினாலும் இதே மனிதன் இன்னும் ஆறு மாதத்தில் இங்கே வருவான் என்றும் சொல்கிறார். அப்படி ஆக நான் விட மாட்டேன் என்று சொல்லும் எம்மி, மயக்கத்தில் படுத்திருக்கும் அலியின் கைகளை இறுகப் பற்றியபடி அழுகிறாள். படம் முடிகிறது.

கிட்டத்தட்ட இதே சாயலைக் கொண்ட ஃபாஸ்பைண்டரின் வாழ்க்கை இப்படி மகிழ்ச்சியாக முடியவில்லை. ஃபாஸ்பைண்டர் ஒரு பைசெக்சுவலாக வாழ்ந்தவர். ஆனால் ஃபாஸ்பைண்டரின் இரண்டு ஆண் காதலர்கள் தற்கொலை செய்து கொண்டு இறந்தார்கள். அது ஃபாஸ்பைண்டரை பெருமளவு பாதித்தது. அவருடைய முதல் காதலன் அலி. ஒரு கட்டத்தில் அலியும் ஃபாஸ்பைண்டரும் சேர்ந்து வாழ்ந்தார்கள். ஆனாலும் அந்த வாழ்க்கை சீராக அமையவில்லை. பயம் ஆன்மாவைக் கொல்லும் என்ற இந்தப் படத்தைப் போலவே நிஜ வாழ்விலும் அலியால் மொராக்கோவை விட்டு ஜெர்மனியில் இயல்பாக வாழ முடியவில்லை. மொழி, கலாச்சாரம், மதம் எல்லாமே வேறாக இருந்தது. குடிக்க ஆரம்பிக்கிறார். அலிக்கும் ஃபாஸ்பைண்டருக்கும்

https://telegram.me/aedahamlibrary

தினந்தோறும் வாக்குவாதம், பிரச்சினை என்று போகிறது. ஒருநாள் கடும் மன உளைச்சலில் வீட்டை விட்டு வெளியே வரும் அலி சாலையில் நின்று கொண்டிருந்த மூன்று பேரைக் கத்தியால் குத்தி விடுகிறார். பிறகு ஃபாஸ்பைண்டரிடம் வந்து "இனிமேல் அலியால் உனக்கு எந்தப் பிரச்னையும் இருக்காது" என்று சொல்லிவிட்டு கைது செய்யப்பட்டு சிறைக்குச் செல்கிறார். இந்தச் சம்பவம் ஃபாஸ்பைண்டரை நிலைகுலையச் செய்கிறது. படப்பிடிப்புத் தளத்தில் நாள் முழுவதும் அழுது கொண்டிருப்பார் ஃபாஸ்பைண்டர் என்கிறார்கள் அவர் நண்பர்கள். அதற்கு மேல் ஃபாஸ்பைண்டர் பழைய நிலைக்கு வரவே இல்லை. போதை மருந்துக்கு அடிமையாகிறார். அதற்கிடையில் சிறையில் தூக்கு மாட்டிக் கொண்டு இறக்கிறார் அலி. பல ஆண்டுகள் அலியின் மரணத்தை ஃபாஸ்பைண்டரிடம் சொல்லாமலேயே மறைத்து வைத்திருந்தார்கள் அவர் நண்பர்கள். அதன் பிறகு அலியின் நினைவாக ஃபாஸ்பைண்டர் ஒரு படத்தை இயக்கினார்.

அவரது இரண்டாவது காதலன் ஆர்மின் மேயர். இருவரும் சேர்ந்து வாழ்ந்தார்கள். ஃபாஸ்பைண்டர் தன்னுடைய ஒரு பிறந்த நாளை பாரிஸில் இருக்கும் நண்பர்களோடு கொண்டாடலாம் என்று ம்யூனிச்சிலிருந்து பாரிஸ் சென்றார். வீட்டில் தனியாக விடப்பட்ட ஆர்மின் தூக்கு மாட்டிக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார். மூன்று நாட்கள் கழித்து ஃபாஸ்பைண்டரைப் பார்க்க அவர் வீட்டுக்குப் போன அவரது தாயார்தான் ஆர்மினின் உடலைப் பார்த்தார். ஏற்கனவே அலியின் தற்கொலையால் பாதிக்கப்பட்டிருந்த ஃபாஸ்பைண்டர் மீண்டு எழ முடியாத அளவுக்கு நிலைகுலைந்து போனார். அதன் பிறகு 1978-இல் 13 நிலவுகளின் வருடம் என்ற ஒரு படத்தை இயக்கினார். அவருடைய படங்களிலேயே மிகவும் சுயசரிதைத்தன்மை கொண்ட அந்தப் படம், தனிமையில் வாடும் ஒரு ஓரினச் சேர்க்கையாளனைப் பற்றியது.

மனித உறவுகளின் விசித்திரமான தன்மையை காவியத் தன்மையுடன் கலையாக்கிய மேதைகளில் ஒருவர் ரெய்னர் வெர்னர் ஃபாஸ்பைண்டர்.

https://telegram.me/aedahamlibrary

37

Mephisto (1981)

István Szabó

மனித வரலாற்றில் மரபு அணுவின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கிறது. எதையும் தட்டையாகவே பார்க்கும் பகுத்தறிவாளர்களுக்கு எதிராக இருந்தாலும் இது அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டு விட்ட உண்மை. இந்தியாவில் சந்திரசேகர் குடும்பம் என்பது 19-ஆம் நூற்றாண்டில் அதிக அளவு விஞ்ஞானிகளைக் கொண்டதாக இருந்தது. அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த சந்திரசேகர் வெங்கட்ராமன் (சி.வி. ராமன்), சுப்ரமணியம் சந்திரசேகர் ஆகிய இரண்டு பேர் பௌதிகத்தில் நோபல் பரிசு பெற்றார்கள். இதேபோல் ஜெர்மனியில் உலகப் புகழ்பெற்ற பல எழுத்தாளர்களைக் கொண்டதாக இருந்தது தாமஸ் மன்னின் குடும்பம். மேஜிக் மௌண்டன், டாக்டர் ஃபாஸ்டஸ் போன்ற நாவல்களை எழுதிய தாமஸ் மன்னின் மூத்த சகோதரரும், ஒரு மகளும் (எரிகா), இரண்டு மகன்களும் (க்ளாஸ், கோலோ) கூட அவரைப் போலவே பிரசித்தி பெற்ற எழுத்தாளர்களாக விளங்கினர்.

க்ளாஸ் மன் 1930களில் ஹிட்லரின் நாஜிக் கட்சியால் ஜெர்மனியை விட்டுத் துரத்தப்பட்டு அமெரிக்காவில் போய் வாழ்ந்தார். இவருடைய மெஃபிஸ்டோ என்ற நாவல் இவரை உலகம் முழுவதும் தெரியச் செய்தது. க்ளாஸின் மைத்துனரான குஸ்தாஃப் ஜெர்மனியின் பிரபலமான நாடக நடிகராக இருந்தார். அவரது வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதுதான் மெஃபிஸ்டோ. ஆனால் குஸ்தாஃபின் மகன் இந்த நாவலை எதிர்த்து வழக்குத் தொடுத்ததால் நாவல் தடை செய்யப்பட்டது. 1936-இல் எழுதப்பட்ட மெஃபிஸ்டோ பல

https://telegram.me/aedahamlibrary

ஆண்டுகள் கழித்து 1981-இல்தான் ஜெர்மானிய வாசகர்களுக்குப் படிக்கக் கிடைத்தது. அதே ஆண்டில் மெஃபிஸ்டோ திரைப்படமாகவும் வெளிவந்தது. வெளிவந்த மறு ஆண்டிலேயே மிகச் சிறந்த வெளிநாட்டுத் திரைப்படத்துக்கான விருதையும் பெற்றது. ஆஸ்கர் வரலாற்றிலேயே சிறந்த வெளிநாட்டுப் படமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஹங்கேரியப் படம்

மெஃபிஸ்டோ.

ஒரு கோடி மக்கள் தொகையைக் கொண்ட சிறிய ஐரோப்பிய நாடான ஹங்கேரி உலகின் மிகச் சிறந்த சினிமா இயக்குனர்களை உருவாக்கியது. அவர்களில் ஒருவர் இஸ்த்வான் சாபோ. இப்போது 80 வயதான சாபோவின் மெஃபிஸ்டோ என்ற கதாபாத்திரத்துக்கு ஒரு வரலாற்றுப் பின்னணி உண்டு. 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜெர்மானிய இலக்கிய மேதை கதே எழுதிய டாக்டர் ஃபாஸ்டஸ் என்ற நாடகத்தில் வரும் சைத்தானின் பெயர் மெஃபிஸ்டோ.

நாடக நடிகனான ஹென்ரிக்குக்கு தன்னுடைய வாழ்க்கையும் முன்னேற்றமும்தான் பிரதானமாக இருக்கிறது. அதன் பொருட்டு நாஜிக் கட்சியுடன் கூட்டு சேரவும் அவன் தயாராக இருந்தான். நாஜிகள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னதாக (முப்பதுகளின் முற்பகுதி) ஹென்ரிக் ஒரு துணை நடிகனாக இருந்தான். நடிப்பில் திறமை இருந்தும் அவனுக்கு முன்னணி பாத்திரங்கள் கிடைக்கவில்லை. படத்தின் ஆரம்பக் காட்சியில், ஒரு நாடகத்தில் கதாநாயகியின் நடிப்புக்கு பார்வையாளர்கள் பெருத்த ஆரவாரத்தையும் கைதட்டலையும் எழுப்பும் போது ஒப்பனை அறையில் அமர்ந்திருக்கும் துணை நடிகனான ஹென்ரிக் காதுகளைப் பொத்திக் கொண்டு துடிக்கிறான். அந்தக் கால கட்டத்தில் கம்யூனிஸ்டுகளின் நாடகக் குழுவில் கூட இணைந்து பணியாற்றுகிறான். நாஜிக் கட்சி தேர்தலில் வென்று ஆட்சியைப் பிடிக்கும் தருணத்தில் அவன் மனைவியும், நண்பர்களும் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். ஆனால் ஹென்ரிக்கோ நாஜிகளிடம் தன்னுடைய பழைய கம்யூனிஸ்ட் தொடர்புகளுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவர்களோடு சேர்ந்து கொள்கிறான். அதற்குப் பரிசாக நாஜிகள் அவனை சூப்பர் ஸ்டாராக ஆக்குவதாக வாக்குறுதி அளிக்கிறார்கள்.

மெஃபிஸ்டோவாக நடித்து ஜெர்மனி முழுவதும் புகழ்பெற வேண்டும் என்ற ஹென்ரிக்கின் கனவு நனவாகும் தருணத்தில் அவன் மனசாட்சி செத்துப் போய் கிடக்கிறது.

இந்தப் படத்தை இதை நாவலாக எழுதிய க்ளாஸ் மன்னின் வாழ்வோடு

https://telegram.me/aedahamlibrary

இணைத்துப் பார்க்க வேண்டும். மன்னின் குடும் பமே நாஜிகளால் ஜெர்மனியிலிருந்து துரத்தப்பட்டபோது அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு நடிகன் மட்டும் புகழுக்கும் அதிகாரத்துக்கும் ஆசைப்பட்டு நாஜிகளோடு சேர்ந்து கொண்டான். அந்த வகையில் இந்தப் படம் எழுப்பும் கேள்விகள் நம் ஒவ்வொருவருக்குமானவை.

ஜெர்மனியின் ஹேம்பர்க் என்ற சிறிய நகரில் யாருக்கும் தெரியாத ஒரு துணை நடிகனாக இருந்த ஹென்ரிக்கின் நடிப்புத் திறமையாலும் அவனது கம்யூனிஸக் கருத்துக்களாலும் கவரப்பட்ட பார்பரா என்ற சீமாட்டி அவனைத் திருமணம் செய்து கொள்கிறாள். ஆனால் அதற்கு முன்பே ஹென்ரிக்குக்கு, ஜூலியட் என்ற கருப்பினப் பெண் காதலியாக இருந்தாள். ஆனால் அதைச் சொல்லிக் கொள்ளாமல் பார்பராவை மணம் புரிந்து கொள்கிறான் ஹென்ரிக். பார்பராவின் பூர்ஷ்வா பின்னணி அவனுக்கும், அவனுடைய ஏழ்மையான பின்னணி பார்பரா குடும்பத்தினருக்கும் பெரும் பிரச்சினையாக இருக்கிறது.

பார்பராவின் நண்பர் குழுவைச் சேர்ந்த மற்றொரு நடிகன் மிக்லாஸ். நாஜிக் கட்சியைச் சேர்ந்தவன். அந்தக் காலகட்டம் 1920களின் பிற்பகுதியும் 1930களின் முற்பகுதியுமாகும். ஒருநாள் எல்லோரும் குடித்துக் கொண்டிருக்கும் போது கம்யூனிஸ ஆதரவாளனான ஹென்ரிக்குக்கும் நாஜி ஆதரவு மிக்லாஸுக்கும் கடும் சண்டை வந்து விடுகிறது. மிக்லாஸ் நம் நாடகக் குழுவில் இருக்கக் கூடாது என்று வாதிடுகிறான் ஹென்ரிக். “அப்படியெல்லாம் மனிதாபிமானம் இல்லாமல் ஒருவரை வீட்டுக்கு அனுப்பக் கூடாது” என்கிறாள் பார்பரா. “இப்படிப்பட்ட பூர்ஷ்வா சகிப்புத்தன்மையால்தான் நம் நாடு இந்த கதியில் இருக்கிறது. ஒருவேளை நாஜிகள் பதவிக்கு வந்து விட்டால் என்ன செய்வாய்? ஃபாஸிஸ்ட் பயங்கரவாதிகளைக் கூட உங்கள் பூர்ஷ்வா மனிதாபிமானம் மன்னித்து விடும் போலிருக்கிறதே?” என்று ஆவேசமாகப் பேசுகிறான் ஹென்ரிக். மிக்லாஸை நீக்காவிட்டால் நான் விலகி விடுகிறேன் என்று ஹென்ரிக் சொன்னதால், மிக்லாஸ் நாடகக் குழுவிலிருந்து நீக்கப்படுகிறான்.

அப்போது ஒரு நாடக ஒத்திகையின் போது ஹென்ரிக் சொல்கிறான்: “வெறுமனே ரசித்து விட்டுப் போவதற்கு நாடகம் ஒன்றும் பொழுதுபோக்கோ கேளிக்கையோ அல்ல. அது ஒரு புரட்சி. அதைப் பார்க்கும் மக்கள் வெறும் பார்வையாளர்கள் அல்ல; அவர்கள் அதில் பங்கேற்பவர்களாக மாற வேண்டும். அதுதான் முழுமையான நாடகம் (டொட்டல் தியேட்டர்).”

இந்த நிலையில் ஹென்ரிக்கின் நடிப்புத் திறமையைப் பற்றிக்

https://telegram.me/aedahamlibrary

கேள்விப்பட்டு பெர்லின் நாடகத் துறையிலிருந்து அழைப்பு வருகிறது. ஹென்ரிக் உடனடியாகக் கிளம்பி பெர்லின் போகிறான். பெர்லின் நாடகத் துறை இயக்குனரை ஹென்ரிக் சந்திக்கும் போது ஹென்ரிக் பவ்யமாக கூனிக் குறுகிக் கொண்டு நிற்கும் காட்சி படத்தில் மறக்க முடியாத காட்சிகளில் ஒன்று. அதாவது, ‘என் சுயநலத்துக்காக நான் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்வேன்’ என்ற மனோபாவத்தின் வெளிப்பாடு அது. “உன் மாமனாரின் சிபாரிசினால் உன்னை இங்கே வரவழைத்தேன்” என்கிறார் இயக்குனர். இதைக் கேட்டு மேலும் உடம்பை வளைக்கிறான் ஹென்ரிக். ’ஏதோ ஒரு சிற்றூரில் இருந்து நடித்துக் கொண்டிருந்த நான் நாளை தேசம் முழுவதும் பிரபலம் ஆகப் போகிறேன்; மெஃபிஸ்டோவாக நடிக்க வேண்டும் என்ற என் வாழ்நாள் கனவு நனவாகப் போகிறது’ என்று நினைக்கும் அவன் கண்கள் கலங்குகின்றன.

1932. ஜெர்மானிய சமூகம் அப்போது ஒரு கொந்தளிப்பான நிலையில் இருக்கிறது. நாடு முழுவதும் வறுமை தாண்டவமாடுகிறது. சமூகத்தின் மேல்தட்டில் இருக்கும் யூதர்களை விரட்டி விட்டால் பிரச்சினை தீர்ந்து விடும் என்கிறது நாஜிகளின் கோட்பாடு. மக்களும் அதை நம்புகிறார்கள். ஓர் இரவு நேரத்தில் சாலையில் ஒரு யூதனை நாலைந்து பேர் தாக்கிக் கொண்டிருப்பதைப் பார்க்கும் ஹென்ரிக் அதைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் “போதை அதிகமாகி விட்டது போலும்” என்று தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொள்கிறான்.

1933 ஜனவரி 30-ஆம் தேதி ஹிட்லரின் பதவி ஏற்பு முடிந்து வானொலியில் உரையாற்றுகிறார். தூங்கிக் கொண்டிருக்கும் ஹென்ரிக்கை எழுப்பும் பார்பரா “என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று உனக்குத் தெரியுமா?” என்று கேட்டு வானொலியைப் போடுகிறாள். “யார் ஆட்சிக்கு வந்தால் எனக்கு என்ன?” என்கிறான் ஹென்ரிக்.

இந்த நூலின் இரண்டாம் பாகத்தில் மீண்டும் சந்திப்போம்

https://telegram.me/aedahamlibrary

சாரு நிவேதிதா

18.12.1953-இல் திருவாரூர் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டிக்கு அருகில் உள்ள இடும்பாவனம் என்ற ஊரில் பிறந்தார். வளர்ந்ததும் பள்ளிப் படிப்பும் நாகூரில். கல்லூரிப் படிப்பு காரைக்கால், தஞ்சாவூர், திருச்சி. கல்லூரிப் படிப்பை முடிக்கவில்லை. சென்னையில் ஒரு ஆண்டு சிறைத்துறையில் எழுத்தர் பணி. 1978-இலிருந்து 1990 வரை தில்லி நிர்வாகம் - சிவில் சப்ளைஸ் துறையில் ஸ்டெனோ. பின்னர் பனிரண்டு ஆண்டுகள் தமிழ்நாடு அஞ்சல் துறையில் பணி. 2002-இலிருந்து முழுநேர எழுத்து.

இகனாமிக் டைம்ஸ் நாளிதழின் அகில இந்தியப் பதிப்பில், 2001 - 2010 என்ற பத்தாண்டுகளின் சாதனையாளர் பட்டியலில் தமிழகத்திலிருந்து இடம் பெற்ற இரண்டு பேர்களில் ஒருவர் சாரு நிவேதிதா.

இவரது நாவல் 'ஸீரோ டிகிரி' Jan Michalski சர்வதேசப் பரிசுக்குப் பரிந்துரைக்கப்பட்டது. ஹார்ப்பர் காலின்ஸ் தொகுத்த, இந்தியாவின் ஐம்பது முக்கிய புத்தகங்களில் ஒன்றாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஆங்கிலப் பத்திரிகைகளில் இவர் எழுதும் கட்டுரைகள் சர்வதேச அளவில் கவனம் பெற்றவை. லண்டனிலிருந்து வெளியாகும் PS Publication-இன் Exotic Gothic தொகுதியில் இவரது Diabolically Yours என்ற பேய்க்கதை ஆங்கிலத்தில் வெளியாகி உள்ளது. தற்சமயம் லண்டனிலிருந்து வெளிவரும் ArtReview Asia என்ற பத்திரிகையில் தொடர் கட்டுரை எழுதி வருகிறார்.

இவரது எழுத்தை ஆங்கில விமர்சகர்கள் விளதிமீர் நபக்கோவ், வில்லியம் பர்ரோஸ், கேத்தி ஆக்கர் போன்ற எழுத்தாளர்களோடு ஒப்பிடுகிறார்கள். உலகின் முக்கியமான transgressive வகை எழுத்தாளர்களில் ஒருவராகக் கருதப்-படுகிறார் சாரு நிவேதிதா. தற்போது சென்னையில் வசிக்கிறார்.